www.padippakam.com

# போர்க் கோலம்

செ. கணேசலிங்கன்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# போர்க்கோலம்

## செ. கணேசலிங்கன்

விற்பனை உரிமை:

பாரி நிலையம்
184, பிராட்வே-சென்னை-600108

படிப்பகம்

www.padippakam.com

முதற்பதிப்பு : நவம்பர், 1969
இரண்டாவது பதிப்பு : ஏப்ரல், 1996

விலை ரூ. 42-00

| | | |
|---|---|---|
| Title | : | PORKOLAM |
| Subject | : | A Dalit Novel In Tamil |
| Author | : | Se. GANESALINGAN (C) |
| Size | : | 18 × 12.5 cm |
| Types | : | 10 Point |
| No. of Pages | : | 248 |
| Paper | : | Creamwove 10.5 Kg. |
| Binding | : | Duplex Board |
| Price | : | Rs. 42-00 |
| Publishers | : | KUMARAN PUBLISHERS<br>79, 1st Street, Kumaran Colony,<br>Vadapalani, Madras-600 026. |

Printers : Chitra Printo Graphy, Madras-14.

படிப்பகம்

www.padippakam.com

# சில குறிப்புகள்

உண்மைகள் புனிதமானவை என்று பலரும் கூறுவர். ஆயினும் உண்மையைக் காண அஞ்சுபவர் பலர், உண்மைகளை சமூக வரலாற்று ரீதியாக, விஞ்ஞான பூர்வமாக காண முயல்பவர் வெகு சிலரே. 'கருத்துகள் சுதந்திரமானவை' என்று நயமாகக்கூறி மழுப்பி, தம் சொத்துகளைக் காப்பாற்றிக் கொள்ள முயல்பவரின் சுதந்திர கருத்துகளே இன்று மக்களுக்குப் பரிமாறப் படுவதைக் காண்கிறோம்.

ஆதி காலத்தில் உழைப்பில் தனிமனிதனுக்கும் உரிய பங்கு கிடைத்தது. அதன் பின்னர் 'இது தான் உன் பங்கு' என்று ஆயுதம் ஏந்தியோர் நீட்டினர். உரிய பங்கு கேட்டோர் கை விலங்கு பூட்டிய அடிமைகளாயினர்; அதை உடைத்து உரிமை கேட்டதும் நிலத்தை ஆண்டோர் பண்ணைகளில் அடிமை ஆக்கி உழைக்கச் செய்து உண்டி கொடுத்து 'இதுதான் விதி' என்று அமைதி கூறினர். உழைப்பிற்கும் சுரண்டலுக்கும் அமைதி காணா நிலையில் போர்க் குணம் மீண்டும் உந்தப்படுகிறது.

போர்க் குணம் என்பது மனித இயல்பு; அநீதியைக் கண்டபோதெல்லாம் வஞ்சிக்கப்பட்டோர் கொதித்தெழுந்தனர். உழைப்பிற்கு உரிய பங்கு கிடையாது போர்க்குணம் கொண்டெழுந்த மக்களையெல்லாம் ஆண்டோர் ஆயுதங் கொண்டு அடக்கினர்; சட்டம், ஒழுங்கு, நீதி என்ற அரச மகுடங்களுடன் பலாத்காரத்தை நிரந்தர படையாக்கிக் கொண்டனர்; மதங்களைக் காட்டி போர்க் குணத்தை மழுங்கச் செய்தனர். 'பர உலகில் தான் உன் வாழ்வு சிறப்படைய வேண்டும்; இங்கல்ல' என்று சொல்லி மயக்கி, மக்களின் இக உலக வாழ்வைச் சூறையாடினர். கலை, இலக்கியங்கள் மூலமும் மக்களின் எதிர்ப்புணர்ச்சியையும் எழுச்சியையும் மழுப்பினர்.

www.padippakam.com



ஆயினும் இத்தடைகளையெல்லாம் மீறிப் போராட்டம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

விலங்கடிமைத்தனந்திலிருந்து 'உனக்கும் அரசியலில் வாக்குரிமை தருகிறோம்' என்று கூறுமளவிற்கு மட்டும் சலுகைகள் கிடைத்து வந்தன.

எமக்கு அளந்தது இவ்வளவுந்தான் என்ற பெரு மூச்சோடு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பொறுமையும் அகிம்சையும் கடைப்பிடித்து பரம்பரை பரம்பரையாக நசிபட்டு வந்த மக்களுக்கு பூரண விடுதலை கிடைத்ததா? உரிமைகள் யாவும் கிடைத்தனவா? மிகச் சாதாரண உரிமைகளுடன் பொது வாழ்வில் கூட பங்கு பெற முடியாத நிலையில் வாழும் கோடிக்கணக்கானோரை உலகின் கோடிகளிலெல்லாம் இன்றும் காண்கிறோம். எம் நாட்டிலும், யாழ்ப்பாணக் கிராமங்களில், பொதுக் கிணறுகளில் கூட தாகத்திற்கு தாமே தண்ணீர் அள்ளிக்குடிக்க முடியாத அடிமை நிலையில் பல லட்சம் மக்கள் இன்றும் வாழ்வதை கண் முன்னே காணலாம்.

அடிமையாகக் கருதப்படும் இம்மக்கள் இதுவரை காலமும் பொது உரிமைகளே பெறாமைக்குக் காரணம் என்ன; இயல்பான போர்க்குணத்தை அநாகரிகமென மழுப்பிய பொறுமையா? அவர்கள் கைக்கொண்டு வாழ்ந்த அகிம்சையா? மகாவீரர், புத்தர், ஏசு, காந்தியின் போதனைகள் சொத்துடனும் சுயநலத்துடனும் வாழும் ஆளும் வர்க்கத்தினரின் மனங்களை மாற்றுவதில் எத்தனை தூரம் பயன் பட்டன? பிற மனிதரின் உழைப்புகளை உறுஞ்சிக் கொழுத்து சுகபோக வாழ்வு வாழும் வர்க்கம் இப்போதனைகளையும் தனது நலனுக்காகப் பயன்படுத்திக் கொள்வதையே காண்கிறோம். உபதேசங்களையே மக்களின் போர்க்குணக் கூர்மையை மழுப்பும் புதிய ஆயுதமாகப்பயன்படுத்திக் கொள்கின்றனர். கருத்துகள் புனிதமானவையாக இருக்கின்றன: விஞ்ஞான உண்மைகளைப் புதிய புதிய போதனைகள் கருத்துகள் மூலமும் நவீன பிரசார சாதனங்கள் மூலமும், மூடி மறைக்க இவ்வர்க்கத்தவர் முயலுகின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



சாதி என்ற பெயரில் அடிமைத்தனம் இலங்கையில் பல்வேறு உருவங்களிலும் போர்வைகளிலும் இன்றும் ஆட்சி செலுத்துகின்றது. நிலமானிய அமைப்பின் குறைபாடாக இவை கருதப்பட்டபோதும் இந்நூற்றாண்டின் இவ்வேளையிலும் யாழ்ப்பாணத்தில் நிலவும் சாதி அமைப்பின் இறுக்கத்தைப் பற்றிக்கேட்போர் நம்பமாட்டார்கள் நேரே காண்போரில் மனித உரிமையை உணர்ந்து மதிப்போர் கொதித்தெழவே செய்வர். தாழ்த்தப்பட்டவர் என்று கூறப்படும் இச்சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கும் வாக்குரிமை என்ற சலுகை 1931 ம் ஆண்டு தொடக்கமாக இருக்கிறது என்பது ஒன்றே 'வாக்குரிமை' என்பது எத்தனை ஏமாற்றுக் கண் கட்டுவித்தை என்பதைக் காட்டி விடுகிறது.

பொருளாதார, சமூக வளர்ச்சி இம்மக்களிடை ஏற்பட்டு விடாதபடி காலந்தோறும் உயர்சாதி மக்கள் இவர்களை நசுக்கிக்கொண்டே வந்தனர். பல ஆயிரம் வருடங்களாக அகிம்சையைக் கடைப்பிடித்து, பிறந்து பிறருக்கு உழைத்து நிலத்திற்கு உரமான இம்மக்களின் வரலாறு இதுவரை காலமும கண்ணீராலும் எழுதப்படவில்லை. ஆயினும் சென்ற மூன்று ஆண்டுகளில்தான் முன் என்றுமில்லாதவாறு இவர்களின் போராட்டத்தில் புதிய வேகம் ஏற்பட்டதைக் கண்டோம். மழுப்ப முடியாத போர்க்குணம் கொண்ட மக்களது இக்கால வரலாறு இரத்தத்தால் எழுதப்பட வேண்டியதாகும்.

அவர்களது திடீர் விழிப்புக்கும் எழுச்சிக்கும் பொருளாதார வளர்ச்சியும் முக்கிய அடிப்படைக் காரணமாக இருந்த போதும் அவர்களது புதிய இயக்க வளர்ச்சியும், போரில் வகுத்த புதிய பாதையும், அவ்வழியில் செயலாற்ற முன் வந்த துணிவும், மறுக்க இயலாத பிற காரணங்களாகும். நிலமானிய, முதலாளித்துவ அரச வர்க்கத்தினர் காட்டும் மயக்கத்தோற்றங்களில் இம்மக்கள் வைத்திருந்த நம்பிக்கை இன்று மறைந்து வருவதையும் காணமுடிகிறது.

6

யாழ்ப்பாணத்தின் கோடிப் புறக் கிராமத்தில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களின் எழுச்சியையும் போர்க்குணத்தையும் பற்றி பத்திரிகைகளில் படித்திருந்தேன்; பலர் சொல்லிக் கேட்டிருந்தேன். ஆயினும் நேரில் அவர்களைக் கண்டு பேசிப் பழகிய போதுதான் அம்மக்களின் போர்க்கோலத்தைக் கண்டு அறிந்துணர்ந்து வியப்படைந்தேன். உயிரைத் துரும்பாகவும் உரிமைகளை உயிராகவும் எண்ணி அன்றாட வாழ்வையே போராட்டமாகக் கருதி வாழும் அம்மக்கள் மூலமே பல உண்மைகளை உணர்ந்தறிய முடிந்தது. அம்மக்களது எண்ணங்கள், கருத்துகள், நம்பிக்கைகளை சிறிது மாற்றமுமின்றி நான் கண்டவாறே இந்நாவலில் எழுதியுள்ளேன். வியத்நாம் விடுதலை வீரர்கள், தம் உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஆபிரிக்க, அமெரிக்க நீக்ரோ மக்கள், இந்தியக் கிராமங்களில் ஆங்காங்கே தீப்பொறியாகக் கிளம்பிக் கொண்டிருக்கும் நக்ஸல்பாரி இயக்கத்தினர் ஆகியோரின் போர்க்குணம் எப்படி இருக்கும் என்பதையெல்லாம் இச்சிறு கிராம மக்களைக் கண்டு பழகிய பின்னரே ஓரளவு அனுபவத்துடன் எண்ணிப் பார்க்க முடிந்தது. தம் உயிரைக்காக்க மனிதர்கள் எத்தனை அரும்பாடு படுகின்றனர். உயிரைத்துரும்பாக மதித்து இம்மக்கள் ஏன் போராடப் புறப்பட்டுள்ளனர்? நீதி எப்பக்கம் நிலவுகிறது?

உலகில் காணும் இம்மனித உரிமைப் போராட்டங்களெல்லாம் வெறும் கற்பனைகளல்ல; கருத்துக்களுமல்ல, கண்கண்ட உண்மைகள். இவற்றை நாம் ஒதுக்கிவிட முடியாது. தனிச் சொத்துடைமை அமைப்பைப் பாதுகாக்க விரும்பும் சுய நலமுள்ளவர்களே இத் தீப்பொறிகளைக் கண்டு அஞ்சுவதைக் காண்கிறோம். இவற்றை ஆரம்பத்திலேயே பரவாது ஒழித்து விடவேண்டும் என்ற அவர்களின் கூக்குரலையும் கேட்கிறோம்.

எதற்காக இத்தீப் பொறிகள் தோன்றுகின்றன என்று சமூக விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து பார்ப்போர் மிகச்சிலரே. அவர்களது விளக்கங்களைக் கேட்டும் கேட்காதவர் போல,

கண்டும் காணாதவர் போல, படித்தும் புரியாதவராகக் கண் மூடிக்கொண்டிருப்பவரே பலர். தம் சொத்துப் பறிபோய் விடுமோ என்று அஞ்சுபவரையும் ஆத்திரமடை வோரையுமே பெரும்பாலும் காண்கிறோம்.

உரிமையிழந்த மக்களின் போராட்டங்கள் இன்று வலுப் பெற்று வருவதற்கும் ஆளும் வர்க்கம் அஞ்சி நடுங்குவதற்கும் ஓர் அடிப்படைக் காரணத்தையும் இன்று நாம் காண முடிகிறது. எவ் ஆயுதத்தை ஆளும்வர்க்கம் தன் பலாத்காரத்தின் மீது கட்டி எழுப்பிய அரசைக் காப்பாற்று வதற்குப் பயன் படுத்த எடுக்கின்றதோ அதே ஆயுதத்தை போர்க்குணம் கொண்ட ஒடுக்கப்பட்டவர்களும் எந்தத் தொடங்கியிருக் கின்றனர். வர்க்க முரண்பாடுகள் ஒன்றுக் கொன்று இயைபு காணா நிலையில் கூர்மையடைந்து வருவதையே இது காட்டுகிறது. யாழ்ப்பாணத்து உயர் சாதிக்காரரிடையேயும் தாழ்த்தப்பட்டவர் என்று கூறப்படுபவரிடையேயும் அண்மை யில் இந்நிலையே ஏற்பட்டுள்ளது.

சென்ற நூற்றாண்டுவரை காட்டு மிராண்டிகளாகக் கருதப்பட்டு விலங்கு பூட்டிய அடிமைகளாக விலைபேசி விற்கப்பட்ட ஆபிரிக்க, அமெரிக்க நீக்ரோ மக்கள் விழித் தெழுந்து உலகை நோக்கியே குரலெழுப்பும் இவ்வேளையில் நாகரிகத்தில் கல் தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த குடியினராகத் தம்மைக் கருதிக் கொள்ளும் தமிழர்கள் தம்மில் ஒரு பகுதியினர் இன்றும் என்றும் அடிமைகளாக வாழ்வார்கள் என்று எதிர்பார்ப்பதன் மூலம் தம் அநாகரிகத் தையே காட்டிக் கொள்ளுகின்றனர்.

தாழ்த்தப்பட்டவர்கள் பலாத்காரமாகக் கோவில்களுள், ஓட்டல்களுள் நுழைய முயலுதல் கூடாது. அவர்கள் சமயா சாரமும் தூய்மையும் பெற்ற பின் நாம் என்றோ நுழைய விடப் போகிறோம் என்று சமரசமும் தாட்சணியமும் பேசு வோரும் இருக்கின்றனர். தாம் புண்ணியத்தில் கொடுப்பதற் கிருப்பதாகவும் அவர்கள் தயவாகப் பெறவேண்டும் எனவும்

www.padippakam.com



இவர்கள் எதிர்பார்க்கின்றனர். மனித உரிமை ஒருவர் கொடுக்க மற்றவர் கையேந்தி பிச்சை வாங்குவதல்ல. தாம் இழந்த உரிமையை வேண்டி முன்னேறுவதைத் தடை செய்வதற்கு முதலில் பலாத்காரம் பாவிப்பவர்கள் அதே உயர் சாதிக்காரரேயாவர். அவர்களுக்கு வாய்ப்பாக அரசும் இருப்பதால் அதன் பாது காவலர்களும் பலாத்கார அடக்கு முறையில் உதவுகின்றனர். அதனாலேதான் பல ஆயிரம் ஆண்டுகளாகியும் உழைப்பை மறைமுகமாகச் சுரண்ட ஏற்பட்ட சாதி என்ற அடிமைத்தளையும் இன்றும் உடைக்கப் படாது இறுக்கமாக, இரும்புப் பிணைப்பாகப் பின்னப் பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

இன்று நிலைமை வேகமாக மாறிக் கொண்டு வருகிறது. இவ்வடிமைத் தளத்தின் அடிப்படைக் காரணங்களை உணர்ந்த மக்கள் வர்க்க அணியாகவும் பிரிந்து நின்று போராடத் தொடங்கியுள்ளனர். அவர்களுக் கெல்லாம் பக்க பலமாக உலக அடிமைத்தளைகளை, சுரண்டல் முறைகளை முற்றாக ஒழித்துவிட எங்கிருந்தோ குரல் ஒன்று கேட்கிறது. அக்குரல் 'பொறுத்தது போதும் பொங்கி எழு மனிதா' என்று அவர்களை அழைத்துக் கொண்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

விரைவில் எழுதிய இந்நாவலின் தவறுகளைத் திருத்துவதில் உதவிய என் நெஞ்சொடு ஒட்டிய ஒரு சிலரை நினைவு கூருகிறேன். இருநாளில் முகப்புப் படம் போட்டுத்தந்த ஓவியர் விஜனுவிற்கு என் அன்பு. எழுத்துப் பிரதியிலேயே படித்து முன்னுரை எழுதி நாவலுக்குப் புது விளக்கம் தந்து சிறப்பித் திருக்கும் அசுரனுக்கு என் அன்பு.

உரும்பிராய்,
யாழ்ப்பாணம்.
18-11-69

**செ. கணேசலிங்கன்.**

படிப்பகம்

www.padippakam.com

# இரண்டாவது பதிப்புச் சார்ந்து சில குறிப்புகள்

தலித் இலக்கியம் என்று இன்று பரவலாக இந்தியா எங்கணும் பேசப்படுகிறது. தமிழ்நாடு அதற்கு விதிவிலக்கல்ல. சாதி என்ற படிமுறை அமைப்பாலும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் ஜனநாயக உரிமை வேண்டிப் போராடிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் இன்று மகாத்மாகாந்தியை விட்டுவிட்டு அம்பேத்காரை தமது விடுதலையின் முன்னோடியாக அரசியலில் கைப்பிடிப்பதோடு சிலை, சின்னங்கள் எழுப்புவதையும் காணலாம். கலை, இலக்கியங்களும் அந்த எழுச்சிக்கேற்ப படைக்கப்படுவது, வெளியிடப்படுவதையும் பார்க்கிறோம்.

ஈழத்தில் 1960 களிலேயே சாதியின் பெயரால் ஒடுக்கப்பட்டவரின் வர்க்கப் போராட்டங்களும் அதற்கு உந்து சக்தியாக கலை, இலக்கியங்களும் ஆக்கப்பட்டன. **நீண்டபயணம், சடங்கு** என்ற என் நாவல்களின் பின்னர் **'போர்க்கோலம்'** என்ற இந்நாவல் 1969ல் வெளிவந்தது. கால் நூற்றாண்டு கழிந்து மீள் பதிப்பாக இன்று வெளிவருகிறது.

மறைந்த தோழர் டானியலும் தலித் நாவல்களும் சிறுகதைகளும் 1960, 70 களிலேயே எழுதினார். அண்மையில் அவை தமிழ்நாட்டில் மீளப் பதிப்பிக்கப்பட்டு விற்பனையாவதன் மூலம் தலித்தின் புதிய எழுச்சியைக் காண்கிறோம்.

இந்தியாவில் சாதி அடுக்குமுறை அரசியலமைப்பில் பொறிக்கப்பட்டுள்ள நிலை இலங்கையிலில்லை.

இந்நாவலுக்கு நீண்ட முன்னுரை எழுதிய அசுரன், இதோர் சமகால வரலாற்று நாவல் எனக் குறிப்பிட்டுள்ளார். ஈழத்தில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஒரு காலகட்டத்தில் நிலவிய உற்பத்தி உறவுகள், சமூக அமைப்பிடை ஏற்பட்ட முரண்பாடுகள், வர்க்கப் போராட்டங்களை இந்நாவல் விரிக்கும். அதன்பின்னர் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் தேசிய விடுதலைப் போராட்டமாக, பூதாகாரமாக வடிவமெடுத்திருப்பதை அனைவரும் அறிவர். அவற்றின் பிரதிபலிப்பைப் பின்னர் பல நாவல்களில் சித்தரித்துள்ளேன்.

இந்நாவலின் புதிய பதிப்பை விரைவில் அச்சிட உதவிய அச்சகத் தொழிலாளர், உரிமையாளருக்கு என் அன்பு.

சென்னை **செ. கணேசலிங்கன்**
16-4-1996

படிப்பகம்

www.padippakam.com

# போரும் போர்க்கோலமும்

இ. ணேசலிங்கன் தான் படைத்துள்ள இந்நாவலுக்குப் 'போர்க்கோலம்' என்று பெயர் வைத்துள்ளார். போர்க் கோலம் என்ற பெயர் நாவலின் உள்ளடக்கத்தைக் குறிப்ப தாக அமைகிறது. போர் என்றால் என்ன? போர்கள் எத் தனை வகைப்படும் என்று பொதுவாகப் பார்ப்பதும், பின்னர் இந்நாவலின் உள்ளடக்கமான சாதிகளிடையே நிகழும் போரைப்பற்றி ஆராய்வதும் சிறப்பாக இருக்கும்.

''போர் என்பது வர்க்கங்கள், தேசங்கள், நாடுகள், அர சியல் குழுக்கள் ஆகியவற்றுக்கிடையில் நிகழும் முரண்பாடு கள் ஒரு குறிப்பிட்ட கட்டத்துக்கு வளர்ச்சி அடைந்ததும், அவற்றைத் தீர்ப்பதற்குரிய மிக உயர்ந்த போராட்ட வடி வம் ஆகும்.'' மனித சமுதாய வரலாற்றில் தனி உடைமை முறையும், வர்க்கங்களும் தோன்றியது முதல் போர் இருந்து வருகின்றது. சமுதாயம்; சுரண்டும்-சுரண்டப்படும் வர்க்கங் களாகப் பிரிந்த காலந்தொட்டே வர்க்கப் போராட்டங் கள் நிகழ்ந்து வருகின்றன. இப்போராட்டங்களில் ஏற்படும் அளவு மாற்றமானது போர் என்ற உச்சநிலையை அடையும் போது சமுதாயத்தில் குணமாற்றத்தை ஏற்படுத்துகின் றது. மனித சமுதாய வரலாற்றில் கணக்கற்ற போர்கள் நடந்து வந்திருக்கின்றன. இப்போர்கள் அனைத்துமே அர சியல் நடவடிக்கைகள்தான். அரசியல் என்பது பொருளாதார அமைப்பின் ஒரு உக்கிரமான வெளிப்பாடாகும். பொருளா தார அமைப்பில் உற்பத்திச் சாதனங்களுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் இடையே உள்ள முரண்பாடுகளே போர் களுக்கு வழிகோலுகின்றன, இது மனித உற்பத்திக்கு அப் பால் இயங்கும் புறநிலை விதி ஆகும்.

போர்கள் என்று சொல்லும்பொழுது அவைகளில் நீதி யான போர்கள் என்றும், அநீதியான போர்கள் என்றும், பாகுபாடு காணப்படுகின்றது.

ஒருவர்க்கத்திற்கு நீதியாக இருப்பது இன்னொரு வர்க் கத்திற்கு அநீதியாக இருக்கின்றது. ஆனால் வரலாற்றின்

படிப்பகம்

www.padippakam.com



விதிப்படி பார்க்கும்போது வரலாற்றை முன் நடத்தும் போர் கள் அனைத்துமே நீதியானவைதான். வர்க்கங்கள் இருக் கின்ற வரை வர்க்கப் போராட்டங்களும், போர்களும் தவிர்க்க முடியாதவை. ஒவ்வொரு வர்க்கமும் மற்ற வர்க் கத்தை எதிர்த்து நடத்தும் போர்கள் அனைத்தும் அடிப் படையில் அரசியல் அதிகாரம் பெற நடத்தும் போர்கள் ஆகும்.

ஒரு காலத்தில் முற்போக்காக இருப்பது பிறிதொரு காலத்தில் பிற்போக்காக மாறிவிடுகிறது, ஒரு காலத்தில் வர லாற்றை முன் நடத்தும் வர்க்கம் பிறிதொரு காலத்தில் பிற் போக்கான எதிர்ப்புரட்சி வர்க்கமாக மாறிவிடுகிறது. ஆகவே ஒரு போர் முற்போக்கானதா அல்லது பிற்போக்கா னதா என்று அறிய வேண்டும் என்றால் நாம் அப்போரை வர லாற்றுப் பின்னணியோடு பார்க்க வேண்டும்.

கணேசலிங்கனின் நாவலான 'போர்க்கோலம்' ஒரு சம கால வரலாற்று நாவலாகும். இன்று இலங்கையில் சாதிகளி டையே நடைபெறும் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டதே இந்நாவல். சாதிப் போராட்டம் என்பது அடிப் படையில் வர்க்கப் போராட்டமாகும்—சாதி அமைப்பிற்கு எதிராக போர்க்கோலம் பூண்டெழும் தீண்டப்படாத மக்க ளுக்கும்—சாதி அமைப்பைக் கட்டிக் காப்பதில் நலன் அடை யும் உயர்சாதி வர்க்கத்தினருக்கும் நிகழும் போராட்டமே இந்நாவலின் உள்ளடக்கம் ஆகும். தீண்டாமைக்கும் சாதி அமைப்பிற்கும் நிலைக்களன் நிலப்பிரபுத்துவம். அதற்கு உறுதுணையாகவும் பக்கபலமாகவும் இருப்பது ஏகாதிபத்தி யம். நிலப்பிரபுத்துவம், ஏகாதிபத்தியம்— இவ்விரண்டிற்கும் உதவும் பிற்போக்குச் சக்திகள் அனைத்தையும் தகர்த்துப் புதிய பொருளாதார அமைப்பை பாட்டாளிவர்க்கத் தலைமை யில் நிறுவ நடத்தப்படும் போராட்டமே சாதிப் பிரச்சனை களையும் தீர்க்க முடியும்.

தீண்டாமை என்பது நிலப்பிரபுத்துவ பொருளாதார அமைப்பின் உயர்மட்ட வடிவமாகும். இது இலங்கையில்

www.padippakam.com



மட்டுமல்லாது அரைக்காலனிய, அரை நிலப்பிரபுத்துவ நாடான இந்தியாவிலும் இருக்கின்றது. நிலப்பிரபுத்துவ அமைப்பைத் தகர்ப்பதில் மாபெரும் அக்டோபர் புரட்சிக்குப் பிறகு பூர்ஷுவா வர்க்கம் சக்தியற்றுவிட்டது. காரணம், காலனியப் பிடிப்பிலிருந்து பெயரளவில் விடுதலை பெற்ற நாடுகளின் ஆளும் தரகு முதலாளி வர்க்கம் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்திருக்கின்றது; நிலப்பிரபுத்துவத்தைக் காத்து வருகிறது ஏகாதிபத்தியத்தைச் சார்ந்திருக்கும் தன்மை வாய்ந்த தரகு முதலாளி வர்க்கநலன், நிலப்பிரபுத்துவத்துடன் உடன்பாடு செய்துகொள்வதில் தானே அடங்கி உள்ளது? ஆகவே இன்றைய நிலையில் நிலப்பிரபுத்துவம், ஏகாதிபத்தியம், தரகு முதலாளி வர்க்கம் ஆகிய மூன்று மலைகளை தகர்த்து எறிவதில் தலைமை தாங்கும் திறனும் ஆற்றலும் படைத்தது பாட்டாளி வர்க்கமே. இம்மூன்று மலைகளையும் தகர்ப்பதால் பயன் அடையும் இதர வர்க்கங்களும் இத் தலைமையின் அணியில் திரளும்.

இந்தியாவிலும், இலங்கையிலும் இப்போது உள்ள முதன்மையான முரண்பாடு மக்களுக்கும்—நிலப்பிரபுத்துவத்துக்கும் இருக்கும் முரண்பாடு ஆகும். இம்முதன்மையான முரண்பாட்டைத் தீர்ப்பதில் இருநாடுகளிலும் இயக்கங்கள் தோன்றி வளர்வதை இன்று பார்க்க முடிகின்றது. இலங்கையிலிருந்து வரும் புரட்சி இயக்கங்களின் ஏடுகள் இப் போராட்டங்களை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. இந்திய மக்களுக்கும்—நிலப்பிரபுத்துவத்திற்கும் இருக்கும் முதன்மையான முரண்பாட்டைத் தீர்க்கும் உள்ளடக்கமான உழவர் புரட்சியின் தீப் பொறிகளும் ஆங்காங்கு தோன்றுவதைப் பார்க்கின்றோம். இவ்விரு நாடுகளிலும் இன்று நடைபெற வேண்டிய புரட்சி, அடிப்படையில் பாட்டாளி வர்க்கத் தலைமையில் நடக்கும் ஒரு புதிய ஜனநாயகப் புரட்சியாகும். இந்திய மக்களைப் பொருத்தவரையில் நிலப்பிரபுத்துவம், தரகு முதலாளி வர்க்கம், ஏகாதிபத்தியம் ஆகிய மலைகளும் அவர்கள் முன் உள்ளன. இவற்றிற்கு எதிரான புரட்சிகரமான இயக்கங்கள் நக்சல்பாரியிலிருந்து சிறு பொறியாகத்

படிப்பகம்

www.padippakam.com



தொடங்கி, இன்று சீகாகுளத்தில் அது பொருந்தீயாக மாறி வருவதை நாம் பார்க்க முடிகின்றது.

இன்றைய காலத்தின் மாபெரும் புரட்சி இயக்கங்கள் இவ்விரு நாடுகளிலும் நடக்கின்றன. இந்நிலையில் மக்களுக்கு செயலூக்கமும் வீரஉணர்வும் தரவேண்டியது நாவலாசிரியரின் கடமையாகும். நாவல் என்பது இன்றைய யுகத்தின் காவியம் மட்டுமல்ல முதன்மையான இலக்கிய வடிவமுமாகும். தமிழகத்தில் எதார்த்த நெறியில் எழுதும் நாவலாசிரியர்களைப் பார்ப்பது மிகவும் அரிதாயிருக்கின்றது. எதார்த்த நெறி என்ன என்று இங்குள்ள 'முற்போக்கு' நாவலாசிரியர்கள் பலர் புரிந்து கொள்ளவில்லை என்பதற்கு அவர்களின் படைப்புக்களே சாட்சிகளாகின்றன. கணேசலிங்கன் எதார்த்த நெறி நாவல்கள் படைப்பதில் முன்னோடியாய் இருக்கின்றார். அவரின் பிற நாவல்களான நீண்ட பயணம், சடங்கு, செவ்வானம், தரையும் தாரகையும் போன்ற அனைத்தும் இன்றைய தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முன் நிற்கின்றன. போர்க்கோலம் என்ற இந் நூல் இத்தொடரில். மக்களுக்கு முன்னிற்கும் நிலப்பிரபுத்துவம் என்ற பிரதானமான முரண்பாட்டைத் தகர்த்தெறிவதற்கு புதிய, புரட்சிகரமான வழியைக் காட்டி நிற்கிறது.

ஒவ்வொரு இலக்கிய வடிவத்திலும் உள்ளடக்கம், உருவம் என்ற இரு அம்சங்கள் உள்ளன. இவற்றில் உள்ளடக்கம் என்பது குறிப்பிட்ட கால அரசியல் தேவையைப் பூர்த்தி செய்கிறது. அந்தந்தக் காலத்தில் படைக்கப்படும் இலக்கியங்கள் அந்தந்தக் கால அரசியல் லட்சியத்திற்கு மக்களை ஒன்று திரட்டுவதிலும், போதிய வீரமும் செயலூக்கமும் தருவதிலும் முன் நிற்கவேண்டும். இன்றைய நிலையில் இலங்கை. இந்தியா போன்ற நாடுகளில் நடந்து வரும் உழவர் புரட்சி இயக்கங்களுக்கு இலக்கியங்கள் உதவவேண்டும். 'இலக்கியம் என்பது முழுமையான புரட்சிகர இயந்திரத்தின் பற்களும் சக்கரங்களும் ஆகும்' 'என்றார் லெனின். ''பாட்டாளிவர்க்க கலை இலக்கியம் என்பது முழு பாட்டாளி

www.padippakam.com



வர்க்க புரட்சி இலட்சியத்தின் ஒரு பகுதி.'' அது ''மக்களை ஐக்கியப் படுத்தி போதித்து, எதிரியைத் தாக்கி அழிக்கும் சக்திமிக்க ஆயுதமாகச் செயல்பட வேண்டும்; மக்கள் ஒரே மனம் ஒரே உள்ளத்துடன் எதிரியை எதிர்க்கத் துணைபுரிய வேண்டும்'' என்பது மாமேதை ஒருவரின் கருத்து.

இதுவரை இரு நாடுகளின் முதன்மையான முரண்பாட்டையும், மக்களின் எதிரிகள் யார் என்பதையும், இலக்கியத்திற்கும் அரசியலுக்கும் உள்ள தொடர்பையும் பார்த்தோம் இனி பொதுவான இக் கருத்துக்களுடன் 'போர்க்கோலம்' என்ற இந்நாவல் எவ்வாறு இணைந்து வருகின்றது என்பதையும், பொதுவான இலட்சியத்திற்கு எவ்வாறு இந்நாவல் தன் பங்கைச் செலுத்துகின்றது என்பதையும் பார்ப்போம்.

இந்நாவலின் பகைப் புலமாக அமைந்துள்ளது கரம்பன் என்ற கிராமம். நிலப்பிரபுத்துவப் பரம்பரையில் வந்த வேளாளர் இனத்தவர்கள் பறையர், பள்ளர் இனத்தைப் பலவாறு ஒடுக்குகின்றனர். கோயில், தெருக்கள் போன்ற பொது இடங்களில் செல்வதற்கும், கிணறுகளில் நீர் எடுப்பதற்கும் நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பில் பல தடைகள் உள்ளன. ஈழத்தில் மட்டுமல்லாது இந்தியாவிலும் இந்நிலை உள்ளது. இவ்வாறான நிலப்பிரபுத்துவப் பழக்க வழக்கங்களை எதிர்த்து இலங்கையில் தீவிரப் போராட்டம் நடைபெறுகின்றது.

இப்போராட்டத்தில் தலைமை வகித்தவன் மாணிக்கன், மாணிக்கனின் காதலி—அன்னம். இவள் சாதி வெறிபிடித்த ஆனந்தன் வீட்டில் வேலை செய்கிறாள். ஒடுக்கப்பட்ட இன மக்களின் எழுச்சியில் தீவிர பங்கு எடுக்கும் மாணிக்கன் கள்ளில் 'பாலிடால்' விஷம் கலக்கப்பட்டுக் கொலை செய்யப்படுகிறான். ஆனால் தற்கொலை என்று சாட்சிகள் சோடனை செய்யப்படுகின்றன.

நிலப்பிரபுத்துவத்தைக் கட்டிக் காப்பதில் தலன் அடையும் வேளாளச் சாதியினரின் சதிக்குப் பலியான மாணிக்-

www.padippakam.com



களின் மறைவு ஒடுக்கப்பட்ட மக்களிடம் பழிவாங்கும் உணர்வினை ஏற்படுத்துகின்றது. மாணிக்களின் காதலியான அன்னம், மாணிக்கன் எந்த இயக்கத்தின் காரணமாகப் பலியானானோ அந்த இயக்கத்துக்குத் தன்னை அர்ப்பணிக்கவும்— அவன் அடிச்சுட்டில் நடக்கவும் முடிவு செய்கிறாள். மாணிக்கன் கொலை செய்யப்பட்டபின் அவனைக் கொலை செய்தவனைப் பழிவாங்க வேண்டும் என்ற உணர்வுடன் நீறுபூத்த நெருப்புப்போல்இருக்கிறாள். பெரும்பாலானதாழ்த்தப்பட்ட மக்களின் முடிவுப்படி வேளாளர் இல்லங்களில் வேலை செய்வதில்லை என்ற முடிவுக்கு மாறாக ஏன் அன்னம் செல்கிறாள் என்பது முதலில் புதிராக இருக்கும். இறுதியில் இப்புதிர் நீங்குகின்றது.

அன்னம் அவள் காதலனைக் கொன்றவன் மீது கொள்ளும் பழிவாங்கும் உணர்வும் பற்றி ஆசிரியர் உணர்ச்சியைத் தூண்டும்படியான உரையாடல்களுடன் எழுதிச் சென்றுள்ளார். வீரமிக்க வியட்நாம் மீது ஆக்கிரமிப்புச் செய்து அம் மக்களைக் கொன்று குவித்து வருகின்றது உலகமக்களின் விரோதியான அமெரிக்க ஏகாதிபத்தியம். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சரான மக்னமாராவைக் கொல்லப் புறப்பட்டு —அவர்களின் சதிக்குப் பலியான வீரன் நகூயென் வான் சாய்— அவர்களின் இலட்சியத்தைப் பின்பற்றி அவன் அடிச் சுவட்டில் செல்லும் அவன் மனைவி பான் திஞயென் ஆகிய இருவரையும், அடிக்கடி நினைவூட்டும் வண்ணம் மாணிக்கன் அன்னம் ஆகிய மாந்தர் அமைந்துள்ளனர்.

நிலப்பிரபுத்துவத்தின் சின்னமான சாதியமைப்பின் கட்டுப்பாட்டை எதிர்த்து நடத்தப்படும் பொது மக்கள் இயக்கம் கதையில் பெரும்பங்கு வகிக்கிறது. கோயிலினுள் தடை மீறி நுழைய ஒடுக்கப்பட்ட மக்கள் முயல்கின்றனர். ஆளுகின்ற பிற்போக்கு வர்க்கம் தன் நலனைக் காக்கும் நிலப்பிரபுத்துவக் கட்டுப் பாடுகளைக் காக்க தன் பொலிஸ் பட்டாளத்தை மேல்சாதிக்காரர் நலனுக்குப் பயன்படும் வகையில்

www.padippakam.com



அனுப்புகிறது. எதிர்ப்புரட்சிக் கும்பலான வேளாளச் சாதியினர் துப்பாக்கிகள், குண்டுகள், சகிதம் பொலிஸ் பாதுகாப்புடன் (?) ஒடுக்கப்பட்ட மக்களைத் தாக்கக் காத்திருக்கின்றனர். ஆயுத பாணியான எதிரிகளை முறியடிக்க ஆயுத பாணியாகத்தான் செல்ல வேண்டும் என்பதை மக்கள் உணர்ந்து ஆயுதபாணிகளாகச் செல்லுகின்றனர். புரட்சி வர்க்கத்தின் பலாத்காரம்-எதிர்ப்புரட்சி வர்க்கத்தின் பலாத்காரம் இரண்டும் மோதுகின்றன.

இந்தியாவிலும் இதே இயக்கங்கள் சுதந்திரத்திற்கு முன்னும், பின்னும் நடந்தன. காந்தி இந்த இயக்கத்திற்குத் தலைமை தாங்கினார். காந்தியின் இயக்கம், தாழ்த்தப்பட்ட இனமக்களைக் கோயிலுக்குள் அழைத்துச் செல்ல இயக்கம் நடத்தியதற்குக் காரணம் நிலப்பிரபுத்துவத்தைத் தகர்ப்பது அல்ல; மாறாக நிலப்பிரபுத்துவம், ஏகாதிபத்தியம், ஆகியவற்றின் ஒடுக்குதலுக்கு எதிரான இயக்கத்தைத் திசை திருப்பி—பரம்பரை பரம்பரையாக சுரண்டப்பட்ட மக்களை மேலும் சுரண்டலுக்கு ஆளாக்கவே; சுரண்டல் தத்துவத்தைச் காக்கும் ''அபினியில்'' ஒரு வகையான இந்து மதத்திலிருந்து மக்கள் கிறித்துவ மதம் போன்றவற்றிற்குச் செல்லாமல் காக்கவே காந்தி அவ்வாறு செய்தார், காந்தி என்றும் தன்னை ஒரு இந்து என்று கூறிக் கொள்ளுவதைப் பெருமையாகக் கருதினார்.

நிலப்பிரபுத்துவத்தின் சின்னமான சாதி அமைப்பை எதிர்த்துப் போராடுவது மட்டும் அல்லாது அடிப்படையான அந்தப் பொருளாதார அமைப்பைத் தகர்த்தெறிய மக்களை வழிநடத்த வேண்டும். அதற்கு வேண்டிய உணர்வினையும் உற்சாகத்தையும் இக்கால இலக்கிய ஆசிரியர்கள் அளிக்க வேண்டியது முக்கியமாகும்.

இலங்கையிலும் சரி இந்தியாவிலும் சரி நிலப்பிரபுத்துவம் முற்றாக அப்படியே இருக்கவில்லை. நிலப்பிரபுத்துவம் முதலாளித்துவச் சமுதாயப் பிறப்பால் பாதியளவு தளர்ந்து

www.padippakam.com



இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களிலும், உயர்சாதி இனத்தவர்களிலும் வர்க்க மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இம்மாற்றத்தால் அவர்களிடையே குண மாறுதல்களும் ஏற்பட்டு உள்ளன. இவற்றை இயங்கியல் நோக்கோடு ஆசிரியர் நன்கு சித்தரித்துள்ளார்.

தாழ்த்தப்பட்ட இனத்தவராய் இருந்தும் கல்வீட்டு வேலாயுதமும் அவர் குடும்பத்தினரும் வர்க்க ரீதியாக மாறி இருப்பதன் காரணமாக வேளாளர் இனத்தவரின் நிலப்பிரபுத்துவப் பழக்க வழக்கங்களைப் பின்பற்ற முனைகின்றனர். இப்பழக்கம் பற்றி மாணிக்கன் ஒரு நேரம் கூறுகிறான்:

> ''எங்கடையாட்கள் வெள்ளாளரைப் பார்த்துப் பின்பற்றுவதை நிறுத்த வேண்டும். இப்படியான ஆடம்பரங்களாலும் மூடநம்பிக்கைகளாலும் எமது சமுதாயத்திற்கு எல்விதப் பயனும் ஏற்படப்போவதில்லை. எமக்குள்ளேயே புது வேளாளர் பிறக்கிறதுக்கு நாமும் ஆதரவாயிருக்கக் கூடாது.''

பறையர், பள்ளர் இனத்தில் உடைமை வர்க்கம் உண்டாவதும் அவ்வர்க்கத்தின் குணம், அடிப்படையில் உடைமை வர்க்கக் குணமாக மாறுவதும், நிலப்பிரபுத்துவ வர்க்கத்தைச் சார்ந்த சிலர் உடைமையற்ற வர்க்கமாக மாறுவதால் ஒடுக்கப்படும் வர்க்கத்தினராக மாறுவதும் வரலாற்றின் இயக்கத்தில் நிகழ்வன. இவற்றை எல்லாம் ஆங்காங்கே சிறப்பாகக் காட்டியுள்ளார் நாவலாசிரியர்.

நிலப்பிரபுத்துவச் சமுதாய அமைப்பில் துன்பப்படுபவர் பறையர், பள்ளர் மட்டுமல்லர்; உயர்சாதியினரும் துன்பப்படுகின்றனர். வரதட்சணை இல்லாது இளமையில் மணமாகாமல் 'குமருகள்' கிழடாகும் வரையில் இருந்து—அச்சமுதாயத்தின் ஒழுக்கத்தை மீறவும் தைரியமின்றி—அத்துன்பத்தைச் சகிக்கவும் முடியாமல் திண்றி வருவதை நாம் பார்க்கிறோம். பொருளாதார ரீதியாக உயர்ந்த வர்க்கத்தைச் சார்ந்தவர்க்கே இத்துன்பங்கள் இராது.

படிப்பகம்

www.padippakam.com



ஆனந்தன் என்ற நாவலில் வரும் மனிதன் நசிந்து கொண்டு இருக்கும் நிலப்பிரபுத்துவத்திற்குச் சரியான ஆதர்ச உதாரணமாகும். சாதி அமைப்பைக் கட்டிக் காப்பதில் தீவிரமாகத் தலைமை தாங்கும் இவன் அன்னத்தின் அழகில் மயங்குதலும், அவளிடத்தில் பல்லைக் காட்டுதலும் சாதி அமைப்புக்கும்—மக்களுக்கும் இடையிலுள்ள முரண்பாடுகளைப் பிரதிபலிக்கும் சிறுசிறு உணர்வுகள்.

நிலப்பிரபுத்துவ உறவு முறையைத் தகர்க்க கோயிலுக்குள் நுழையும் தாழ்த்தப்பட்டவர்களைப் பலாத்காரமாகத் தாக்கும் பிற்போக்குக் கும்பல், அதற்குப் பாதுகாப்பு அளிக்கும் பொலீஸ் இவற்றை எதிர்த்துத் தாக்காமல் அழிக்க முடியாது என்ற உணர்வையும், ''பலாத்காரத்தை பலாத்காரத்தால்தான் வீழ்த்த முடியும்'' என்பன போன்ற கருத்துக்களும் நாவல் மாந்தர் வாயிலாக எதார்த்தமாக வெளிவருகின்றன.

சுரண்டல் சமுதாய அமைப்பின் கருத்திலிருந்து விடுபடாதவர்கள் எளிதில் சீரணித்துக்கொள்ள முடியாத உரையாடல்களும் நாவல் மாந்தர் வாயிலாக வருகின்றன. சற்றுக் கூர்ந்து ஆராய்ந்தால் உண்மை புலனாகும்.

இந்நாவலில் இயக்கத்திற்குப் பணம் சேர்ப்பதைப்பற்றி மாணிக்கன் கூறியதைப் பார்க்கையில் எனக்கு கார்ல் மார்க்ஸின் ''பறிமுதல் செய்வோர் பறிமுதல் செய்யப்படுவர்.'' என்ற வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன: தம் வர்க்க நலனுக்கு உகந்த சட்டங்கள் மூலம் உற்பத்திச் சாதனங்களைத் தனியுடைமையாக வைத்துக்கொண்டு உழைக்கும் மக்களைச் சுரண்டவும், அச்சுரண்டலை நியாயப்படுத்தி மக்களை ஒடுக்கவுமே இன்றைய விதிகள், சட்டங்கள், பிற அமைப்புகள் யாவும் உள்ளன. ஆகவே இவற்றைத் தகர்ப்பதில் என்ன தவறு இருக்க முடியும்? இச்செயல்கள் எதிர்ப்புரட்சியை நசுக்கவும் சமுதாய மாற்றத்திற்கு உதவுவதாகவும் இருக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



இந்திய நாட்டில் புரட்சி இயக்கங்கள் ஆங்காங்கே நிலப் பிரபுக்கள், லேவாதேவிக்காரர்கள் போன்றவர்களைப் பறிமுதல் செய்வதாகவும் நாம் செய்தித்தாள்களில் பார்க்கிறோம். பறிமுதல் செய்வோர் பறிமுதல் செய்யப்படுவது தனிமனித செயல்கள் என்றும், பயங்கரவாதம் எனவும் கூறுவதன்மூலம் அவர்கள் எதிர்ப்புரட்சி அணியில் சேருவதையும் நாம் பார்க்கின்றோம். அது மட்டுமல்லாது பிற்போக்கான இந்திய ஆட்சியமைப்பில் பங்குகொண்டு மக்களுக்கு மயக்கங்களை உண்டாக்குவதையும்-இந்த அமைப்பைக் காப்பவர்களாக மாறுவதன்மூலம் அடிப்படையில் எதிர்ப் புரட்சியாளராக மாறுவதையும் நாம் பார்க்கிறோம். இதுபோன்ற மயக்க உரைகளைக் கணேசலிங்கன் தன் 'செவ்வானம்' என்ற நாவலிலே போக்கி இருப்பதோடு, இந்த நாவலிலும் நாவல் மாந்தர் மூலமாகத் தகர்த்தெறிகிறார்.

அன்னம், மாணிக்கன், இலட்சுமணன் போன்ற மாந்தர்கள் சாதியமைப்பை எதிர்த்துத் தீவிரப் போராட்டம் நடத்துகின்றவர்களாகக் கதையில் வருகின்றனர். ஒடுக்கப்பட்ட வாழ்நிலை காரணமாக இவர்கள் புரட்சியாளர்களாக உள்ளனர். சாதியமைப்பைக் கட்டிக் காப்பதில் தீவிரம் உடைய ஆனந்தனின் தம்பி வடிவேலுவும் தாழ்த்தப்பட்ட மக்களுடன் சேர்ந்து போராடுகிறான். நகர வாழ்க்கையும், சூழ்நிலையும் அவனை நிலப்பிரபுத்துவ எதிர்ப்பாளனாக மாற்றியுள்ளது. அதே நேரத்தில் வேலாயுதம் தாழ்த்தப்பட்டவனாக இருந்தும் உடைமை வர்க்கமாக மாறிவிட்டதன்மூலம் புரட்சியாளனாக இல்லாதிருப்பதையும் ஆசிரியர் இயங்கியல் கண்ணோட்டத்தோடு சித்தரித்துள்ளார்.

ஒவ்வொரு வர்க்கத்தினருக்கும் அவர்களின் போராட்டத்திற்கும் வழிகாட்டியாக ஒவ்வொரு காலத்திலும் சிலர் விளங்குவர். சமுதாய வளர்ச்சியில் மக்களுக்கு எதிராக எதிர்ப்புரட்சி வர்க்கம் புதிய புதிய வடிவங்களில் வரும். அவ்வப்போது புரட்சி எது, எதிர்ப்புரட்சி எது என்பதையும்,

படிப்பகம்

www.padippakam.com



மக்களின் நண்பர்கள் யார், விரோதிகள் யார் என்பதையும், உண்மையான நண்பர்களோடு இணைந்து உண்மையான எதிரிகளைத் தாக்க ஒன்றுபடுவதன் அவசியத்தை வரலாற்றின் விதியறிந்து மக்களுக்கு உணர்த்துவதில் ஒவ்வொரு கட்டத்திலும் ஒரு சில தலைவர்கள் விளங்குவர். இலங்கை மக்களின் போராட்டத்துக்கும் இந்திய மக்களின் போராட்டத்துக்கும் வழிகாட்டும் தத்துவம் எது? இம்மக்களுக்கு இத் தத்துவ ஆயுதத்தைத் தருபவர் யார்? இதை ஆசிரியர் ஓரிடத்தில் மறைமுகமாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

''கலாச்சாரமில்லாத ஒரு படை மந்தபுத்தியுள்ள ஒரு படையாகும். மந்தபுத்தியுள்ள ஒரு படை எதிரியைத் தோற்கடிக்க முடியாது?'' என்ற மொழிக்கிணங்க மக்களைப் போர்க்கோலம் பூணச் செய்யும் சிறந்த இலக்கியம், கலை, கலாச்சாரம் படைப்பது வரலாற்றை முன் நடத்தும் இயக்கங்களுக்குப் பாடுபட விரும்பும் கலைஞர்களின் கடமை.

அத்தகைய கடமைகளில் தமிழ் இலக்கிய உலகில் முன்னோடியாக பிற்போக்காளர்களுக்கு எதிராக மக்களைப் போர்க்கோலம் பூணச் செய்யத் தேவையான இலக்கியப் படைப்புக்களை உருவாக்கி வருகிறார் கணேசலிங்கன். இத்துறையில் மேலும், புதிய ஜனநாயகப் புரட்சியின் உள்ளடக்கமான உழவர் புரட்சிக்கு உதவும் நாவல்கள் படைக்க வாழ்த்துக்கூறி என் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அசுரன்**

www.padippakam.com

# போர்க்கோலம்

அன்னத்தின் கரங்கள் உலக்கையை யந்திரம் போல உரலுக்குள்ளே போட்டுக்கொண்டிருந்தன. உலக்கை கை மாறிக்கொண்டிருந்தது. பார்வை கீழ்நோக்கி யிருந்தது. எதிலுமே லயித்திருப்பதாகத் தெரியவில்லை. சிந்தனை எங்கோ நிலைத்திருந்தது. வியர்வை வடிந்து செம்பாட்டு மண் படிந்த சட்டையை நனைத்துக்கொண்டிருந்தது. நெற்றியிலிருந்து வியர்வைத் துளிகள் உரலுக்குள்ளேயும் தெறித்ததை அவள் பொருட்படுத்தவில்லை. அவளது வேலை, முறுக்கிவிட்ட சூத்திரப் பாவைபோல இருந்தது.

''என்னடி இடித்துக்கொண்டேயிருக்கிறாய். மாவை அரிக்கிறேல்லையா?''

தங்கம்மா அடுக்களையிலிருந்து முற்றத்தைக் கடந்து வந்து அதட்டிக் கேட்டாள். உலக்கை உரலில் விழும் சத்தத்தையே தொடர்ந்துகேட்டுப் பொறுமையிழந்த தங்கம்மா அன்னத்திற்கு நினைவூட்ட வந்தாள்.

''ஓம், மறந்துபோய் இடித்துக்கொண்டே நின்று விட்டேன்''

தூக்கத்திலிருந்து திடீரென எழுந்த கலக்கம்; மா இடித்த ஓசை ஓய்ந்தது. உலக்கையைச் சரித்து, பூணுக்குள் அடைந்திருந்த மாவைச் சுரண்டி உரலுக்குள் கொட்டி விட்டு, அழுக்கான தன் சேலைத்தலைப்பால் முகத்தைத் துடைத்தாள்.

போ—2

படிப்பகம்

www.padippakam.com



''உனக்கிப்ப அடிக்கடி மறதிதான். நேற்று மா இடிக்க வாறதென்று நான் அரிசியை நனையப்போட்டன். நீ மறந்துபோனாய் என்று இன்றைக்கு வந்து சாட்டுச் சொல்லிறாய்''

தங்கம்மா சொல்லிக்கொண்டே கிணற்றடியை நோக்கி நடந்தாள். அன்னம் பதிலொன்றும் சொல்லாது மாவை உரலிலிருந்து அள்ளி எடுத்து அரிதட்டிலிட்டு அரித்தாள். தொடர்ந்து அரித்துக்கொண்டேயிருந்தாள். நினைவை செயலில் ஈடுபடுத்துவது மிகவும் சிரமமாக இருந்தது.

''அரித்தது போதும். இனி இடி''

தங்கம்மா நினைவூட்டிவிட்டு அடுக்களைக்குள் சென்றாள். அரித்த கட்டையை உரலில் போட்டு இடிக்கத் தொடங்கினாள். மீண்டும் யந்திரம் போலக் கைகள் இயங்கின. சுற்றாடல், உலகம் எதுவுமே அவள் நினைவில் இல்லை. இதயம் விம்மி நெஞ்சை அடைத்துக்கொண்டிருந்தது.

வேட்டியை மடித்து மொட்டாகக் கட்டிக் கொண்டு, தோளில் துவாயுடனும் கையில் வேப்பங்குச்சியுடனும் ஆனந்தன் அவளின் பின்னே நின்றதை அவள் காணவில்லை. அவளது தசைபிடித்த உடலின் அசைவுகளைப் பார்த்துக்கொண்டு அவன் நின்றான். அவளது முகத்திலும் கண்களிலும் படிந்திருந்த கருநிழலை அவன் ஒரு கணத்திலேயே கண்டு கொண்டான். அவனது உதட்டிலே ஒரு விஷமச் சிரிப்பு; எவராலும் புரிந்துகொள்ள முடியாத சிரிப்பு.

''ஏனடி நேற்று நீ வரேல்லை. ஆச்சி உன்னையே நாள் முழுதும் பார்த்துக்கொண்டிருந்தா''

ஆனந்தன் கேள்வியில் ஒருவித நளினம் ஒலித்தது.

அன்னம் திரும்பியே பார்க்கவில்லை. எதுவுமே பேசவில்லை. உலக்கை கணத்திற்கொரு தடவை இடித்துக்கொண்டிருந்தது.

www.padippakam.com



''எனக்குத் தெரியாதாடி. நீ மாணிக்கனுக்காக நேற்று முழுக்க ஒப்பாரி வைச்சிருப்பாய்''

ஆனந்தன் கூறி முடிக்கவில்லை. சிறுபிள்ளை ஊதிய பலூன் வெடித்தது போலிருந்தது. அன்னம் உலக்கையைப் பிடித்தபடி அப்படியே இருந்துவிட்டாள். இதயம் வெடித்த நிலையில் விம்மி விம்மி அழுதாள். மூன்று நாட்களாக அடக்கி வைத்திருந்த துயரம் ஆனந்தனின் வார்த்தையின் முன்னர் மடை திறந்ததுபோல் உடைந்தது. கண்ணீர் வழிந்தோட விக்கி விக்கி அழுதாள். நிலத்தில் இருக்கவே பலமின்றி உரலின் விளிம்பைப் பிடித்துக்கொண்டாள். வார்த்தைகள் எதுவுமே வெளிவரவில்லை. ஊமையின் நிலையில், கண்ணீரும் விம்மலுமே அவள் துன்பத்தைப் பேசின.

''ஏனெடி அழுறாய். ஆரேன் பார்த்தால் சிரிக்கப் போயினம்''

ஆனந்தன் அதட்டினான். அவன் ஒருவனாலேயே அவளது துன்பத்தின் காரணத்தை உணரமுடியும் என்பதையும் அவள் அறிவாள். எத்தனை தடவை முயன்றும் விம்மலையும் கண்ணீரையும் அவளால் அடக்க முடியவில்லை.

''அழாதையடி, ஆச்சி வந்தாலும் ஏதேன் நினைக்கப் போறா''

ஆனந்தனின் தளினம் அடங்கி மனம் நெகிழ்ந்தது. வார்த்தைகள் வெளிவந்தபோதும் அவனது உடல் நடுங்கிக் கொண்டது; விரல்களில் வேப்பங்குச்சியைப் பிடிக்கவே வலுவில்லை.

## 2

''அன்னம், என்னடி அங்கை அழுகைச் சத்தம்''

தங்கம்மா வினா எழுப்பியபடியே முற்றத்தில் இறங்கினாள். அன்னம் சேலைத் தலைப்பை வாயுக்குள் திணித்து

படிப்பகம்

www.padippakam.com



விம்மலை அடக்கினாள். முகத்தைத் துடைத்தாள். தங்கம்மா எதிரே வந்து நின்றபோதும் அவளால் தன் துன்பத்தையும் கண்ணீரையும் முற்றாக மறைத்துவிட முடியவில்லை.

''என்னடி நடந்தது? ஏனெடி அழுறாய்?''

தங்கம்மா வியப்போடு வினவினாள். அவள் ஒன்றும் பேசாது ஊமைபோல் இருந்தாள். ஆனந்தன் கிணற்றடியை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

''ஏனடா தம்பி இவள் அழுதவள்?''

தங்கம்மா மகனை நோக்கிக் குரல் எழுப்பினாள்.

''அதாச்சி அந்த மாணிக்கன்ரை செத்த வீட்டுக்கு நேற்றுப் போனியோ என்று நான் கேட்டன். இங்கை ஒப்பாரி வைக்கிறாள்''

துலாக் கயிற்றைக் கீழே வலித்தபடியே ஆனந்தன் பதில் கூறினான்.

''ஏனெடி, அவன் உனக்கு என்ன சொந்தம்?''

தங்கம்மா அன்னத்தைப் பார்த்துக் கேட்டாள். அவள் தன் சொத்து, சுகம், வாழ்வு யாவையும் பறிகொடுத்தவள் போல- சூனியத்தைப் பார்ப்பவள் போல-எதையும் செவியில் வாங்காதவள் போல- அப்படியே இருந்தாள். கண் இமைகள் வெட்ட மறந்தவை போல விரிந்து கிடந்தன.

''அவன் விளாத்தியடிப் பள்ளன். நீ எங்கடை பள்ளி. எப்பிடியடி சொந்தம் வரும்''

தங்கம்மாவுக்கு யாவும் புதிராயிருந்தது.

''நீ போய் சமையலைப் பாராச்சி. நான் பிறகு எல்லாம் சொல்லுறன். அவளுக்கும் ஏதேன் கோப்பி போட்டுக்குடு, களையாற''

ஆனந்தனே மீண்டும் பதிலளித்தான்.

www.padippakam.com



''அவன் செத்தான் என்று கேட்டு ஊரெல்லாம் சந்தோஷப்படுது. நீ ஏனெடி அழுறாய்? அவன் கொஞ்ச நாளாய் என்ன குதியன் குதிச்சான். கடவுளாய் பார்த்து அவனைத் தண்டித்துவிட்டார். அரசன் அன்றறுப்பான், தெய்வம் நின்றறுக்கும் என்றதெல்லாம் பொய்யா?''

தங்கம்மா தன் குலத்தின் நியாயம் பேசினாள். அன்னத்தின் மனம் குமுறியபோதும் அவள் எதுவும் பேசவில்லை. தங்கம்மா மீண்டும் அடுக்களைக்குள் சென்றாள்.

ஆனந்தன் முகம் கழுவிவிட்டு வந்தான். அவள் பின்னே நின்று கேட்டான்:

''ஏனாமடி மாணிக்கன் பொலிடோல் குடிச்சான்? உங் கடை பக்கத்திலை என்ன கதைக்கினம்?''

அன்னம் அவனது விசாரணைக் கேள்விக்குப் பதில் எதுவும் கூறவில்லை. ஒன்றும் தெரியாதவர் போல விசாரிக்கிறார், சூடாகப் பதில் சொல்லுவோமா, விடுவோமா என மனம் ஊசலாடிய நிலையில் அவனது முகத்தை வெறுப்போடு பார்த்தாள்.

''என்னடி ஒரு மாதிரிப் பார்க்கிறாய்? அவன் பொலிடோல் குடிச்சதுக்கு ஒவ்வொருத்தனும் ஒவ்வொரு விதமாய் சொல்லுறாங்கள். உண்மை உனக்குத் தெரியாமலா இருக்கும். உனக்கு மட்டுந்தான் தெரியும் என்பது என் கணிப்பு. சொல்லன்ரி நாங்களும் அறிவம்''

ஆனந்தனின் பேச்சில் ஒலித்த மறைபொருளை அவளால் ஓரளவு ஊகிக்க முடிந்த போதும் பற்களைக் கடித்துக் கொண்டே பொறுமையை வரவழைத்து மௌனமாக இருந்தாள். அவளது மௌனத்தை உடைக்கும் நோக்கத்தோடு ஆனந்தன் ஒரு வெடிக்குண்டைத் தூக்கிப் போட்டான்:

''உன் ஊமைத்தனத்தைப் பார்த்தால் நீதான் காரணம் போலை தெரியுது''

ஆனந்தனின் கடைவாயில் ஒரு புன்னகை வழிந்தது.

படிப்பகம்

www.padippakam.com



இவள் ஏன் அழவேண்டும்?

தங்கம்மாவின் சிந்தனையில் பல்வேறு நினைவுகள் முளைவிட்டன. ஆனந்தன் சாப்பிடும்போது கேட்டு அறிய வேண்டும் என மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

''பசிக்கேக்கை வா. ராத்திரிப் புட்டும் பழைய சோறு மிருக்கு''

தங்கம்மா சொல்லிவிட்டுத் திரும்பினாள்.

அன்னம் சிரட்டையை மீண்டும் கூரைக்குள் செருகிவிட்டு வந்து உலக்கையை எடுத்தாள். இதயப்பாரம் சிறிது குறைந்ததும் கோப்பி குடித்த தெம்பும் மீண்டும் கைகளை யந்திரமாக்கின உலக்கை நிதானமாக விழுந்தபோதும் சிந்தனை பழைய நினைவுகளிடையே அகப்பட்டுச் சுழன்றது.

எத்தனை காலமாக மனதிலே கட்டி எழுப்பிய கோட்டை களெல்லாம் இத்தனை விரைவில் அழிந்து போகும் என்று அவள் கனவிலும் நினைத்ததில்லை.

''உந்த வெள்ளாளச் சாதிக்கு கூலிவேலை செய்ய உன்னை அனுப்பமாட்டேன்''

''அப்ப பிழைப்புக்கு வழி''

''எம்மோடு சேர்ந்து நிலங்கிண்டலாம்''

''அவர்களுக்குக் கோபம் வந்தால் பயிர்களையும் அழித்து விடுவார்கள்''

''அந்தக் காலமெல்லாம் மலை ஏறிவிட்டுது. இப்ப நாங்கள் துவக்கோடு இரவெல்லாம் காவல் புரியிறம்''

நிலவொளியிலே மாணிக்கனின் கண்களைப் பார்க்கிறாள். அவற்றில் இருந்த இன்ப வெறி அடங்கிவிட்டது. கண்களிலே வெஞ்சின வெறி.

''எனக்குப் பயமாயிருக்கு. உங்களுக்கும் ஏதாவது செய்துவிடுவாங்கள்''

www.padippakam.com



''எத்தனை பேர் இந்தப் போரில் பலியாகிவிட்டார்கள். என்னுயிர் மட்டும் என்ன கரும்போ''

''உங்களுக்கேதேன் நடந்தால் நான் தற்கொலை செய்து விடுவேன்''

''மடைச்சி, அப்பிடியெல்லாம் செய்துவிடாதே.''

''அப்ப எனக்கு வழியென்ன?''

''நீ இன்னொரு பள்ளனைக் கட்டிப் பிள்ளைகளைப் பெறு, அவர்கள் இந்தப் போராட்டத்தைத் தொடர்வார்கள்''

அவளது உடலெல்லாம் புல்லரித்தது. உலக்கையை மேலும் பலமாக இடித்தாள். கண்கள் மாணிக்கனை நினைந்து நிறைந்தன.

இப்படிப்பட்டவரா தற்கொலை செய்வார்? நான் ஊமையாகவும் பலமற்றவளாகவும் இருக்கிறேன். எத்தனை விவேகமாக மாணிக்கனைக் கொலை செய்துவிட்டார்கள். தற்கொலை என கதை கட்டி, பொலிசாருடன் ஒத்துழைத்து, தீவிர மரண விசாரணை எதுவும் இல்லாமலே உடலையும் எரித்துச் சாம்பலாக்கிவிட்டனர்.

துப்பாக்கிச் சூடு பட்டுச் செத்திருந்தாலும் அவர் எவ்வளவு சிறப்படைந்திருப்பார். நஞ்சூட்டிக் கொன்று பழி தீர்த்து விட்டார்கள்.

''உயர்சாதி நயவஞ்சகச் சாதி. எமது உழைப்பை அடிமை விலையில் வாங்க என்னவும் செய்வார்கள்''

மாணிக்கன் ஒரு நாள் சொன்னது அவள் நினைவில் வந்தது இவர்களை நம்பி நான் இன்னும் வேலை செய்து கொண்டிருப்பது சரியா?

''உனக்குப் பசிக்கேல்லையாடி? போய்ச் சாப்பிடு, பிறகு இடிக்கலாம்''

சாப்பாடு முடித்து வெளியே கை கழுவ வந்த ஆனந்தன் கூறினான். பேச்சிலே என்ன பரிவு. எதற்காக என்மேல் இத்தனை கருணை. இவர்கள் நயவஞ்சகர்களாக மாட்டார்களா?

www.padippakam.com

# 4

உரலையும் அரித்த மாவையும் மூடிவிட்டு அடுக்களை வாயிலில் சென்று அன்னம் குரலெழுப்பினாள்.

முற்றத்து நிலத்திலே குந்தியிருந்தாள். தங்கம்மா காய்ந்து சருகாகி யிருந்த வாழையிலைத் துண்டில் பழஞ் சோற்றையும் பிட்டையும் கொண்டுவந்து வைத்தாள். முதல் நாள் சமைத்த எஞ்சிய கருவாட்டுக் குழம்பைக் கொண்டு வந்து ஊற்றினாள்.

இரண்டு நாட்களாக அவள் சரியாகச் சாப்பிடவில்லை. பழைய சோற்றில் புளிப்பு நாற்றம் வீசியபோதும் புட்டோடு குழைத்துச் சாப்பிட்டாள். ஆரம்பத்தில் தொண்டை விக்கியது.

வீட்டிலே அப்புவும் ஆச்சியும் சாப்பிடாமலிருக்க நான் சாப்பிடுகிறேனா? அதனால்தான் விக்குகிறதா? வேலையை முடித்து விட்டு காசு ஏதாவது வாங்கிக்கொண்டு சீக்கிரமாய் வீட்டுக்குப் போகவேண்டும். அரிசி, மிளகாய் வாங்கிக் கொண்டுபோய் சமைக்க வேண்டும்.

நேற்று முழுவதும் சுகயீனம் எனப் பொய் சொல்லிவிட்டு மூலையில் கிடந்து குமுறினேன். நான் அழுது கொண்டிருந்தால் எல்லோரும் பட்டினிதானே. அழக்கூட எனக்கு உரிமை யில்லையே. பொழுது கருக ஒழுங்கை வழியே சுடலையால் திரும்பி வந்தவர்களை மட்டுமே பார்க்கமுடிந்தது. கலங்கிய கண்களினால் அவர்களைப் பார்த்ததே தவிர வாய்விட்டுக் கத்தி அழமுடியவில்லை. இப்பொழுது மீண்டும் விழுங்க முடியாதிருக்கிறது. தொண்டை வரண்டு விட்டது, தண்ணீர்!

தங்கம்மா செம்பில் தண்ணீரைக் கொண்டு வந்து அவளது கைபடாதபடி ஊற்றுகிறாள்; வலது கையை வாயருகே கோலிப்பிடித்து தண்ணீரைக் குடிக்கிறாள்.

படிப்பகம்

www.padippakam.com



காலையில் அவள் சாம்பல் போட்டு விளக்கிய செம்புதான். இப்போது அவளில் பட்டுவிடப்படாது என்று தங்கம்மா நினைக்கிறாள். கொட்டிலிலிருந்து சிரட்டையை எடுத்துவர எனக்குச் சோம்பல்.

''உனக்கும் மாணிக்கனுக்கும் தொடுப்பாமேடி. உண்மையா?''

தங்கம்மா கேட்டாள்.

''.......................''

அன்னம் கடைசிமுடறு தண்ணீரை விழுங்குபவள் போல மறுபக்கம் பார்த்தாள்.

''உன்னைப் பார்த்தால் பூனை மாதிரி இவ்வளவு ஆட்டமெல்லாம் ஆடுவாய் என நான் நினைக்கவேயில்லை. அவனோடை தொடுப்பென்றாலே இந்தப் பக்கமே அடுத்திருக்க மாட்டன். நல்லவேளை செத்துத் துலைந்தான்''

ஆனந்தன் அதற்கிடையில் இவ்வளவெல்லாம் ஓதிவிட்டான். என்ன நல்லபிள்ளை!

''ஆர், தம்பி சொல்லித் தந்தாரோ''

அன்னம் அலட்சியமாகச் சொன்னாள்.

''நீ அழுததைப் பார்த்தபோதும் அப்பிடித்தான் சமுசயப்பட்டன்''

''அதிலையென்ன பிழை. நான் அவரைக் கட்டியிருக்க வேண்டும். ஆரோ பொறாமைக்காரர் கொலை செய்து விட்டாங்கள்''

அன்னம் அழுத்தமாகச் சொன்னாள். முன்னர் இருந்த கவலை அவள் குரலில் ஒலிக்கவில்லை.

''என்னடி கொலையா? ஊரெல்லாம் கள்ளுக்கை பொலிடோல் கரைத்துக் குடிச்சிட்டான் என்று சொல்லுது. நீ என்னவென்றால்...''

www.padippakam.com



''ஊர் என்னவும் சொல்லும். உண்மை ஒரு நாளைக்கு வெளிக்காமலா போகும்''

''நீ புதுக்கதை பேசிறாய். அப்ப ஆராமடி கொலை செய்தது?''

''வேறை ஆர்? ஆரேன் வெள்ளாளர்தான்''

''வெள்ளாளர் கள்ளுக்கை பொலிடோல் கரைத்தின மாம். அவன் எடுத்துக் குடிச்சானாம், நல்ல கதைதாண்டி.'',

''அந்தக் கோவில் கிணத்தடி சாய்ந்த மரத்தில் எடுக்கும் கள்ளை அவர் காலையில் மரத்திலிருந்தே குடிப்பதைப் பார்த்து விட்டு இரவில் ஏறி முட்டியில் பொலிடோல் போட்டு விட்டாங்கள். காலையில் அதைக்குடித்து விட்டு மரத்தால் இறங்கிய பின்னர்தான் அவருக்கு மயக்கம் வந்து விழுந்தார்.''

''நல்ல கதைதாண்டி. வெள்ளாளர் தென்னமரத்திலை இரவிலை ஏறி முட்டியிலை பொலிடோல் போட்டினமாம். நீயும் ஒரு மடைச்சி. இதையெல்லாம் நம்பினாய். அவன் உப்பிடி எத்தனையோ பேரோடை தொடுப்பாம். வெள்ளாளப் பெட்டையாய் கட்டவேணும் என்று அவனுக்கு ஆசையாம். எல்லா இடமும் கடனாம். அவனே பொயிலைக் கண்டுக்கு அடிக்க என்று நொண்டிச் சின்னத்துரை கடை யிலை பொலிடோல் வாங்கிக் கொண்டு போனானாம். நீ ஒரு பேய்ச்சி. ஏதோ பைத்தியக் கதையெல்லாம் பேசிறாய்''

தங்கம்மாவின் பேச்சும் ஆதாரங்களும் அன்னத்தின் வாயை அடைத்தன. அவள் அதன்மேல் எதுவும் பேச வில்லை.

பொழுது ஏறிக்கொண்டு வந்தது. எஞ்சியிருந்த அரிசி யையும் இடித்துக் கொண்டுவந்து வீட்டு வாசலில் வைத்து விட்டுக் கூலி கேட்டாள்.

''இன்றைக்கு என்ன அவசரம்?''

''நேற்றும் சமைக்கேல்லை, வீட்டிலை அரிசியில்லை.''

''கோச்சி வேலைக்குப் போறேல்லையாடி''

படிப்பகம்

www.padippakam.com



''கண்பார்வையெல்லாம் குறைந்துபோச்சு''

''இந்தா ஒரு ரூபா''

''ஐந்து ஆறு கொத்துக்கு மேலை இடித்தான். ஒன்றரை ரூபாவாதல் வேணும். இது ஒரு கொத்தரிசி வாங்கவும் போதாது''

''என்னடி கொத்துக்கணக்குப் பேசிறாய். அப்பிடியெண்டால் குடித்த கோப்பிக்கும் தின்ற சாப்பாட்டுக்கு மெல்லோ கணக்குப் போடவேணும்''

''அதுவுமொரு சாப்பாடுதான். நாய்க்குப் போடுறதைத் தந்துவிட்டு கணக்குப் போடப் பார்க்கிறியள்.'';

''ஆச்சி என்ன சத்தம் அது? ஒன்றரை ரூபாயைக் கொடுத்து அனுப்பிவிடு''

அறைக்குள் இருந்து தன் தயாள குணத்தைக் காட்டியபடி ஆனந்தன் வாசலில் வந்தான்.

''ஏனடி கூப்பனரிசி வாங்கிறேல்லையா?''

ஆனந்தன் கேட்டான்,

''ஒரு கூப்பனுக்குத்தான் வாங்கிறம். இரண்டு கூப்பன் அடைவு.''

''ஆரிட்டை அடைவு''

''புளியடி செல்லாச்சியிட்டை''

''ஒரு கூப்பனுக்கு எத்தனை ரூபா தந்தாள்''

''முப்பது ரூபா''

தெரிந்த பதில்களை அவளிடம் கேட்டறிந்ததில் ஒரு திருப்தி,

தங்கம்மா மேலும் ஐம்பது சதம் கொண்டுவந்து கொடுத்தாள். அதையும் பெற்றுக்கொண்டு அன்னம் தெருவை நோக்கி நடந்தாள்.

அவள் மனதில் தங்கம்மாவின் வார்த்தைகள் உருண்டு கொண்டிருந்தன. அவளின் நாக்கைப் பிடுங்கிவிடவேண்டும்

படிப்பகம்

www.padippakam.com



சிறிது வேகமாக வளரும் இளைஞர்களை காத்திருந்து வீழ்த்துவது உயர்சாதிக்காரரது தொழிலாகவும் இருந்தது. அவ்வாறு நடைபெற்றதும் பொலிசாரின் நீதியை அவர்கள் இப்போது எதிர்பார்ப்பதில்லை. தாமே நீதியை நிலைநாட்டத் துணிந்து விடுவர். இதனால் கோடுகளும் வழக்குகளும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருந்தன. இருபகுதியிலும் கொலை வழக்குகள். சிலர் விளக்க மறியலில் ஓரிரு வருடங்களாக இருந்தனர்.

சிறுபான்மைத் தமிழர், முற்போக்கு வாலிபர் சங்கம் என்ற பெயர்களில் அங்கு பல சங்கங்களும் இருந்தன. அரசியல் கட்சிகளின் கிளைகளாகவும் சில இயக்கங்கள் அங்கு வளர்ந்து வந்தன.

# 7

அன்று மாணிக்கனின் நினைவாக அப்பகுதியில் பல சங்கத்து இளைஞரும் சேர்ந்து கூட்டம் போட்டனர். எல்லோரும் வேலைமுடித்து வந்து இரவு ஒன்பது மணிக்கே கூட்டம் ஆரம்பித்தது. நல்ல நிலவு. ஒரு பெற்றோ மாக்ஸ் லயிட் மட்டும் தலைவர் இருந்தமேசையில் எரிந்து கொண்டிருந்தது. வழமையாகக் கூட்டங்கள் நடக்கும் திறந்த வெளி.

விளாத்தியடிப் பக்கத்திலிருந்தும் பலர் வந்திருந்தனர்.

அக்கூட்டத்தில் பங்கு பற்ற தனக்கு அதிக உரிமை இருப்பதாக அன்னம் சில பெண்களோடு ஒரு மூலையில் சென்று உட்கார்ந்தாள். மாணிக்கனை நினைத்ததும் அவள் நெஞ்சம் பெருமிக்கொண்டு வந்தது. அதே போல நிலவில் நடந்த ஒரு கூட்டத்திலேயே அவள் மாணிக்கனை முதன் முதலில் கண்டாள், அவனுக்கு நல்ல சாரீரம்,

www.padippakam.com



''சாதிகள் இல்லையடி பாப்பா...'' என்ற பாட்டை அவன் அழகாக உணர்ச்சியோடு பாடினான். கரிய நிறமாயினும் எடுப்பான, உயரமான தோற்றம். பரந்த நெற்றி.

சங்கத்திற்காக குடிசைதோறும் சென்று மாணிக்கன் அவர்களது வாழ்க்கை நிலை பற்றிய விபரங்கள் சேகரித்தான். அன்னத்தின் குடிசைக்கு வந்தபோது அவளே விபரம் யாவும் சொன்னாள். அவனது பளிச்சிடும் அழகான பல்வரிசையும் மோகனச் சிரிப்பும் அவளை வசீகரித்தன.

''அன்று கூட்டத்தில் நல்லாய் பாடினீங்களே. ஒரு பாட்டுப் பாடுங்களேன் கேட்பம்.''

அவள் கேலியாகவே கேட்டாள்.

''ஏழையென்றும் அடிமையென்றும் எவருமில்லை ஜாதியில்...''

உடனே பாட்டை முணுமுணுத்தான்; அவள் எதிர் பார்க்கவேயில்லை.

''சினிமாப்பாட்டும் பாடுவீர்களா?''

''அது பணக்காரருக்குப் பொழுது போக்கவல்லவா. எமக்கு வேண்டியவை போராட்டத்திற்கு உந்தும் பாட்டுக்கள்...''

அவன் கூறியவை பலவற்றை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை.

''நீ மட்டும் உழைத்து எப்படிக் குடும்பத்தைக் காப்பாற்றுகிறாயோ தெரியேல்லை. கூப்பன்களை ஏன் அடைவு வைச்சாய்?''

உரிமையோடு, இரக்கத்தோடு வினவினான். அவள் தமக்கு ஏற்பட்ட நோய், துன்பங்கள் பற்றிச் சொன்னாள்.

''உங்களைப் போன்றவர்களுக்கு ஆபத்து வேளையில் உதவுவதற்கு ஒரு நிதியையே அமைக்க இருக்கிறோம். அவ்வேளை கூப்பன்களைப் பெற்றுத்தருவோம்.''

போ—3

www.padippakam.com



அவனது ஆதரவான வார்த்தைகள் அவளது நெஞ்சில் பதிந்துவிட்டன. அவற்றை மீண்டும் நினைத்தபோது, மீண்டும் விம்மி அழவேண்டும் போலிருந்தது.

மாணிக்கன் கொள்கைகள் அவன் மக்களுக்குச் செய்த சேவைகள் பற்றியெல்லாம் யாவரும் பாராட்டிப் பேசினர்.

''மாணிக்கன் மனிதர்களிடையே ஒரு மாணிக்கம். அவன் சாதி வெறியர்களால் கொலை செய்யப்பட்டான். அவனைக் கொன்றவர்களை நாம் பழிக்குப் பழி வாங்காமலிருக்கப் போவதில்லை. இது சத்தியம். இவ்விஷயத்தில் யாவரும் எம்மோடு ஒத்துழைக்க வேண்டும் என வேண்டுகிறேன்.''

மாணிக்கனின் நெருங்கிய நண்பன் என அறிமுகம் செய்து கொண்டு இலட்சுமணன் என்றோர் இளைஞன் உணர்ச்சிவசப்பட்டுப் பேசினான்? விளாத்தியடிப் பக்கத்தில் வாழ்பவன்; ஆசிரியராக ஒரு பாடசாலையில் பணியாற்றுபவன். ஆரம்பத்தில் சிலவேளை அவனால் எதுவுமே பேச முடியாது துக்கத்தால் நெஞ்சடைத்து நின்றான். பின்னர் வஞ்சினம் பொங்கக் கத்தினான்.

அன்னத்திற்கு அவனது பேச்சு நன்கு பிடித்துக் கொண்டது.

கூட்டம் முடிந்தவேளை அதே வாலிபன் அவள் முன்னே தோன்றியது வியப்பளித்தது.

''அன்னம் என்பது நீங்களா?''

''ஓம்...''

தலைகுனிந்தபடியே சொன்னாள். அவளது நெஞ்சு பொருமிக்கொண்டு வந்தது.

''மாணிக்கம் அடிக்கடி உங்களைப் பற்றிச் சொல்வான். அதுதான் ஒருதடவை பார்க்கவேண்டும் என விரும்பினேன்.''

அவளால் யாவும் உணர்ந்தறியமுடிந்தது. தலையை நிமிர்த்த முடியவில்லை. நெஞ்சு உடைந்து விடும்

www.padippakam.com



போலிருந்தது. அவன் திரும்பும்போது இடைமறித்துச் சொன்னாள்:

''இந்தப் பக்கம் வரும்போது எங்க குடிலுக்கும் வாருங்கோ. அதுதான் எங்கடை குடில்''

நிலவொளியில் கையை நீட்டிச் சுட்டிக் காட்டினாள்.

''கட்டாயம் வருகிறேன்''

இலட்சுமணன் சொல்லிவிட்டுத் திரும்பினான்.

அன்னம் குடிசையை நோக்கி நடந்தபோதும் இலட்சுமணனின் பேச்சும் உருவமும் அவள் நினைவில் கார்மேகத்திடை நிலவு ஓடுவதுபோல அசைந்து கொண்டிருந்தன. நெஞ்சிலுள்ள பழு சிறிது குறைந்தது போல் தோன்றியது.

இரவு வெகு நேரமாக வெறும் பாயில் கிடந்து புரண்டாள். தூக்கமே வர மறுத்தது.

மாணிக்கன் இலட்சுமணனிடம் தன்னைப்பற்றி என்ன சொல்லியிருப்பான்? தனக்கும் அவனுக்குமிடையிலுள்ள தொடர்பு பற்றி எவருக்குமே தெரியாதுஎன அவள் இதுவரை தானும் எண்ணியிருந்தாள். இப்போது பலருக்குத் தெரிந்துவிட்டது. ஆனந்தன், இலட்சுமணன், தங்கம்மா! அந்த மனுஷியின் வாய் இனிச்சும்மா கிடக்குமா? வீட்டுக்குப் போகும் பள்ளர், பள்ளிகள் யாவருக்கும் சொல்லத் தொடங்கி விடுவாள்.

என் தொடர்பைப்பற்றி எண்ணுபவர்கள் எவரும் என் துன்பத்தைப்பற்றி நினைக்கமாட்டார்கள். ஊமையாக நான் அடக்க வேண்டியதுதான். இதைப் பற்றிக் கேட்பவர்களுக்கு நான் பொய் சொல்லி மறுக்க வேண்டியதுதான். ஆனந்தனுக்கும் இலட்சுமணனுக்கும் எப்படி மறுக்கமுடியும்? இலட்சுமணனுக்கு என்னவெல்லாம் சொன்னாரோ? தன் நண்பர்களின் பெயர்களிடை இலட்சுமணன் பெயரையும் சொல்லியிருக்கவேண்டும். நான்தான் வற்புறுத்தி எதுவுமே கேட்க

www.padippakam.com



மறந்துவிட்டேன். திடீரென இவ்வாறு நடைபெறும் என்று யார் எண்ணியிருந்தார்கள். நான் தான் கனவிலும் நினைத்தேனா?

எதற்கும் அவரது நினைவுக்கு ஒன்றே ஒன்றுதான் செய்ய வேண்டும். இலட்சுமணன் சொன்னதுதானே என் முடிவும். அவரைக் கொன்றவர்களைத் தேடி பழிக்குப் பழி வாங்க வேண்டும். எனக்கு இதற்கு உதவியாக நிட்சயம் இலட்சுமணனும் இருப்பான். அவன் அவரது உயிர்த் தோழனாயிருக்க வேண்டும்.

## 8

அன்று அன்னம் எங்கும் வேலைக்குச் செல்லவில்லை. வழமையாகவே அதிகாலையில் ஆறுமுகத்தார் வீட்டுக்கே செல்வாள். அங்கு வழமையாகவே முற்றம் வளவு கூட்டுதல், மாட்டுக் கொட்டில் துப்பரவாக்கல், சாணம் கரைத்துத் தெளித்தல், பாத்திரங்கள் விளக்குதல் ஆகிய வேலைகள் இருக்கும். அதன் பின்னரே வறுத்தல், இடித்தல் ஆகிய வேலைகளைப் பார்ப்பாள். இவை இல்லாதபோது அயல் வீடுகளின் அழைப்புகளுக்குச் செல்வாள். தங்கம்மாவே இதற்கும் ஏற்பாடு செய்து கொடுப்பாள். ஒருநாள் அவள் ஆறுமுகத்தாரின் வீட்டுக்குச் செல்லாவிட்டால் மறுநாள் தங்கம்மா அர்ச்சனையுடன்தான் வரவேற்பாள். அதற்கு அஞ்சி அவள் எத்தனை துன்பம் துயர் நோய் வந்தாலும் காலையில் அங்கு சென்று முடிந்ததைச் செய்துவிட்டேதான் திரும்ப வேண்டும். ஆறுமுகத்தார் வீடுதான் அவளுக்கு நிரந்தர வருவாய் தருவதாகவும் இருந்தது. தங்கம்மா வெறும் கசவாரம் என்பதை அறிவாள். ஆயினும் ஆறு முகத்தார் அல்லது ஆனந்தன் இருக்கும்போது தங்கம்மா வைக் கேட்டு கூலியை ஓரளவு நியாயமாகப் பெற்றுக் கொள்வாள்.

www.padippakam.com



அன்று கையில் பணமுமில்லை. ஆயினும் வேலைக்குச் செல்ல மனமேற்படவில்லை. உடலும் உள்ளமும் சோர்வடைந்திருந்தது. ஒரு பக்கம் அச்சம் தீர்ந்த நிறைவு; மறுபுறம் ஏதோ கறை உடைந்த குறை. படுத்த பாயிலிருந்து எழுந்திருக்கவே மனமும் வலுவும் இல்லாது புரண்டாள். ஏரம்பனும் முத்தியும் பலதடவை வற்புறுத்திய பின்னரே எழுந்தாள். முற்றத்துப் பானைக் குடத்தில் தண்ணீரேயில்லை. அவள்தான் தண்ணீர் அள்ளிவர வேண்டும். அல்லது அயல் குடிசையிலுள்ளவர்கள் எவரையாவது அழைக்கவேண்டும்.

''தேத் தண்ணிக்கு முட்டி வைக்க கொஞ்சத் தண்ணியாதல் கொண்டா பிள்ளை''

முத்தி சொன்னாள். அவள் தடவித் தடவி ஏதாவது வேலை செய்வாள். ஏரம்பன் அவற்றைத் தன் பார்வையால் கவனித்துக் கொள்வான்.

''நீ வேலைக்குப் போகேல்லையா பிள்ளை. வீட்டிலையும் ஒன்றுமில்லை''

ஏரம்பன் கேட்டான்.

''உடம்பெல்லாம் உளையுது''

சொல்லிக்கொண்டே முற்றத்து மண்குடத்தை எடுத்து இடுப்பில் வைத்தாள்.

ஒரு காலத்தில் தண்ணீர் வேண்டுமாயின் ஏதாவது ஒரு தோட்டக் கிணற்றடிக்குச் சென்று எவராவது கிணற்றில் தண்ணீர் அள்ளத் தகுதிபெற்ற கமக்காரன் வரும்வரை காத்து நிற்கவேண்டும். அவர்கள் குடத்தோடு காத்து நிற்க அவர் தன் வேலைகளைக் கவனிப்பார். பின்னர் ஓய்வாக வந்து பெரிய தர்மம் செய்வதுபோல தண்ணீர் அள்ளி ஊற்றுவார். இப்போது பல கிணறுகளை தம்பகுதியில் அவர்களே தோண்டி விட்டனர். ஆயினும் ஆங்காங்கே தனித்து வாழும் குடும்பத்தார் நிலை அப்படியே இருந்து வந்தது.

www.padippakam.com



அப்பகுதியை விட்டு அவர்கள் கிராமத்துள் நுழைந்து விட்டால் தண்ணீருக்குக் கையேந்த வேண்டியதுதான்.

ஒற்றைக் கிணற்றடிக்குச் செல்ல நினைந்தவள் திடீரென கல்வீட்டு வேலாயுதம் வீட்டுப் பின்புறமாகச் சென்றாள். அப்பகுதியில் முதல் கட்டிய கல்வீடு அதுவே. வேலாயுதத்திற்கு யாழ்ப்பாணப் பட்டினத்தில் ஒரு கராஜ்; இரண்டு வாடகைக் கார்களும் இருந்தன; அவர்களிடை பணம் ஓரளவு புரளும் வீடு. மற்றும் பல குடும்பங்கள் ஓரளவு வருவாய் உள்ளவையாக மாறிவிட்டன. வீட்டிலுள்ள குழந்தைகள் தவிர யாவரும் ஏதோ ஒரு தொழில் செய்து வீட்டுக்கு வருவாய் தேடினர். காய்கறித் தோட்டம், கள்ளிறக்கல், சந்தையில் சில்லறை வியாபாரம் இவ்வாறாக மூன்று தொழிலும் செய்யும் குடும்பங்களும் பல இருந்தன. பாடசாலை ஆசிரியர்களாகவும் அரசாங்கத்தில் கிளார்க் வேலை பார்ப்பவர்களாகவும் கூடச் சிலர் இருந்தனர்.

வேலாயுதம் வீட்டுக் கிணற்றில் இராசாத்தி குளித்துக் கொண்டு நின்றாள். அவள் பட்டினத்து மிஷன் பள்ளிக் கூடத்திற்குச் சென்று படித்து வந்தாள்.

அன்னம் குடத்தை வைத்தாள். இராசாத்தி தண்ணீர் ஊற்றினாள். தானே தண்ணீர் அள்ளுவதாக அன்னம் வற்புறுத்தவில்லை.

''நல்ல சுகமில்லை. அதுதான் இது கிட்ட என்று வந்தன்''

அன்னம் சமாதானம் சொன்னாள். நெஞ்சுக்குமேலால் சட்டையைக் குறுக்கே கட்டிக்கொண்டே இராசாத்தி தொங்கித் தொங்கி துலாக்கொடியை இழுத்தாள்.

''நீங்க எப்பவும் தண்ணி அள்ள இங்கை வரலாம்''

''அப்பு ஆச்சி உங்கே நிற்கினமா?''

இராசாத்தியின் தயவைப் பொருட்படுத்தாதவள் போல அன்னம் கேட்டாள்.

www.padippakam.com



''அன்ணாவும் உங்கைதான்''

''நான் பிறகு வாறன்''

குடத்தை எடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டு அசைந் தசைந்து அன்னம் நடந்தாள். அரையில் சுற்றிக் கட்டி யிருந்த சேலை நனைவதைப்பற்றியோ குடத்தின் அடிப்பாக மண்படுவதைப்பற்றியோ அவள் கவலைப்படவில்லை. இன்று வேலைக்குப் போகாவிட்டால் எங்காவது இரண்டு ரூபா கடன் வாங்கவேண்டும். வேலாயுதம் வீட்டிலேயே கேட்டு வாங்குவோமா என்ற ஒரு சபலம். காலையில் அவர் கள் புறப்படு முன்னர் சென்று பார்வதி அக்காவைக் கேட்க வேண்டும். வேலாயுதம் நிற்கும் வேளையில் அவள் இல்லை என்று சொல்ல மாட்டாள்.

தேனீரை வடித்து தாய்க்கும் தகப்பனுக்கும் கொடுத்து விட்டு முகத்தைக் கழுவி தானும் தொண்டையை நனைத் தாள். அடியே ஊறியிருந்த தேநீர் கசப்பாக இருந்தது; அவளது நாவிற்குச் சுவையாகவும் இருந்தது.

தலையைச் சீவி சட்டையையும் சேலையையும் மாற்றிக் கொண்டு வேலாயுதம் வீட்டை நோக்கி நடந்தாள். வாயிற் புறத்தை அடைந்தபோது கணபதிப்பிள்ளை படலையைத் திறந்து கொண்டு வந்தார். அவரது கையில் ஐந்து ரூபா நோட்டு ஒன்று இருந்தது. அவள் நுழையு முன்னர் உள்ளே யிருந்து வேலாயுதத்தின் குரல் ஒலித்ததைக் கேட்டாள்:

''தெருவிலை கண்டால் சாதி வெள்ளாளன். காலங் காத்தாலை முகங்கழுவாமலே கெஞ்சிக் கடன் வாங்க இங்கை வந்து விட்டான்''

வந்த சந்தர்ப்பம் சரியில்லையோ என்று அன்னம் திரும்ப நினைந்தாள். அதற்கிடையில் வேலாயுதத்தின் மகன் இரகுநாதன் அவளைக் கண்டுவிட்டான்.

''வா அன்னம் என்ன விசேடம்?''

www.padippakam.com



தயங்கித் தயங்கி உள்ளே சென்றாள்.

''ஒன்றுமில்லை. சும்மா அக்காவைப் பார்க்க வந்தன்''

''ஒன்றுமில்லாமல் வரமாட்டியே. விஷயத்தைச் சொல்லு. என்ன சோர்ந்து போயிருக்கிறாய்?''

அவனது இரக்கமான பேச்சும் வற்புறுத்தலும் அவளைப் பேச வைத்தது.

''சுகமில்லை. அதுதான் இரண்டு ரூபா கடன் வாங்கலாமென்று வந்தன்''

''இதுக்கு இவ்வளவு தயங்கவேணுமா. இரண்டு ரூபா போதுமா?''

இரண்டு ரூபா நோட்டு ஒன்றை அவளது கையில் வைத்தான்.

''இன்றைக்குப் போதும். நாளைக்கு வேலைக்குப் போவன்''

இரகுநாதன் சுறுசுறுப்பாகச் சென்று பழைய ஒஸ்டின் காரில் ஏறிக் கொண்டான்.

அவனைத் தொடர்ந்து வேலாயுதமும் இராசாத்தியும் சென்றனர். இராசாத்தி வெள்ளை நிறத்தில் முழங்கால் வரை சட்டை போட்டிருந்தாள். கையிலே புத்தகங்கள். அன்னத்தைப் பார்த்து ஒரு புன்னகையை வீசி விட்டுச் சென்றாள்.

இராசாத்தி சில ஆண்டுகளில் வாய்க்கால்கரைப் பயிர் போல எத்தனை வாளிப்பாக வளர்ந்து விட்டாள். அவள் பெரிய பிள்ளையானதற்குச் சடங்கு நடந்தது. நேற்றுப்போலிருந்தது. பந்தல் போட்டு ஒலி பெருக்கி, மேளம் யாவும் நாலுநாட்கள் கதறின. எல்லாம் வேளாளர் வீடுகளில் நடப்பது போல் நடந்தன. அன்னமும் அன்று ஆறுமுகத்தார் வீட்டுக்கு வேலைக்குச் செல்லாது சடங்குகளைச் சென்று பார்த்தாள். மறுநாள் வேலைக்குச் சென்றபோது தங்கம்மா வேலாயுதம் வீட்டில் நடந்த சடங்குகள் பற்றி வெறுப்போடு விசாரித்தாள்.

படிப்பகம்

www.padippakam.com



''பள்ளருக்குக் கூட இப்ப பவுசு வந்துவிட்டுது. இனி மேல் வெள்ளாளர் லவுட் ஸ்பீக்கர் பிடிப்பதை நிறுத்தவேண்டியது தான்''

பொறாமையில் தங்கம்மா புகைவதாக அன்னத்திற்குத் தோன்றியது. ஆனால் அந்தச் சடங்குகள், ஆடம்பரங்கள் பற்றி மாணிக்கன் சொன்னதே அவளுக்கு ஆச்சரியமளித்தது. அவன் வெறுப்போடும் ஆத்திரத்தோடும் சொன்னான்:

''எங்கடையாட்கள் வெள்ளாளரைப் பார்த்துப் பின் பற்றுவதை நிறுத்தவேண்டும். இப்படியான ஆடம்பரங்களாலும் மூட நம்பிக்கைகளாலும் எமது சமூகத்திற்கும் எவ்வித பயனும் ஏற்படப் போறதில்லை. எமக்குள்ளையே புது வேளாளர் பிறக்கிறதுக்கு நாம் ஆதரவாயிருக்கப்படாது''

அவன் மேலும் ஏதோ எல்லாம் சொன்னான். அவளால் முழுவதையும் கிரகிக்க முடியவில்லை.

மாணிக்கன் சொன்னது யாவும் தற்போது அவளுக்குத் தேவவாக்காகப்பட்டது. அவன் சொன்னவையே உண்மை என முற்றாக நம்பினாள்.

## 9

அன்னத்தால் கடைத் தெருவுக்கே போக முடியவில்லை. அடுத்த குடிசையிலிருந்த தெய்வானை தோட்டத்தால் வந்து பத்து மணி வரையில் கடைத்தெருவுக்குப் புறப்பட்டபோதுதான் அவளிடம் பணம் கொடுத்து அரிசி, காய் கறி, சீனிக்குச் சொல்லிவிட்டாள். வீட்டிலிருந்த பழைய சோறை சம்பல் அரைத்து பிசைந்து ஏரம்பனுக்கும் முத்திக்கும் கொடுத்தாள்.

கால் முடமான போதும் ஏரம்பனால் வீட்டில் சும்மா இருக்க முடியாது. அரக்கி அரக்கி ஏதாவது கிண்டுவான். வீட்டின் பின் புறத்தில் முருங்கைத் தடிகள் நட்டிருந்தான்.

www.padippakam.com



அதன்மேல் செய்பயிர்கள் செய்வதற்கு நிலச்சொந்தக்காரரான ஆறுமுகத்தாரின் தமையனார் அம்பலவாணர் விடமாட்டார். மற்றது தண்ணீர் பிரச்சனையும் இருந்தது. பிறர் கிணறுகளில் தூங்கி அன்னத்தைக் கொண்டு குடத்தில் தண்ணீர் இழுக்கச் செய்வதையும் அவன் விரும்பவில்லை. வான்பயிராக அவனால் நடமுடிந்தது முருங்கைதான். முருங்கை இவை வருடத்தில் பாதிநாட்களுக்கு பல்வேறு வகையாகப் பயன்பட்டது. காய்கள் காற்றில் அசையும் வேளையில் அம்பலவாணர் அப்பக்கம் வந்துவிட்டால் தனது சொந்தப் பயிர்போல வேண்டியபடி பிடுங்கிச் செல்வார். எவருக்குமே எதிர்ப்புக்கூற நா எழாது.

ஒரு தடவை மாணிக்கன் அங்கு வந்து நின்றபோது அம்பலவாணரின் உரிமையைப் பார்த்து அவன் கொதித்ததை அன்னமே பார்த்து அஞ்சினாள். அவ்விடத்திலே கைகலப்பு ஏற்பட்டு தாம் குடியெழ நேர்ந்து விடுமோ எனவும் அஞ்சினாள்.

''அவன் கையில் கொண்டு போகும் முருங்கைக்காய்களைப் பறித்துப் போட்டுக் கலைத்திருப்பன். உனக்காக விட்டன்''

அன்னத்திடம் மாணிக்கன் சொன்னான். ஏரம்பன் காதில் அவன் வார்த்தைகள் விழவில்லை.

''இனிமேல் தொடவிடாதை''

''அவற்றை தம்பி ஆறுமுகத்தார் வீட்டை வேலைக்குப் போறத்தையுமெல்லோ விடவேணும்''

''அதுதான் எத்தனை நாளைக்கு என்று பார்ப்பமே''

மாணிக்கன் எழுந்து போகும் போது ஏரம்பனிடம் சொன்னான்:

''மாரியிலை இந்த நிலத்திலை ஏதாவது வெண்டி, கத்தரி, கிழங்கு நட்டுப் பார்க்கலாமே''

படிப்பகம்

www.padippakam.com



''கமக்காரன் அதுக்கெல்லாம் விடமாட்டார்''

''அவரென்ன விடுறது. நாங்கள் செய்யிறதுதானே''

''அதாலை பெரிய சோலி தொல்லைகள் வரும்''

''அப்பிடி என்னதான் செய்யமுடியும் அவராலை''

''நிலத்தைவிட்டு எழும்பச் சொன்னால்—''

''மூடியா தென்றால்...''

''குடிலுக்கு நெருப்பு வைச்சிடுவாங்கள்''

''அந்தக் காலமெல்லாம் போட்டுது. இனிமேல் முடிஞ்சால் செய்து பார்க்கட்டும்''

காலும் முடமான கடைசி காலத்திலே அவர்களோடு ஏன் பகைக்க வேண்டும் என்றே இதுவரை காலமும் ஏரம்பன் பேசாது அடங்கியிருந்தான். அவனது உடல் முதுமை யடைந்தபோதும் வேலை செய்வதற்கே தசைநார்கள் துடி துடித்தன. பனை நாரில் கயிறு பின்னுவது, பனை ஈர்க்கிலில் சுளகு பின்னுதலெல்லாம் அவனுக்கு அலுப்புத்தரும் வேலைகளாகத் தோன்றின.

அடுத்த மாரிக்கு கையால் நிலத்தைக் கிண்டியாயினும் ஏதாவது காய்கறிச் செடி நட்டுப்பார்க்க வேண்டும் என எண்ணினான்.

மாரியே வரவில்லை. மாணிக்கன் போய் விட்டான்.

சோறு வடித்த கஞ்சியை மட்டும் குடித்துவிட்டு அன்னம் அன்று பூராவும் படுத்துவிட்டாள். மாலையில்தான் எழுந்து சாப்பிட்டாள்.

## 10

மறுநாள் காலையில் ஆறுமுகத்தார் வீட்டுக்கு அன்னம் சென்றபோது அவளை எதிர்பார்த்தபடி தங்கம்மா அர்ச்சனையுடனேயே வரவேற்றாள். தன் பொறுமை முழுவதை

www.padippakam.com



யும் வரவழைத்து ஊமையாக இருப்பதே அவள் வழமை. சில நேரத்தில் தங்கம்மா வாய் ஓய்ந்துவிடும் என்பதை அவள் நன்கு அறிவாள். ஆயினும் அன்று அன்னத்திற்கு ஏதோ எரிச்சலாக இருந்தது.

''ஏன் சும்மா பொரியிறியள். நானில்லாவிட்டால் ஏதோ உங்க குடி முழுகிவிடும் போலை பேசிறியளே''

''குடி முழுகித்தானே போய்ச்சுதெடி. நானும் தலையிடி யிலை படுத்திட்டன். வீடெல்லாம் குப்பையும் கூளமும்''

தங்கம்மா பொறுமையிழந்தவள் போலத் தோன்றினாள்.

''அதுதான் நான் இப்பவே கூட்டி அள்ளிவிடுறனே''

''உனக்கும் இப்ப வரவர வாய்க் கொழுப்பு வேறை வருகுது. முன்னையப்போலை எங்களையே மதிக்கிறா யில்லை. ஒழுங்காய் வேலைக்கு வாறேல்லை''

''எங்களுக்கு மட்டும் நோய் துன்பமில்லை. உங்களுக்கு மட்டுந்தான் வாறதோ''

''உன்னைப் பார்த்தால் வருத்தக்காறி மாதிரித் தெரி யுதா? உருண்டு திரண்டு போயிருக்கிறாய். என்னைப் பார். தலையிடி, பட்டினியிலை எழும்பியே நடக்க முடியேல்லை''

''வயது போகப்போக உதெல்லாம் வருந்தானே''

அன்னத்தின் இளமை வாளிப்பைப் பார்த்து எரிந்த தங்கம்மாவிற்கு, அன்னம் முதுமையைப் பற்றிச் சொன்னது பிடிக்கவில்லை.

''என்னடி என்னைக் கிழவியாக்கப் பார்க்கிறாய். எனக்கு இன்னும் நாப்பத்தைஞ்சாகேல்லை''

''உங்களை ஆர் கிழவி என்று சொன்னது. கமக்கார னைப் பார்த்தால்தான் வயதாய் தெரியுது''

அன்னத்தின் வார்த்தைகள் தங்கம்மாவிற்கு ஆறுதல ளித்தன. முன்னொரு தடவையும் இதேமாதிரிப் பேச்சு

www.padippakam.com



வார்த்தை வந்தபோது தங்கம்மா தன் மனப்புண்ணை ஆற்ற அன்னத்துக்கே தன் கலியாணக் கதையெல்லாம் சொன்னாள். ஆறுமுகத்தாருக்கும் தங்கம்மாவிற்கும் பதினாறு வயது வித்தியாசம்.

ஆறுமுகத்தாரிடம் நல்ல முதுசச் சொத்துச்சேர இருந்தது. அவருக்கு சகோதரியரேயில்லை. ஒரே அண்ணன் அம்பலவாணர். வயதை அறிந்தபோது தங்கம்மாவிற்கு வெறுப்பாக இருந்தது. எவராவது உத்தியோகத்தில் இருப்பவரைக் கட்டவே ஆசை. போதிய சீதனம் இல்லாததினால் பெற்றார் ஆறுமுகத்தாருக்குச் சம்மதித்தனர். வாய்திறந்து எதிர்ப்பே பேசமுடியாது ஊமையாக இருந்தாள். கலியாணம் ஆடம்பரமாக நடந்தது. கொட்டகைப் பந்தல், மணவறை, மேளங்கள், ஊர்வலம் எல்லாம் இருந்தன.

''ஏதோ நாங்க நினைச்சபடியா ஏதேன் நடக்குது. எல்லாம் தலை விதிப்படிதானே. இந்த மனுஷனோடையும் இருபத்தெட்டு வருஷம் வாழ்ந்திட்டன்''

தங்கம்மா பெருமூச்சோடு சொன்னாள்.

''இப்பவே இத்தனை அழகாயும் இளமையாயும் இருக்கிற நீங்கள் அந்தக் காலத்திலை எவ்வளவு வடிவாய் இருந்திருப்பியள், அம்மன் சிலைபோலை...''

முற்றத்துக் குப்பையைக் கூட்டியபடியே வேறுதிசையில் பார்த்துக்கொண்டு அன்னம் சொல்லிக்கொண்டதை தங்கம்மா இடைமறித்தாள்:

''நீ சரியாய் சொன்னியடி. கலியாணஊர்வலத்திலையே என்னைப் பார்த்தவை அப்பிடித்தான் சொல்லிச்சினமாம். அந்தக் காலத்திலை நான் உடுத்துக்கொண்டு சந்தியாலை கோயில் கீயிலுக்குப் போறதென்றால் தலைநிமிர்த்த முடியாது. தெருவிலை நிற்கிறவங்களெல்லாம் என்னைத்தான் பார்த்துக்கொண்டு நிற்பாங்கள்''

www.padippakam.com



தங்கம்மா பெருமையாகச் சொன்னாள். அவளது ஏச்சுப்பேச்சு எல்லாம் நின்றுவிட்டது. பழைய நாள் பெருமையில் மெய்மறந்து நின்றாள்.

அன்னத்திற்கு உள்ளூரச் சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டு முற்றத்திற்கு வெளியேயுள்ள கொட்டிலுக்குக் கடகம் எடுக்கச் சென்றாள் கடகத்தைக் கொண்டு வந்த போது தங்கம்மா அடுக்களைக்குள் நுழைந்துவிட்டாள்.

''அன்னம் சிரட்டையைக் கொண்டாடீ''

தங்கம்மாவின் குரல் கேட்டது. தங்கம்மா நல்ல மன நிலையில் மாறியிருப்பதை உணர்ந்து அன்னம் சிரட்டையை கொட்டில் இறப்பிலிருந்து எடுத்து வந்தாள்.

''உதிலை குந்தி இரன்''

தங்கம்மா அவளை குசினிப் படிக்கட்டின் கீழே இருக்கச் செய்து, தான்மேல் உட்கார்ந்திருந்தபடி கோப்பியை சிரட்டையில் ஊற்றினாள். கோப்பியை ஊதி ஒரு முடறு குடித்து விட்டு அன்னம் சுற்றிவரப் பார்த்துவிட்டுச் சொன்னாள்:

''கமக்காறிச்சி கோவிக்கப்படாது. ஒரு விஷயம் நெடு நாளாய் கேக்க என்றிருந்தன் கேக்கட்டோ''

''நீ என்னவும் கேளடி. நானேன் கோவிக்கப் போறன்''

தங்கம்மா நயமாகச் சொன்னாள்.

''கேட்டதென்று என்னோடை கோவிச்சுப் போடாதை யுங்கோ. நீங்க கமக்காறனோடை கூடிக்கொண்டு வெளியே போறத்தை நான் ஒருநாளும் காணேல்லை''

தங்கம்மா அப்படியான கேள்வியை எதிர்பாராத போதும், தன் வாக்குறுதியைக் காப்பாற்றுபவள் போல, அன்னத்தின் வினாவைப் பெரிதாக்காது அன்னியோன்னிய மாகப் பதில் சொன்னாள்:

படிப்பகம்

www.padippakam.com



''உன்ரை கண்ணுக்கே தெரியேல்லையா. அவர் எனக்கு ஒரு மாப்பிளையே. கூடிக்கொண்டு பெருமையாய் தெருவிலை போக. அவர் கேட்டாலும் நான் மாட்டனென்று போடுவன். இப்பெல்லாம் கேட்கிறதேயில்லை. திருவிழா வுக்குப் போறதெண்டாலும் அவர் தானே போவார். நான் என் பாட்டுக்குப் போவன். எப்பவேன் கார் பிடிச்சால்தான் ஒருமிக்கப் போவம்.''

அன்னம் எதிர்பார்த்த பதிலே அப்படியே வந்தது. இப் படியான கதை ஒன்றை அவள் ஏற்கெனவே கேள்விப்பட் டிருந்தாள். ஆயினும் முற்றாக நம்பிவிடவில்லை. சரியான காரணத்தை தங்கம்மாவின் வாயாலேயே அவள் பிடுங்கி விட்டாள்.

அன்னம் பதிலென்றும் சொல்லாது கோப்பியை ஊதி உறிஞ்சிக் கொண்டிருந்தாள். ஆறுமுகத்தாரை அவ்வேளை குறைப்பது இன்னொருவேளை தனக்குப் பாதகமாக முடிய லாம் என்று 'ஓம்' போடாது சாதுரியமாகப் பதில் சொல்லிக் கொண்டே அன்னம் வேலையில் ஆர்வம் காட்டுபவளாக எழுந்தாள்:

''உங்க அம்மா அப்பா குடும்பமெல்லாமே ஊரிலையே செருக்கான குடும்பம் என்று எங்கடை ஆச்சி அடிக்கடி சொல்லுவா.''

''உன்ரை ஆச்சிக்கு எங்கடை அடிகொடி யெல்லாம் தெரிஞ்சிருக்கவேணும். சாதியிலையும் நாங்கள் இவையிலும் பார்க்க கூட. முதுசத்துக்கு ஆசைப்பட்டுத்தான் அப்பு சம்ம திச்சவர். சர்கும்வரை கூட இந்தப் பக்கம் வந்தால் மற்றவை பார்க்க செம்பு தண்ணி எடுக்க மாட்டார். இளனி வெட்டிக் குடுத்தால் குடிப்பார்.''

தங்கம்மா மேலும் தன் குடும்பத்தை உயர்த்தி வேளாள குக்குள்ளேயே இருக்கும் உயர்வு தாழ்வுகளை வெளிப்படுத் தினாள்.

www.padippakam.com

# 11

அன்னம் மேலும் தங்கம்மாவின் செருக்குப் பேச்சைக் கேட்க விரும்பாதவளாக எழுந்துசென்று குப்பையை அள்ளிக் கொண்டு வளவின் மூலையிலுள்ள குப்பை கொட்டுமிடத் திற்குச் சென்றாள். அவள் திரும்பும் வேளையாகப் பார்த்து அவளுடன் பேசுவதற்கு ஆனந்தன் பெரும்பாலும் வந்து விடுவான்.

ஆனந்தனைத் தவிர்ப்பதற்கே அவள் விரும்பினாள். அதற்காக மறுபுறமாக மாட்டுக் கொட்டிலுக்குச் சென்று அவ் விடத்தைத் துப்புரவாக்கினாள். சாணியை அள்ளிக்கொண்டு முற்றத்திற்கு வந்தாள். சாணி கரைக்கும் வாளிக்குள் சாணத்தைப் போட்டுவிட்டு அடுக்களையை நோக்கி அன்னம் குரல் எழுப்பினாள்:

''சாணி கரைக்க தண்ணி ஊத்துங்கோ.''

''தம்பி கிணத்தடியிலை நிற்கிறான். போய் ஊத்தீச்சுக் கொண்டு வாவன்.''

வேறு வழியின்றி அன்னம் கிணற்றடியை நோக்கி வாளி யுடன் வந்தாள். ஆனந்தன் அரையிலே துவாய்துண்டு ஒன்றைக் கட்டியபடி குளித்துக் கொண்டிருந்தான். அவனது வெறும் உடலைப் பார்க்க அவளுக்கு ஓரளவு கூச்சமாயி ருந்தது. வாளியை ஓசைப்பட வைத்தாள், அவள் வருவதை முன்னரே கண்டும் காணாதவன் போல ஆனந்தன் நடித் தான்.

''ஒ தண்ணியா.''

அலட்சியமாக வாளியில் அள்ளி எடுத்த தண்ணீரை தன் மேலில் ஊற்றினான். பின்னர் திரும்பி கிணற்றுள் வாளியை விட்டான். அவனது முதுகுப்புறத்தை அவள் பார்த்துக் கொண்டு நின்றாள்.

''ஏனெடி நேற்று நீ வரேல்லை.''

''.........''

www.padippakam.com



''ஏனெடி பேசாமலிருக்கிறாய். காய்ச்சலெண்டு சொல்லன். உனக்கு காய்ச்சலென்றால் ஒரு நாளைக்குத்தானே வரும்.''

தண்ணீரை அவளது வாளிக்குள் ஊற்றியபடியே அவளை வெறித்துப் பார்த்தான். அவள் பார்வையைத் தாழ்த்தி அவனது மார்பைப் பார்த்தாள். சிராம்பு கீறி தோலுரிந்தது போன்ற வடு. அவன் ஊற்றி முடிக்கும்வரை கண்களை எங்கும் திருப்பாது இமை வெட்டாது பார்த்துக் கொண்டு நின்றாள். இதயத்தில் ஏதோ உணர்ச்சிகள். முகத்தில் பலவித நிழல்கள் விளையாடின.

இன்னும் ஒருவாளிநீர் ஊற்றினால்தான் அவளது சாணி வாளி நிரம்பும்.

''கேக்கிறன். பேசாமல் நிக்கிறாய். நேற்று என்ன நடந்ததென்று சொல்லன்ரி.''

துலாக்கொடியை வலித்தபடி ஒரு தடவை தலையைத் திருப்பி அதட்டிக் கேட்டான்,

''கட்டாயம் சொல்லத்தான் வேணுமோ.''

''ஓம். சொல்லு.''

மீண்டும் அதே அதட்டல்.

''வீட்டுக்குத் தூரம்.''

தலையைக் குனிந்தபடி சொன்னாள். அப்படியான பதிலை ஆனந்தன் எதிர்பார்க்கவில்லை.

''மாணிக்கன் உனக்குப் பிள்ளை தந்திட்டான் என்றெல்லோ ஊரெல்லாங்கதை''

தண்ணீரை ஊற்றியபடியே சொன்னான். அன்னத்தின் நெஞ்சில் ஒருகணம் நெருஞ்சி முள் ஏறியதுபோலிருந்தது.

அவள் அவனது முகத்தைப் பாராது தண்ணீர் பட்டு சோம்பிப்போயிருந்த மயிர் படர்ந்த அவனது நெஞ்சையே மீண்டும் பார்த்தாள்.



படிப்பகம்

www.padippakam.com



''நீங்க தான் அப்பிடிக் கதை கட்டினீர்களோ?''

அன்னம் கேட்டாள்.

ஆனந்தன் மீண்டும் திரும்பி கிணற்றுவிளிம்பில் நின்றான்.

''நீ கண்ணை மூடிக்கொண்டு செய்தால் எனக்கு ஒண்டும் தெரியாமல் போய் விடும் என்று நினைச்சிடாதை''

''அதைத்தான் நானும் உங்களுக்குச் சொல்ல விரும்பிறன்''

அன்னம் வாளியைத் தூக்கிக்கொண்டு முற்றத்தை நோக்கி நடந்தாள். அவள் சொன்ன வார்த்தைகளை ஆனந்தன் பல கோணங்களில் அசைபோட்டுப் பார்த்தான். பல்வேறு அர்த்தங்கள் தொனித்தன. தனக்கே இந்தப் பள்ளி சாட்டை போடுகிறாளே என்று கோபமும் வந்தது.

மீண்டும் இவள் தண்ணீருக்கு வரட்டும் என ஆறுதலாக ஆனந்தன் குளித்தான். அன்னம் வரவில்லை.

அன்னம் மிளகாய் வறுத்து இடிப்பது தவிர எல்லா வேலையும் செய்து முடித்துவிட்டாள். தங்கம்மா பழையது சாப்பிட வரும்படி அழைத்தாள்.

அடுக்களைக் குந்திலே இலையை வைத்து கீழே இருந்து சாப்பிட தங்கம்மா ஏற்பாடு செய்தாள். அவள் எதிர்பாராத விதமாக அன்று நல்ல உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் தங்கம்மா இருந்ததும் அன்னத்திற்கு ஆச்சரியமாயிருந்தது. ஆறுமுகத்தார் இன்னும் தோட்டத்திலிருந்து வரவில்லை.

''நேற்று வரேல்லை என்று நீ வந்ததும் கோபப்பட்டனே. விஷயத்தைச் சொல்ல மறந்திட்டன். தம்பி இளையவன், வடிவேலு கொழும்பாலை ராத்திரிக்கு வாறான்.''

''இப்பதான் தெரிஞ்சுது ஏன் இத்தனை புழுகத் தோடை இன்றைக்கு இருக்கிறீர்களென்று.''

அன்னம் ஒத்துப் பாடினாள்.

www.padippakam.com



''எல்லாத்தையும் இடிச்சி முடிச்சிட்டுப் போகேக்கை பக்கத்து வீடுகளிலை விசாரித்து கொஞ்ச முட்டையும் மறந்திடாமல் வாங்கித் தந்திட்டுப் போ''

தங்கம்மா வார்த்தைக்கு அன்னம் தலையாட்டினாள். அன்னத்திற்கும் உள்ளூற மகிழ்வாகவே யிருந்தது. அவளுக்கு வடிவேலுவை நன்கு பிடித்திருந்தது. மாணிக்கனின் மரணச் செய்தி வடிவேலுவிற்கு எட்டியிருக்குமா? அறிந்தால் கட்டாயம் வருத்தப்படுவான். அவன் தன்னிடம் மாணிக்கன் பற்றி ஏதாவது கேட்பானா, எப்படிப் பதில் கூறுவது என்றெல்லாம் அவள் நெஞ்சு எண்ணியது. சாப்பாட்டின் சுவையையே மறந்து அவளது மனம் வடிவேலுவைச் சுற்றி வட்டமிட்டது.

''தண்ணி ஊத்துங்கோ''

அன்னம் குரல் எழுப்பினாள். ஒருநாள் அடுக்களையை நோக்கி அதேபோலக் குரல் கொடுத்தது நினைவில் வந்தது. தங்கம்மா அப்போது அங்கில்லை. வீட்டு வாாந்தாவில் படித்துக் கொண்டிருந்த வடிவேலு எழுந்து வந்து தண்ணீரை ஒரு கிளாசோடு நீட்டினான்.

''உந்தச் சிரட்டையை எறியடி. இந்தாபிடி''

அன்னத்திற்கு அதிர்ச்சியாகி விட்டது. வடிவேலு எத்தனை முயன்றும் அவள் கிளாசில் தண்ணீரை வாங்க மறுத்தாள்.

''பிடியென்றால் பிடியெடி. உதைத்தான் சாதிப்புத்தி என்கிறது''

''முடிந்தால் கமக்காறிச்சி இருக்கேக்கை வந்து தாருங்கோவன்''

வடிவேலுவின் முகத்தில் அறைந்ததுபோல் சொன்னாள்.

''அதுகளெல்லாம் திருத்தமுடியாத கிழடுகள். செத்துத் துலையுமட்டுத்தானே இதெல்லாம். கொழும்பிலையெல்லாம் சாதியா பார்க்கிறம்''

www.padippakam.com



''கிழடுகளைத்தான் காட்டிறியள். உங்க அண்ணன்''

''அவன் உன் முன்னாலை சாதி பேசினால், கன்னத் திலை வெளு. அப்படித்தான் கண் திறக்கச் செய்ய முடியும், அவரைப் போன்ற ஆட்களை''

அன்னத்திற்கு ஏன் இப்படி வடிவேலு சொன்னான் என்பது புரியவில்லை, அண்ணன் குணங்களை இவன் அறிந் திருந்தானோ எனவும் நினைத்தாள்.

அன்னம் சிரட்டையில் தண்ணீரைப் பெற்றுக் குடித் தாள்.

## 12

அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையில் எத்தனை வேறு பாடு? தங்கம்மாவிற்கே வடிவேலுவில்தான் பற்று அதிகம். வீட்டிலே இதனால் தாய்க்கும் மூத்தமகனுக்கும் வாக்கு வாதம் அடிக்கடி ஏற்படுவதை அவள் கேட்டிருக்கிறாள்.

''வடிவேலு கொழுப்பிலை உழைக்கிறானெல்லே. அது தான் நீ ஓரவஞ்சம் காட்டிறாய்''

ஆனந்தன் தாயை ஏசுவான்.

''பிள்ளையென்றால் எனக்கு ரண்டும் பிள்ளைதான். நீ சும்மா தெருச் சுத்திப்போட்டு வந்து அதிகாரம் காட் டாதை''

தங்கம்மா ஆத்திரமாகப் பேசுவாள்.

''நான் சும்மாவா தெருச்சுத்திறன். எத்தனை வேலை செய்கிறேன் தெரியுமா; உன்ரை மேன் உழைச்சு உனக்கு என்னத்தை அனுப்புறான். வெறும் உத்தியோகாரன் என்று தான் பெயர். நான்தான் உனக்கு தீபாவளி, வருஷப் பிறப்புக்கு சேலையென்றாலும் வாங்கித் தாறன்''

படிப்பகம்

www.padippakam.com



ஆனந்தன் எப்பொழுதும் சாதுரியமாகப் பேசி, தாயின் வாயை அடைத்து, தன் காரியங்களைப் பார்த்துக் கொள்வான். இவனுக்கு நிரந்தர சம்பளம் பெறும் உத்தியோகம் எதுவுமே கிடையாது. ஒருகாலம் வேலைதேடி அலைந்து ஏமாற்றமே கிடைத்தது. தோட்டத்திற்குச் சென்று ஆறுமுகத்தாரோடு வியர்வை சிந்த அவன் தயாராயில்லை. வழமையாக உத்தியோகத்திற்குச் செல்பவர் போன்று காலையில் வெள்ளை வேட்டி சட்டையோ, கால்சட்டையோ சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி அணிந்துகொண்டு சந்திக்குச் செல்வான். அங்கு நாள் முழுவதும் வேலைக்குக் குறை வில்லை.

சங்கக்கடை நடத்தும் கிராமத்து ஐக்கிய பண்டசாலைச் சங்கத்திற்கு அவனே காரியதரிசி; கிராமச் சங்கத்தில் அந்த வட்டாரப் பிரதிநிதி; வாலிபர் சங்கத்தின் பொருளாளர்; ஏதாவது காரியமாவதற்கு எம்.பி.யைப் பிடிக்க வேண்டுமா, பொலிஸ் இன்ஸ்பெக்டரைக் காணவேண்டுமா, திருவிழா விற்கு மேளம் ஏற்பாடு செய்ய வேண்டுமா, கச்சேரியில் ஏதாவது அலுவலா, கார் லைசென்சி எடுக்கவேண்டுமா, கோட்டில் பிணை கொடுக்க வேணுமா எல்லாவற்றிற்கும் ஆனந்தனே முதல் ஆள். உதவி வேண்டுவோர் வாடகைக் கார் கொண்டு வரவேண்டும். அவன் கேட்பதுபோல் பணம் கொடுக்க வேண்டும். காரியம் நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். புரக்டர், அட்வகேட்மார்போலவே வெற்றி, தோல்வி, மற்றவர் பணச்செலவு பற்றியெல்லாம் அவன் கவலைப்பட மாட்டான். தோல்வி. பணச்செலவு பற்றி எவராவது கேட்பின் அவற்றிற்கேற்றபடி சாதுரியமாகப் பதில் கூறத்தக்க வாய்ச் சம்பிரதாயமும் அவனிடம் இருந்தது. ஊரில் நடைபெறும் சாதிச் சண்டையிலும் அவனே முன்னிற்கு நிற்பான். அதனாலும் ஊர்ச்சந்தி வேளாளரிடை அவனுக்கு ஓரளவு மதிப்பும் செல்வாக்கும் இருந்தது.

கிராமத்து மக்களிடை அபிப்பிராயபேதமேற்படும்போது பெரும்பரலான மக்களுக்கு நன்மை பயக்கும் பக்கமாக

www.padippakam.com



சார்ந்து நிற்கமாட்டான். தன் மதிப்பும் செல்வாக்கும் உயரத்தக்க பக்கமாகச் சார்ந்து கொள்வான்.

''தம்பி நெடுநாளாய் இந்தப் பக்கமாய் வரேல்லையே. நீங்க எழுதித்தான் வாறாரோ? கலியாணம் ஏதேன் பேசேல்லையோ?''

அன்னம் சும்மா கேட்டாள்.

''மூத்தவன் மலைபோல இருக்க இளையவனுக்கு எப்பிடிப் பேசிறது? மூத்தவன் தனக்குத் தகுதியாய் ஊரிலையே பெண்ணில்லை என்று சொல்லுகிறான். இளையவனுக்கும் கலியாணம் பற்றி எண்ணமில்லை. இந்தக் காலத்தில் நாங்கள் சொல்லுறதையா கேட்கப் போறாங்கள்''

தங்கம்மா சோர்வோடு சொன்னாள், ஒரு மருமகளைப் பார்க்க அவளுக்கு ஆசையே. ஆயினும் மருமகளாக வந்து, மகனைக் கையில் போட்டுக்கொண்டு, பல வீடுகளில் நடப்பது போல அதிகாரம் பேசவந்து விடுவாளோ என்ற அச்சமும் அடிமனதில் இருந்தது.

''அப்ப ஆச்சியைப் பார்க்கிற ஆசையிலை வாறாராக்கும்''

அன்னம் நளினமாகச் சொன்னாள்.

''அந்த ஆசை இருந்தால் போதாதே. அவன் எழுதினதைத்தான் யோசித்து யோசித்துப் பார்க்கிறன். நம்ப முடியேல்லை''

''அப்பிடி என்ன விசேஷமாய் தம்பி எழுதிவிட்டார்''

''மாவிட்டபுரத்துக் கோயில் திருவிழாவுக்காக வாறானாம். அவனுக்கு இப்படியான திடீர் பக்தி எப்பிடி வந்திருக்கும் என்றுதான் தெரியேல்லை''

அன்னம் எதுவுமே பேசாது உள்ளூற நகைத்தாள்.

www.padippakam.com

# 13

அன்று மாலை. பொழுது மங்கும் வேளை. இலட்சுமணன் அன்னத்திடம் வந்திருந்தான். அவனைக் கண்டதும் இன்பமும் துன்பமும் கலந்த நிலையில் அவள் இதயம் துடித்தது. உடலும் பதட்டமடைந்தது. கிழிந்த பாய் ஒன்றை குடிசைக்குள் விரித்து வரவேற்றாள். ஏரம்பன் முருங்கையின் கீழிருந்து மங்கும் வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஆர் பிள்ளை வந்திருக்கிறது'' என்று கேட்டுவிட்டு மூத்தி அங்குமிங்குமாக நடந்து கொண்டிருந்தாள். அவளுக்கு இரவும் பகலும் ஒன்றுதான்.

''மாணிக்கன் உன்னைப் பற்றி ரொம்ப சொல்லியிருந்தான். அன்றைக்குக் கூட்டத்திலை பார்க்குமட்டுக்கும் எனக்குத் தெரியாது. இப்படித் திடீரென அவனுக்கு நடக்குமென்று ஆர்தான் எதிர்பார்த்திருந்தம்...''.

இலட்சுமணன் மாணிக்கனை நினைவூட்டிச் சொல்லத் தொடங்கியதும் அவளது நெஞ்சில் பாரமேறி வந்தது. கண்கள் கலங்கி விம்மத் தொடங்கினாள்.

இலட்சுமணன் நிலையும் கஷ்டமாகி விட்டது. துன்பத்தை மறைத்து அவளுக்கு ஆறுதல் கூற முனைந்தான்.

''எத்தனையோ பேரை சாதிவெறிக்குப் பறிகொடுத்து விட்டோம். ஆயினும் மாணிக்கன் என்றதும் தாங்க முடியாமல்தான் இருக்கு. என்ன செய்யிறது?''

அன்னத்தின் விம்மல் ஓய்ந்து வந்தது.

''என்ரை மனசை அறியத்தக்க ஒருத்தரும் இதுநாள் வரை கிடைக்கேல்லை. அதுதான் அவரையும் நல்லாய் தெரிஞ்ச உங்களைக் கண்டதும் என்னாலை தாங்க முடியேல்லை''

www.padippakam.com



அன்னம் அரையில் கட்டியிருந்த சேலையின் தலைப்பை எடுத்து கண்களைத் துடைத்துவிட்டு அடுப்புப் பக்கம் சென்றாள். முட்டியை அடுப்பில் வைத்து, சமைத்து முடிந்த பின் நீறு பூத்திருந்த தணல்களைக் கிளறி, ஓலைத் துண்டுகளை அடுப்பிலிட்டு, வாயால் ஊதி நெருப்பை மூட்டிவிட்டு மீண்டும் இலட்சுமணன் பக்கமாக வந்தாள்.

''நான் ஒரு முக்கியமான விஷயத்தைக் கேட்டறியவே வந்தனான்...''

இலட்சுமணன் தயக்கத்தோடு இழுத்தான்.

''சொல்லுங்கோ''

''தன் கடன்கள் பற்றிய கஷ்டம் அல்லது உங்களைக் கட்டுவதில் ஏதாவது சிரமம்...இப்பிடியாய் ஏதேன் தாங்க முடியாத கஷ்டம் பற்றி மாணிக்கன் உங்களிடம் சொல்லியிருக்கிறானா''

''ஏன் அப்படிக் கேட்கிறியள்?''

அன்னம் கேட்டாள்.

''இல்லை. அவன் தற்கொலை செய்யத் தக்கதான கஷ்டம் ஏதாவது ஏற்பட்டிருக்குமா என்ற சந்தேகம்...''

''நானும் உங்களைக் காணும்போது இதைத்தான் கேட்க இருந்தேன்...''

''எவருக்கும் தமது கஷ்டங்களைக் கூறாத அமுசடக்கியான ஆட்களும் உலகத்தில் இருக்கினம். ஆயினும் தமது துன்பத்தை ஒவ்வொருத்தனும் எங்கோ ஒருத்தரிடமாயினும் சொல்லாமல் விடமாட்டான். அதினால்தான் கேட்டன்''

இலட்சுமணன் சொன்னான்.

''தனது கடன்கள், பிற கஷ்டங்கள் பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறார். ஆனாலும் அவற்றையெல்லாம் சமா

www.padippakam.com



ளிக்க முடியும் என்ற நம்பிக்கை அவரிடம் இருந்தது. தற்கொலை என்றதெல்லாம் பொய் பேச்சு. வெள்ளாளர் கட்டிவிட்டதை எல்லாரும் நம்பி விட்டினம்''

''அப்பிடிச் சொல்லாததை. எனக்குக்கூட கொஞ்சச் சந்தேகம் இருக்கத்தான் செய்தது. அதனால் தானே கேட்டன். இப்போது எல்லாம் தெளிவாகி விட்டுது. ஆரோ திட்டம் போட்டு வடிவாய் செய்து விட்டான். எங்கடை ஆட்களைக் கொண்டே ஆரேன் செய்திருப்பாங்களோ? அல்லது மாணிக்கன் மேல் ஆத்திரமுள்ள எங்கடை ஆட்கள் ஆரேன் செய்திருப்பாங்களோ என்றுகூட சந்தேகப்படுகிறன்''

''உங்களுக்குத்தான் இதைப் பற்றி கூடத் தெரிய வேணும். எப்பிடியென்றாலும் ஒருநாளைக்கு உண்மை வெளிக்காமலா போகும்.''

''எனக்கு நிட்சயமாகத் தெரிந்தால் அவனுக்கு வெடி வைக்காமல் விடமாட்டான். அவன் ஆராயிருந்தால்த‍ென்ன? இதுக்காக தூக்குக்குப் போவதானாலும் நான் தயார்''

இலட்சுமணனின் இதயசுத்தியான பேச்சு அன்னம் அவன்மேல் வைத்திருந்த மதிப்பை மேலும் உயர்த்தியது. அன்று கூட்டத்தில் அவன் பேசிய வார்த்தைகளும் அவனது செவிகளில் ஒலித்தன.

''உங்க பேச்சிலையிருந்து நீங்க ரண்டுபேரும் எப்பிடியான சிநேகிதமாய் இருந்தீங்கள் என்று தெரியுது. முந்தி எனக்குக் துவக்கைக் கண்டாலே பயம். இப்ப நடந்ததெல்லாத்தையும் பார்த்த பிறகு எனக்கே துவக்கெடுத்துச் சுட்டுப் பழகவேணுமென்று ஆசையாயிருக்கு''

அன்னம் சொல்லிக் கொண்டே அடுப்பங்கரைக்குச் சென்றாள். எரிந்த அடுப்பை அணைத்து விட்டு மூட்டிக்குள் தேயிலைத்தூளை கையால் அள்ளிப்போட்டாள். கைபிடி

படிப்பகம்

www.padippakam.com



யுள்ள வெள்ளைக் குவளைக்குள் சாம்பலைக் கிள்ளிப்போட்டு விளக்கியபடியே வெளியே சென்று குடத்தைச் சரித்துக் கழுவினாள்.

குப்பி விளக்கை ஏற்றி வைத்து விட்டு தேநீரை குவளை யில் ஊற்றி வந்தாள். மாணிக்கன் வாங்கிக் கொடுத்த அதே குவளையில் அவன் வரும் போதெல்லாம் தேநீர் தயா ரித்துக் கொடுப்பது அவள் நினைவில் வந்தது. மனம் மீண்டும் கலங்கியது.

''உனக்கு என்ன உதவி வேணுமென்றாலும் இனிமேல் என்னைக் கேட்கலாம்''

இலட்சுமணன் தேநீரைக் குடித்துக் கொண்டே சொன் னான். அவளால் எதுவும் கூற முடியவில்லை.

''நீங்கள் இப்ப எங்கை படிப்பிக்கிறீர்கள்.''

''பட்டணத்திலை, மிஷன் பள்ளிக் கூடத்திலை.''

''இந்தப் பக்கமாய் முந்தி உங்களைப் பார்த்ததே கிடை யாது''

''இனிமேல் அடிக்கடி பார்க்கலாம்''

''எங்கே''

''இங்கேதான்''

''கட்டாயம் அடிக்கடி வந்து போவியளா?''

''கட்டாயம்''

''அந்த உதவி இருந்தாலே போதும், கொஞ்சம் ஆறுத லாயிருக்கிம். உங்களைப் பார்த்தாலே அவரைப் பார்த்த மாதிரியிருக்கும்''

''மாணிக்கனிடமிருந்த வீரத்தின் பத்திலொரு பங்கும் எங்களிடமில்லை. தன் உயிரையே மதிக்காத செயல் வீரன் அவன். துவக்குச் சூடு வாங்கிச் செத்திருந்தால் கூட நான்

www.padippakam.com



அவ்வளவு கவலைப் படமாட்டான். நர்மெல்லாம் வஞ்சம் தீர்க்கக் கொதித்து எழும்பாதபடி நயவஞ்சகமாகக் கொன்று விட்டு தற்கொலை என்று கதை கட்டிவிட்டாங்கள் என்று தான் கவலை''

இலட்சுமணனின் வார்த்தைகள் அவளது ஆறிய இதயத்தில் மீண்டும் கொதிப்பையும் கவலையையும் ஏற்றின.

இலட்சுமணன் எழுந்து வெளியே வந்து முற்றத்தில் நின்ற சயிக்கிளில் ஏறினான்.

''மறந்திடாமல் அடிக்கடி வரவேணும்''

அவள் வார்த்தையில் ஒருவித உரிமையும் கலந்திருந்தது. அவனது சயிக்கிள் வெளிச்சம் மறையும்வரை பார்த்துக் கொண்டு நின்றாள். பின்னர் திரும்பி வந்து முத்திக்கும் ஏரம்பனுக்கும் அவனைப் பற்றிய விபரங்களைச் சொன்னாள். பெரிய இடத்துப் பெடியன் எங்கள் குடிசைக்குந் தேடி வந்தது அவர்களுக்குப் பெருமையாக இருந்தது.

# 14

---

மறுநாள் வழமைபோல அதிகாலையில் அன்னம் ஆறுமுகத்தார் வீட்டுக்குச் சென்று தன் வேலைகளைச் செய்து கொண்டிருந்தாள். கையிலே 'பிரஷ்', தோளிலே வெள்ளைத் துவாய்; கிணற்றை நோக்கி வந்து கொண்டிருந்தான் வடிவேலு. அவளைக் கண்டதும் சுகம் விசாரித்தான். தான் அறிந்திருந்த செய்திகள் எதையும் அவன் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை.

''முந்திப் பார்த்ததிலும் பார்க்க நல்லாய் உருண்டு கொழுத்திருக்கிறாய்''

அவளை ஏற இறங்கப் பார்த்துச் சொன்னான். அவள் தலைகுனிந்து முறுவலித்தாள்.

www.padippakam.com



மார்பின் பொலிவை மறைக்கத் தக்கதாய் உள்ளே துணி யால் வலிந்திழுத்து ஊசிகுத்தி அதன்மேல் சட்டை போட் டிருந்தாள். அரையைச் சுற்றி இளஞ்சிகப்பு நிறத்தில் சேலை சுற்றியிருந்தாள். தலையைச்சீவி கொண்டைபோல முடித்திருந்தாள். வழமையிலும் பார்க்க அன்று சிறிது தூய் மையாகவே காட்சியளித்தாள். காலையிலேயே இன்று வடிவேலுவைப் பார்க்கப் போகிறோம் என்ற நினைவு அவள் நெஞ்சில் விளையாடிக் கொண்டிருந்தது.

''ஊரிலை நடந்த சண்டைகளையெல்லாம் கேள்விப் பட்டபின் நீ இங்கே வந்து வேலை செய்வதையே விட்டிருப் பாய் என்று நினைச்சன். ஏதோ ஆச்சிக்கு இன்னும் நல்ல நன்றியுள்ள நாயாய்தான் இருக்கிறாய் போலை தெரியுது''

அவன் கூறிய நளின வார்த்தைகள் முழுவதையும் அவளால் கிரகிக்க முடியவில்லை. மீண்டும் பேசாது குப்பை கூட்டிக் கொண்டிருந்தாள்.

''தம்பி வடிவேலு, முட்டைக் கோப்பி ஆறிச் போச்சு கெதியாய் வா''

தங்கம்மாவின் குரல் கேட்டு அவன் கிணற்றடியை நோக்கிச் சென்றான். கோப்பியைக் குடித்துவிட்டு வடிவேலு குளிக்க வந்த போது அன்னம் வாளியைக் கொண்டு சென்று வைத்தாள்.

''ஏனெடி உனக்கு இன்னும் தண்ணி அள்ளவும் தெரி யாதே''

வடிவேலுவின் பேச்சிலெல்லாம் சாதியை நையாண்டி செய்யும் நளினம் இயல்பாகவே இருந்தது.

''உங்க கோச்சியைக் கேளுங்கோ''

அன்னத்தின் பொறுமையிழந்த பதில்.

''இனிமே லெல்லாம் என்னடி கேக்கிறது. நீயாகவே துலாக் கொடியைப் பிடிச்சு அள்ளவேண்டியதுதானே''

www.padippakam.com



''உங்க கொண்ணனே வந்திடுவார், ஏனெடி அள்ளி னாய் என்று கேட்க''

''எங்க அப்பன் வெட்டின கிணறு என்று சொல்லு''

''நீங்க வேறை உலகத்திலையோ இருந்து வாறியள். இங்கே என்ன வெல்லாம் நடக்குதென்று தெரியாமல் பேசிறியள். தண்ணியை ஊத்திவிடுங்கோ''

''எல்லாம் எனக்குத் தெரியாமலா இருக்கு''

வடிவேலுவின் வார்த்தைகளைக் கேட்டதும் மாணிக்கன் பற்றியும் இவருக்குத் தெரியுமா என்ற வினாவே அவள் நெஞ்சில் எழுந்தது: அவளால் அதன் மேல் தலையை நிமிர்த்த முடியவில்லை. வாளியில் ஊற்றிய தண்ணீரை எடுத்துக் கொண்டு சென்றாள்.

மாட்டுக் கொட்டிலில் மாடுகளுக்கு வைக்கலை உதறிப் போட்டுக் கொண்டிருந்த போது சைக்கிள் மணியோசை கேட்டு எட்டிப் பார்த்தாள். அங்கே இலட்சுமணன் சைக்கிளில் இருந்தபடியே நிலத்தில் காலை ஊன்றியபடி நின்றிருந்தான். பெட்டி போட்டு மடித்த வெள்ளை சேட், நீளக் கால் சட்டை, காலிலே சிலிப்பர். கையிலே இருந்த சிகரெட் ஒன்றை அடிக்கடி உதட்டில் வைத்து உறிஞ்சிக் கொண்டிருந்தான். அவனைப் பள்ளனென்று ஒருவராலும் மதிக்கவே முடியாது. வடிவேலு, ஆனந்தனிலும் பார்க்க இலட்சுமணன் அழகான ஆண் பிள்ளை என அவள் மனம் ஒப்பிட்டுச் சொன்னது. ஆனந்தன் அவ்வேளை முற்றத்தில் உலாவியபடி வேப்பங்குச்சியால் பல் தீட்டிக் கொண்டிருந்தான். இலட்சுமணன் முற்றத்தின் மேற்குப் புறமாக நின்ற மாமரக் கோப்பில் ஒரு கையைப் பிடித்துக் கொண்டே சைக்கிளில் உட்கார்ந்திருந்தான். உள்ளே உடையணிந்து கொண்டிருந்த வடிவேலு வெளியே எட்டிக் குரல் கொடுத்தான்:

''லட்சுமணன், உள்ளே வந்திரன். ரண்டு நிமிசத்தில் வந்திடுவன்''

www.padippakam.com



ஆனந்தன் காதிலும் வார்த்தைகள் விழுந்தன. இலட்சுமணன் வடிவேலுவின் வேண்டுகோளைப் பொருட்படுத்தாதவனாக அப்படியே நின்றான்.

சில நிமிடங்களில் வடிவேலு சுறுசுறுப்பாக வெளியே வந்தான்.

''ஆச்சீ நான் பட்டணம் போட்டுவாறன்''

இலட்சுமணனோடு சென்று வடிவேலு படலைத்தள்ளிக் கொண்டு ஒழுங்கையில் இறங்கினான். வாயில் அடக்கி வைத்திருந்த உமிழ் நீரைத் துப்பிவிட்டு, ஆனந்தன் அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தை தாய்மேல் கொட்டினான்;

''உன்ரை செல்ல மேன்ரை கொழுப்பைப் பாத்தியா. அந்த விளாத்தியடிப் பள்ளனை உள்ளே வந்து இருக்கச் சொல்லுறான்.''

''இவன் உனக்காகச் சும்மா சொல்லியிருப்பான். இவன் சொன்னாப் போலை பள்ப் பயல் உள்ளை வந்து இருப்பானா''

''சொல்லாமலே உள்ளை நுழைந்து இருக்கத் தக்கவன் அவன். அவன்ரை உடுப்பையும் கால் சட்டையையும் பார்த்தியா? அவன்ரெயினிங் பாஸ் பண்ணி பட்டணத்தில் படிப்பிக்கிறான்''

''அவங்கள் எல்லாத் தொழிலும் செய்யத் தயாராயிருக்கிறாங்கள். உன்னைப்போலத் தான் எங்கடை சாதிப் பெடியங்களெல்லாம் படிச்சுப்போட்டு கிளாக் வேலை கிடைக்கேல்லை என்றதும் தெருச்சுத்திறாங்கள்.''

ஆனந்தன் பேச்சை தங்கம்மா திசை திருப்பி அவன் மேலும் பாய்ச்சியது அவனது தன்மானத்தைச் சிறிது சுட்டது.

''இவனைப் போலை விபீஷணங்கள் வந்ததாலைத்தான் அவங்களும் தலைகீழாய்பறக்கிறார்கள்.உன்ரைமேனிட்டைச்

www.padippakam.com



சொல்லிவை. இனிமேல் இப்பிடியான கதைகளும் குரங்குச் சேட்டைகளும் இந்த வீட்டில் நடந்தால் நான் பொறுமையாய் இருக்க மாட்டன் என்று''

''சரி சரி முகத்தை கழுவிப் போட்டுவாவன். அவங்கள் போட்டாங்கள் தானே''

''அவ்ங்கள் எங்கை போறாங்கள் என்று உனக்குத் தெரியாது. பட்டணத்தில் கூட்டம் போடப் போறாங்கள். இவன் ஏன் இப்ப வந்திருக்கிறான் என்று எனக்குத் தெரியும்''

''கோயில் திருவிழாவுக்கு அவன் வரப்படாதோ. நீ இரா முழுக்க எங்கை போனனி''

''கோயில் கும்பிட வந்திருக்கிறான் என்றுநினைக்காதை ஆச்சி''

''கோயிலுக்கு வேறை எதுக்கு?''

''குண்டெறிய''

தங்கம்மாவிற்கு சிரிப்புத்தான் வந்தது. அவன் பேச்சை அதன் மேலும் கேட்க விரும்பாதவளாக முகத்தைக் கழுவி விட்டு வரும்படி சொல்லிவிட்டு உள்ளே நுழைந்து விட்டாள்.

## 51

இலட்சுமணன், வடிவேலு இருவரது நட்பையும் பார்க்க அன்னத்துக்கே ஆச்சரியமாயிருந்தது. வேளாளரிடம் வடிவேலுவைப் போன்ற துணிச்சல்காரரை அவள் காண வில்லை. வேறு சில வேளாளர் பள்ளரது கூட்டங்களில் வந்து சாதியைக் கண்டித்துப் பேசுவதை அவள் கேட்டிருக் கிறாள். சாதியை ஒழிப்பதற்காக இந்தியாவில் பாடுபட்ட மகாத்மா காந்தி பற்றியும் அவர்கள் வாயிலாக ஓரளவு அறிந் திருந்தாள். அவர்களைப் பற்றி ஒரு தடவை மாணிக்

www.padippakam.com



கனோடு பேசிக் கொண்டிருந்தது அவள் நினைவில் வந்தது. அவள் அந்த உயர்சாதிக் காரரை உயர்வாகப் பேசியபோது மாணிக்கன் பாடியது அவ்வேளை அவள் காதில் ஒலித்தது:

''வாய்ச் சொல்லில் வீராடி கிளியே...'' அவ்வேளை கிளியே என்ற சொல் அவளது உடலைப் புல்லரிக்கச் செய்தது.

''என்னையா கிளியென்று சொல்லுறியள்''

''கிளிக் குஞ் சென்று சொல்லுவன்''

அவளின் கன்னத்தைக் கிள்ளிவிட்டான்.

அன்னம் தன் கன்னத்தைத் தடவினாள்.

''வேலை முடிஞ்சால் கோப்பியை வறுத்து இடி. பிறகு கொஞ்ச மாஸ்சம்பலும் இடிச்சுத் தந்திட்டுப்போ. இளையவனுக்கு நல்லாய் பிடிக்கும்''

தங்கம்மாவின் குரல் அன்னத்தின் நினைவை வேலையின் பக்கம் திருப்பியது.

அன்று ஆறுமுகத்தாரும் தோட்டத்திலிருந்து வேளைக்கு வந்து விட்டார். இளையவன் வடிவேலு வீட்டிலிருப்பான். பல விஷயங்கள் பற்றியும் பேசலாம் என்று அவர் எண்ணியிருக்கலாம்.

சாப்பாடு கொடுப்பதையும் தன் பெரிய வேலைகளில் ஒன்றாகக் கருதிய தங்கம்மா ஆறுமுகத்தாரை சாப்பிட அழைத்தபோதே அன்னத்தையும் அழைத்தாள். ஆறுமுகத்தார் அடுக்களைக்குள் வந்து மரப்பலகைத் தட்டின்மேல் குந்தினார். அன்னம் வெளியே குந்தியிருந்தாள்.

''இளையவனுக்கு கீரை போட்ட குரக்கன் புட்டு பிடிக்குமென்று அவிச்சன்''

தங்கம்மா ஆறுமுகத்தாருக்குச் சொல்லிக் கொண்டே படைத்துவிட்டு, வெளியே வந்து அன்னத்திற்கு பழையதைப் படைத்தான்.

www.padippakam.com



''உங்க ரண்டு மேனவையையும் பார்த்தால் விட்டிலையே அடிபிடி சண்டையெல்லாம் நடக்கப் போகுது போலை தெரியுது...''

தங்கம்மா. பேச்சை ஆரம்பித்து நடந்தவைகளைச் சொன்னாள். ஆறுமுகத்தார் வழமையாகவே ''உம்'' கூட்டிக் கேட்பது தவிர வாய்திறந்து பேசுவது மிகவும் குறைவு. சாப்பிடும்போது வீண் சண்டைகளை வரவழைப்பது சாப்பாட்டையே கெடுத்துவிடும் என்பது அவரது அனுபவம். அவர் எது பேசினாலும் தன் சொந்த அனுபவங்களை வைத்தே விஷயங்களை ஆராய்ந்து பேசுவார்.

''நான் சொல்லிக் கொண்டேயிருக்கிறன், ஊமைபோல கேட்டுக் கொண்டேயிருக்கிறியளே. இதுக்கு முடிவு கிடையாதா''

தங்கம்மா சீறத் தொடங்கினாள். மௌனமே சண்டைக்கு வழி வகுத்து விடலாம் என்ற நிலைமை ஏற்பட்ட போதுதான் ஆறுமுகத்தார் வாய் திறந்தார்:

''ஊரிலை சாதிச் சண்டை வலுக்க வலுக்க எங்களாடு தான் கஷ்டமாகிக் கொண்டு வருகுது. கூலிவேலைக்கு தோட்டத்தில் ஆள் கிடைக்குதில்லை. கிடைச்சாலும் அவர்கள் கேட்கிற கூலியோ! இப்பிடித் தோட்டம் செய்ய எங்களுக்குக் கட்டாது''.

''அப்ப அவங்களை விட்டிட்டு நாங்களாய் செய்ய வேண்டியதுதான்''

தங்கம்மா முடிவு கூறினாள்.

''ஒரே ஆள் எல்லா வேலையையும் செய்ய முடியுமா? அவங்கடை தோட்டங்களிலை பெண்சாதி பிள்ளைகளெல்லாம் தோட்டத்துக்கை இரவாய் பகலாய் நிக்குதுகள்...''

போ—5

www.padippakam.com



''இப்ப என்னையும் தோட்டத்துக்கு வேலை செய்ய வரச் சொல்லுறீரோ. எங்கடை அப்பு ஆச்சீன்ரை குலமென்ன? சாதியென்ன? நான் கூலிவேலை செய்ய இங்கை வந்தனான் என்று நினைச்சீரோ...''

தங்கம்மா தன் வழமையான வரய்ப்பாட்டை ஆரம்பித்தாள். மௌனம் காக்க முடியாத நிலையில் வாய் திறந்து வக்கணையில் அகப்பட்ட நிலையில் உணவை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் ஆறுமுகத்தார் இருந்தார்.

''உன்னை ஆர் இப்ப தோட்டத்துக்கு வரச் சொன்னது. வரச் சொன்னால்போல நீ வரப் போறியா. எல்லாருமாக உழைச்சு அவங்கள் எப்பிடி வளர்ந்திட்டாங்கள். எங்கடை யாட்கள் அவங்களுக்கு நிலங்களை வித்துத் தின்னினம் என்று சொல்ல வந்தன்''

''ஒருத்தரும் அவங்களுக்கு நிலம் விக்கப்படாது. அதால்தான் எல்லாம் வருகுது''

''வெள்ளாளரிலும் பார்க்க அவன் கூட விலை கொடுக்கிறான். காசையும் ஆரேன் வேண்டாமெண்டு சொல்லுவினமோ''

''குறைஞ்சவிலை என்றாலும் வெள்ளாளருக்கையே விக்கவேணும்''

''உன்ரை விருப்பம் சரி. ஆனால் நடைமுறையிலை உதொன்றும் நடக்காது''

''வெள்ளாளரெல்லாம் ஒற்றுமையாய் இருந்தால் ஏன் நடக்காது?''

தங்கம்மா தான் சொல்வதே சரி என்று வாதிட்டாள். ஆனந்தன் அடிக்கடி சாதியை நிலைநிறுத்தச் சொல்லும் காரணங்களும் அவளது நினைவில் வந்தன.

''எங்களிலும் பார்க்க அவங்களிட்டைத்தான் ஒற்றுமையும் சொன்னபடி நடக்கிற குணமுமிருக்கு. இப்ப தோட்டப்

www.padippakam.com



பக்கத்திலை நான் சாதித் திமிர் பேசினால் ஒரு பள்ளனுமே கூலிவேலைக்கே வராத நிலமை வளர்ந்து வந்திட்டுது. அடுத்த கிணத்தடியிலை 'பள்பிள்ளைக்கு நான் தாற கூலியை வாங்க முடியாது' என்று கறுவல்தம்பி வீராப்புப் பேசினார். இப்ப ஒரு பள்ளனும் அவருக்குக் கூலிவேலை செய்ய இல்லை. முந்தியென்றால் கூலிவேலை செய்யிறவங் களுக்கு பழையதையோ பாணையோ கொடுத்தால் போதும். இப்பவென்றால் இடியப்பம் இல்லாவிட்டால் புட்டு கேட் கிறாங்கள். அன்றைக்கொரு நாள் நீ பழையதை அனுப் பினாய். 'உதைச் சாப்பிட்டு என்னாலை வேலை செய்ய முடியாது. சாப்பாடனுப்பின உம்மடை பெண்டாட்டியைக் கொண்டந்து வேலை செய்யும்' என்று சொல்லிக்கொண்டு போய்விட்டான்''

''என்னைத் தோட்டத்திலை வந்து வேலை செய்யச் சொன்னானா ஆர் அந்தப் பள்ப்பயல்''

''நன்னியன் என்று கிழக்குப் பக்கத்தான்தான்''

''ஓ, உப்பிடிச் சொன்னால் நானும் உம்மோடை தோட் டத்துக்கு வேலை செய்ய வருவன் என்ற நினைப்போ''

தங்கம்மா மீண்டும் பேச்சைத் திசைதிருப்பி ஆறுமுகத்தா ரோடு, இராவினாள். சரியாகப் பதில் கூற முடியாதபோது வாதம் செய்ய முடியாத வேளைகளில் அவள் அவ்வாறு போர் தொடுக்க முனைவது ஆறுமுகத்தாருக்குப் பழக்கமே.

''நீ வந்தாலே அந்த நிலம் உன்னைத் தாங்காது. உன் சாதி மூச்சுப்பட்டாலே பயிரெல்லாம் எரிஞ்சுபோகும்''

''என்ன கேலி பேசிறீங்களோ''

''இல்லையே. உன்னைக் கண்ணகி போலை உயர்த் திறன்''

''அதுதானே கேட்டன்''

தங்கம்மா மனம் ஆறியபோது வெளியே அன்னம் தண்ணீருக்குக் குரல் கொடுத்தாள். தங்கம்மா வெளியே

www.padippakam.com



வந்தபோது ஆறுமுகத்தாருக்கு சிரிப்பேற்பட்டு புட்டு விக்கி யது. தங்கம்மா ஓடிவந்து தண்ணீர்ச் செம்பைக் கொடுத் தாள். அவர் வாங்கி அண்ணாந்து குடித்தார்.

## 16

ஆறுமுகத்தார் சாப்பாடு முடித்து எழுந்து சென்று ஈஸிசெயரில் சாய்ந்து கால்களை நீட்டிப் படுத்தார். சாப்பிட் டதும் ஏற்படும் அசதி ஏற்பட்டது.

அன்னம் கோப்பிக் கொட்டையை வறுக்கும் ஓசை கேட் டது. மணமும் காற்றில் மிதந்து வந்தது.

தன் சாப்பாடு முடிந்தபோதும் தங்கம்மாவிற்கு வடி வேலுவின் நினைவு வந்ததும் இருப்புக் கொள்ளவில்லை. ஆறுமுகத்தாரிடம் சென்று கதை கொடுத்தாள்.

''தோட்டமும் வீட்டிலை தூக்கமும் என்று ஊர் உலகத் தைப் பற்றியே கவலைப்படாது நீங்கள்அசந்து தூங்குவியள். இந்த இரண்டு பெடியங்களாலையும் நான் படும் பாட்டை நீங்கள் யோசித்துப் பார்க்கிறியளா. இளையவன் திருவிழா வுக்கு சாமிகும்பிட வரேல்லை குண்டெறிய வந்திருக்கிறான் என்று மூத்தவன் சொல்லிறான்''

''சாமி கும்பிட விட்டிட்டால் போச்சு. ஏன் குண்டெறியப் போறாங்கள்?''

அரைத்தூக்கத்தில் ஆறுமுகத்தார் சொன்னார்.

''கண்ணை மூடிக்கொண்டு என்ன சொல்லிறதென்று தெரியாமல் சொல்லிறியள்''

தங்கம்மா அதட்டிச் சொன்னாள்.

''கண்ணை முழிச்சிக்கொண்டும் அதைத்தான் சொல்லு வன்...''

www.padippakam.com



ஆறுமுகம் கண்களைத் திறந்து தங்கம்மாவைப் பார்த்த படியே சொன்னார்:

''உன்ரை மூத்தவன் சும்மா இருப்பான் என்று நினைக்கிறியா. திருவிழாவிற்கு எறிகுண்டு கொண்டு போன வெள்ளாளருக்கு இவன்தான் தலைவராய் போவான். இவன் காசு எப்பவோ சேர்த்து எறிகுண்டெல்லாம் செய்து வைத்திருக்கிறான் என்று தோட்டத்திலையே கேள்விப்பட்டன். இதை அறிந்தால் பள்ளர் சும்மா இருப்பாங்களா? அவங்களும் பாதுகாப்புத் தேடுவாங்கள்தானே''

''உங்கடை கதையைப் பார்த்தால் நீங்களும் அவங்களோடை சேர்ந்திடுவியள் போலையிருக்கு''

''அதல்ல. நாங்கள் பலாத்காரத்துக்கு தயார்படுத்திப் போட்டு அவங்களை சும்மா வாருங்கோ என்றால் நடக்கிற காரியமா?''

''தோட்டத்திலை பள் சாதியோடை பழகிப் பழகி உங்களுக்கும் அந்தச் சாதிப் புத்தி பிடிச்சுக் கொண்டுது. நானும் இதுக்கை வந்தனே...''

தங்கம்மா தன் ஆத்திரத்தை வழமையாகக் கொட்டுவது போலவே அன்றும் கொட்டினாள்.

தங்கம்மா மேலும் வாதாட விரும்பாது வடிவேலுவுக்கு பிடித்ததாய் ஏதாவது விரைவில் சமைக்க வேண்டுமென்று அடுக்களைக்குள் நுழைந்தாள்.

## 17

மறுநாள் மாலைப் பொழுது கருகிவிட்டது. கிழக்குப் பகுதியில் சூழும் இரவில் பாதியை முன்னிலவு விரட்டிக் கொண்டிருந்தது, முற்றத்தில் அரவம் கேட்டு அன்னம் வெளியே வந்தாள். இலட்சுமணனோடு வடிவேலுவும்

www.padippakam.com



வந்திருந்தது அவளுக்கு வியப்பாயிருந்தது. இந்த வேளையில் இருவரும் ஏன் இங்கே என்னிடம் வரவேண்டும்?

''வாருங்கோ...நில்லுங்க...உள்ளே வாருங்கோ...''

அன்னம் அவர்களை எப்படி வரவேற்பது என்று அறியாது திணறினாள்.

''உள்ளே அப்பு ஆச்சிக்கு ஏன் இடைஞ்சல் கொடுக்க வேணும்? நாங்க இதிலையே இருப்பம்''

இருவரும் முற்றத்து மண்மேல் உட்கார்ந்தனர். அன்னத்திற்கு இருப்புக் கொள்ளவில்லை. உள்ளே ஓடிச் சென்று இரண்டு பலகைத் துண்டுகளை எடுத்து வந்தாள். அவளது மனநிலையைத் திருப்திப்படுத்த வடிவேலு ஒன்றை வாங்கித் தன் குண்டிப்புறப் பக்கமாக வைத்தான்.

''வடிவேலு வீட்டை நீ வேலைக்குப் போறதென்று எனக்கு நேற்றுத்தான் தெரியும்''

இலட்சுமணன் பேச்சைத் தொடங்கினான்.

''அன்னம் ஏன் நிற்கிறாய்? நீயும் இரன்''

வடிவேலு சொன்னான். அவள் தயங்கியபடியே குந்திக் கொண்டிருந்தாள்.

''நேற்றுக் காலமை நீங்க வந்து கூட்டிக்கொண்டு போன போது பார்த்தன்''

அன்னம் இலட்சுமணனைப் பார்த்துச் சொன்னாள்.

''அன்னத்தை எனக்குச் சின்னப் பெட்டையாகவே தெரியும். இப்பப் பார்த்தால் கிணத்தடித் தென்னைபோல வளர்ந்து விட்டாள்''

வடிவேலு சொன்னான்.

திருவிழா ஏற்பாடுகள் பற்றி முடிவு செய்ய அங்கே செயற்குழுக் கூட்டத்திற்கு வந்திருப்பதாகவும் ஆட்கள்

www.padippakam.com



அங்கு வந்து சேரவில்லை எனவும் இடைநேரத்தில் அவளைப் பார்க்க வந்ததாகவும் இலட்சுமணன் கூறி அவளது வியப்பைத் தணித்தான்.

வேறும் பல விபரங்கள் பற்றிச் சொன்னான். தேநீர் தயாரிப்போமா, விடுவோமா என்று அவள் மனம் தவித்துக் கொண்டிருந்தது. வடிவேலு வந்தது அவளுக்குச் சிரமமாகி விட்டது. அல்லது உரிமையோடு அடுப்பை மூட்டிவிடுவாள்.

''அன்னம், தேத்தண்ணி போட்டுக்கொண்டு வா. நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறம். பிறைச் சந்திரனும் இந்த முத்தமும் நல்லாயிருக்கு''

இலட்சுமணன் அன்னத்தின் தயக்கத்தை நீக்கினான். அன்னம் உள்ளே சென்று எரிந்த அடுப்பை மேலும் மூட்டினாள்.

இருவரும் எழுந்து முற்றத்தின் ஓரமாக இருந்த புற்றரையில் உட்கார்ந்தனர். வடிவேலு உடலை நீட்டி தலைக்கு வலது கையைக் கொடுத்தபடி படுத்துக்கொண்டே மேற்குப்புற வானத்தைம் பார்த்துக் கொண்டிருந்தான்.

''கொழும்பிலை வளர்பிறை, தேய்பிறை எதுவுமேபற்றி எவருமே கவலைப்படுவதில்லை. கிராமத்துக்கு வந்தால் தான் அழகெல்லாம் தெரியுது''

வடிவேலு சொன்னான்.

''கிராமங்களை நாங்கள் அப்படியே வைச்சிருக்கிறம். அதாலேதான் முன்னேற்றமில்லாமல் அப்படியே கிடக்குது''

''இப்படி நெடுக இருக்கப் போவதில்லை. பொருளா தார வளர்ச்சியில் ஏற்படும் முரண்பாடுகளைத்தானே இப் போதும் பார்க்கிறோம்''

''என்ன வளர்ச்சி? ஆமைவேக வளர்ச்சிதானே''

www.padippakam.com



''அது உண்மைதான். இப்படியான அரசாங்கத்தால் இதன்மேல் வேகமாக எவ்வித வளர்ச்சியையும் ஏற்படுத்தி விட முடியாது.

வடிவேலு சொன்னான்.

''ஆர் முதலில் சந்திரனுக்குப் போவார்கள். அமெரிக்கரா, ரஷ்யாக்காரரா?''

இலட்சுமணனும் பிறைச் சந்திரனைப் பார்த்துக் கொண்டே கேட்டான்:

''இந்தப் போட்டியில் ஆர் வெல்லுவினம் என்று இப்போது சொல்லிவிட முடியாது. எங்களைப் பொறுத்த வரையில் அவர்கள் உலகத்தையே சிறியதாக்கி பரந்த வான மண்டலத்தை ஆராயும்போது நாங்கள் இன்னும் சாதி ஆராய்ச்சி நடத்துவதுதான் வேடிக்கை''

''தாம் முதலில் சந்திரனில் காலடியெடுத்து வைப்போம் என்று வீரம் பேசும் அமெரிக்கரே நீக்ரோக்களை ஒதுக்கி வைக்கிறார்களே. அதுக்கு என்ன சொல்லிறாய் வடிவேலு''

''அது கண்டிக்க வேண்டியதே, ஆனாலும் அங்கே நிறம் ஒன்றாதல் இருக்கே. இங்கே சாதி என்று ஒதுக்கும் போது அது கூட இல்லையே'.

''ரோமாபுரியிலும் அடிமைகள் என்று தம் நிறத்தவர்களைத்தானே நசித்து வைத்திருந்தார்கள்''

''அதனால்தான் இந்தப் பேதமெல்லாம் உழைப்பைச் சுரண்டுவதற்காக ஏற்படுத்தப்பட்டவையே தவிர வேறு பிறப்பாலோ குலத்தாலோ அல்ல, வர்க்கப் பிரிவு என்பதை நாம் எல்லாருக்கும் முதலில் புரிய வைக்க வேண்டும்''

வடிவேலு சொல்லிக் கொண்டிருக்கும்போது அன்னம் வெள்ளைக் குவளையையும் மூக்குப்பேணி ஒன்றையும் கொண்டு வந்தாள். வெள்ளைக் குவளையை வடிவேலுவிடம் நீட்டினாள். இலட்சுமணன் மூக்குப்பேணியைப் பெற்றுக் கொண்டான்.

www.padippakam.com



இருவரும் தேநீர் உறுஞ்சுவதை அன்னம் பார்த்துக்கொண்டு நின்றாள்:

''கொழும்பிலே கூட நான் 'பிளெயின் டீ'தான் குடிப்பேன். இது அதிலும் நல்லாயிருக்கு''

வடிவேலு சொன்னதை அவளால் நம்ப முடியவில்லை. வடிவேலு மேலும் தொடர்ந்தான்.

''அங்கே தேயிலைச்சாயம் நல்ல நிறம் பெயர்வதற்காகத் தேயிலைத் தூளுக்குள்ளே சுண்ணாம்பைக்கூட கலந்து விடுறாங்கள்.''

''வயிற்றுக்குக் கூடாதே''

''சோறு வெள்ளை நிறம் பெயர்வதற்காக சுண்ணாம்பு சேர்ப்பவர்களும் இருக்கிறார்கள் கலப்படம் இல்லாமல் என்ன சாமான் இருக்கு. மனிதர்களைக் கொல்லவும் முதலாளிகள் தயங்க மாட்டார்கள். அவர்களுக்கு வேண்டியது ஒன்றே ஒன்றுதான். லாபம். அதுதான் அவர்களது தெய்வம்''

வடிவேலுவின் பேச்செல்லாம் அவளுக்கு வேடிக்கையாயிருந்தது. தேநீர் குடித்ததும் இருவரும் எழுந்தார்கள். வேட்டியின் பின்புறத்தைத் தட்டினார்கள்.

''வேட்டியெல்லாம் புல்லுக்கொட்டையாய் தான் இருக்கும்''

அன்னம் சிரித்துக்கொண்டே சொன்னாள்.

''நாளைக்கு உன் வீட்டுப் புல்லுக்கொட்டையைப் பொறுக்க வேட்டியை உன்னிடமே தந்து விடுகிறேனே''

வடிவேலு சொன்னான்.

இருவரும் புறப்பட்டனர். அவர்கள் வருகைக்கு நன்றி கூறவே அவளால் முடியவில்லை. கண்களில் விநயமும் நன்றியும் அரும்பின. அதே வேளை முன்னே நடந்த இலட்சுமணன் திரும்பி அன்னத்திடம் மெதுவாகச் சொன்னான்:

படிப்பகம்

www.padippakam.com



''அன்னம் தூங்கி விடாதை. நிலவுபட்ட பிறகு சாமம் வரையிலை நாங்கள் பிறகும் வருவம்''

மெல்லிய நிலவொளியில் சிலைபோல எதுவும் புரியாது அவர்கள் செல்வதைப் பார்த்துக்கொண்டே நின்றாள். அவர்கள் வேண்டுவது எதற்கும் அவள் தயாராகவே இருந்தாள்.

# 18

செயற்குழுக் கூட்டத்தில் காரசாரமான விவாதம் நடந்தது. கோவில் திருவிழாவிற்கும் தமக்கும் சாதிக்கும் இடையிலுள்ள தொடர்புகள், தாம் இவற்றில் எடுக்க வேண்டிய பங்கு. நடந்துகொள்ள வேண்டிய சாதுரிய முறைகள் பற்றியெல்லாம் ஆராய்ந்தனர். தாழ்த்தப்பட்டவர் என்று கூறப்படுபவர்களுக்கிடையே வெவ்வேறு இயக்கத்தார் வெவ்வேறு விதமாக நடவடிக்கை எடுக்க ஏற்கெனவே தீர்மானித்திருந்தனர். நடை முறையிலுள்ள சட்டங்கள் பற்றியும் பொலிசார் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் பற்றியும் சிலர் பேசினர். அவர்களது இயக்கத்தைச் சார்ந்த பசுபதி தலைமை தாங்கினான். அவன் பட்டணத்தில் தொழிற் சங்கங்கள் பலவற்றின் தலைவனாகவும் இருந்தான்.

உயர்ந்த சாதிக்காரர் கோவிலில் எடுக்கப்போகும் நடவடிக்கைகள் பற்றியும் அவரவர் அறிந்த அளவில் கூறினர்.

''பொலிசார் நிட்சயமாக அவர்கள் பக்கமே சார்ந்திருப்பர் என்பதை நாம் முற்று முழுதாக முதலில் அறிந்துகொள்ள வேண்டும்''

பசுபதி சொன்னான்.

''சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட இந்த மனித உரிமைப் போராட்டம் இனிமேலும் வலுப்பெறத்தக்கதாக,

www.padippakam.com



பொய்மைக் கருத்துகளிடை ஒடுக்கப்பட்டவர்கள் ஏமாறப் படாது—தற்போது ஏற்பட்டிருக்கும் எழுச்சியும் போர்க் குணமும் மழுங்கடிக்கப்படாது நாம் முதலில் பாதுகாத்தும் கொள்ளவேண்டும்.''

வடிவேலு சொன்னான். அடிப்படைக் கருத்துகளிடை வேற்றுமை இருக்கவில்லை. எடுக்க வேண்டிய நடவடிக்கை கள், தந்திரோபாயங்களிடையே சிறிது வேற்றுமை யிருந்தது.

''பொலிசார் உயர்சாதிக்காரரைக் காப்பாற்ற அவர் களின் பிரதிநிதிகளாகத் தோன்றியதும் இறுதியில் போராட் டம் நேரடியாக எமக்கும் பொலிசாருக்குமிடையாகவே மாறு தலடையும்''

இலட்சுமணன் சொன்னான்.

''தற்காப்பிற்கான நடவடிக்கைகளுடன் நாம் கட்டாயம் செல்ல வேண்டும். இல்லாவிடின் தமது கைவரிசையெல்லா வற்றையும் எம்மேல் காட்டி விடுவர்''

பசுபதி எச்சரித்தான்.

பொலிசார் பட்டாளமாக வரினும் சனிக்கிழமை செயற் குழுவினர் தலைமை தாங்கி பள்ளர் பறையருடன் கோவி லுக்குள் நுழைவதாகத் தீர்மானித்தனர். உயர் சாதிக்கார ரும் உள்ளே நுழையாது கோவில் அடைக்கப்பட்டால் மட்டும் திரும்பி வருவதாக முடிவு செய்தனர். அவ்வாறு நடந்தால் அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி பின்னர் ஆராய்ந்து முடிவு செய்வதாகத் தீர்மானித்தனர்.

கூட்ட முடிவில் ஒவ்வொருவருக்கும் பொறுப்பான வேலைகள் பணிக்கப்பட்டன.

யாவரும் கலைந்து பிரிந்தனர்.

நிலவு பட்டு ஒரே இருள். எங்கும் ஒளியே கிடையாத சாமம். வானம் மட்டும் அழகாகப் பூத்திருந்தது. நாய்களின்

படிப்பகம்

www.padippakam.com



குரைப்பும் ஊளையிடும் ஓசையும் ஆங்காங்கே கேட்டுக் கொண்டிருந்தன. கையில் 'ரோச் லயிட்' இருந்த போதும் அதை அடியாது ஒற்றையடிப் பாதை வழியே இலட்சுமணன் முன்னே செல்ல வடிவேலு பின் தொடர்ந்தான். அன்னத்தின் குடிசையை அடைந்தபோது அவள் வாசலில் தூங்கி வழிந்து கொண்டிருந்தாள். ஆயினும் காலடி அரவம் கேட்டு எழுந்து நின்றாள்.

''அன்னம்''

முற்றத்தில் நின்றபடி மெதுவாக இலட்சுமணன் அழைத்தான். எதுவும் புரியாது பலவித உணர்ச்சியலைகளிடை இதயம் அடித்துக்கொள்ள முன்னே சென்றாள். இலட்சுமணன் நெருங்கி வந்தான்.

''என்ன அன்னம் உனக்குப் பயமாக இருக்கிறதா''

அடித்தொண்டையில் எதிரொலிக்கும் வார்த்தைகள்.

''இப்போதெல்லாம் எனக்கு எதற்குமே பயமில்லை, என்ன வேணும் உங்களுக்கு?''

இதயம் அடித்துக் கொண்டபோதும் ஏதோ ஒரு வெறி அவளை உந்திக் கொண்டிருந்தது.

''இந்தப் பார்சலை இங்கே ஒளித்து வைப்பாயா?''

வடிவேலுவிடமிருந்த பார்சலை வாங்கி நீட்டினான்.

''இது தானே''

''மிகச்சிறிய உதவியை வேண்டியதுபோல அவள் பதில் ஒலித்தது.

பார்சலைக் கையிலே வாங்கிக்கொண்டாள். சிறிய பார்சலானபோதும் பாரமாகவேயிருந்தது.

''கவனம், நிலத்திலே போட்டுவிடாதே. எவரும் காண முடியாத இடத்தில் ஒளித்துவை. வெள்ளிக்கிழமையிரவு அல்லது சனிக்கிழமை வந்து எடுப்போம்''

படிப்பகம்

www.padippakam.com



''எப்பவும் வரலாம். கவனமாக வைத்திருப்பன்''

அது என்ன பார்சலாக இருக்கும் என்பதை அவளும் ஓரளவு ஊகித்துக் கொண்டாள்.

இருவரும் விடை பெற்றனர்.

இத்தீவிர இயக்கத்தில் தானும் ஈடுபட்டு உதவி புரிய முடிவதில் ஓரளவு மகிழ்ச்சி ஏற்பட்டது. ஓசைப்படாது குடிசைக்குள் நுழைந்தாள்.

நள்ளிரவில் படுத்தபோதும் இலட்சுமணன் பற்றிய நினைவே அவளது இதயத்தில் வட்டமிட்டது. அவனெடுக்கும் தீவிர நடவடிக்கைகளைப் பார்த்தபோது உள்ளூற அச்சமும் ஏற்பட்டது. வேளாளரின் சாதிவெறிப் பலிக்கு அடுத்த கடா அவனாகிவிடுமோ?

## 19

அன்று அன்னம் சிறிது தாமதமாகவே ஆறுமுகத்தார் வீட்டுக்குச் சென்று தன் வேலைகளைச் செய்யத் தொடங்கினாள். மாட்டுக் கொட்டிலைத் துப்பரவாக்கிக் கொண்டிருந்த போது மணிச்சத்தம் கேட்டு எழுந்து பார்த்தாள். இலட்சுமணன் வடிவேலுவை அழைத்துச் செல்ல வந்திருந்தான். சயிக்கிளை மாமரத்தடியில் விட்டுவிட்டு முற்றத்தில் வந்து நின்றான்.

அவ்வேளை ஆனந்தன் கிணற்றடியிலிருந்து வந்தான். இருவரும் ஒருவரை ஒருவர் எதிரிகள் சந்தித்ததுபோலப் பார்த்துக் கொண்டனர். இருவரது பார்வைகளும் மோதின. உள்ளே நுழைந்த ஆனந்தன் திரும்பி வந்தான்; இலட்சுமணனை வெறித்துப் பார்த்துக்கொண்டே கேட்டான்:

''நீ ஆரிட்டை இங்கை வந்தனி''

''உங்களிட்டையில்லை''

படிப்பகம்

www.padippakam.com



''உந்த நளினங்கள் வேண்டாம். இன்றைக்கு மட்டும் விடுறன். இனிமேல் அந்தப்படலை திறந்து இங்கை வர வேண்டாம்''

''வந்தால்...''

இலட்சுமணன் எதிர்த்துச் சொன்னான்.

''கால் அடிச்சு முறிப்பன்''

''அதையும் பார்ப்பமே''

''பள்ப் பயலுக்கு இருக்கிற செருக்கு''

''இன்னொருக்கால் சாதிப்பெயர் சொன்னால் பல்லடிச்சுக் கொட்டுவன்''

இருவரும் நெருங்கி வர சத்தம்கேட்டு ஓடிவந்த வடிவேலு இடைமறித்தான்.

''என்னுடைய சிநேகிதனைத் தடுக்க நீர் ஆர்?''

வடிவேலு ஆனந்தனை எதிர்த்துக் கேட்டான்.

''இவனை ஆரெண்டு உனக்குத் தெரியுமா?''

''உன்னிலும் பார்க்க எனக்குகூடத் தெரியும்''

''பள்ளர் பறையரைத் தவிர உனக்கு வேறை சிநேகிதர் தேடத் தெரியாதோ''

''அது என் விருப்பம். இந்த வீட்டிலை எனக்கும் உரிமை இருக்கு. நான் ஆரையும் கூட்டிவருவன். உனக்கு விருப்பமில்லாவிட்டால் வெளிக்கிட்டுப்போ''

''அவ்வளவுக்கு வந்திட்டியா. ஆச்சீ, உன்ரை மேன் சொல்லுறதைக் கேட்டியா?''

தங்கம்மா ஓடிவந்து இருவருக்கும் இடையில் நின்று சமாதானம் பேசினாள்.

''என் சிநேகிதர்களைத் தடுத்தால் உன்னுடைய காடையர்களையும் இங்கே நுழைய விடமாட்டன்''

www.padippakam.com



''நீ கொழும்பிலையே இருக்காமல் இங்கை வந்து ஏன் விபீஷண வேலை பார்க்கிறாய்?''

''நான் என்னவும் செய்பவன், நீ ஆர் கேட்க''

''இரவிரவாய் என்ன செய்யிறீங்கள் என்று எங்களுக்கெல்லாம் தெரியாமலில்லை. கையுங்களவுமாய் உங்களையெல்லாம் பிடிச்சு உள்ளே தள்ளாவிட்டால் நான் ஆனந்தனில்லை''

''முடிந்தால் செய்யுமன். பொலிசெல்லாம் உங்கடை நாய்கள் தானே''

''செய்யாமலா விடப்போறம். கோவிலிலேயும் கவனமாய் நில்லுங்கோ. உங்களுக்குப் பாடம் படிப்பிக்காமல் விடப்போறதில்லை''

ஆனந்தன் மீண்டும் சபதமெடுத்தான்.

வடிவேலு இலட்சுமணனையும் அழைத்துக் கொண்டு வெளியே புறப்பட்டான்.

அன்னத்திற்கு அந்த வாக்கு வாதம் அச்சத்தையே அளித்தது. ஆனந்தனின் செல்வாக்கையும் முரட்டுப் போக்குகளையும் அவள் ஓரளவு அறிவாள். முற்றத்திலே நின்ற இலட்சுமணனை, தன் தம்பிக்காகவாயினும் மரியாதை காட்டாது, எப்படி வம்புக்கிழுத்து சண்டை பிடித்தான். ஆனந்தன் தன் வெற்றிக்காக எதுவுமே செய்து விடுவான். பொலிசில் அவனுக்குச் செல்வாக்குவேறு இருந்தது. எப்படியாயினும் எல்லோரும் விழிப்போடு இருப்பதே நல்லது என்று நெஞ்சுக்குள் சொல்லிக் கொண்டாள்.

## 20

சனிக்கிழமையன்று எங்கும் பரபரப்பாகவே இருந்தது. பத்திரிகைகளெல்லாம் அப்படி நடக்கும், இப்படி முடியும் என்றெல்லாம் அபிப்பிராயம் தெரிவித்திருந்தன. கோவிலடி

www.padippakam.com



பூராவும் பெருங்கூட்டம். பொலீஸ் படைவேறு குவிந்திருந்தது.

கோவில் குருக்களைச் சார்ந்த ஆட்களில் பலர் தொண்டர்கள் என்ற பெயர்களைக் கைகளில் எழுதிப் பொறித்துக் கொண்டு வாயில்களைக் காத்து நின்றனர். தமக்குத் தெரிந்தவர்களையே உள்ளே அனுமதித்தனர்.

அரிசனர்களை உள்ளே சென்று வழிபாடு செய்ய அனுமதிக்கும்படி வாயிலில் காந்தீயத் தொண்டர்கள் சிலர் உண்ணா விரதமிருந்தனர்.

வேறு தீவிர இயக்கத்தைச் சேர்ந்த பலநூற்றுவர் வாயில் பகுதியில் உட்கார்ந்து சத்தியாக்கிரகம் செய்தனர். அவர்கள் கூட்டுப் பிரார்த்தனையாக தேவார திருவாசகங்கள் பாடிக் கொண்டிருந்தனர்.

சட்ட நுணுக்கப்படி தாழ்த்தப் பட்டவர்கள் கோவிலினுள் நுழையலாம், நுழையப் படாது என்று ஆங்காங்கே குழுக்களாக நின்று விவாதித்துக் கொண்டு நின்றனர், பலர்.

''நான் ஒரு சாதி வேளாளன். என்னையே நுழைய விடாது வாசலிலை நிற்பவன் தடுத்து விட்டான்'' என்று ஒருவர் ஆத்திரத்தோடு குரல் எழுப்பிக் கொண்டிருந்தார்.

''இந்தப் பிரிவினைகளையும் அநியாயத்தையும் பார்த்து முருகனே இதுவரையில் ஓடியிருப்பான். இவர்கள் ஆரைத் தான் கும்பிடப் போகிறார்களோ''

ஒரு சிறு சர்ச்சைக் கூட்டத்தில் ஒருவர் சொன்னார்.

''என்பெயர் முருகன் இது என்மனைவி வள்ளி. நாங்கள் தெய்வச்சாதி'' என்று வேலனே வந்து மன்றாடினாலும் 'நீ சாதி குறைந்தவன்' என்று சொல்லி கோவிலுக்குள்ளே நுழைய விடமாட்டாங்கள்.''

மற்றவர் தன் கற்பனைக் கருத்தைக் கூற யாவரும் சிரித்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



''வேலன் என்ற பழையகாலக் கணக்குழுத்தலைவனைத் தான் இப்ப கடவுளாக்கிப் போட்டு, புராணக்கதையெல்லாம் கட்டி, சாமி என்று அமர்க்களப் படுத்திறாங்கள்''

ஒரு ஆராய்ச்சியாளர் தன் கருத்தைக் கூறினார்.

பசுபதி தலைமையில் ஒரு படை கோவிலுக்குள்ளே நுழைய வருகிறது என்ற பேச்சே எல்லோர் ஆர்வத்தையும் தூண்டிக்கொண்டிருந்தது.

ஆனந்தனைச் சார்ந்த உயர்சாதிப் படையினர் கோவிலுக்குள்ளேயே துப்பாக்கி, வெடிகுண்டு யாவும் தயாராக வைத்திருந்தனர். உள்ளே நுழையமுயலும் பள்ளர், பறையரை கோவில் வாசலிலேயே விழுத்திவிடுவதற்குத் தயாராக நின்றனர்.

கரம்பனூர் கிழக்குப்பகுதியில் வெடிகுண்டுகள் மறைத்து வைத்திருப்பதாகத் தனக்குச் செய்தி கிடைத்தது என முதல் நாள் ஆனந்தன் பொலிசாரை அழைத்துச் சென்று வீடு வீடாக, குடிசை குடிலாகத் தேடுதல் போடச்செய்தான். எங்கேயும் எறிகுண்டோ துப்பாக்கியோ கிடையாதது அவனுக்கு ஏமாற்றமாக இருந்தது. ஆனந்தன் பொலிசாருடன் தேடுதல் போட்டதை அன்னம் வீட்டு முற்றத்தில் நின்று பார்த்துக் கொண்டு நின்றாள். அவனது துணிச்சல் அவளது உடலையே சிலநேரம் பதறச் செய்தது. தன் வீரத்தைக் காட்ட அன்னத்தையும் அடிக்கடி பார்த்துச் சிரித்தான்.

அவளது குடிசையும் அயலிலேயிருந்த தெய்வானையின் குடிலும் தவிர்ந்த பெரும்பாலான குடிசைகள், வீடுகளெல்லாம் தேடுதல் நடைபெற்றது. வேலாயுதம் வீடு கூடத் தேடப்பட்டது. என் செல்வாக்கால் உன் குடிசையைத் தேடாது விடுகிறேன் என்று அவனது பார்வை அன்னத்துடன் பேசியது.

தோல்வியாயினும் தன் செல்வாக்கை நிலை நாட்டியதில் ஆனந்தனுக்குப் பெருமை.

போ—6

www.padippakam.com



தோல்வியோடு திரும்பிப் போகும்போது ஒருவன் ஆனந் தனை நோக்கிச் சொன்னான்:

''பொலிசோடு போறபடியால் உயிரோடு போறாய். இல்லாவிட்டால் பாளைக் கத்தியாலை தலையைச் சீவிப் போட்டுத் தான் விட்டிருப்பம். தப்பித் தவறி இனிமேல் மட்டும் இந்தப் பக்கம் வந்திடாதை'' அவ்வார்த்தைகளைக் காதில் வாங்காதவன் போல ஆனந்தன் பொலிசாரோடு உரையாடிக் கொண்டே சென்று ஜீப்பில் ஏறிக் கொண்டான்.

அதே ஆனந்தன் பெரிய இடத்துத் தயவோடு கோவிலுக் குள்ளேயே தன் அர்ச்சனைப் பொருட்களைத் தயாராக வைத்திருந்தான்.

## 21

பசுபதி, இலட்சுமணன் முதலியோர் முன்னே நடக்க பின்னே கிழவர் கிழவியர் குமரியர் வாலிபர் ஈறாக ஒரு கூட்டம் கோவிலை நோக்கி வந்து கொண்டிருந்தது. கை யிலே அர்ச்சனைப் பொருட்கள், தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம், மலர்கள். கூட்டத்தில் எங்கும் பரபரப்பும் சலசலப்பும்.

''முருகனுக்கு அரோகரா. கந்தனுக்கு அரோகரா''

பலகுரல்கள் எங்கும் ஒலித்துக் கொண்டிருந்தன. சத்தி யாக்கிரகம் செய்து கொண்டிருந்தவர்களைக் கடந்து கொண் டிருந்தனர். கோவில் வாசலில் நின்ற தொண்டர்களை இடித்தபடி உள்ளே நுழைய வேண்டியது தான். பின்னே ஆற்று வெள்ளம் போல் கூட்டம் உந்திக் கொண்டிருந்தது. மடை உடையவேண்டியதுதான் பாக்கி. திடீரென உள்ளே யிருந்து கற்கள் வந்தன. அதைத் தொடர்ந்து எறி குண்டு கள் வீசப்பட்டன; வெடிச் சத்தம் கேட்டது. ''ஐயோ'' என்ற குரல்களும் கேட்டன. வெளியேயிருந்து உள்ளே தேங்

www.padippakam.com



காய்களும் வெடிகளும் வீசப்பட்டன. மீண்டும் ''ஐயோ, முருகா'' என்ற குரல்கள். உள்ளே வெடிகள் வெடித்ததும் வெளியே வீசப்படுவதும் தடைபட்டது.

குண்டாந்தடிகளோடு பொலிசார் ஓடி வந்தனர். எதிரே தோன்றியவர்களையெல்லாம் அடித்தனர். அவர்கள் மேலும் எறிகுண்டுகள் வெடித்தன. மக்கள் கூட்டம் சிதறி ஓடியது. சத்தியாக்கிரகிகளும் எழுந்து ஓடினர்.

கோவில் கதவுகள் இழுத்து அடைக்கப் பட்டன. எவருமே உள்ளே நுழையாதபடி பொலிசார் தடையிட்டனர்.

காயமடைந்தோரை கார்களிலும் ஜீப்புகளிலும் ஏற்றி அரசாங்க ஆஸ்பத்திரிக்கு பொலிசார் அனுப்பினர்.

வேளாளரில் சிலரையும் பள்ளரில் சிலரையும் குண்டெறிந்தவர்கள் எனச் சொல்லிப் பொலிசார் கைது செய்தனர். அவர்கள் 'நானில்லை நானில்லை' என்று சத்தமிடவும் இழுத்துச் சென்றனர்.

''முருகா இதுவும் உன் திருவிளையாடலா? இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு பேசாமல் இருக்கிறாயே''

ஒரு பெண் தலையில் கை கூப்பி கோவிலை நோக்கிக் கும்பிட்டபடி கண்ணீர் வடியக் கேட்டாள்.

''ஒரு பள்க்குமரி கூட கைக் குண்டு எறிகிறதைப் பார்த்தன். என்ன துணிச்சல்?''

''பள்ளர் வெடிகுண்டோடு கோவிலுக்குவர என்ன துணிச்சல்?''

''வேளாளருக்கு மட்டும் வெடி குண்டு சொந்தமோ. அவங்களும் எறியாமலிருந்தால் உள்ளேயிருந்த எறிகுண்டெல்லாம் அவங்கள் தலையில் தான் வெடித்திருக்கும்''

''என்னவாயிருந்தாலும் இந்தளவிற்கு வளர விடப்படாது''

www.padippakam.com



''அகிம்சையை முதலில் எங்கடை ஆட்களுக்குப் போதிக்க வேண்டும்''

''பலாத்காரத்தை பலாத்காரத்தால் தான் அடக்க முடியும். முள்ளை முள்ளால் தான் எடுக்க முடியும்''

''இது ஆபத்தான வழி. மகாத்மா நூற்றாண்டில் இப்படியான கருத்தா?''

''அரக்கர்கள் ஆயுதம் எடுக்க அவர்களை ஒடுக்க முருகன் வேலேந்தவில்லையா''

''இங்கே அரக்கர்கள் யார்? தேவர்கள் யார்?

''இவர்களெல்லாம் கும்பிட வந்தார்களா? குண்டெறிய வந்தார்களா?''

சந்தை இரைச்சல். ஆங்காங்கே சர்ச்சைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பெரும்பாலான வேளாளரும் கோவில்களும் திறந்து விடப்பட வேண்டும் என்று தமது பரந்த மனப்பான்மையை பறை சாற்றிக் கொண்டனர். அவர்களில் பலர் பள்ளர் பறையர் கோவிலுக்குள் வர வேண்டிய கட்டுபாடுகள் பற்றிச் சொல்லினர்:

''தூய்மையாக வரவேண்டும். கோவில் கும்பிடும் நோக்கத்தோடு வரவேண்டும். ஆனால் தவறான அரசியல் கட்சிகளின் உந்தலில் வருகிறார்கள்''

பல்வேறு சர்ச்சைகளுடனும் பரபரப்புடனும் எல்லோரும் வீடுநோக்கித் திரும்பிக் கொண்டிருந்தனர். எல்லோரும் மெல்லுவதற்கும் பொரி கிடைத்தது.

கோவிலில் நடைபெற்ற சம்பவங்களால் கரம்பன் கிராமத்திலும் கொதிப்பு முன்னதிலும் பார்க்க வேகமடைந்திருந்தது. இரு பகுதியிலும் ஒரிருவர் காயமடைந்திருந்தனர் கைதாகியும் இருந்தனர்; கைதானவர் மறு நாட் காலையில் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

படிப்பகம்

www.padippakam.com

# 22

அன்று காலை அன்னம் ஆறுமுகத்தார் வீட்டுக்குச் சென்றபோது தங்கம்மா சோர்வோடு காணப்பட்டாள். ஆயினும் பல புதிய வேலைகள் சொன்னாள்.

''சின்னவன் ராத்திரிக்குப் பயணம் போறானாம். ஏதேன் பலகாரம் சுட்டுக் கொடுத்து விடவேணும்''

தங்கம்மா சொன்னாள்.

''அதுதானே பார்த்தன். முகமெல்லாம் சோர்ந்து போய்க் கிடக்கு. இத்தனை நாள் நின்றபின் விட்டுப் பிரியிற தெண்டால் கஷ்டமாகத் தானே இருக்கும்''

அன்னம் சாந்தப்படுத்த முயன்றாள்.

''அப்பிடியில்லை. ஒரு வழிக்கு அவன் போறதும் நல்லதுதான்''

''ஏனப் பிடிச் சொல்லியறியள்''

''அவன் உங்கடை சாதிப் பக்கமாய் நிக்கிறான். இங்கே நின்றால் வீட்டுக்குள்ளேயே நித்தப் போராகி விடும். 'நானில்லை; வெள்ளாளப் பெடியங்களே இவனைக் கொலை செய்யப் போறாங்கள்' என்று மூத்தவன் சொல்லுறான். எனக்குப் பயமாய் கிடக்கு''

''மூத்தவர் சும்மா வெருட்டிறார். நீங்க பயப்பிடாதை யுங்கோ''

''ஏதோ ராத்திரிக்கு அவன் போய்ச் சேர்ந்திட்டால் நிம்மதி''

தங்கம்மா அடுக்களைக்குள் சென்றாள். அன்னம் தன் வேலைகளைச் செய்து கொண்டிருந்தாள். கூட்டுதல், சாணி தெளித்தல், மாடுகளைப் பார்க்கும் வேலைகளைச் சுறுசுறுப் பாக முடித்துவிட்டு வறுத்த உழுந்தை திருகையில், இடதுகை

படிப்பகம்

www.padippakam.com



யால் கிள்ளிப் போட்டபடியே வலது கையால் மேல் திருகையைச் சுற்றிக் கொண்டிருந்தாள். வெய்யில் ஏறி விட்டது.

நெற்றியில் அரும்பிய வியர்வைத் துளிகளை புறங்கை யால் துடைத்துக் கொண்டாள். அவ்வேளை வாயில் பிரஷ் போட்டுப் பற்களைத் தேய்த்தபடி வடிவேலு அங்கே வந் தான். வேட்டியை முழுங்கால்வரை மடித்துக் கட்டியிருந் தான். தோளிலே நீலக்கோடு போட்ட துவாய்.

''என்னடி திரிக்கிறாய். ஒருவிதமான வாசமடிக்குது''

''உழுந்து திரிக்கிறன். உங்களுக்குத்தான் ஆச்சி பலகாரம் செய்யப் போறா''

''உதையெல்லாம் இப்ப தொட விடுகிறாவா''

''திரிச்சு கையிலை கொடுத்த பிறகு தொடவிடமாட்டா. இப்ப வயதும் போகுது. வேலைசெய்ய முடியாதவேளை கொஞ்சங் கொஞ்சமாய் என்னையும் தொடவிடுகிறா. என்றா லும் வேறை ஆரேன் நின்றால் கண்டிப்பாயிருப்பா''

திரிப்பதை நிறுத்தி அன்னம் சிறிது ஆறுதல் பெற்றுக் கொண்டே சொன்னாள்.

''கூலியெல்லாம் சரியாய் தாறாவா''

''நான் கேட்பதைத் தராமல் குறைக்கும்போது, 'அப் பிடியென்றால் நாளைக்கு வரமாட்டன்' என்று வெருட்டி வாங்கிப் போடுவன். நானில்லை என்றால் ஒருத்தரும் இங்கை வரமாட்டினம் என்றும் ஆச்சிக்குத் தெரியும்''

சிரித்தபடியே சொன்னாள்.

''ரகுநாதனுக்குக் காயம் எப்பிடியாம்?''

''சும்மா கல்லுப்பட்ட காயந்தான். வீட்டுக்கு வந்திட் டார்''

www.padippakam.com



''நீ பார்க்கப் போகேல்லையா''

''போய்ப் பார்த்தன். அவர்கள் சத்தியாக்கிரகம் செய்த கட்சி. கோயிலுக்குள்ளே இருந்துதான் கல்லுவந்து பட்ட தாம்''

''அவன் என்ன தொழில் செய்கிறான்?''

''தகப்பனோடை கராச்சுக்குப் போறார். அங்கை பட்டணத்திலை வாடகைக் கார் ஓட்டிறாராம். எங்கடை பக்கத்திலையும் ஆருக்கேன் இரவிலை தேவையென்றால் அவற்றை காரைத்தான் பிடிப்பம்''

''சல்லி கில்லி சேர்த்து வைத்திருக்கிறாங்களா''

''எங்கடை பக்கத்திலை பணம் புளங்கிற வீடென்றால் அதுதான். கார்ச்சாமான்களுக்கு இப்ப தட்டுப்பாடாம். அதாலை நல்ல வரும்படி என்று சொல்லினம்''

''காசையெல்லாம் என்ன செய்யிறாங்கள்?''

''சிலவேளை சங்கங்களுக்கும் முன்னுக்கு நின்று பணத்தைப் பாராமல் செலவழிப்பினம். இப்பவும் கோவிலுக்குள்ளே நுழைய விடாமல் தடுத்ததுக்கு கோயில் அய்யர் மேலையும் மற்ற வெள்ளாளர் மேலையும் வேலாயுதத்தார் வழக்குப் போடப் போறாராம்''

''என்றுதான் நானும் கேள்விப்பட்டன். அண்ணன் மேலையும் போடினமாமோ''

வடிவேலு கேலிச் சிரிப்போடு கேட்டான்.

''அப்பிடியும் கதைச்சினம். அப்புக்காத்து பிரக்கிராசிமாரைக் காண ஓடித்திரியினம்''

''அப்பிடியா?''

''வழக்கு வைச்சால் ஆர் வெல்லுவினம்?''

வடிவேலுவின் அறிவை மதிப்பவள் போல அன்னம் கேட்டாள்.

படிப்பகம்

www.padippakam.com



''பணமிருந்தால் சட்டம் பேசப்போறது தானே. அதாலை இந்தப் பிரச்சனையெல்லாம் தீர்ந்துவிடப் போற தில்லை''

அன்னத்திற்கு அவன் கருத்துப் புரியவில்லை. தங்க ளுக்கு வெற்றி கிடைக்கும் என அவன் சொல்வான் என எதிர்பார்த்த அவளுக்கு ஏமாற்றமாகி விட்டது. வழக்கு மூலம் வேளாளரைத் தோற்கச் செய்யலாம் என்று அப்பகுதி யில் பரவிவரும் கருத்துப்பற்றி அவளுக்கு சந்தேகம் ஏற்படத் தொடங்கியது.

''எங்களுக்கு வெற்றி கிடைக்காதென்று நீங்களே சொன்னால்...''

அவனது ஆதரவைப் பெற மீண்டும் முயன்றாள்.

''உங்கடை வர்க்கத்திலையும் ஆரேன் நீதவானாய் இருக்கினமோ...''

சொல்லிக் கொண்டே வடிவேலு ஆழ்ந்த சிந்தனையோடு கிணற்றடியை நோக்கி நடந்தான்.

## 23

வடிவேலு குளித்துத் திரும்புமுன்னர் அன்னம் வேலை களை முடித்துவிட்டாள். முடித்து வியர்வையைக் கழுவி தண்ணீர் குடித்துக் களை ஆற கிணற்றடிக்குச் சென்றாள். வடிவேலு தண்ணீர் அள்ளி ஊற்றினான்.

தண்ணீர் குடித்து களை ஆறி நிமிர்ந்தாள்.

''உந்தக் கொண்டை தான்ரீ இப்ப கொழும்பிலை பாஷன்''

வடிவேலு சிரித்துக்கொண்டே சொன்னான். அன்று அவள் வழமைபோல் மயிரை அள்ளி முடியாமல் வயதான

படிப்பகம்

www.padippakam.com



பள்ளிகளைப் போல மயிரைச் சுருட்டி ஒரு பக்கமாகச் செருகியிருந்தாள்.

''உங்களுக்கும் என்னோடைதான் பகிடி''

''ஏன்னடி பொய்யா சொல்லுறன். உப்பிடி ஒரு கொண்டை போட்டுவிடுறதுக்கு ஐஞ்சு ரூபா தொடங்கி ஐம்பது ரூபா வரை வாங்கிறவர்கள் கொழும்பிலே இருக்கிறார்கள்''

''அதுவும் ஒரு வேடிக்கைதான்''

அவள் அவனது பேச்சை நம்பவேயில்லை.

''உன் கொண்டையில் பள்ளமாய் தெரியிற இடத்திலை பிளாஸ்ரிக் பூவைக் குத்துவாங்கள், அல்லது லில்லிப் பூ எதையாவது செருகி விடுவார்கள்''

''வேறை''

''ஒரு கொண்டை போட்டால் நாலைந்து நாளைக்கு குலைக்காமல் அப்படியே திரிவாங்கள்''

''ராத்திரியிலை''

''கொண்டை கழராத விதமாக தலையை வைத்துப் படுப்பாங்களாம்''

''நானும் அப்பிடிப் பெண்களை பார்த்திருக்கிறன்''

''எங்கை''

''சினிமாப் படத்திலை''

வடிவேலு வயிறு குலுங்கச் சிரித்தான். சிரிப்பை அவனால் அடக்கவே முடியவில்லை. அன்னம் ஒன்றும் புரியாமல் நின்றாள்.

ஆடை அலங்காரத்தோடு பெண்கள் தூங்குவதையும் அதே கலையாத அழகுடன் தூக்கம்விட்டு எழுவதையும் எங்கோ சினிமாவில் பார்த்தது அவள் நினைவில் அவ்வேளை

www.padippakam.com



வந்தது. அதை அப்படியே சொல்லிவிட்டாள். தான் பேசுவதில் ஏதேன் தவறு செய்துவிட்டோமோ என்றும் எண்ணினாள்.

''நீ ஒழுங்காய் படம் பார்ப்பியோ''

''இல்லை. எல்லாமாய் நாலு, ஐஞ்சு பார்த்திருப்பன்''

''சரி நீ போ''

''ஒரு விஷயம் கேட்க இருக்கிறன்...''

தயக்கத்தோடு அன்னம் இழுத்தாள்.

''என்ன சொல்லன்?''

''அடுத்தமுறை எப்ப கொழும்பாலை வருவியள்''

கீழே பார்த்துக்கொண்டே சொன்னாள்.

''அது சொல்ல முடியாது. வேலையிருக்கேக்கை வருவன். அதெல்லாம் ஏனெடி உனக்கு?''

''அடுத்த முறை வரேக்கை எனக்கு ஒரு சாமான் வாங்கி வந்து தருவியளா?''

''சரி வாங்கி வாறனே. என்ன சட்டைத் துணியா? சீலையா?''

''அதில்லை...''

''அப்ப என்ன தோடா?''

''இல்லை''

''வேறை ஏதேன் பாஷன் சாமானா? உனக்கும் உந்த நோய் தொத்தி விட்டுதா?''

''இல்லை''

''அப்ப என்னென்று சொல்லன்ரி''

''ஒரு சின்னத் துவக்கு''

படிப்பகம்

www.padippakam.com



''சின்னத் துவக்குச் சுட்டு விளையாட நீ இன்னும் குழந்தையா.''

வடிவேலு சிரித்துக் கொண்டே சொன்னான்.

''நிசத்துவக்கு சின்னனாய் இருக்குமே கைத்துவக்கு. அதுக்கு ஏதோ பேர். ஆறுகுண்டு போட்டுச் சுடலாமே.''

வடிவேலு எதுவும் செய்வதறியாது அவளைப் பார்த்துக் கொண்டு நின்றான். அவனது வாயடைத்துப் போய்விட்டது. இவள் என்ன விளையாட்டுக்குக் கேட்கிறாளா?

''எடியே. உனக்கேனடி ரிவால்வர்.''

''அதுதான். அதுதான். எனக்கு ஒன்று வேணும்''

''ஆரைச்சுடப் போறாய்''

''இலட்சுமணன் சுட்டுப் பழக்குவதாய் சொன்னார்''

''எடியே அது கொழும்பிலை சும்மா கிடைக்குமா? லைசென்சு எடுத்தால்தான் வாங்கலாம். சரியான விலை; பணக்காரருக்குத்தான் பொலிஸ் லைசென்ஸ் கொடுக்க உடன்படும்''

வடிவேலுவின் வார்த்தைகள் அவளுக்குப் புரியவில்லை.

''எங்கடை பக்கத்திலை அங்கையெல்லாம் ஒளிச்சு வைச்சிருக்கினம் தானே. காசு வேணுமென்றால் நான் சேர்த்துத் தருவன்''

வடிவேலு எதுவும் பேசமுடியாது தத்தளித்தான். அவளுக்கு எப்படி அதிலுள்ள சிக்கல் யாவையும் விளக்குவதென்றே அவனுக்குத் தெரியவில்லை. பேச்சை வேறு பக்கம் திருப்பினான்:

''நீ ஆரையெடி சுடப் போறாய்?''

''கையிலை இருந்தால் எதிரியளைச் சுடலாம் தானே. தற்காப்பாயுமிருக்கும்''

www.padippakam.com



''பொலிஸ்காரன் வந்து உன்னையும் றிவால்வரோடு கொண்டு போய்விடுவான்''

''கையிலை இருந்தால் எப்பிடிக் கொண்டு போவான். அவனையே நான் சுட்டுபோடுவனே''

எத்தனை துணிச்சல்! வடிவேலுவுக்கு அவளது பேச்சு குழந்தைத்தனமாகவும் இருந்தது; அவளுடன் இனிமேலும் பேசுவதில் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தான்.

''சரி. கிடைச்சால் வாங்கிக் கொண்டந்து தாறன். நீ காசு சேர்த்து வைச்சிரு''

இரண்டும் நடைபெறாத விஷயம் என்பது அவன் கணிப்பு.

தன் நம்பிக்கை ஏமாற்றமாகிவிட்டதாக அன்னம் எண்ணிக்கொண்டாள். அவர்களது பகுதியில் சின்னதும் பெரியதுமாகப் பல துவக்குகள் கூரைகளுக்குள்ளேயும் நிலத்துக்குள்ளேயும் ஒளித்து வைத்திருக்கப்படுவதை அவள் நன்கு அறிவாள். ஒரு தட்டவை குடிசைகளுக்கு வேளாளர் தீ வைத்த போது இவர்கள் துரத்த வேளாளர் துப்பாக்கியால் சுட்டார்கள். கையிலுள்ள ஒரு துவக்கால் மட்டுமே இவர்கள் சுட்டு, கோடாலி வெடி அடித்து பல துவக்குகளால் சுடுவதாகக் காட்டிய பின்னரே அவர்கள் ஓடி ஒளிந்தார்கள். அதன் பின்னர் பள்ளியளெல்லோரும் தம்மிடமிருந்த காப்புகள், தோடுகள், சங்கிலிகளையெல்லாம் கொண்டுவந்து குவித்தார்கள். அவ்வளவையும் விற்று துப்பாக்கிகளும் ரவைகளும் வாங்கியதை அவள் நன்கு அறிவாள். அதனால் வேலாயுதம் வீடு, வேறும் சில வீடுகள் தவிர எந்த வீட்டுப் பள்ளிகளும் நகையே போட்டதை அவள் சிலகாலம் காணவில்லை. இவற்றையெல்லாம் நன்கு தெரிந்திருந்த அவளுக்கு வடிவேலுவின் பேச்சு பொய்யாகவும் தட்டிக்கழிப்பதாகவுமே தோன்றியது.

www.padippakam.com

# 24

அன்னத்தின் செவியிலும் நாள்தோறும் பல்வேறு செய்திகள் எட்டிக்கொண்டே யிருந்தன. ஊரில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்த சிறுசிறு கைகலப்புகள், வேலாயுதம் சமூகக் குறைபாட்டுச் சட்டத்தின் கீழ் எடுத்த நடவடிக்கைகள், கோட்டு விசாரணை நிலவரங்கள் அனைத்தும் பற்றி ஓரளவு அறிந்திருந்தாள். முன்னர்போல் அமைதியாக இராது இவை பற்றி அறிய ஆர்வமும் காட்டினாள். இலட்சுமணனை தன்னிடம் அடிக்கடி வரச் செய்தாள்; உரிமையோடு அழைத்து வந்தாள். அவனும் அப்பக்கம் வரும்போதெல்லாம் அன்னத்திடமும் வந்து செய்திகள் சொல்வான்.

சாதிமுறைக்கு எதிராக அவன் பாட்டுகளும் எழுதுவான். அவற்றை அன்னத்திடம் படித்துக் காட்டுவான்.

அப்பகுதியிலே நிலவிவந்த இரண்டு மூன்று பிரிவுகள் பற்றி அவன் சொல்வதுண்டு. அவற்றின் முழு விபரங்களையும் அவளால் நன்கு அறிந்து கொள்ள முடியவில்லை. ஆயினும் அவனுக்கு சிறிது வேறுபட்ட கருத்துள்ள சிலரை அவளால் இனங் கண்டுகொள்ள முடிந்தது.

இலட்சுமணன் ஓர் ஆசிரியன்; மற்றும் சமூக வேலைகளில் ஈடுபடுபவன். இவற்றால் அப்பகுதியில் ஓரளவு மதிப்பும் அவனுக்கு இருந்து வந்தது. அவன் அன்னத்திடம் வரும் வேளை அவனிடம் சொல்லி ஆலோசனை கேட்பதற்காக கடிதங்களுடன் சிலர் வருவர். அன்னமும் அவன் வந்ததும் சிறிது தற்பெருமையோடு சில வீடுகளுக்குச் சொல்லி அனுப்புவாள். அல்லது அவன் வீடு திரும்பும்போது அந்த வீடுகளுக்குச் சென்று அவர்களைப் பார்த்துப்போகும்படி வேண்டுவாள்.

அப்பகுதியில் படித்தவர்கள் வேறு சிலர் இருந்தபோதும் அவனைப்போல முன்வந்து உதவுபவர் வெகு சிலரே. படித்தவர்களில் பலர் உயர்ந்த சாதிக்காரரோடு ஏன் வீணாகச்

www.padippakam.com



சண்டைபோட வேண்டும்; ஊரோடு ஒத்து நடப்பதே நல்லது என்ற கருத்துடையவராயும் இருந்தனர். காலப்போக்கில் எல்லாம் சரியாகிவிடும் என்று ஒதுங்கியும் வாழ்ந்தனர்.

அன்னம் இடையிடை நேரம் காலத்தைப் பொறுத்து தண்ணி, எடுப்பதற்கு வேலாயுதத்தின் கிணற்றுப் பக்கமும் செல்வதுண்டு. பின்புறமாகச் சென்று தண்ணீர் அள்ளிக் கொண்டு அப்படியே திரும்பிவிடுவாள். பள்ளரது மற்றைய கிணறுகளில் அள்ளும் உரிமை அங்கு அள்ளும்போது இருப்ப தில்லை. அவர்கள் உயர்வானவர்கள், நாம் வருவது பிடிக் காமல் போனாலும் என்ற மனக்கிலேசமும் இருக்கவே செய் தது. பல நாட்கள் அங்கு செல்லத் தவறினாலும் இராசாத்தி அவளைக் காணநேரும்போது 'ஏன் ஒழுங்காய் வருவ தில்லை?' என்றும் கேட்டு விடுவாள்.

## 25

அன்று காலை அன்னம் குடத்தை கிணற்றுப் பக்கமாக வைத்துவிட்டு சிறிது தயக்கத்துடனே முன்புற வாயிலால் வேலாயுதம் வீட்டில் நுழைந்தாள். வழமையில் அவர்களில் எவரையாவது காணவேண்டுமாயின் பொழுது பனைமேலாக ஏறமுன்னர் சென்றுவிடவேண்டும் என்பதை அவள் அறி வாள். முன்னர் இருதடவையாக வாங்கிய ஐந்து ரூபா கட னைத் திருப்பிக் கொடுப்பதற்காகவே சென்றாள். அவள் வந்ததை முதலில் கண்ட வேலாயுதம் அவளுடன் எதுவும் பேசாது தன் மனைவிக்கு குரல் கொடுத்தார்:

''பார்வதி, இங்கை அன்னம் வந்திருக்கு''

அச் சத்தத்தைக் கேட்ட இரகுநாதன் முதலில் வந்தான். பார்வதி அடுப்படிக்குள் இருந்து வரவேற்றாள்:

''அன்னம் உங்கை கொஞ்சம் இரு. நான் வாறன்''

www.padippakam.com



ரகுநாதன் அவளை அன்பாக வரவேற்றான்:

''வா அன்னம் வந்து உள்ளே இரு. ஏதேன் காசு கீசு வேணுமோ?''

''இல்லை முந்தி வாங்கினதைத் தர வந்தன்''

அன்னம் சொல்லிக்கொண்டே தான் கொண்டுவந்த நோட்டை நீட்டினாள். அதைப் பொருட்படுத்தாத இரகு நாதன் உள்ளே வந்து நற்காலியில் இருக்கும்படி வற்புறுத் தினான். அவள் அவ்வாறு முன் எப்பொழுதும் அங்குவந்து நாற்காலியில் உட்கார்ந்ததில்லை. பார்வதியின் குரலுக்கும் அவனது வேண்டுதலுக்கும் மறுக்க முடியாத நிலையில் வீட் டின் தலை வாசலில் ஏறி, குந்திலே உட்கார்ந்தாள். இரகு நாதன் ஒரு நாற்காலியை இழுத்துப்போட்டு உட்கார்ந்தான். அவள் தான் கொண்டுவந்த நோட்டை நீட்டினாள்.

''அவ்வளவு அவசரமில்லையே. வைச்சிருந்து ஆறுத லாய் தரலாமே''

''இல்லை. இருக்கேக்கை தந்தால் பிறகு தேவைப்படும் போது வாங்கலாந்தானே''

வற்புறுத்திக் கொடுக்க இரகுநாதன் வாங்கினான். முற் றத்து வழியாக வந்த இராசாத்தி அவளைப்பார்த்துச் சிரித்து விட்டு, வீட்டு அறைக்குள் நுழைந்து, நிலைக்கண்ணாடியின் முன் நின்று தலை வாரிப் பின்னுவது தெரிந்தது.

''அன்னம் உன்னை ஒரு விஷயம் கேட்கத்தான் இருக்கச் சொன்னன்''

இரகுநாதன் பேச்சு அவளது முகத்தைக் கறுக்கச் செய் தது. வழமையாகவே பற்கள் தெரிய சிரித்துக்கொண்டே யிருக்கும் அவளது முகத்தில் கருநிழல் படர்ந்தது. ஆறுமுகத் தார் வீட்டுக்குப் போகாதே, எமது எதிரிகள் என்று ஏதாவது சொல்லிவிடுவார்களோ என்றும் அஞ்சினாள். சில கண மௌனத்தில் பலவித எண்ணங்கள் நெஞ்சிலும் நினைவிலும்

www.padippakam.com



தோன்றி மறைந்தன. விஷயத்தை எதிர்பார்த்துப் பேசாது இருந்தாள்.

''இலட்சுமணனைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?''

அவளது பயம் யாவும் திசைதிரும்புவதாகத் தெரிந்தது. தனக்கும் அவனுக்கும் ஏதாவது முடிந்துவிட்டு, அவனோடு பழகாதை என்று கூறிவிடுவார்களோ?

அதேவேளை பார்வதியும் அங்கு வந்துவிட்டாள்.

''அவரைப் பற்றி உங்களுக்குத் தானே கூடத் தெரிய வேணும்''

''உன்னட்டை அடிக்கடி வாறார். அதாலைதான் கேட்கிறம்''

என்னைச் சந்தேகப்பட்டுக் கேட்கிறார்களா? சில வேளை அவன் அயோக்கியன், பயங்கரமானவன் என்று சொல்லப் போகிறார்களோ?

''எதுக்காகக் கேட்கிறியள்?''

''ராசாத்தியை லட்சுமணனுக்குப் பேசலாம் என்று பார்க்கிறம். அதாலைதான் உனக்கும் நல்லாய் தெரிந்தவர் என்று கேட்டம்''

அன்னத்திற்கு ஒரே அதிர்ச்சியாக இருந்தது. ஆயினும் எதிர்பார்த்ததற்கு முழு எதிர்மாறாக அவர்களது பேச்சு இருந்தது. இதயத்திலே உப்பிய புண் ஒன்று வெடித்த வேதனை. யாவையும் சிறுநேரத்தில் சமாளித்துக்கொண்டு அன்னம் சொன்னாள்:

''நல்ல யோசனை. நல்ல பொருத்தம்கூட. நீங்க கேட்டுப் பார்த்தீங்களா?''

''ஆட்களை விட்டுப் பேசிறம். இன்னும் முடிவொன்றும் சொல்லேல்லை. என்றாலும் வீட்டுப் பக்கம் வரேக்கை நீயே ஒருக்கால் கேட்டுப்பார்த்தால் நல்லது.''

www.padippakam.com



பார்வதி சொன்னாள்.

''ராசாத்தியையும் உனக்கு நல்லாய் தெரியும்தானே. அவளின்ரை கெட்டித்தனங்களை நீயும் சொன்னால் கொஞ்சம் பெலமாயிருக்கும்''

இரகுநாதன் கூறினான். அன்னத்தின் சிந்தனை வேகமாக வேலை செய்து கொண்டிருந்தது.

''இந்தப் பக்கத்திலை ராசாத்திகூட உன்னோடை பழகிறது போலை ஒரு பள்ளியோடும் பழகிறேல்லை. உன்ரை சிநேகிதிக்கு நீ நல்லதொரு கலியாணம் செய்து வைக்கிறது போலை இதை நாங்கள் நினைப்பம்''

பார்வதி மேலும் நயமாகச் சொன்னாள்.

''பார்ப்பமே. அவர் வரேக்கை கட்டாயம் கேட்டுச் சொல்லுறன்''

அன்னம் கூறினாள்.

''பார்க்கிறதென்ன. அன்னம், நீ மனம் வைச்சால் இது கட்டாயம் நடக்கும்''

இரகுநாதன் அழுத்தமாகச் சொன்னான். அவர்கள் அத்தனை இறங்கி தன்னை வளைப்பதன் சரியான நோக்கத்தை அவளால் அவ்வேளை உணர முடியவில்லை. நான் அத்தனை முக்கியமானவளா என்று தன்னையே கேட்டுக் கொண்டாள்.

''அவர் என்ன நினைச்சிருக்கிறாரோ தெரியேல்லை''

அவள் பிடிகொடாமல் பேசினாள். இலட்சுமணனுக்கும் வேலாயுதம் வீட்டாருக்கும் இடையில் சில கருத்து வேறுபாடுகள் இருப்பது பற்றியும் அவள் அறிவாள்.

''அவர் நினைக்கிறதுக்கு என்ன இருக்கு? வேறை எங்கையும் கிடைக்காத அளவுக்கு நாங்களும் சீதனம் தாறு

போ—7

www.padippakam.com



தாய் சொல்லியிருக்கிறம். இந்த வீடு வளவிலை பாதி, ஒரு கார், பத்தாயிரம் காசு எல்லாம் தாறமென்றுதான் சொல்லி யிருக்கிறம். இதைவிட ராசத்தியை சும்மாவா அனுப்பப் போறம். நாலாயிரம் ஐயாயிரத்துக் கெண்டாலும் நகை போட்டும் விடுவந்தானே''

பணத்தாலேயே வாங்கிவிட முடியும் என்ற செருக்கும் இரகுநாதனின் குரலில் ஒலித்தது. அப்படிப் பேசி வாங்கி விடாது ஏன் இப்போது என் தயவை நாடவேணும்? அன்னத் துக்கு அது புரியவில்லை. பல்வேறு நினைவுச் சூழலில் அவள் ஈடாடிக் கொண்டிருந்தாள்.

''இன்றைக்கு வெள்ளிக்கிழமை. நல்ல நாள்தானே. அன்னத்துக்குக் கோப்பி ஏதேன் கொடணை ஆச்சி''

இரகுநாதன் நினைவூட்டினான்.

''இரு பிள்ளை. இப்ப வந்திடுறன்''

குந்தில் அவளோடு இருந்த பார்வதி எழுந்து அடுக் களைக்குள் சென்றாள். அன்னம் தலைவாசலைச் சுற்றும் முற்றும் பார்த்தாள். பல பெரிய படங்கள் அங்கே தொங்கிக் கொண்டிருந்தன. கோட்டும் 'டை'யும் அணிந்தவர்களது படங்கள் பல. அவளுக்கு எவரையுமே தெரியவில்லை. காந்தித் தாத்தாவின் படம் மட்டும் அவளுக்கு நன்கு தெரிந் தது. அந்தக் கிழவரது கண்ணாடியையும் சிரிப்பையும் அவளால் என்றும் மறக்க முடியவில்லை. அவர்களது வீடு புதிதாகக் கட்டியது. மேசை, நாற்காலிகள், அலுமாரிகள் யாவும் ஆறுமுகத்தார் வீட்டிலும் பார்க்க அங்கு சிறப்பா யிருந்தன.

இராசாத்தி அறையைவிட்டு வெளியே வரவில்லை. என்ன பேசுகிறார்கள் என்பதை அவளும் அறிந்திருப் பாளோ; அவளின் தங்கை மீனாட்சிதான் அங்கும் இங்கு மாக ஓடிக் கொண்டிருந்தாள். அவளே பால் கலந்த கோப்பியை ஒரு தட்டில் வைத்து எடுத்து வந்தாள். சில

படிப்பகம்

www.padippakam.com



பணக்கார வேளாளர் வீடுகளில்தான் அப்படியாகப் பரிமாறு வதை அவள் பார்த்திருந்தாள்.

''எப்பிடி அன்னம்? ஏரம்பு அண்ணையும் மூத்தியக்கா வும் சுகமாயிருக்கினமா?''

வேலாயுதம் முற்றத்தில் ஒரு துவாயால் தலையைத் துடைத்தபடியே கேட்டார். அவர்கள் குடிசை கூப்பிடு தூரமு மில்லை. அவர் என்றுமே வந்து எட்டிப் பார்த்ததுமில்லை. போன தேர்தலின்போது தேர்தலில் போட்டியிட்ட ஒருவரை அழைத்து வந்தது அவள் நினைவில் வந்தது. பின்னர் நொண்டி எனவும் குருடி எனவும் ஏரம்பன், மூத்தி இருவரை யும் தமது காரில் ஏற்றிச் சென்று வோட்டுப் போடச் செய் தார். இன்றுதான் சுகம் விசாரிக்கிறார்.

''ஓம்; சுகமாயிருக்கினம்''

''நேரமிருக்கேக்கை ஒரு நாளைக்குப் பார்க்க வாறன்''

வேலாயுதம் சொல்லியபடியே வீட்டுக்குள் நுழைந்தார்.

வேலாயுதம் எவருக்கோ மாலை போட எடுத்த படமும் ஒன்று பெரியளவில் மேசைமேல் தொங்கியது. கோப்பியை உறுஞ்சியபடியே அதைப் பார்த்தாள்.

''நான் வாறனே''

அன்னம் எழுந்தாள்.

''மறந்திடாதை. உன் கெட்டித்தனத்தைப் பார்ப் பமே''

பார்வதி தட்டிக் கொடுத்தாள்.

''அன்னம நினைச்சால் இது சின்ன விஷயம்''

இரகுநாதன் அவளை உயர்த்தினான்.

படிப்பகம்

www.padippakam.com

# 26

தண்ணீரை அள்ளி இடுப்பில் வைத்தபடியே குடிசையை நோக்கி ஒற்றையடிப் பாதையால் நடந்தாள். பல வேலைகள் அவள் முன்னே மிருந்தபோதும் சிந்தனையிலும் இதயத்திலும் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து அவளால் உடனே விடுபட முடியவில்லை.

இலட்சுமணன் எப்பொழுது வருவான்? அதுவரை அமைதியாக இருக்க முடியாது. நெஞ்சு பேசியது. சில நாட்களாக அப்பக்கம் வராததே இந்தப் பேச்சு வார்த்தைகளினால்தானே. அப்படியானால் மேலும் பல நாள் தட்டிக் கழித்து விடுவாரோ?

பொறுமையும் அமைதியுமின்றித் தத்தளித்தாள். உண்மையில் அவர் இங்கே கலியாணம் செய்ய விரும்புவாரா? பணம் .என்றதும் இலட்சியங்களெல்லாம் போய் விடுமா? வேலாயுதம் வீட்டில் மாப்பிள்ளையாகப் போவதென்றால் பெரிய அதிர்ஷ்டம் என்றே எல்லோரும் சொல்லுவர். அதில் நானும் ஏன் பங்கு கொள்ளப்படாது? என்னால் அதைத் தடைசெய்ய முடியாது. வேலாயுதம் வீடெங்கே? நானெங்கே?

வேலாயுதம் வீட்டாரை எதிர்த்தும் என்னால் நிற்க முடியாது. அவர்களது பகையைத் தேடியும் இங்கு வாழ முடியாது. புகழும் தயவும் எனக்கும் உதவியாகவே இருக்கும். எதற்கும் இலட்சுமணன் வரட்டும். எல்லாவற்றையும் அறிவோமே. விளாத்தியடிப் பக்கம் செல்லும் பெடியங்கள் எவரிடமாவது சொல்லி அனுப்புவோமா? சொல்லி அனுப்பி விட்டு பேச்சை எடுத்தால் நான் இவர்கள் சொல்லித்தான் கேட்கிறேன்; இவர்கள் பக்கமாக நிற்கிறேன் என்று எண்ணமாட்டாரா? அவரது மனதை அறியாமல் நான் ஏன் இப்புது எண்ணத்தைப் போடவேண்டும்? என்னைப் பற்றி அவர் என்ன நினைத்திருக்கிறார்? அதற்கு அஞ்சி வராது விட்டுவிடு

www.padippakam.com



வாரோ. அங்கேயே நேராக மாப்பிள்ளையாய் போய் விடுவாரோ? அவளது இதயமலர் கசங்கிக் கொண்டிருந்தது. மென்மையானவை கசங்குவதால் ஏற்படும் வேதனையில் துடித்துக் கொண்டிருந்தாள்.

குடத்தை முற்றத்தில் வைத்துவிட்டு முட்டி ஒன்றில் தண்ணீர் எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தாள்.

''ஏன் பிள்ளை தண்ணி அள்ள இவ்வளவு நேரம்?''

வாசலில் இருந்த ஏரம்பன் கேட்டான்.

''பார்வதி அக்கா கூபபிட்டுக் கதைச்சுக்கொண்டிருந்தா. வேலாயுத மண்ணரும் உங்கடை சுகம் கேட்டார்.''

விஷயங்களை மழுப்பத் தக்கதாக அன்னம் பதில் சொன்னாள்.

''இலெக்ஷனுக்கு துண்டு போடக் கூட்டிக்கொண்டு போனவன், அதற்குப் பிறகு இந்தப் பக்கமுமே எட்டிப் பார்க்கேல்லை. இப்ப சுகம் விசாரித்தானோ''

ஏரம்பன் உதட்டைப் பிதுக்கியபடியே வெறுப்போடு சொன்னான்.

''உங்களைப் பார்க்க வாறதென்று சொன்னார்.''

''அப்படியா சொன்னான். அடுத்த இலெக்ஷனுக்குத் தான் இனி ஆரையேன் கூட்டிக்கொண்டு வருவான்.''

ஏரம்பன் புகைந்தான்,

''முத்தி அக்கா எண்டு கூப்பிட்டு கொண்டு வரேக்கை பார்க்கவேணும். ஏதோ துண்டுபோடச் சொல்லி எங்களை கூட்டிக்கொண்டுபோய் ஏமாத்திறாங்கள். அடுத்த முறை வரட்டன் கேட்கிறன் கேள்வி...''

ஊமையாயிருந்த முத்தி திட்டத் தொடங்கினாள்.

www.padippakam.com



''ஏதோ அவங்கடை நன்மைக்காக அஞ்சு வருஷத்துக் கொருக்கா வந்து எங்களையும் பெரிசாக்கிஏமாத்திறாங்கள். என்ன இருந்தாலும் மாணிக்கன் விஷயம் தெரிஞ்சவன். அவன் சொன்னது தான் சரி...''

ஏரம்பன் சொன்னதை அன்னம் உடனே புரிந்து கொண்டாள், முன்னர் அவள் அவனது பேச்சுகளை அசட்டை செய்து வந்ததற்காக வருந்தினாள். இன்றே அவனது பேச்சுகள் தீர்க்கதரிசியின் வாக்காக அவள் செவிகளில் ஒலித்தன. மாணிக்கன் நினைவு அவளது இதயத்தில் தீயை மூட்டியது. அதைத் தொடர்ந்து இலட்சுமணனின் நினைவு இதயத்தில் சுட்டது. வழமையான ஓய்வற்ற வேலைகள் நெஞ்சத்தில் வேதனையை இடையிடை மறக்கச் செய்தன. வீட்டுவேலைகளை அவசர அவசரமாக முடித்துவிட்டு ஆறுமுகத்தார் வீட்டுக்குப் புறப்பட்டார்.

# 27

வழமையான வேலைகளை முடித்துவிட்டு அன்னம் அரிசியை உரலில் போட்டுத் தீட்டிக் கொண்டிருந்தாள். இரண்டு கைகளும் மாறி மாறி யந்திரம் போல உலக்கையை ஏந்தி, மெதுவாக உரலில் எறிந்துகொண்டிருந்தன. எவ் வேலை செய்யும்போதும் அவள் கண்கள் மருட்சியோடு ஆனந்தன் எங்கே இருக்கிறான் என்று தேடுவது வழக்கம். அவன் வீட்டுக்குள் நின்ற அரம் கேட்டது பின்னர் எவ்வித ஒசையும் இல்லை. திடீரென பின்னோக்கிப் பார்த்தாள். அங்கே ஆனந்தன் கையிலே தோய்ப்பதற்கு எடுத்து வந்த அழுக்குத் துணிகளுடன் சிரித்தபடி நின்றான்.

''என்ன, எங்கடைவேலை உங்களுக்கு வேடிக்கையாயிருக்கோ?''

அன்னம் சிறிது கோபத்தோடு கேட்டாள்.

www.padippakam.com



''இல்லை, நீ அசைந்து அசைந்து உலக்கையைக் கை மாறிப்போடும் அழகைப் பார்த்து ரசித்துக்கொண்டிருக்கிறன். உன்ரை 'பஸ்டும்' குண்டியும் மயிரும் எத்தனை அழகாய் அசையுது தெரியுமா?''

கேலிச்சிரிப்போடு ஆனந்தன் சொன்னதை அவளால் முற்றாகப் புரியவில்லை.

''ஏன் ஒரு வெள்ளாடிச்சியைக் கட்டிப்போட்டு அரிசி இடிக்க வைச்சுப் பார்த்துக்கொண்டு நிற்கிறதுதானே''

''அவளவை எங்கை இடிக்கப் போறாளவை''

''அப்ப நீங்க இடிச்சுக்குடுக்கிறதுதானே''

''என்னடி சொன்னாய்?''

''நானொருத்தி வாறனென்று பள்ளியயெல்லாம் இனி மேலும் இடிக்க வருவாளவை என்று நினைக்கிறியளோ. அங்கை கோண்டாவில் சந்தியிலை எங்கடை பாலன் மிஷின் போடுறான். அங்கை அரிசியையும் மிளகாயையும் எடுத்துக் கொண்டு போங்கோ''

''ஓ பாலன் அவ்வளவுக்கு வந்திட்டானா? அவனுக்கு லைசென்சு கிடைக்கிறதைப் பார்ப்பம்''

''எல்லாம் உங்கடை கையுக்கை என்றுதான் எண்ணம்''

அன்னம் கேலியாகச் சொன்னாள்.

''எடியே, நான் நினைச்ச எந்த விஷயத்திலையும் தோற்றதைப் பார்த்திருக்கிறாயா?''

''ஆனையும் என்றைக்கோ அறுகம் புல்லிலையும் சறுக்கத்தான் செய்யும்''

பள்ளிக்கு வாய்க்கொழுப்பைப்பார். பேசாமல் இடியடி''

www.padippakam.com



அதன்மேலும் அவளுடன் வாய்கொடுக்காது கிணத்தடிக்கு ஆனந்தன் சென்றான். அவன் மூளை அன்றைய வேலைகளில் மூழ்கத் தொடங்கியது. அன்று பட்டணம் போகும் வழியில் மின்சார இஞ்சினியரையும் கிராமச் சங்கத் தலைவரையும் காணவேண்டும் என எண்ணிக் கொண்டான்.

## 28

அன்று நண்பகலே மழை தூறிக்கொண்டிருந்தது. தலையில் அடுக்குப் பெட்டிகளை வைத்துக்கொண்டு அன்னம் சந்திக்கு அரிசி, மிளகாய், உப்பு வாங்கச் சென்றபோது எதிர்பாராது இலட்சுமணன் சயிக்கிளில் குடைபிடித்தபடி எதிரே வருவதைப் பார்த்து கரை ஓரமாக ஒதுங்கி நின்றாள். இலட்சுமணன் சயிக்கிளை நிறுத்திக் காலை ஊன்றினான்.

''என்ன அந்தப் பக்கத்தையே மறந்திடுவியளோ?''

''இல்லை. மறக்கேல்லை, நேரம் கிடைக்கேல்லை''

''ஏன் பொய் சொல்லிறியள்''

''சத்தியமாய்''

''பின்னேரம் கூட்டமொன்றிருக்கு. நாளைக்கு வருவன்''

''காட்டயம் காத்திருப்பன்''

மழைத்தூறலில் அவளையும் நனையவிட விரும்பாதவனாக சயிக்கிளை உழக்கினான்.

## 29

இலட்சுமணன் வரும்வேளையாக அவனுக்காக முசிட்டை இலையும் கூனிறாலும் பயிற்றங்காயும் போட்டு அன்னம் ஒடியல் கூழ் காய்ச்சி வைத்திருந்தாள். கூழ் ஆறி

www.padippakam.com



விடாமல் மெல்லிய சூட்டு அடுப்பில் வைத்திருந்தாள். அவன் வருகைக்காக ஆக்கியதாகக் காட்டாது மூத்திக்கும் ஏரம்ப னுக்கும் உடனேயே கொடுத்துவிட்டு தான்மட்டும் குடியாது காத்திருந்தாள்.

அவள் ஏமாறவில்லை. எதிர்பார்த்தபடி பொழுது கருகியபின் இலட்சுமணன் ஓசைப்படாது வந்துசேர்ந்தான்.

கூழை ஒரு சட்டியில் ஊற்றிக் கொண்டு சென்று அகப் பையுடன் முற்றத்தில் வைத்து அவன் கையில் கோலி மடித்த பலாவிலை ஒன்றையும் கொடுத்தாள். தான் படுக்கும் பாயை அவன் உட்காருவதற்கு மடித்துப் போட்டாள்.

''சென்ற தடவை வந்தபோது கூழ் காய்ச்சுவதாகச் சொல்லியிருந்தால் மறுநாளே வந்திருப்பனே. இன்றைக்கு மட்டும் என்ன விசேடமோ?''

கூழை ஊதி ஊதி உறிஞ்சிச் சுவைத்து விட்டுக் கேட் டான்.

''மாப்பிளை என்றால் கொஞ்சமாவது மதிப்புக் காட்ட வேண்டாமா? என்னால் இந்தளவு மரியாதைதான் காட்ட முடியும்''

அவள் உடனேயே விஷயத்தில் இறங்கி விட்டாள். குடித்த கூழ் தொண்டையில் ஒரு கணம் சுட்டது போலிருந் தது அவனுக்கு.

''ஓ கதையெல்லாம் அவ்வளவிற்குப் பரம்பி விட்டுதா?''

அவன் ஒளிக்க விரும்பாதவனாகக் காட்டிக் கொண்டே சமாளித்தான். அவளாக விஷயத்திற்கு வந்ததும் அவனுக் கும் விஷயத்தை அவிழ்ப்பது எளிதாகி விட்டது.

''நானே இந்த விஷயமாக உன்னோடு கதைக்க வர என்றிருந்தன்''

''எந்த விஷயமாக...?'

படிப்பகம்

www.padippakam.com



அன்னம் ஒன்றும் புரியாதவள் போல் நடித்தாள். அவளது முக பாவத்தை அவனால் மதிப்பிட முடியவில்லை.

''எனக்குக் கணக்கு விட வேண்டாம் அன்னம். நீ உதைப் பற்றி என்ன நினைக்கிறாய்?''

''நினைக்கிறதென்ன. பெரிய இடம் போய் மகராசனாய் வாழலாம். ஏழை ஏழைதான் பசைப் பிடிப்புள்ளவர்கள் பணக்காரரோடு ஒட்டிக் கொள்ளத்தானே செய்வார்கள்;'

அவளது பேச்சில் ஏதாவது ஏமாற்றம் தொனிக்கிறதா? அதற்கு இடம் கொடுத்துவிடப்படாது.

''அன்னம் நீ என்னையும் அந்த வர்க்கத்தோடை சேர்க்கப் பார்க்கிறாய்; அதுதான் வருத்தமாயிருக்கு. நான் உந்தப் பணம் காசுக்கு ஆசைப்படுபவனல்ல. அதாலை கிடைக்கிறதை விடுபவனுமல்ல. பணத்தைப் பயன்படுத்திற அருமையும் எங்களுக்குத்தான் தெரியும். என்னதான் இருந்தாலும் அன்னம், நான் சத்தியமாய் சொல்லுறன் உன்ரை விருப்பமில்லாமல் நான் உதுக்கை போக மாட்டேன்''

இலட்சுமணனின் வார்த்தைகள் அவளின் நெஞ்சைத் தொட்டன.

''எனக்கு ஒருவித எதிர்ப்புமில்லையே. அவங்களிடம் காசு பணமிருக்கு. உங்களுக்கு விலையும் பேசி விட்டாங்களாமே''

''அதல்ல. அந்தப் பெட்டையை உனக்குப் பிடிச்சுதா என்று முதலிலை சொல்லன்''

அன்னத்திற்கு அவன் வினா மிகவும் சிரமமாகி விட்டது.

''பெட்டைக்கென்ன? கொஞ்ச வயதுதான். பட்டணத்திலை படிக்கிறாள்''

''குணம் வடிவு கிடிவு...''

www.padippakam.com



''நீங்க பார்க்கேல்லையா? அவள்தானே ஒவ்வொரு நாளும் காரிலை போறாளே. வழியிலை நின்று பார்க்கலாமே. அதுக்காக இப்ப இந்தக் கலியாணத்தை விடப் போறீங்களோ வடிவை என்ன கூழ் காய்ச்சிக் குடிக்கப் போறுயளோ''

இராசாத்தியின் அழகைப் பற்றிப் பாராட்ட அன்னத்தின் நா எழவில்லை. ஒல்லியான நெட்டையான பெண். கண்கள் மட்டும் நீளமாக கருமையான புருவ மயிரோடு இருந்தன.

''உன்னைப் போலிருப்பளோ?''

அன்னத்தின் போலிவான உடற் கட்டோடு இராசாத்தியின் அழகை ஒப்பிட முடியாது. அவ்வேளை இராசாத்தியைக் குறைத்து அக்கலியாணத்திற்கு இடையூறு செய்யவும் அவள் மனம் எழவில்லை.

''அப்பிடி ஏன் கேட்கிறியள்? நானெல்லாம் பெரிய அழகோ? நீங்கள் இராசாத்தியின் கண்ணைப் பார்த்தால் வேண்டாமென்று சொல்ல மாட்டியள்''

சிரித்துக் கொண்டே தான் தப்பிவிடத் தக்க விதமாக அன்னம் சொன்னாள்.

''அப்ப நான் பார்க்க வேண்டியதில்லை தானே''

''இல்லையில்லை. நீங்கள் கட்டாயம் பார்த்து முடிவு செய்யிறதே நல்லது. என் தலை மேலை பழி போட வேண்டாம்''

''சரி ஒரு நாளைக்குப் பார்ப்பமே. இப்ப என்ன அவசரம்? உன்ரை கூழ் நல்லாயிருக்கு. இனி எப்ப காய்ச்சப் போறாய்?''

இலட்சுமணன் கதையை மாற்ற முயன்றதை அவள் விரும்பவில்லை. வேலாயுதம் வீட்டாருக்கு ஏதாவது பதில் சொல்ல வேண்டுமே என்ற நினைவு வந்தது.

●

படிப்பகம்

www.padippakam.com



''அவங்கள் அவசரப்படுறது போலை தெரியுது. இப்ப என்ன தாமதம்? இராசாத்தியைப் பார்க்கிறதுதான் தாமதமென்றால் நாளைக்கே பார்த்திடலாமே''

''வேறையும் இரண்டு விஷயம். அவங்கள் அவசரப் பட்டு அமத்தப் பார்க்கிறாங்கள் என்று அப்புவும் அண்ணனும் நினைக்கிறாங்கள். நான் வேறை ஒரு விஷயமாய் யோசிக்கிறன்.''

''சீதணத்திலை விவகாரமோ. அதுதானே வீடுவள விலை பாதி...''

''அப்பு முழுதையும் சீவிய உருத்து இல்லாமலே எழுதித் தரும்படி கேட்கிறார்''

பார்வதியும் இரகுநாதனும் தன்னை வளைத்துப் பேசியதன் உட்பொருளை அப்போதுதான் அன்னம் உணர்ந்து கொண்டாள். இந்தப் பேரம் பேசும் விளையாட்டில் தன்னை ஒரு பகடைக் காயாக்குகிறார்களோ என்றும் எண்ணிக் கொண்டாள்.

''வீட்டிலை இன்னொரு பெட்டையிருக்கு. கட்டின வீட்டிலை பாதியை அதுக்கும் வைச்சிருக்கத்தானே ஆரும் பார்ப்பினம்''

''அது சின்னப் பெட்டை. ரகுநாதன் வேறை இருக்கிறான். நல்ல வியாபாரமும் வருமானமுமிருக்கு என்பது அப்பு அண்ணனின் வாதம். வீடுவளவு முழுவதும் இல்லையென்றாலும் இப்படி இறுக்கமாக நின்றால் மேலும் கொஞ்சக் காசு வாங்கி விடலாம் என்ற நப்பாசை''

''ஓ அவ்வளவுதானே அவங்கடை ஆசை. அது ஏதோ சரியாகி விடும். உங்கடை தடங்கல் இராசாத்தியைப் பார்க்கிறது அவ்வளவுதானே''

''அதல்ல''

''பின்னை என்ன?''

www.padippakam.com



''எங்கடை கட்சி, இயக்க விஷயங்களிலை அவங்களுக்கும் எனக்கும் சரிவர மாட்டுது. இதாலை வீண் குடும்பச் சண்டைகள் வந்து விடும்''

அன்னம் அவைபற்றி ஓரளவு அறிந்திருந்தாள் ஆயினும் அது பெரிய தடையாகும் என்பதை அவளால் உணர முடியவில்லை.

''அவங்களுக்கும் அது தெரியுந்தானே. அவங்களும் அறிந்து கொண்டுதானே வாறாங்கள். கலியாணத்தாலை எல்லாம் ஒற்றுமையாகி விடும்''

''கொள்கையில் விட்டுக்கொடுப்பது, இணக்கம் பேசுவதென்பது என்னைப் பொறுத்த வரையில் இந்த யுகத்தில் கிடையாது''

உணர்ச்சி உந்தச் சொன்னான்.

அப்படியானால் சாதாரண பள்ளியைக் கட்டலாமே, காசு, பணத்திற்கு ஏன் ஆசைப் படவேண்டும்? படித்த பெண்ணாகத் தேடுகிறாரா? வேளாளர் வீடுகளில் சீதனம் பேசித் திருமணம் செய்வதற்கும் இதற்கும் என்ன வேறுபாடு; அவனது அப்புவும் அண்ணாவும் தன் தங்கைகள்தான் காரணம் என்று சாட்டுச் சொல்லுவாரோ.

அப்படி ஏன் இவரை நான் குறைவாய் தவறாய் எண்ண வேண்டும்? எங்கேயிருந்தாலும் இலட்சியவாதியாய் இருக்க முடியாதா? இலட்சியத்தை நிலை நாட்டவும் பணம், அந்தஸ்துப் பயன்பட மாட்டாதா? தற்போது தேர்தலுக்கும் கோடுக்கும் எனச் செலவு செய்யும் பணத்தைக் கொண்டு, இவற்றையே ஏன் அழித்து விடுதற்குப் பயன்படுத்தப்படாது. மாணிக்கன் ஒருதடவை பணத்தைப் பற்றிப் பேசியது அவளது நினைவில் வந்தது.

''உழைப்பதென்ன, நாளாக ஊரிலுள்ள பெரிய வேளாளர், பணக்காரரது செல்வ மெல்லாவற்றையும்

www.padippakam.com



கொள்ளை யடித்தே நாங்கள் இந்த இயக்கத்துக்குப் பயன் படுத்துவோம்''

சீதனமாகப் பெறும் பணத்தை இலட்சுமணனால் அப் படிப் பயன்படுத்த முடியுமா? வேலாயுதம் வீட்டார் அவனது கொள்கை பற்றி ஆலோசிக்காமலா இதில் இறங்கி யுள்ளார்கள்.

''நான் உயிரோடை இருந்தால் உங்கடை லட்சியங் களையும் இருந்து பார்க்கத்தானே போறன்''

அன்னம் சிறிது நளினமாகவே சொன்னாள்.

''சரி பார்ப்பமே. பணம் அந்தஸ்து கிடைத்தாற் போல லட்சியங்களை நான் விடமாட்டேன். லட்சியங்களுக்காக அவற்றைப் பயன்படுத்துவேன். நான் சொல்வது பொய் யென்றால் பொறுத்துப் பாரன்.''

இலட்சுமணன் சொல்லிக்கொண்டே எழுந்தான்.

''இனி இந்தப் பக்கம் எப்பவோ''

''நீ எப்ப கூழ் காய்ச்சுவியோ''

''நீங்க வரும் போதெல்லாம் காய்ச்சித் தருகிறேனே. இன்னும் கொஞ்சக்காலத்துக்குத்தானே. கிடைக்கிற சந்தர்ப் பத்தைத் தவறாது பயன்படுத்திக் கொள்ளுவன்''

அவளது குரலில் ஒலித்த ஏமாற்றத்தை அவன் சிந்தித் துப் பார்க்க விரும்பவில்லை. சயிக்கிளில் ஏறிக்கொண்டான்.

## 30

இலட்சுமணன் அங்கு வந்துசென்ற செய்தி வேலாயுதம் வீட்டிற்கு எட்டியிருக்க வேண்டும். மறுநாட் காலையில் கை யில் வேப்பங்குச்சியுடன் இரகுநாதன் அன்னத்திடம் வந் திருந்தான். நிலைமையைப் பற்றி விசாரித்தான்.

www.padippakam.com



''சீதனத்திலை கொஞ்சம் விட்டுக் கொடுத்தால் எல்லாம் நடக்கும். பயப்பிடுவதற்கு எதுவுமில்லை''

''வீடு வளவு முழுவதையும் கேட்டால்? இன்னொரு பெட்டையுமெல்லோ இருக்கு''

இரகுநாதன் சொன்னான்.

''அதைக்கொடுக்க விரும்பாட்டால் காசு மேலும் அஞ்சு பத்துக் கொடுத்தால் எல்லாம் சரி வரும். அவர் எதுக்கும் ஆசைப்படேல்லை. வீட்டுக்காரருக்காய் பார்க்கிறார்''

இரகுநாதனுக்கு அவளது வார்த்தைகள் நம்பிக்கையளித்தன.

''அப்பு என்ன சொல்லிறாரோ தெரியேல்லை. சொல்லிப் பார்ப்பம்''

முத்தி, ஏரம்பனிடமும் சுகம் விசாரித்துவிட்டு இரகுநாதன் திரும்பினான்.

என்றுமே அன்னத்தின் குடிசைப்பக்கமே வராத இராசாத்தி அன்று மாலை திடீரென வந்திருந்தாள்.

''அன்னமக்கா, முட்டை ஏதேன் இருந்தால் ஆச்சி வாங்கி வரச் சொன்னா''

''என்ரை மூண்டு கோழியளும் ஒரே நேரத்திலை அடை. ஏன் முட்டைக்குவிட வீட்டிலை வேறை ஆளில்லையோ?''

அன்னம் அவளின் மனதை ஓரளவு அறிந்தே சொன்னாள்.

''ஆச்சி தங்கச்சியைத்தான் போகச் சொன்னவ. நான் போறேன் என்று வந்தன். விடுதலை என்றால் வீட்டிலை பொழுதே போகாது. உங்களையும் பார்த்துப் பேசி கன நாளாச்சு''

இராசாத்தியின் உதட்டில் அரும்பிய புன்னகையின் அர்த்தத்தை அன்னம் புரிந்து கொண்டாள். அவள் தன்னிடம் ஏன் வந்திருக்கிறாள் என்பதையும் அன்னம் உணராமலில்லை.

www.padippakam.com



''நேரம் போகாட்டால் இங்கை வரலாமே. கதைச்சுக் கொண்டிருக்கலாம்''

இராசாத்தி வேண்டிய வரத்தை அன்னம் தயங்காது கொடுத்தாள்.

''நான் ஒழுங்காய் வாறனே. அக்காவுக்கு என்ன நேரம் ஓய்வாயிருக்கும்?''

''எனக்கு வேலையிருந்தாலென்ன. வேலையைச்செய்து கொண்டே பேசலாமே. அது போக சமைக்கவெல்லாம் உனக்குத் தெரியுமா?''

''ஏனக்கா அப்பிடிக் கேக்கிறியள். பள்ளிக்கூடத்திலை ஹோம் சயன்ஸ் கூட நான் படிக்கிறன்''

''என்ன சயன்ஸ்?''

''சமையலெல்லாம் படிக்கிறன்''

''படிக்கிறியா? உனக்கு கூழ் காய்ச்சத் தெரியுமா?''

''அதையென்னத்துக்கக்கா''

''அவருக்கு அதுதான் நல்லாய் பிடிக்கும்''

''ஆருக்கு...''

''என்ன ஒன்றும் தெரியாத மாதிரி நடிக்கிறாய். உனக்குப் பேசிற மாப்பிள்ளைக்குத்தான்...''

இராசாத்தி தலை குனிந்து கொண்டே செத்தையில் முறித்த தென்னம் ஈர்க்கை வாயில் வைத்துக் கடித்துக் கொண்டு நின்றாள்.

''ஏன் வெட்கப்படுகிறாய்? இதெல்லாம் தெரிந்துதானே இருக்க வேணும். அவருக்குப் பிடித்ததெல்லாவற்றையும் சொல்லித் தாறதென்ன செய்யவும் காட்டித் தாறனே. பின்னேரங்களிலை ஒழுங்காய் வா''

இராசாத்தி மௌனமாக, வெட்கம் சிந்த அன்னத்தின் கதைகளையெல்லாம் கேட்டுக்கொண்டே வானத்தில் பறப்ப

படிப்பகம்

www.padippakam.com



வளாக வீடு நோக்கித் திரும்பினாள். தனக்காகவே வான மெல்லாம் சிவப்பாகி அழகாகப் பரந்திருப்பதாக அவள் இதயத்தில் தோன்றியது.

# 31

இராசாத்தி அன்றிலிருந்தே அன்னத்தின் நெருங்கிய தோழியாகி விட்டாள். அன்னத்தை தங்கள் வீட்டுக்கே நாள் தோறும் தண்ணீர் அள்ள வரும்படி வற்புறுத்தினாள். அங் கேயே குளிக்கவேண்டும் எனவும் வேண்டினாள்.

அன்னத்திடமிருந்து இலட்சுமணன் பற்றி துருவித்துருவி சகல விபரங்களையும் அவள் அறிந்து கொண்டாள்.

இராசாத்தியின் இதயத்தில் பெரிய கோட்டை கட்டி விட்டதை அன்னம் உணர்ந்து கொண்டாள். கலியாணப் பேச்சு வார்த்தைகள் முறியின் அவளது மனமும் உடைந்து விடப் போகிறதே என்று அன்னம் அஞ்சினாள். அதனால் எப்படியும் அக்கலியாணம் நடைபெற்றே தீரவேண்டும் எனவும் விரும்பினாள்.

''உன்ரை மாப்பிளைக்கும் அண்ணன் அப்பு ஆட்களுக்கு மிடையில் ஒத்துவராத விஷயமும் இருக்கு என்பது உனக்குத் தெரியுமோ''

''அப்பு சொன்னார்; அதெல்லாம் நான் கெட்டித்தனமா யிருந்தால் எல்லாம் மாற்றி விடலாமென்று''

அந்த நோக்கத்துடன் தானோ கலியாணத்திற்கு முன் வந்தார் வேலாயுதம் என்று அன்னம் மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

''உண்மைதான். இப்படிப்பட்டவர்களைக் கட்டுவதிலை ஆபத்துமிருக்கு. உன் கையில் அவரைப் போட்டுக்கொண்டு

போ—8

www.padippakam.com



லட்சியங்களை முறியடித்தால் உனக்கு நல்ல வாழ்க்கை கிடைக்கும். நீ தோல்வியடைந்தால் சில வேளை உன் சொந்த வாழ்க்கையே பாழாகியும் விடலாம்''

அன்னத்திற்கு அவ்வார்த்தைகளைச் சொல்லும்போது தன் சொந்த வாழ்வின் அனுபவமே கண்முன் நின்றது. இராசாத்திக்கு முகத்தில் சிறிது அச்சம் தோன்றியது. தவிர முற்றாக அவளால் அன்னம் சொன்னதை உணர்ந்துகொள்ள முடியவில்லை.

முற்றத்தில் சயிக்கிள் சத்தம் கேட்டு இருவரும் வெளியே வந்தனர்.

''அங்கே இலட்சுமணன் நின்று கொண்டிருந்தான். இராசாத்தி எதுவுமே பேசாது கண்கள் மிரள பதட்டத்தோடு ஒற்றையடிப் பாதை வழியே வீட்டை நோக்கி ஓடத் தொடங்கினாள். அவனே இலட்சுமணனாக இருக்கவேண்டும் என்ற நம்பிக்கை.

இலட்சுமணன் அவளது ஓட்டத்தையே பார்த்துக் கொண்டு நின்றான். அன்னம் கண்வெட்டாத அவனது பார்வையைப் பார்த்துச் சிரித்தாள்.

''உங்க குட்டியின் ஓட்டத்தைப் பார்த்து மெய் மறந்து போனியளே''

''ஓ, இவள்தானா. ஓட்டத்துக்குத்தான் பரிசு கொடுக்கலாம்''

அவளது அழகு ஏமாற்றமாக இருந்தபோதும் அவனது இதயத்தில் ஏதோ ஒருவித கனிவு ஏற்படவே செய்தது.

''பள்ளிக்கூடத்திலை ஓட்டத்துக்கு ஏதோ 'கப்'கூடக் கொடுத்தாங்களாம். எனக்குக் கொண்டுவந்து காட்டுவதாகச் சொன்னாள். என்னட்டைத் தந்தால் அதிலை உங்களுக்கு தேத்தண்ணி கொடுக்கலாமென்று சொன்னன்''

www.padippakam.com



இலட்சுமணன் சிரித்தான். அதில் நெஞ்சின் தெளிவு இருக்கவில்லை. உருவத்தின் ஏமாற்றத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியில் அவனது சிந்தனை ஈடுபட்டிருந்தது.

''இராசாத்தி என்னவாம்''

''பேரே நல்லாப் பிடிச்சிட்டுது போலை தெரியுது. இனி யென்ன! நீங்களும் ஒழுங்காய் வந்தால் இனிமேல் ஓடாமல் மறிச்சு வைத்திருக்கிறனே...''

அன்னம் கேலியாக ஆரம்பித்து தானறிந்த சகல விஷயங்களையும் அவ்னிடம் சொன்னாள்.

## 32

கிழக்குப் பகுதிச் சுடலைக்குக்கிட்ட ஐந்து ஏக்கர் முடிக் குரிய செம்பாட்டுக் கல்லு நிலம் இருந்தது. அந்நிலத்தை அரசாங்கத்திடம் பெற்றுக் குடும்பத்திற்கு இரண்டு பரப்பு வீதம் கொடுத்து நாற்பதுபள்ளர் குடும்பங்களைக் குடியேற்று வதற்கு அவர்களது சங்கங்கள், இயக்கங்கள் முயன்று வந் தன. அரசாங்கச் செலவிலேயே கிணறுகள், விளையாட்டி டம், வாசிகசாலை யாவும் ஏற்படுத்துவதாகத் திட்டம் இருந் தது. இதற்கு வேண்டிய அலுவல்களில் பெரும் பகுதியை கொழும்பில் வடிவேலு பார்த்து வ்ந்தான். கிராமத்தில் இலட்சுமணன் இயக்கத்தாரின் முன்னோடியாக நின்று கரும மாற்றினான். இதற்கு எதிர்ப்பாக ஆனந்தன் வேளாளருக் குத் தலைமை தாங்கி நின்றான். அரசர்ங்கத்திற்கு அங்கு நிலமேயில்லை என்று ஆரம்பத்தில் வாதாடி தோல்வி யடைந்து பின்னர் சுடலைக்கு அந்த நிலம் அத்தியாவசியம் என்று மாவட்ட அதிபர், எம்.பி யாவரையும் கண்டு முயன் றான். நிலத்தை அளந்து எல்லையிட நில அளவையாளர் வந்தபோது இருபகுதியினரும் அங்கு பார்வையாளராக நின்றனர். அவர்களிடை இடையிடை பேச்சு மோதல்களும்

www.padippakam.com



ஏற்பட்டன. நிரந்தரமான எல்லைகள் இல்லாததால் தகராறுகளும் ஏற்பட்டன. கிராமசேவையாளர், மணியகாரன் ஆகியோர் நின்று தகராறுகளைத் தீர்க்க முயன்றனர்.

''இனிமேல் செத்த சவம் எரிக்கக்கூட இந்தப் பக்கம் வர முடியாமல் போகுது''

குலத்துங்கர் பொறுக்க முடியாமல் புலம்பினார்.

''நீங்க கொண்டு வாருங்கோ. ஆனால் நாங்க கட்டை அடுக்கி எரிக்க வருவம் எண்டு எதிர்பார்க்காதையுங்கோ''

இலட்சுமணன் சொன்னான்.

''எங்க குடிமக்களுக்கு இப்ப வாய்க் கொழுப்பு மட்டுமில்லை, பணக் கொழுப்பும் வேறை வந்திட்டுது''

ஆனந்தன் இலட்சுமணனின் குரல் கேட்டதும் நளினமாகத் தாக்கினான்.

''நாங்கள் உழைக்கிறதைப் பார்த்து வேலையில்லாமல் தெருச் சுத்தித்திரியிற சாதிக்காறருக்கெல்லாம் இப்ப எரிச்சல் வேறை வருகுது''

இலட்சுமணன் ஆனந்தனையும் தாக்கத் தக்கதாகச் சொன்னான். ஆனந்தன் அதைக் கேட்காதவன்போல அளவை நாடா பிடிப்பதைப் பார்த்துக்கொண்டு நின்றான்.

''வெள்ளாளரிட்டைப் பொம்பிளை கேட்கவும் இனி வந்திடுவாங்கள்''

குலத்துங்கர் குரல் கொடுத்தார். வாதிடமுடியாத போதெல்லாம் பேச்சுக்களை இவ்வாறு திசை திருப்புவதும் அவர்களது வழமை.

''வீடெல்லாம் வயதான குமருகளை வைச்சிருந்தாப் போலை நாங்களாக பெண் கேட்கப் போகமாட்டம். செம்பு தண்ணி எடுத்துப் பழகிய பிறகுதானே கலியாணம் பேசிறது. எங்கடை வீடுகளிலை வந்து செம்பு தண்ணி எடுத்துச்

www.padippakam.com



சாப்பிட்டுப் பழகின பிறகெல்லோ கலியாணப் பேச்சுத் தொடங்கவேணும்''

குலத்துங்கரின் பேச்சுக்கு அவரது வயதுள்ள இரகு நாதனின் மாமன் கதிரன் பதில் சொன்னான்.

''ஓ அவ்வளவுக்கு வந்திட்டியளோ. எல்லாம் காலங் கெட்டுப் போச்சு. என்ன, ஆனந்தன் நீ பேசாமலிருக் கிறாய்''

''உதுக்கென்ன பேசிறது. துவக்காலைதான் பதில் சொல்ல வேணும்''

ஆனத்தன் ஆத்திரத்தோடு சொன்னான்.

''துவக்கும் நெடுக அவைக்குத்தான் சொந்த மென்று எண்ணம்''

இலட்சுமணன் மற்றவர்களைப் பார்த்துப் பதில் கூறினான்.

''நிலத்தை அளந்து பிரிச்சாப்போலை எல்லாம் முடிஞ் சுதோ. உதிலை வந்து குடியேறுறதையும் தானே பார்க்கப் போறம்''

ஆனந்தன் சொன்னான்.

உயர்சாதிக்காரரான மணியகாரனும் கிராம சேவகரும் ஊமைகளாக, கேட்டும் கேட்காதவர்கள் போல தம் கடமை களைப் பார்த்தனர். வேலைகள் முடிந்து புறப்பட்டனர்.

''நல்லாய் நாங்கள் இந்த நிலத்திலை குடியேறுவதைப் பார்க்க துவக்கோடு வாருங்கோ. சுடலையும் பக்கத்திலை தானிருக்கு''

இலட்சுமணன் மறைமுகமாகத் தாக்கினான்.

''எங்கையேன் வெள்ளாளனுக்குத் தப்பித்தவறிப் பிறந்ததுகள், அதுதான் இப்ப உப்பிடி எதிர்த்துப் பேசுது கள்''

வாதம் புரிய முடியாத நிலையில் குலோத்துங்கர், இலட்சுமணன் வாய் திறக்க முடியாதபடி, தாழ்த்திப் பேசினார்.

படிப்பகம்

www.padippakam.com



''எங்கடை பள்ளியளின்ரை ஒழுங்கம் பற்றிப் பேச வந்திட்டினம். ஆட்களைப் பாருங்கோ. எங்கடை பிள்ளையளெல்லாம் கொழும்பிலை வேல பார்க்குதுகள். உங்கடையள்தான் இங்கே மரமேறுதுகள். இனிமேல் என்ன நடக்கப் போகுதென்று இருந்து பாருங்கோவன்''

கதிரன் ஒருபுறமாகத் திரும்பிச் சென்று கொண்டிருந்த வேளாளர்களின் காதில் விழக் கத்திச் சொன்னான். குலோத் துங்கரின் பாஷையிலேயே பதிலடி கிடைத்ததைக் கேட்டு எவரும் தலை திருப்பவில்லை.

அப்போதும் ஆத்திரம் தாங்க முடியாத கதிரன் இலட்சு மணனைப் பார்த்து மேலும் சொன்னான்:

''தூசணப் பேச்சென்றாலும் தங்களுக்குத்தான் சொந் தம் என்பது உவங்கடை எண்ணம்''

# 33

மறுநாள் அன்னம் ஆறுமுகத்தார் வீட்டிற்குச் சென்றதும் விளக்குமாறை எடுத்து முற்றத்தைக் கூட்டிக்கொண்டு நின்றாள். அவ்வேளை தங்கம்மா கையில் கரிக்கட்டியைக் கடித்து எஞ்சியிருந்த வெற்றிலைக் காவி படிந்த பற்களை சுட்டு விரலால் தீட்டியபடியே அன்னத்தைத் கேட்டாள்:

''நேற்று சுடலையடியிலை என்னவாம் நடந்தது. பெரிய தம்பி நேற்று வந்த நேரம் தொடக்கம் கொதித்துக் கொண்டு நின்றான்''

''சும்மா வாக்குவாதப்பட்டினமாம். உங்கடைமேனும் இலட்சுமணனும்கூட ஏதோ ராவிக் கொண்டினமாம்''

''இவங்கள் இரண்டு பேருக்குள்ளையும் என்றைக்கோ ஏதோ நடக்கப் போகுது. அதுக்குத்தான் பயமாயிருக்கு''

தங்கம்மா அச்சத்தோடு சொன்னாள்.

www.padippakam.com



''குலைக்கிற நாய்கள் கடிப்படுறேல்லை''

அன்னம் சொன்னாள். இவளுக்கும் இப்போது துணிச்சலும் வாயும் வளர்ந்துவருகிறது என்று தங்கம்மா மனதில் எண்ணிக்கொண்டாள். ஆயினும் 'நாய்' என்று தன் மகனையும் சேர்த்துச் சொன்னதற்காக தங்கம்மா கண்டிக்கவில்லை.

''இந்த நாய்கடி பூனை கடியுக்கை இளையவன் வடிவேலு லட்சுமணன்ரை சிநேகிதன், என்னதான் இவங்கள் பேசித் திரியிறாங்களோ தெரியாது''

தங்கம்மா புகைந்து கொண்டே வாயிலிருந்த கரிய எச்சிலை வேலி ஓரமாகத் துப்பினாள்.

வேலைகளை முடித்தபின் அன்னம் பலாமரத்தின் கீழ் நின்று கையிலுள்ள கம்பியால் விழுந்திருந்த பழுத்த பலா விலைகளைக் குத்திக்கொண்டு நின்றாள். ஆனந்தன்இருமிய சமிக்ஞைச் சத்தத்தைக்கேட்டு நிமிர்ந்து இருதடவை பார்த்து விட்டுக் குனிந்து சிரித்தாள்.

''என்னடி சிரிப்பு?''

''அது சொல்லமாட்டன்''

''இல்லை சொல்லடி, அதை நான் அறியவேணும்''

''உங்களை இன்றைக்குப் பார்த்தால் மன்மதன் போலையிருக்கு''

அன்னம் சிரித்துக்கொண்டே சொன்னாள்.

''என்னடியது, நீ உப்பிடியெல்லாம் பேசப் பழகிவிட்டாய். மாணிக்கனை இப்பவெல்லாம் மறந்து விட்டாய் தானே. இல்லையா?''

அவன் பெயரை நினைவூட்டியதும் அவளது சிரிப்பு மறைந்து முகத்தில் மழை இருள் படர்ந்தது. அவள் எதுவுமே பேசவில்லை. அவனே மீண்டும் சொன்னான்:

www.padippakam.com



''அவனிருக்கேக்கை ஒரு காலம் உனக்கு எவ்வளவு மமதையிருந்தது. இப்ப அதெல்லாம் போட்டுது. இல்லையா?''

ஆனந்தன் குத்தலாகப் பேசியது அவள் நெஞ்சிலும் வேலாகப் பாய்ந்தது. அவளது கையிலிருந்த கம்பியால் வேகமாக பலாவிலைகள் மேல் குத்தினாள். செம்மண்ணிலே ஒவ்வொரு குத்தலும் காயங்களை ஏற்படுத்தியது.

ஆனந்தன் கிணற்றடியை நோக்கித் திரும்பினான்.

''அந்த அடைவு கூப்பனை எடுத்துத்தாறனென்றியள். இன்றும் தரேல்லை''

வெறுப்போடும் அழுத்தத்தோடும் சொன்னாள்.

''சங்கக்கடை மனேச்சரிட்டையும் சொல்லியிருக்கிறன். நான் மறந்தாலும் நீ போய் நான் சொன்னதென்று ரண்டு மூன்று நாள் கழிச்சுக் கேள். அவன் செல்லாச்சியிட்டை வாங்கித் தருவான்''

''நீங்களும் சேர்ந்துதானே அரிசிக் கூப்பன்களை அடைவு பிடிக்கிறியள்''

''ஆரடி சொன்னது''

''எங்கடை பக்கத்திலை யெல்லாம் கதைக்கினம்''

''நான் உந்த ஏளிய தொழிலெல்லாம் செய்வனா''

தன் கபடத்தை மறைக்கும் வார்த்தைகளாக ஒலித்தன.

''அப்ப மனேச்சரும் அவற்றை மாமியும் கவண்மேந்து தந்த கூப்பன்களை அடைவு பிடிச்சுக் கொள்ளையடிக்கப் பார்த்துக் கொண்டிருக்கிறியள்தானே''

''என்னடி நியாய அநியாயம் நீ பேசப் பார்க்கிறாய். சும்மாவா, காசு கொடுத்துத்தானே அடைவு பிடிக்கிறாங்கள்?''

www.padippakam.com



ஆனந்தன் 'எளிய தொழில்' என்று முதல் பேசியதற்கும் பின்னர் 'நியாயமானது' என்று வாதிட முனைவதற்கும் இடையாக அவனது ஈடு பாட்டை அவனே ஒப்புக் கொள்வதை அன்னம் ஊகித்துக் கொண்டாள்.

''நெருப்பில்லாமல் புகைக்காது என்பது பொய்யா''

அவளோடு பேச விரும்பாதவனாக ஆனந்தன் முன்னேறினான். பல மாதங்களின் பின்னர் அரிசிக் கூப்பன்கள் கையில் கிடைக்கப் போகின்றன என்பது மகிழ்ச்சியாயிருந்தது. ஆயினும் ஏதோ ஒரு முள் நெஞ்சின் அடியில் குத்துவதாகவும் தோன்றியது.

## 34

வெங்காயச் சங்கத்தார் கூடை வாங்கத் தொடங்கியதும் அன்னத்திற்கு ஆறுதலாயிருந்தது. அவள் வாங்கிக் கொடுத்த பனை ஈர்க்குகள் கூடையாக, பணமாக மாறின. குடும்பத்தில் முன்னர் இருந்த உணவு நெருக்கடி தீர்ந்து வந்தது. இடையிடை வீட்டில் மீன் குழம்பு வைத்தாள்.

முன்னர் சங்கக்கடை மனேச்சருக்கு கள்ள மார்க்கெட்டில் விற்பதற்கு விட்ட மிளகாய், பருப்பு, மாஸ் போன்ற பொருட்களை தானே பணம் கொடுத்து வாங்கினாள். துணி வாங்கும் கூப்பன் துண்டை மனேச்சர் கேட்ட விலைக்கே விற்று விடாது மூன்று யார் சீத்தைத் துணியும் வாங்கினாள். ஆறுமுகத்தார் வீட்டின் அயல் வீட்டுச் செல்லம்மாவின் மகள் தயாநிதியைக் கொண்டு அளவான சட்டைகளும் தைத்துக் கொண்டாள்.

## 35

தங்கம்மா காய்ச்சலாக படுத்து விட்டாள். அயல் வீட்டுச் செல்லம்மா வந்து அடுப்பை மூட்டி தேநீர் போட்டுக் கொடுத்தாள். ஆனந்தனின் காலை உணவிற்கு கடையப்

www.padippakam.com



பழும் வாங்கி வைத்தாள். செல்லம்மா அங்கு அடிக்கடி வருவதை தங்கம்மா விரும்புவதில்லை. தன் அடுக்களையி லிருந்த ஏதாவது சீனி கோப்பித்தூளையும் தட்டத்திலிருந்து வெற்றிலை பாக்கையும் திருடிக் கொண்டு போய் விடு வாளோ என்ற அச்சம். அது தவிர செல்லம்மாவிற்கு வயதான குமர்கள் மூவர் இருந்தனர். அப்பெண்கள் அங்கு வருவதையும் தங்கம்மா வெறுத்தாள். 'தன் மகனை சீதன மில்லாது அவளவை பிடித்து விடுவாளவையோ' என்ற பயமும் உள்ளூர இருந்தது. செல்லம்மாவும் ஆனந்தனுடன் கனிவாகக் கதைத்துப் பிடித்து விடுவாளோ என்ற ஐயமும் வேறு இருந்தது.

ஆயினும் தங்கம்மா பாயில் விழுந்தால் முதலில் ஓடி வருவது செல்லம்மா, பிள்ளைகளே. அவர்களது பரிவையும் உதவியையும் சந்தேகத்துடனேயே தங்கம்மா வரவேற்றாள்,

செல்லம்மா படுக்கையில் விழுந்ததும் அன்னத்தின் வேலைகள் அங்கு அதிகரித்தன. செல்லம்மாவும் சேர்ந்து அவளிடம் வேலை வாங்கினாள்.

தங்கம்மாவின் புலம்பலுக்கும் ஏச்சிற்கும் அஞ்சி ஆறு முகத்தாரும் நீண்ட நேரத்தை வீட்டிலேயே கழித்தார். ஆயுர்வேத வைத்தியர் பொன்னுசாமியை வீட்டிற்கு அனுப்பி விட்டு ஆனந்தன் வழமை போல தன் நாளாந்த வேலை களைக் கவனிக்கவும் தெருச்சுற்றவும் சென்று வந்தான்.

''இளைய தம்பியை வரச் சொல்லி எ்ழுதுங்கோ''

அன்னம் தங்கம்மாவிற்கு அறிவுரை கூறினாள். செல்லம்மாவும் அதை வரவேற்றாள்.

வடிவேலுமேல் செல்லம்மாவிற்கும் நல்ல வாரப்பாடு. அவன்தான் தர்மசிந்தை உள்ளவன். என்றாவது தான் வாய்விட்டுக் கேட்டால் தன் பிள்ளைகளில் ஒன்றைக் கட்டு வான் என்ற சிறு நம்பிக்கை. அதை அன்னத்திடமே ஒரு நாள் செல்லம்மா சொல்லியிருந்தாள்.

www.padippakam.com



''வடிவேலுதான் உங்களையும் பார்க்கத்தக்க பிள்ளை
என்ரை மூத்தவளிட்டைச் சொல்லி காயிதம் எழுதிப்
போடட்டோ''

செல்லம்மா சொன்னதைக் கேட்ட போது தங்கம்மா
விற்குக் கோபந்தான் வந்தது.

''நானிப்ப என்ன சாகப் போறனா, அவனை வர
சொல்லி எழுத.. தண்ணி வைச்சுத்தரப் பஞ்சியெண்டா
உன்னை இஞ்சை வரச் சொல்லி ஆரேன் கேட்டவையோ

செல்லம்மாவின் முகத்தில் அறைத்தது போல தங்கம்
கேட்டாள்.

''ஆரப்பிடிச் சொன்னது. சுகமில்லாமலிருக்கேக்
தனக்குத் தெரிவிக்கேல்லை என்று பிறகு தம்பி உங்கை
தான் குறை சொல்லுவான் என்றுதான் சொல்ல வந்தன்

செல்லம்மா கதையை அழகாகச் சமாளித்தாள். த
எப்படியும் தங்கம்மாவைப் பகைக்க முடியாது என்ப
அவள் அறிவாள். உள்ளூற 'இந்தக் கிழவிக்கு எ
நன்மை செய்தாலும் நன்றி காட்டாது' என்று
கொண்டாள்.

அன்று அன்னம் வேலைகளை முடித்து பிரப்பந்தட்டி
நிமிர்த்தி வீட்டின் சீமெந்துக்குந்தோடு நின்றபடி தங்க
வைப் பார்த்தாள். அவள் அனுங்கியபடி படுத்திருந்தாள்

''இப்ப எப்பிடியெணை காய்ச்சல்''

அன்னம் அவளை நோக்கி குரலெழுப்பினாள்.

''சரியாய் விட்டபாடாயில்லை. வாயெல்லாம் கைக்குது

''காய்ச்சலென்றால் கைக்குந்தானே''

''உந்தக் கிழவன் உங்கினை வந்திட்டுதோ பார்''

அவ்வேளையிலும் தங்கம்மாவின் திமிர் அடங்கவில்லை
என அன்னம் எண்ணிக் கொண்டாள். வழமைபோலவே
அன்றும் கிழவனென்றே வாய்கூசாது ஆறுமுகத்தாரை

www.padippakam.com



கேட்டாள். 'இவ பெரிய குமரியாக்கும்'—அன்னத்தின் நினைவு குறுகுறுத்தது.

''இன்னும் வரேல்லை. என்ன வேணும்? அங்காலை போய் சொல்லி ஆரையேன் கூட்டியரட்டா''

அன்னம் சொன்னாள்.

''வேண்டாம் பெலவீனமாயிருக்கு. நீ இங்கை வாடி. என்னை ஒருக்கா தூக்கிவிடு''

அன்னம் அவ்வழைப்பை எதிர்பார்க்கவேயில்லை. ஆயினும் தயக்கமின்றி உள்ளே சென்று தங்கம்மாவைத் தூக்கி எழுந்து நிற்கச் செய்தாள். தங்கம்மா அவளது தோள்களைப் பற்றியப்டியே அடிமேலடி வைத்து நடந்து மூலைப் பக்கமாகச் சென்றாள்.

ஆறுமுகத்தார் தோட்டத்தால் வந்ததும் தன் நோயையே மறந்து வையத் தொடங்கினாள். அவருக்கு அவை வழமையான அர்ச்சனைகளே. அவர் அவற்றைப் பொருட் படுத்தாது மருந்தை எடுத்து அவளது வாயில் ஊற்றினார்.

''நானில்லை என்றால் செல்லம்மாவின்ரை பெட்டையளைக் கூப்பிட்டிருக்கலாமே''

ஆறுமுகத்தார் சொன்னார். நெற்றியில் புறவிரல்களை வைத்துத் தொட்டுப் பார்த்தார். காய்ச்சல் விட்டிருந்தது.

''அவளவையெல்லாம் எனக்குத் தெரியாமலே இளையவனுக்கு காயிதம் எழுதினாளவைபோலை இருக்கு மற்ற முறை அவன் வரேக்கை அந்த வீட்டுப்பக்கமே போகவிடப் படாது''

அவ்வேளையிலும் தங்கம்மாவின் கவலைகள் வேறாக இருந்தது ஆறுமுகத்தாருக்கே ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

''நான் ஒருத்தன் ஆடினனென்று உன்ரை பிள்ளைகளும் நீ கீறின கோட்டுக் கைதான் ஆடப் போகுதுகள்''

ஆறுமுகத்தார் தன் தோல்வியை ஒப்புக் கொண்டே சொன்னார்.

www.padippakam.com



''நான் உயிரோடை இருந்தால் பார்ப்பமே''

''நீ பார் அவன் ஆரேன் ஒரு பள்ளியைத் தான் ஒரு நாளைக்குக் கூட்டிக்கொண்டு வருவான்''

''ஆரேன் ,சிங்களத்தியைக் கூட்டி வந்தாலும் பரவாயில்லை. பள்ளியைக் கட்ட நான் உயிரோடை இருக்கும்வரை விடுவனா?''

# 36

அடுத்த ஆண்டுத் திருவிழாவிற்கு முன்னர் கோவில்களெல்லாம் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் திறந்து விடப்பட்டு விடும்; கிராமங்களிலுமுள்ள தேநீர், சாப்பாட்டு கடைகளில் தாழ்த்தப்பட்டவர்கள் அனுமதிக்கப்படுவர்; இவற்றை வலியுறுத்தும் சட்டங்களும் இயற்றப்பட்டு விடும். யாவற்றிலும் சமரசம் ஏற்பட்டு விடும் என்றெல்லாம் நம்பியிருந்த பலர் ஏமாற்றமேயடைந்தனர். தனிப்பட்டவரின் கோவில்களில் தாழ்த்தப்பட்டவர் நுழைவதை கோவில் பூசாரிகள் தடுத்தால் தாம் தலையிட சட்ட அதிகாரம் போதாது என்று பொலிசார் சொல்லிவிட்டு உயர்ந்த சாதிக்காரர் பக்கமாகவே நின்றனர்.

மாவட்ட அதிபர் முன்னிலையில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்போரின் பேச்சு வார்த்தைகளெல்லாம் நடைபெற்றன. வேலாயுதம், இலட்சுமணன் ஆகியோரும் அதில் பங்குபற்றினர். அங்கு சில விஷயங்களில் சமரசம் ஏற்பட்டபோதும் நடைமுறையில் வேளாளர் சிறிதும் விட்டுக் கொடுப்பதாக இல்லை.

அம்மன் கோவிலில் பங்குனித் திங்கள் பொங்கலின் போதும் போராட்டம் நடைபெற்றது தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பொங்குவதற்குத் தண்ணீர் இல்லை. கோவில் வீதியில் இருந்த கிணற்றில் வேளாளர் குப்பையைக் கொட்டி விட்டனர்; மற்றோர் கேணியைச் சுற்ற வர முள்வேலி

www.padippakam.com



அடைத்துக் காவல் போட்டனர். கோவிலை அடுத்து இருந்த வீடுகளெல்லாம் உயர்சாதிக்காரரின் வீடுகள். ஆகவே வேறு வழியின்றி காவல்போட்ட வேலியை உடைத்து கேணியில் தண்ணீர் அள்ள அவர்கள் முனைந்தனர். பொலிசார் வந்து உயர் சாதிக்காரர் பக்கமாகத் தடுத்தனர். அவர்களையும் இடித்துத் தள்ளிவிட்டு தாழ்த்தப்பட்டவர்கள் கேணியில் இறங்கினர். பொலிசார் உடனே குண்டாந்தடியால் தாக்கினர். கொதிப்படைந்த பெண்கள் குடங்களிலே மறைத்து வைத்திருந்த வெடிகுண்டுகளை எடுத்துப் பொலிசார் மேல் வீசினர். இரண்டு பொலிசார் காயப்பட்டனர். சிலர் கேணிக்குள்ளே தள்ளிவிடப்பட்டனர்.

வெடிச் சத்தத்தைக் கேட்டதும் பலர் அங்குமிங்குமாக சிதறி ஓடினர். பொங்கல் பானைகளை அடுப்புகளிலேயே விட்டு விட்டு உயர் சாதிக்காரரும் ஓட்டமெடுத்தனர்.

அம்மன் கோவில் பொங்கல் விழா பாதியில் நிறுத்தப் பட்டது. பொலிசார் கோவிலை அடைத்து எவரும் உள்ளே நுழையாதபடி காவல் போட்டனர்.

தாழ்த்தப்பட்டவர்களிலும் பலருக்கு குண்டாந்தடிபட்ட ஊமைக் காயங்கள். இலட்சுமணனுக்கும் ஒரு புயத்திலே நோவு.

குண்டெறிந்ததாகக் கூறப்படும் ஒரு குமரிப் பெண்ணை பொலிசார் தேடித்திரிந்தனர். அவள் அகப்படவில்லை.

இந்நிகழ்ச்சிகளால் கிராமத்தில் மீண்டும் போர்க் குணங்கள் கூர்மையடைந்தன.

## 37

பொங்கலின்போது தீவிரமாக நின்ற இலட்சுமணனின் மச்சான் தில்லையனை துப்பாக்கியால் ஒருநாள் அதிகாலையில் வேளாளர் சுட்டுவிட்டனர். வயிற்றிலே குண்டுகளுடன்

www.padippakam.com



அவனை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். அதைப் பற்றி விசாரணை செய்த பொலிசார் இரு வேளாள வாலிபர்களைக் கைது செய்து விளக்க மறியலில் வைத்தனர். உண்மையில் தில்லையனைச் சுட்ட ஆனந்தனின் வலது கையாளான செல்வரத்தினம் கைது செய்யப்படவில்லை. ஆனந்தனும் செல்வரத்தினமும் தமது வீரப்பிரதாபங்களையும் கெட்டித்தனங்களையும் பாறைசாற்றிக் கொண்டிருந்தனர்.

ஆனந்தன் அன்னத்திடமேயே தன் கெட்டித் தனங்களைச் சிறிது சிறிதாகக் கூறத் தொடங்கினான்.

''அன்றைக்குத் தில்லையன் துள்ளினான். இன்றைக்கு விழுந்தான். நான் நினைச்சுத்தோற்றது எதுவும் கிடையாது. இலட்சுமணனையும் கவனமாயிருக்கச் சொல்லு''

''இரண்டு பேர் இப்ப விளக்க மறியலிலை தானே இருக்கினம். கொலை என்றால் தூக்குத்தானே''

அன்னம் சொன்னாள்.

ஆனந்தன் குரல் எழ பலத்துச் சிரித்தான்.

''கொஞ்ச நாளைக்கு அவங்க விளக்க மறியலிலை இருந்திட்டு வருவாங்கள். அவ்வளவுந்தானே. உண்மையாகச் சுட்டவனைப் பிடித்தாலெல்லோ ஓரளவுக்கென்றாலும் நிரூபிக்கலாம். இது சுட்டவன் ஆரோ. உள்ளே இப்போது இருப்பவன் வேறை ஆரோ''

''சரியான சாட்சி கிடைத்தால்''

''ஆரெடி பள்ளர் தானே பிடிபட்டவங்களுக்கு எதிராகச் சாட்சி சொல்லப் போறாங்கள். வெள்ளாளர் ஆரேன் சொல்ல வருவாங்களா? வேலிக்கு ஓணான் சாட்சி. ஆர்நம்பப் போறாங்கள்? கோட்டிலை கொஞ்சக் காசு செலவழியும். அவ்வளவுந்தான்''

''பள்ளருக்கும் உந்த வசதி கிடைக்குந்தானே''

www.padippakam.com



''ஆனால் பொலிஸ் எப்பவும் எங்கடை பொலிசாராத் தான் இருக்கும், தெரியுமர்?''

''அது தெரியும். ஆனால் சாட்சி''

''பள்ளர் பறையரைக் காசு கொடுத்து வாங்கி விடுவம்''

''அந்தக் காலமெல்லாம் மலைஏறிப் போச்சு''

அன்னம் ஏளனமாகச்சொன்னாள். அதைக் காதில் வாங் காதவனாக ஆனந்தன் கக்கூசை நோக்கி நடந்தான். அன்னம் மீண்டும் அவன் காதில் விழத்தக்கதாகச் சொன்னாள்:

''உங்கடை வலது கை செல்வரத்தினத்தைக் கொஞ்சம் கவனமாய் நடக்கச் சொல்லுங்கோ''

அன்னம் எச்சரித்து ஒருவாரமாகவில்லை. மாலையில் பொழுது கருகும் வேளை தோட்டத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்தபோது அவனது வயிற்றில் துப்பாக்கிச் சன் னம் பாய்ந்தது. பிரிந்த குடலோடு அதே இடத்திலேயே இறந்தான்.

பழிக்குப்பழி வாங்கியதுபோல ஆகிவிட்டது. ஆனந்தன் தனக்குச் சுட்ட சூடாகவே அதை எண்ணிக் கொதிப்படைந் தான். உண்மையாகச் சுட்டவனை எவராலும் பிடிக்க முடிய வில்லை. விளாத்தியடிப் பக்கமாக செல்வரத்தினத்தைச் சுட்ட இரட்டைக் குழல் துப்பாக்கியை வீடுவீடாகப் பொலி சாரைக் கொண்டு தேடச் செய்தான், ஆனந்தன். எவ்வித பலனும் கிடைக்கவில்லை. சுட்ட வேளையில் தோட்டப்பகுதி யில் நின்ற மூவரைப் பொலிசார் கைது செய்தனர்.

ஆனந்தன் பல நாட்களாகச் சோர்வோடு திரிந்தான். அன்னத்திடமே கதை கொடுத்து 'சுட்டவன் ஆர்?' என்று அறிய முயன்றான். அவள் முன்னர் தான் வேடிக்கையாகச் சொன்னது வினையாகி விட்டது, எனக்கு விளாத்தியடி பற்றி எதுவுமே தெரியாது என்று சொல்லி விட்டாள்.

படிப்பகம்

www.padippakam.com



''லட்சுமணன் அடிக்கடி உன் வீட்டுப் பக்கந்தான் வாறானாமே. ஒரு மாதிரி கதை விட்டு கதை பிடுங்கிச் சொல்லன்ரி''

ஆனந்தனுக்கு அன்னத்தின் மேல் நல்ல நம்பிக்கை. அவள் எப்பொழுதும் பள்ளரை விட்டு தன் பக்கம் நிற்பாள் என்ற துணிவு. அவள் தன்னோடு எதிர்த்து இடையிடை வாதாடுவதெல்லாம் விளையாட்டுக்காக எனவே எண்ணி னான்.

''அவன் எங்க வீட்டை வாறதென்று ஆர் சொன்னது?''

''என்னடி எனக்குத் தெரியாமலே மழுப்பப் பார்க் கிறாய். நீதான் வேலாயுதன்ரை மகளுக்கு அவனைக் கலியாணம் பேசிறாயாம்''

அவன் வாயால் அந்தச் செய்தியைக் கேட்டபோது சிறிது வியப்பும் பெருமையும் அடைந்தாள்.

''அது முந்தி ஒருக்கா பேசினதுதான். பிறகு இந்தக் கலகங்கள் வந்த பிறகு அமந்து போச்சு''

''செல்வரத்தினத்தைச் சுட்டவனை மட்டும் அறிந்து சொன்னால் நீ கேட்ட என்னவும் தருவன்''

''பார்ப்பம்''

அன்னம் தட்டிக் கழிப்பதற்காகச் சொல்லி வைத்தாள். பேச்சு வாக்கில் பல பெயர்கள் அடிப்பட்டன. வற்புறுத்தி னால் கைது செய்யப்பட்ட மூவரில் ஒருவனின் பெயரையே சொல்லித் தப்பித்து விடலாம் என அன்னம் எண்ணிக் கொண்டாள்.

செல்வரத்தினத்தின் கொலைக்கு என்றும் எவரும் மறந்து விடாதபடி பழிக்குப்பழி வாங்கவேண்டும் என்று தூக்கமேயின்றி ஆனந்தன் சிந்தித்துக் கொண்டேயிருந்தான்.



படிப்பகம்

www.padippakam.com

# 38

இராசாத்திக்குப் படிப்பிலேயே கவனம் செலுத்த முடிய வில்லை. அன்னமே தன் மனத்திற்குச் சாந்தி தரவல்லவள் என்று அவள் வீடே கதி என்று மாலையிலும் இரவிலும் அன்னத்தின் குடிசையிலேயே பொழுதைக் கழித்தாள். வேக மாகப் பேசப்பட்ட கலியாணப் பேச்சுகளெல்லாம் மீண்டும் கூர்மையடைந்த சாதிக் கலவரங்களால் கைவிடப்பட்டன.

அன்னத்திடம் இலட்சுமணன் வருவதே குறைந்து விட்டது. சாதிச் சண்டைகளால் ஏற்பட்ட புதிய வழக்குகள், அவற்றை ஒட்டிய ஆலோசனைகள், செலவிற்குப் பணம் சேகரித்தல் ஆகியவற்றை மாலை, இரவு நேரங்களில் கவனிப்பதற்கே அவனுக்கு நேரம் சரியாயிருந்தது. இடையில் ஒரு தடவை கொழும்புக்கும் சென்று வந்தான். அங்கு வடிவேலுவையும் கண்டு உதவிகள் பெற்று வந்தானாம்.

கொழும்பால் வந்தபின் ஒரு தடவை அன்னத்திடம் வந்து செய்திகள் சொன்னான்.

''வடிவேலு உன்னைப் பற்றியும் விசாரித்தான்''

''வேறு ஏதாவது சொன்னாரா?''

''இல்லையே''

''எப்ப இனி வருவாராம்''

''இரண்டு மூன்று மாசத்துக்குள்ளை. திருவிழாவுக்கு முந்தி''

''ஏதேன் கொண்டாறது பற்றிச் சொன்னாரா.''

''இல்லை. என்ன ஏதேன் கேட்டிருந்தியா?''

அன்னம் எதிர்பார்த்தது கிடைக்காது என்ற மனச் சோர்வே ஏற்பட்டது.

''இல்லை, சும்மா கேட்டன்''

www.padippakam.com



அன்னம் மேலும் கேள்வி எழாது விஷயத்தை மழுப்பிப் பேச்சைத் திசை திருப்பினாள்.

''இந்த இராசாத்திப் பெட்டையாலை பெரிய கரைச்சலாயிருக்கு. வீட்டையே கூட்டிக் கொண்டுபோய் விடுங்கோவன்''

''இப்ப இருக்கிற கரைச்சல் போதாது. அதையும் கூட்டிக்கொண்டு போய் என்ன செய்யிறது?''

''என்னாலையே இங்கே கரைச்சல் தாங்க முடியேல்லை. படிக்க ஏதேன் புத்தகம் வேண்டுமாம். நீங்க படிக்கிறதிலை கொண்டந்து குடுங்கோவன்''

''சரி''

இலட்சுமணன் சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீங்கள்?''

''அவள் ஏதேன் காதல் கதைப் புத்தகம் எதிர்பார்ப்பாள். நான் படிக்கும் புத்தகங்களைக் கொடுத்தால்...''

மீண்டும் இலட்சுமணனுக்குச் சிரிப்பே வந்தது.

''எதையாவது கொண்டந்து குடுங்கோவன். அவள் படித்துப் பார்க்கட்டன்''

அதன் பின்னர் இலட்சுமணன் வரவில்லை. ஒரு சிறு புத்தகப் பார்சலை அனுப்பியிருந்தான். அன்னம் அதை உடைத்துப் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தாள், முதற் பக்கத்தில் புன் சிரிப்போடு ஒரு கிழவரின் படம் இருந்தது. மற்றப் பக்கங்களில் இருந்தவற்றை தனக்குத் தெரிந்த தமிழில் படித்துப் பார்த்தாள். எதுவுமே நன்கு புரியவில்லை. அதேபோன்ற ஒரு புத்தகத்தை முன்னர் மாணிக்கன் எடுத்து வந்தது அவள் நினைவில் வந்தது.

மிஷன் பாடசாலையில் படித்த காலத்தில் அவள் பைபிளை பார்த்திருக்கிறாள். அதைத் திறந்து, கண்களை

www.padippakam.com



மூடிக்கொண்டே நவமணி வாத்தியார் ''பரமண்டலங்களில் இருக்கின்ற எங்கள் பிதாவே...'' ஜெபம் சொல்ல, அவளும் மற்ற மாணவிகளுடன் சேர்ந்து உரத்துக் கத்தியிருக்கிறாள். அது போலத்தான் இதுவும் பைபிள் போல இருக்குமோ.

இலட்சுமணன் இராசாத்திக்குப் பரிசு தந்ததாக அன்னம் சொல்லி அந்நூலைக்கொடுத்ததும் அவள் பெற்று நெஞ்சோடு அணைத்தபடி பெருமிதத்தோடு நின்றாள். அவ்வேளை அதைத் திறந்து பார்க்கவே இராசாத்தி விரும்பவில்லை.

''ஏதோ படிச்சு நல்ல கதையாய் இருந்தால் எனக்கும் சொல்லு''

இராசாத்தி தலையாட்டினாள்.

''வேதப் பள்ளிக்கூடத்திலை நான் படிக்கேக்கை, நவமணி வாத்தியார் உதே அளவில் ஒரு புத்தகத்தைத் திறந்து வைத்துக்கொண்டு நல்லநல்ல கதை எல்லாம் சொல்லுவா''

அன்னம் தன் பள்ளி நாட்களை நினைவு கூர்ந்தாள். கிராமத்தில் பாடசாலைகள் இருந்தபோதும் அந்த ஒரே மிஷன் பாடசாலையில்தான் தாழ்த்தப்பட்டவர் படித்து வந்தனர். அங்கும் பள்ளர் பறையருக்கு வேறான இடம். பிரார்த்தனை செய்யும் போதும் அவ்வாறே. அது தமிழில் மட்டும் கற்பிக்கும் பாடசாலையே. ஆங்கிலப் பாடசாலையில் அவர்களுக்கு அனுமதி கிடையாது. பட்டணத்தில்தான் ஒரு சில ஆங்கிலப் பாடசாலைகள் அவர்களுக்கும் படிக்க அனுமதி வழங்கின.

நவமணி வாத்தியார் அடிக்கடி அவளைப் பார்த்துச் சொல்லும் சில வார்த்தைகள் அவளுக்கு அவ்வேளை நினைவில் வந்தன.

''பள்ளிக்கு என்னடி படிப்பு? போய் செம்பாட்டிலை ஆடு மாட்டை மேயன்'' பாடம் சரியாகச் சொல்லாவிட்டால் இதே அர்ச்சனை அவளுக்கும் மற்றப் பள்ளர் பறையர்களுக்கும் தவறாது நாள்தோறும் நடக்கும். ஏதாவது குழப்படி

www.padippakam.com



செய்து விட்டால் பற்களைக் கடித்துக் கொண்டே கத்துவாள்?
''என்ன சொன்னாலும் பள்ப்புத்தி போகாது.''

படிப்பு தமக்குரிய தொழிலல்ல, வேளாளருக்கு மட்டுமே வரக் கூடியது என அவள் நம்பியிருந்தாள். இப்போது இலட்சுமணன், இராசாத்தி மற்றும் தமது சாதியில் உத்தி யோகம் பார்க்கும் சிலரை எண்ணியபோதுதான், தான் எண்ணியது எத்தனை தவறு என்பது தெரிந்தது.

ஒரு தடவை ஆங்கிலப் படிப்பைப் பற்றியும் ஊரிலுள்ள ஆங்கிலப் பாடசாலைகளில் தாழ்த்தப்பட்டவர்கள் படிப்ப தற்கு இடந்தர முன்னர் மறுத்திருந்தது பற்றியும் மாணிக் கன் சொன்னது அவள் நினைவில் வந்தது.

''நிலத்தை வைச்சுக்கொண்டு ஒரு காலத்திலே எம்மை அடிமைப்படுத்தினாங்கள். வெள்ளைக்காரன் வந்ததும் இங்கிலீஸ் பாஷையையும் தமக்குச் சொந்தமாக்கி உத்தி யோகத்தாலை எம்மை அடிமைப் படுத்தி விட்டாங்கள். இது இன்னும் எத்தனை காலம் போகப் போகிறதென்று பார்ப்போமே.''

# 39

வயிற்றில் துப்பாக்கிக் குண்டுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட தில்லையனுக்கு இரண்டு தடவை சத்திர சிகிச்சை நடந்தது. உழைத்து உரமேறிய உடல், வாலிபப் பருவம். அவன் காட்டயம் பிழைத்து விடுவான் என்ற நம் பிக்கை யாவருக்கும் இருந்தது. கிராமத்திலிருந்து பள்ளர் பள்ளியர் பறையர் யாவரும் அவன் பிழைத்து விட வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் நாள்தோறும் அவனைச் சென்று பார்த்து வந்தனர்.

அன்னமும் ஒருநாள் மாலை அயல் வீட்டுத் தெய்வானை மற்றும் பள்ளிகளுடன் சென்று பார்த்தாள். வெட்டிப் போட்ட குருத்து வாழைபோல அவன் கிடந்தான்.

www.padippakam.com



வயிற்றுக் கட்டியிலிருந்து இரத்தவாடை வீசிக் கொண்டிருந்தது.

முகத்திலே நோவினால் ஏற்படும் கருநிழல் படிந்திருந்தது- ஆயினும் அங்கு வந்தவரின் முகங்களை இனம் கண்டு பேசினான்.

''நீ தான் அன்னமா? இலட்சுமணன் உன்னைப் பற்றி மூந்திச் சொல்லியிருக்கிறான்''

தெய்வானை அறிமுகப்படுத்த தில்லையன் மெல்லிய குரலில் சொன்னான். அன்னத்தைக் கூர்ந்து பார்த்தான்.

சில நேரம்கழித்து இலட்சுமணன் அங்கு வந்தான். அன்னத்தை ஏற இறங்கப் பார்த்தான்.

''எடியே, நீயும் வந்திருக்கிறியா? நல்ல சீலை ஒன்று உடுத்தியிருக்கிறாயே. இன்றைக்குத்தானே முதன் முதலாய் தாவணியோடு உன்னைப் பார்க்கிறன், அள்ளி எறியுதெடி. உங்கை ஆரேன் வெள்ளாளப் பொடியங்களின்ரை கண்ணிலை பட்டால் உனக்குப் பின்னாலை சுத்தப் போறாங்களே''

இலட்சுமணனின் பாராட்டைத் தாங்க முடியாது அவள் தலை குனிந்தாள்.

''நாங்க பஸ் ஏறப் புறப்படுறம். நீங்க இப்பதான் வாறியளா?''

''விளக்கமறியலிலை இருக்கிறாங்களே அவங்களைப் பார்த்திட்டு வாறன்''

''எப்பிடி இருக்கினம்?''

''இந்த ஜெயிலர், 'காட்'மாராலை பெரிய கரைச்சலென்று கள்ளச் சாராயம் கொண்டு போய் கொடுத்தன். மூந்தியும் ஒன்று இரண்டு தடவை கொடுத்தனாங்கள். இப்ப ஆரோ ஒருத்தன் புதிசாய் வந்திருக்கிறானாம். அவன் சரக்குக் கேக்கிறானாம்''

படிப்பகம்

www.padippakam.com



சிரித்தபடியே இலட்சுமணன் சொன்னான். அவன் கோபமடைந்திருப்பான் என அவள் எதிர்பார்த்தாள்.

''அவன் ஆரெண்டு பார்த்து வைக்கேல்லையா? முள்ளு முருக்கங்கம்பாலை ராத்திரியிலை வைச்சு வெளுக்க வேணும்''

''அதெல்லாம் சரிவராது. அவங்கடை கோட்டும் கொஞ்சம் தடிப்பான கோட்டெல்லே. நாங்கள்தான் அடிச்சதென்று தெரிஞ்சாலும் அவங்கடை உயிரை அங் கையே வைச்சு வாங்கிப் போடுவாங்கள். அதுக்கு வேறை வழியொன்று யோசித்துக் கொண்டு வாறன்''

இலட்சுமணன் மீண்டும் சிரித்தான்.

''என்ன வழி''

''நீ குமரிக்கு அதெல்லாம் ஏன் தெரியவேணும்?''

''பகிடியை விட்டிட்டுச் சொல்லுங்கோ''

''அந்த மீன் விக்கிற கருப்பி இருக்கிறாளே. அவளிட்டை அஞ்சு ரூபாயைக் கொடுத்து அனுப்பி விடப் போறன். சரக்குக் கேட்ட தம்பி பிறகு ஆஸ்பத்திரிக்குத் திரியட்டும்''

அன்னம் எதுவும் பேசவில்லை. அவனது விவேகத்தை ஓரளவு புரிந்து கொண்டாள். வெட்கத்தோடு உள்ளூறச் சிரித்தாள். தெய்வானையும் மற்றவர்களும் அழைக்க அவர் களோடு அன்னமும் புறப்பட்டாள். தில்லையனைச் சுற்றிவர நின்ற கூட்டம் குறைய இலட்சுமணன் அவன் அருகே சென்றான்.

## 40

அன்று இரவு கிழக்குப் பகுதியில் வாலிபர் சங்கத்தின் கூட்டம் நடைபெற்றது. அது முடிந்ததும் அன்னத்திடம் வந்து சாப்பிட்டு விட்டே வீடு செல்வதென இலட்சு

www.padippakam.com



மணன் சொல்லியிருந்தான். அவன் வருவான் என்பதையும் அறிந்து திரளி மீன் ஒரு துண்டு அன்னம் வாங்கி வந்திருந் தாள், அதில் குழம்பு வைத்தாள், சமையலில் இராசாத்தியும் உதவி செய்தாள். வீட்டிலிருந்து இரண்டு முட்டைகளையும் அவள் திருடி வந்து அன்னத்திடம் கொடுத்தாள்.

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த நடுப்பகுதி யிலேயே அந்த அமங்கலச் செய்தியை ஒருவன் ஓடிவந்து சொன்னான்.

''தில்லையன் செத்துப் போனான்?'

மாலையில் பார்த்து வந்தவர்கள் கூட அத்தனை விரை வில் அவன் மரணம் வருமென எதிர் பார்க்கவில்லை, தாங்க முடியாத துயருடனும் ஆந்திரத்துடனும் யாவரும் யாழ்ப் பாணம் புறப்பட்டனர்.

வேலாயுதமும் இரகுநாதனும் தமது காரில் இலட்சுமண னுடன் வேறும் நாலு பேரைக் காரில் ஏற்றினர்.

வேலாயுதம் தனது செல்வாக்கு யாவையும் காட்ட முனைந்தார்.

பிரேத அறையில் பிணம் இருந்தது.

திடீர் மரணம் சிறிது சந்தேகத்தை ஏற்படுத்தியபோதும் பிரேத பரிசோதனை செய்து காலம் தாழ்த்துவதை இலட்சு மணன் விரும்பவில்லை. 'இதனால் பலன் எதுவும் ஏற்படப் போவதில்லை என்பதை அவனது தோழர்களும் ஆதரித் தனர். ஆயினும் வேலாயுதம் தன் ஆட்களைத் தேடி காரில் ஓடித் திரிந்தார்.

மறுநாள் நண்பகல் பதினொரு மணிக்கு பிரேத பரி சோதனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

கிராமத்திற்கும் பட்டினத்திற்குமாக யாவரும் ஓடித் திரிந்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



மறுநாள் மரண விசாரணை அதிகாரி டாக்டரின் வாக்கு மூலத்தை ஏற்றுக் கொண்டு இதயக் கோளாறு காரணமாக திடீர் மரணம் ஏற்பட்டது என்று தீர்ப்புக் கூறினார்.

இலட்சுமணன் ஆகியோருக்கு அச்செய்தி ஆச்சரிய மளிக்கவில்லை. அன்று மாலையே தகனக்கிரியை செய்வதற்காக வீட்டுக்குப் பிரேதத்தைக் கொண்டு வந்தனர்.

அயற் கிராமங்களிலிருந்தும் பட்டினத்திலிருந்தும் தில்லையனை அறிந்தவர்கள், இயக்கத்தோடு ஈடுபட்டவர்கள், சாதிக் கொடுமையை அறிந்து ஆத்திரமடைந்தோர் யாவரும் வந்திருந்தனர்.

கிராமத்தில் அன்று எவ்வித வேலையும் நடைபெற வில்லை. எல்லோரும் தில்லையனின் குடிசையில் கூடினர்.

கிராமத்தில் பல்வேறு வதந்திகள் உலாவி வரும் செய்திகளும் அவர்கள் செவிகளை எட்டின. எவரும் நம்பவில்லை.

பிரேதத்தைக் கொண்டு வந்தபோது தெருவில் பொலிசார் ஆயுதந்தாங்கி நின்றதையும் யாவரும் பார்த்திருந்தனர். திட்டமிட்டு அத்துன்ப வேளையில் அவர்களை மீண்டும் பழி வாங்க முனைவார்கள் என எவரும் எதிர்பார்க்கவில்லை.

அன்னமும் பல காலத்தின் பின் விளாத்தியடிப் பக்கம் அன்றே வந்திருந்தாள். இலட்சுமணன் வீட்டில் இல்லாத போதும் தில்லையன் வீட்டிற்கு அண்மையிலிருந்த இலட்சுமணனின் வீட்டுக்குச் சென்று அவனது தாய், சகோதரியருடன் பேசினாள். வீட்டைப் பார்த்தாள் ஒரு சிறிய தலைவாசல், பிட்டித் திண்ணை, ஒரே அறை; தலைவாசல் நிலம் மட்டும் சீமெந்து; மற்றவை யாவும் மண்ணால் கட்டப்பட்டவையே; அவளது குடிசை அளவில் குசினி தனியாக இருந்தது. தலைவாசலின் ஒரு மூலையில் மேசைமேல் புத்தகங்கள் அடுக்கப்பட்டிருந்தன. வீடு மெழுகி தூய்மையாகவே இருந்தது.

www.padippakam.com



இலட்சுமணனின் மேசைக்கு மேலாக சில படங்கள் தொங்கின. அதில் புன்சிரிப்போடு இருக்கும் அந்தக் கிழவரின் படத்தை மட்டும் எங்கோ பார்த்திருக்கிறாள். எங்கே?

மரண வீட்டு அலுவலாக கத்தி ஒன்று வீட்டில் எடுப்பதற்காக ஓடி வந்த இலட்சுமணன் அன்னத்தை அங்கு கண்டான்.

''நீயும் வந்திருக்கிறியா? உங்கடை பக்கத்திலை என்ன சேதி? ஆனந்தன் என்னவாம்''

''ஏதோ ஓடித்திரிவதாக அறிஞ்சன். அவன் பழிவாங்க வேணுமென்று முன்னரே சொல்லிக் கொண்டிருந்தவன். இன்றைக்கு ஏதேன் செய்தாலும் செய்து விடுவான். கவனமாயிருப்பதுதான் நல்லது''

''உன்னைக் கண்டது நல்லதாய்ப் போச்சு. உண்மையாய் நீ அப்பிடி நினைக்கிறியா''

''நிட்சயமாய். எரியிற வீட்டிலைதான் எண்ணெய் ஊத்தி வேடிக்கை பார்ப்பாங்கள்''

''உன்னைக் கண்டது நல்லதாய் போச்சு''

இலட்சுமணன் ஓடினான்.

அன்னமும் இலட்சுமணன் தாயுடன் தில்லையன் வீட்டிற்கு அவன் பின்னே வந்துவிட்டாள். அங்கு அழுகைக் குரலிலும் பார்க்க வஞ்சினமே யாவர் முகத்திலும் கண்ணிலும் முற்றிக் கொண்டிருந்தது.

## 41

மரண ஊர்வலம் புறப்பட்டது. தில்லையனின் சடலத்தைச் சுமப்பதில் பெருமைப் பட விரும்பும் பல வாலிபர்கள் முன்வந்து தோள் மாறிக் கொண்டனர். கால் மைல் தூரம்

www.padippakam.com



சென்றிருப்பர். தாழ்த்தப்பட்டவர் வாழும் பகுதியின் எல்லை முடிவடையுமிடம்; ஒழுங்கைகள் சந்திக்கும் முச்சந்தி.

அங்கே பொலிஸ் ஜீப் ஒன்று நின்றது. இன்ஸ்பெக்டர் இறங்கி வந்து கையை முன் நீட்டி ஊர்வலத்தை நிறுத்திச் சொன்னார்:

''இந்தப் புது ஒழுங்கை வழியால்தான் சுடலைக்குப் போகவேணும்''

அதிகாரத் தொனியில் இன்ஸ்பெக்டர் சொன்னார்.

''இல்லையே. வழமையாக இந்தப் பழைய ஒழுங்கையாலேயே சவம் கொண்டுபோவோம். இன்றைக்கும் அப்படிதான் போவோம்''

பல வாலிபர் முன்வந்து திடசங்கற்பமாகச் சொல்லினர். இலட்சுமணன், பசுபதி ஆகியோர் முன் நின்றனர்.

''சரி உங்கள் விருப்பம்''

இன்ஸ்பெக்டர் ஜீப்பில் ஏறிப் போய்விட்டார்.

பழைய ஒழுங்கை வழியே ஊர்வலம் முன்னேறிச் சென்றது. வேளாளர் வாழும் பகுதி அது. ஊர்வலத்தில் மரண அமைதி. மேலும் கூப்பிடுதூரம் கடந்திருப்பர்.

திடீரென 'பட்பட்' என பல துப்பாக்கி வெடிச் சத்தங்கள் அமைதியைக் குலைத்தன. திகிலடைந்தவர் பின்னே ஓடினர். துப்பாக்கிச் சன்னம் பட்ட பலர் இரத்தம் பீறிட பின்னோக்கி ஓடினர், வேகமாகப் பிணத்துடன் திரும்பி முன்னர் பொலிசார் தடைசெய்த ஒழுங்கைச் சந்தியில் வந்து பிணத்தைக் கீழே வைத்தனர். துப்பாக்கிச் சத்தம் மீண்டும் தொடர்ந்து வரும் ஒலி கேட்டுக்கொண்டிருந்தது.

காயமடைந்தோரை அழைத்துக்கொண்டு குடிசைகளுக்குச் சென்றனர் சிலர்.

www.padippakam.com



சில வாலிபர்கள் இலட்சுமணனோடு சேர்ந்து ஓடினர்.

சில நிமிடங்கள் கழிந்திருக்கும்.

வேளாளர் பகுதியை நோக்கி துப்பாக்கி வெடிகள் தீர்க்கப்பட்டன. சிலர் பனைகளோடு ஒட்டியொட்டி முன்னேறி வெடிகுண்டுகளை வீசினர். தொடர்ந்து துப்பாக்கி வெடிகள் வேலிகளுடாகப் பாய்ந்தன.

''டே முடிந்தால் வெளியே வாருங்கடா''

சிலர் சத்தமிட்டனர்.

எதிர்ப்பகுதியிலிருந்து வெடிச் சத்தங்கள் ஓய்ந்தன.

இலட்சுமணனும் பசுபதியும் பிணத்தை விட்டுச் சென்ற இடத்திற்குத் திரும்பி வந்தனர். காயமடைந்தவர்களை கார்களில் ஆஸ்பத்திரிக்கு ஏற்றிச் செல்லும் பொறுப்பை சிலரிடம் ஒப்படைத்துவிட்டு, பிணத்தை மீண்டும் தூக்கும்படி ஆணையிட்டனர்.

பிரேத ஊர்வலம் மீண்டும் ஆரம்பித்தது. எதிரே ஒருவித ஒலியுமில்லை. உயர் சாதியினரின் பகுதிகளெல்லாம் ஒரே மரண அமைதி.

''தைரியமிருந்தால் இனிச் சுட்டுப் பாருங்கோடா''

''கோழைகள் எல்லாரும் ஒளிச்சிட்டாங்கள்''

பல வாலிபர்கள் சத்தமிட்டனர். எல்லோரும் போர்க் கோலம் கொண்டுவிட்டனர்.

பொழுது கருகிக்கொண்டிருந்த வேளை தில்லையன் உடலுக்குத் தீ மூட்டினர். எவரது கண்களும் கலங்கவில்லை.

எல்லோர் இதயங்களிலும் தில்லையன் தீமூட்டிவிட்டான்.

படிப்பகம்

www.padippakam.com

# 42

ஊர்வலம் திரும்பிக் கொண்டிருந்த போதே பொலீசார் சுடலைக்கு வந்தனர். கையில் ஆயுதங்கள் வைத்திருந்தவர்கள் குறுக்கு வழிகளால் இறங்கி மறைந்து விட்டனர்.

''இப்போதுதான் எங்களுக்குப் பாதுகாப்புக்கு வாறீங்களோ?''

பசுபதி நளினமாகக் கேட்டான்.

''அப்போது மற்றப்பாதையால் போகும்படி சொன்னோமே, கேட்டியளா''

''அதற்காகப் பழிவாங்க ஏற்பாடு செய்தீர்களா? வழமையான பாதையால் நாம் போகிறோம் என்று அவங்களிட்டை 'ஜீப்'பிலே போய் சொல்லி அனுப்பினது நீங்கள் தானே.''

இலட்சுமணன் பொலிசார் மேல் நேரடியாக குற்றம் சுமத்தினான்.

''ஆர் உந்தப் பொய்யெல்லாம் சொன்னது?''

''அதை ஏன் உங்களுக்கு? இல்லாவிட்டால் பாதையை மாற்றும்படி தடுத்த நீங்கள் எமக்குப் பாதுகாப்பளிக்க பிரேத ஊர்வலத்தோடு வந்திருக்கலாமே. இதைப் பற்றியெல்லாம் விசாரணை நடந்தால் நிட்சயம் இதைப்பற்றிச் சொல்லுவோம்''

''இல்லையில்லை. நாங்கள் ஸ்ரேசனுக்குப் போய் வேறும் ஆட்களைக் கூட்டிவரச் சென்றோம். அதற்கிடையில் எல்லாம் நடந்து விட்டுது''

இன்ஸ்பெக்டரின் பேச்சில் உண்மை தொனிக்கவில்லை. மழுப்பலே தெரிந்தது. அவர்கள் யாவரும் ஒன்றாகத் திரண்டு தனக்கு எதிராக முறைப்பாடு கொடுத்துவிடுவார்களோ எனவும் அஞ்சினான்.

www.padippakam.com



''சாதிக்காரரைக் கர்ப்பாற்றுவதற்கு மட்டும் இருக்கும் உந்தப் பொலிஸ்ரேசனுக்குத்தான் அடுத்த வெடி. பொலிஸ் ரேசனையே டைனமயிட் வைத்து உடைத்து தரைமட்ட மாக்கி விடுகிறோம்''

ஆத்திரமடைந்த சில வாலிபர் இன்ஸ்பெக்டர் முன் வந்து சொன்னார்கள்.

இன்ஸ்பெக்டரின் முகத்தில் மம்தையில்லை; பயம் குடி கொண்டிருந்தது. அவனோடு வந்த பொலிசார் ஊமையாக நின்றனர்.

''உங்களுக்குச் சந்தேகமானவர்களைச் சொல்லுங்கோ. அரெஸ்ட் செய்து விசாரிக்கிறேன். அதற்காகத்தான் வந்தேன்''

''பேர்களை வேண்டுமானால் தாறோம். ஆனால் இனி மேல் உங்களை நாம் ஒருபோதும் நம்பப்போவதில்லை. எங் கள் பாதுகாப்பை நாமே தேடிக்கொள்ளுவோம்''

இலட்சுமணன் சொன்னான்; அழுத்தமாக ஆத்திரத் தோடு சொன்னான்.

ஊர்வலத்தால் திரும்பியதும் தில்லையன் வீட்டில் வழமையாக நடைபெறும் ஒப்பாரி, சடங்குகள் எதுவுமே நடைபெறவில்லை. காயமடைந்தவர்களைப் பார்த்து வர யலர் ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டனர்.

## 43

மறுநாள் பத்திரிகைகளிலெல்லாம் மரண ஊர்வலத் தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் பற்றிச் செய்திகள் வந்தன. பத்திரிகைகளும் தாழ்த்தப்பட்டவர்கள் மேலேயே பழியைச் சுமத்தின. உயர்சாதிக்காரர் வாழும் பகுதிகளால்

படிப்பகம்

www.padippakam.com



வேண்டுமென்றே பொலிசார் தடுக்கவும், ஊர்வலத்தை எடுத்துச் சென்று அவர்களுக்கு ஆத்திரமூட்டியதாலேயே துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது என்று செய்திகள் திரித்து வெளியிடப்பட்டிருந்தன. கைது செய்யப்பட்ட உயர் சாதியினரின் பட்டியலும் வெளிவந்திருந்தது. ஏழு பேர்களின் பெயர்கள் இருந்தன. அதில் அவர்கள் எதிர்பார்த்த ஆனந்தனின் பெயரில்லை!

''இன்றைக்கு மட்டும் அரைமணிநேர அவகாசம் தாருங்கள். இந்த ஊரிலுள்ள பள்ளர் பறையரின் சாதித்திமிரை எல்லாம் ஒழித்து விடுகிறேன்''

ஆனந்தன் பொலிசாரோடு இவ்வாறு பேரம் பேசியிருந்தானாம். கடைசியில் அவனே தப்பிவிட்டான்.

## 44

இரகுநாதனுக்கும் மரண ஊர்வலத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் வயிற்றிலே ஒரு சன்னம் பாய்ந்து விட்டது. காயம் அத்தனை மோசமில்லை. ஆயினும் வேலாயுதம் வீடும் பரபரப்படைந்தது.

உச்சி வெய்யிலில் நிழல் தெரியாததுபோல கிராமத்தில் அவர்களுக்கு இருந்த துன்பமெல்லாம் மறைந்து சாதிப் போரே உக்கிரமடைந்திருந்தது.

வேளாளர் பகுதிக்குத் தாழ்த்தப்பட்டவர்கள் இனிமேல் போவதில்லை என விளாத்தியடிப் பக்கத்தில் தீர்மானித்தனர். கூப்பன் அரிசி வாங்கும் சங்கக் கடையும் பாடசாலையுமே அவர்களது உடனடிப் பிரச்சனைகளாக இருந்தன.

இரண்டு வாரமாக அவர்கள் கூப்பன் அரிசியே வாங்கவில்லை. தமக்கு ஆதரவு தரும் இயக்கத் தலைவர்களுக்கெல்லாம் நிலைமைகளைத் தந்தி மூலம் அறிவித்தனர். சிலர்

படிப்பகம்

www.padippakam.com



கொழும்பிலிருந்தும் வந்து நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

தாழ்த்தப்பட்டவர்கள் தமக்கென ஒரு சங்கக் கடையை உடனடியாக நிறுவி அங்கிருந்து அரிசி, மாவு, சீனி ஆகிய உணவுப் பொருட்களைப் பெற ஏற்பாடு செய்யப்பட்டது.

தற்காலிகமாக ஒரு கொட்டில் எழுப்பப்பட்டு புதிய பாடசாலை ஒன்று அவர்கள் பகுதியிலேயே ஆரம்பிக்கப் பட்டது.

இரவிலே துப்பாக்கி ஏந்தியபடி தமது மக்கள் வாழும் பகுதியினரைக் காப்பாற்றக் காவல் புரிந்தனர் வாலிபர்கள்.

அவர்கள் வாழும் பகுதிக்கூடாக வேளாளர் செல்வதும் தடைபட்டது; தாழ்த்தப்பட்டவர் வாழும் பகுதியிலுள்ள தம் நிலங்களில் விவசாயம் செய்வதையும் வேளாளர் விட்டு விட்டனர்.

## 45

சாதிப்போர் உக்கிரமடைந்திருந்த சில நாட்கள் அன்னம் ஆறுமுகத்தார் வீட்டுக்கே செல்லவில்லை. ஆறுமுகத்தாரை தங்கம்மா அவளின் வீட்டுக்கே அனுப்பியிருந்தாள். ஆறுமுகத்தார் அன்னத்தைக் கட்டாயம் வீட்டிற்கு வரும்படி வற்புறுத்தினார்.

''இங்கேயிருக்கும் ஆத்திரத்தில் உங்களைக் கண்டால் கல்லெறிதான் விழும். நீங்கள் ஓடுங்கோ. நான் இரண்டு மூன்று நாளிலை வரப் பார்க்கிறன்.''

அன்னம் சொல்லி அனுப்பினாள்,

விளாத்தியடியில் நிலவும் அளவிற்கு கிழக்குப் பகுதியில் நிலைமை அத்தனை மோசமாக இல்லை. நாளடைவில் கோபங்கள், கொதிப்புக்கள் ஆறிவந்தன. ஆயினும் பலர்

படிப்பகம்

www.padippakam.com



இனிமேல் வேளாளருக்குக் கூலிவேலை செய்ய தோட்டங்களுக்குச் செல்வதில்லை என சபதமெடுத்தனர்.

''ஆறுமுகத்தார் வீட்டுக்குச் செல்வதை அக்காவும் நிறுத்துவதே நல்லது''

''ஏன்?''

அன்னம் தனக்கு அறிவுரை கூறிய இராசாத்தியைக் கேட்டாள்.

''அவருக்கும் பிடிக்காது''

''ஆரெடி அந்த அவர்''

''அவர்தான்''

''ஓ, இப்பவே மாப்பிளை என்று உரிமை கொண்டாடி அவர் நினைக்கிறதை எனக்கு உபதேசம் செய்ய வந்திட்டாயா?''

இலட்சுமணன் தடை செய்வானோ என்ற அச்சம் அன்னத்தின் மனத்திலும் இருந்தது. ஆயினும் அப்பிரச்சனை வரும்போது பார்ப்போம் என்ற துணிவுடன் அன்னம் ஆறுமுகத்தார் வீட்டுச் சென்றாள்.

வளவெல்லாம் குப்பையாக இருந்தது. வீட்டிலே அரிசிமா இல்லை, கோப்பி இல்லை என்று தங்கம்மா குறை சொன்னாள்.

''நீ ஒரு நாளைக்கு இல்லை என்றால் என் கை ஒடிஞ்ச மாதிரித்தான். உந்தச் சாதிச் சண்டையாலை கண்ட பலனென்ன? அவங்களோடை ஒற்றுமை போடுங்கோடா. அப்ப தான் எங்களுக்கும் ஆரேன் தோட்டத்திலையோ வீட்டிலையோ வந்து வேலை செய்வாங்கள் என்று மூத்தவனிட்டையும் சொன்னன். அவனும் இப்ப கொஞ்சம் யோசிக்கிறான்''

தங்கம்மா சொன்னாள். அவளது உடலிலும் சோர்வு கண்டிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com



ஆனந்தன் திருந்தி விடுவானா என்ற சிந்தனையோடு அன்னம் வேலை செய்யத் தொடங்கினாள். வழமையிலும் பார்க்க இரண்டு மூன்று மடங்குவேலைகள் அங்கு இருந்தன.

தண்ணீருக்காக அவள் கிணற்றடியில் காத்துநின்ற போது ஆனந்தன் வந்தான்.

''என்னடி நீயும் குண்டுக்குப் பயந்து நின்றிட்டியோ''

சிரித்தபடி சொல்லிக்கொண்டே ஆனந்தன் வந்தான்.

''குண்டுக்கு நாங்களெல்லாம் பயப்பிட மாட்டம். அன்றைக்கு திருப்பிச் சுட நீங்கள் தானே பயந்து ஓடி விட்டியள்''

''எட்டுக் கிடாயை விழுத்தினம். பார்த்தியாடி''

''ஐம்பது பேரை விழுத்தி அன்றையோடை சாதித்திமி ரெல்லாம் அடக்கிறன் என்பது சபதம் செய்தீங்களாம். இப்ப துணிச்சலிருந்தால் பொலிசோடை என்றாலும் விளாத்தி யடிப்பக்கம் ஒருக்கால் போங்கோ பார்ப்பம்''

''உங்கடை பக்கமெல்லாம் எப்பிடியிருக்கடி''

''அங்கையும் உங்களைப் போலை ஆட்கள் வந்தால் நிட் சயம் வெடி வைப்பாங்கள். அன்றைக்கு கொப்பர் வந்தார். நான்தான் கலைத்து விட்டன்''

''வேலாயுதத்தின்ரை மேன் ரகுநாதனுக்கு எப்பிடி யாம்''

''சும்மா சன்னம்பட்ட காயம். நாளைக்கே வந்திடுவா ராம். வல்லி ஒருத்தனுக்குத்தான் கொஞ்சம் பாடாம் மற்ற வைக்கெல்லாம் சும்மா காயந்தான். அன்றைக்குத்தான் முதன்முதலாய் துப்பாக்கி பிடிச்சு சுட்டுப் பழகினியளாக்கும்''

அன்னம் கேலியாகச் சொன்னாள்:

''எட, குறி தவறாமல் நீயே சுடுவாய் போலை கிடக்கு. உன்ரை பேச்சைக் கேட்டால், உங்கடை பக்கத்திலை இப்ப எத்தினை துவக்கிருக்கு''

www.padippakam.com



''அதெல்லாம் ஏன் உங்களுக்கு?''

''எனக்கும் நீ சொல்லமாட்டியாடி? சும்மா ஒரு மதிப்புக்குச் சொல்லு பார்ப்பம்''

''பத்து பதினைஞ்சு...''

''எல்லாம் பொய்யடி. எங்களிட்டையே அத்தனை இருக்காது. சும்மா எங்களை வெருட்ட கதை கட்டி விடுறாங்கள். உந்த் விடுகதையெல்லாம்எங்களுக்குத் தெரியும். பொலிசைக் கொண்டு ஒரு நாளைக்கு உங்கையும் விளாத்தியடியிலையும் இருக்கிற துவக்கெல்லாம் பறிச் செடுக்கிறமோ இல்லையோ பார்''

''முடிஞ்சால் செய்யுங்கோவன். நடந்த துப்பாக்கிச் சண்டையிலை நீங்கள் பிடிபடாமல் தப்பி விட்டீங்களே. பொலிசுக்கு எவ்வளவு காசு கொடுத்தியள்?''

''நானும் சுட்டதென்று ஆர் சொன்னது? ஆர்கண்டவர்? பொலிசாலை பிடிச்சு அடைக்க முடியுமாடீ''

தங்கம்மாவின் குரல் கேட்டதும் அன்னம் தண்ணீரைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டாள். தங்கம்மா கூறியது போன்று ஆனந்தனின் சுபாவத்தில் கொஞ்சம்கூட மாற்றம் ஏற்பட்டது தெரியவில்லை. ஒருவேளை தனக்கு மட்டும் அப்படி நடித்துக் காட்டுகிறானோ?

ஆறுமுகத்தார் வீட்டுக்கு வந்த போதும் ஊரில் சாதிச் சண்டைகள் நீங்கி ஒற்றுமை ஏற்படவேண்டும் என்றே தம் கருத்தையும் சொன்னார்

அன்னமும் சாப்பிடச் சென்றபோது ஆறுமுகத்தாரும் தங்கம்மாவும் பேசிக்கொண்டது அவள் செவிகளில் விழுந்தது.

''ஊரிலை என்ன நடந்தாலும் இரவிலை நித்திரையில்லை; மூத்தவனுக்கு என்ன நடக்குமோ என்ற பயந்தான்.''

www.padippakam.com



''உங்களாலை தானே இந்தக் கலியாணமே நடக்கப் போகுது. உங்களை மறப்பமா?''

''மற்றுமொன்று''

''என்ன அது''

''கலியாணத்தின் பின்னர் அவரின் இயக்கமோ, கொள்கையோ எதுக்கும் நீ எதிர்ப்பாயிருக்கப்படாது''

''நான் ஏன் இருக்கப் போறன்?''

''ஏதோ நீ தடையாய் இருப்பாய் என்று என் மனது சொல்லுது''

''ஏனக்கா அப்பிடியெல்லாம் சொல்லிறாய்? நான் இன்னும் குழந்தையல்ல''

''அவற்றை வீடெல்லாம் சாதாரண மண் வீடுதான். நீ பெரிய வீட்டிலை வாழ்ந்தனி. அங்கை போய் மூஞ்சியை நீட்டப் பார்ப்பாய்''

''அப்படியில்லை அக்கா. அவர் வாழுற இடந்தான் எனக்கும் சொர்க்கம்''

உணர்ச்சி வசப்பட்டு இராசாத்தி சொன்னாள்.

## 47

இலட்சுமணன் குடும்பத்திலும் வழக்குகளினாலும் ஆஸ்பத்திரிச் செலவுகளாலும் பணக்கஷ்டம் ஏற்பட்டிருந்தது. விரைவான திருமணத்தால் ஓரளவு நெருக்கடி தீரலாம் என எண்ணி திருமணத்திற்கு அவன் தந்தை முருகேசன் உடன்பட்டான். திருமணச் செலவு யாவுக்கும் தானே பணந்தந்து உதவுவதாக வேலாயுதமும் முன்வந்தார்.

மிக அடக்கமாக யாவும் நடைபெறவேண்டும் என இலட்சுமணன் வற்புறுத்தினான். வேலாயுதம் உடன்பட்டபோதும்

www.padippakam.com



நாளடைவில் தம் வீட்டில் யாவையும் மிகவும் ஆடம்பர மாகவே ஏற்பாடு செய்தார்.

வேளாளரின் திருமணங்களில் நடைபெறுவது போன்ற ஆடம்பரமான கூறைச் சேலை, தாலிக் கொடி ஆகியவற்றை இலட்சுமணன் விரும்பவில்லை. தாமே அவற்றையெல்லாம் தருவதாக வேலாயுதமே தம்செலவில் வாங்கிக் கொடுத்தார்.

கொட்டகைப் பந்தல், மணவறை, மேளம், ஒலிபெருக்கி யாவும் வேளாளர் திருமணங்களிலும் பார்க்கச் சிறப்பாக நடைபெற்றன.

இலட்சுமணன், பணத்தின் முன் தான் பொம்மையாக்கப் படுவதைப் பார்த்து வேதனைப் பட்டான். பொறுமையோடு மணவறையில் இருந்து யாவற்றையும் பார்த்தபோது வடி வேலு முன் ஒரு தடவை சொன்ன வார்த்தைகளே அவன் நினைவில் வந்தன:

''கொழும்பிலே, அமெரிக்காக்காரன் செய்வதைப் பார்த்து எங்கடை பணக்காரர் கொப்பியடிக்கினம். இங்கே என்ன வென்றால் உக்கி உடைந்து கொண்டிருக்கும் வெள் ளாளர் செய்வதைப் பார்த்து பள்ளர் பறையர் கொப்பி அடிப்ப தைப் பார்க்கும்போதுதான் மனவருத்தமாயிருக்கு''

தன் திருமணத்தைப் பற்றியே இலட்சுமணன் வடிவேலு வுக்கு எழுதவில்லை. அவனால் தன் சூழ்நிலைகளை உணர்ந்து பார்க்க முடியாது. வீணே கேலி, செய்வான் என்று எண்ணினான். மேலும் திடீரென அவன் திருமணத்திற்காக வந்தால் இவற்றைப் பார்த்துக் கட்டாயம் கொதிப் படைவான்.

''ஒரு லட்சியவாதி இவ்வளவிற்குக் கேவலமாக இறங் கப்படாது''

நிட்சயமாக இவ்வாறே குமுறுவான்.

சடங்குகள் யாவையும் அன்னம் பந்தலின் ஒரு மூலையில் நின்று பார்த்துக் கொண்டு நின்றாள். இராசாத்தியைச்

www.padippakam.com



சோடிப்பதைக்கூட அவளால் அறைக்குள் சென்று பார்க்க முடியவில்லை. அங்கே பட்டணத்திலிருந்து வந்த பெண்கள் நிறைந்திருந்தனர்.

அன்னம் பெரிய தாமரைப் பூக்கள் அச்சிட்ட ஒரு நைலோன் சேலை உடுத்தியிருந்தாள். எங்காவது கடன் வாங்கியிருப்பாளா, அல்லது வேலாயுதம் தரகுக்காக பரிசளித்திருப்பாரா என்று இலட்சுமணன் எண்ணினான். அவளே நல்ல அழகிதான். இராசாத்தியிலும் பார்க்க வடிவாகவே இருக்கிறாள். நான் எதற்காக அவளை விட்டு இப்போது இராசாத்தியின் கைகளைப் பிடிக்கிறேன்? தங்க நகைகள் போட்ட கைகள் என்பதற்காகவா?

நிலமானியச் சமுதாயத்தின் சின்னத்தில் ஒன்று சாதி. இந்தத் தங்க நகைகளும் சடங்குகளும் அதன் சின்னங்கள் தானே. நானே எப்படி இப்போது இவற்றை வரவேற்கிறேன். தனி மனிதனால் எதையும் சாதித்துவிட முடியாதா?

அத்தனை சிறப்புகளும் ஆடம்பரங்களும் இலட்சுமணனது சிந்தனையை மழுப்பிக்கொண்டிருந்தன. ஒரே வினா சிந்தனை வட்டத்தில் உருண்டு கொண்டிருந்தது:

''இந்தக் கறள்களிலிருந்து மீண்டும் கூர்மையாக வழியென்ன?''

இராசாத்தியின் கையைப் பிடித்துக் கொண்டு சோடனை செய்த காரில் ஏறினான். மேளத்துடன் ஊர்வலம் புறப்பட்டது. கிழக்குப்பக்கத்து வேளாளரும் தெருவில் வந்து ஊர்வலத்தைப் பார்த்துப் பொறாமைப் பட்டனர். விளாத்தியடிப் பக்கத்தில் கார்கள் விரைவாக ஓடின.

இராசாத்தியின் விரல்களைப் பிடித்தபடி தன் சிறிய வீட்டின் அறையுள் இலட்சுமணன் நுழைந்தான். அங்கே எரிந்து கொண்டிருந்த குத்து விளக்கின் முன்னாலிருந்து

www.padippakam.com



பாலும் பழமும் சாப்பிட்டனர். இராசாத்தியின் முகத்திலிருந்த வாட்டத்தைக் கண்டான்.

''இவளால் இந்தக் குடிசையில் வாழமுடியுமா?''

இலட்சுமணன் இதயத்தில் ஒரு புதிய வினாவும் எழுந்தது.

## 48

மாவிட்டபுர முருகன் கோவில் ஆண்டுத் திருவிழா நெருங்கிக்கொண்டிருந்தது. அதற்கு முன்னேற்பாடாக ஆதரவு திரட்டுவதற்காக வெகுஜன இயக்க மகாநாடு ஒன்றைக் கூட்டத் தீர்மானித்தனர். இலட்சுமணன், பசுபதி, குமாரன், பாலன் மற்றும் இயக்கத்தைச் சார்ந்த வாலிபர் களெல்லாரும் அதற்காக இரவு பகலாக உழைத்தனர்.

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பல பிரமுகர்களை வரவழைக்க ஏற்பாடு செய்தனர். மகாநாட்டை ஒட்டி நாடகங்கள் நடனங்கள் மட்டுமல்ல ஒரு ஓவியக் கண்காட்சியும் சேர்ந்த கலைநிகழ்ச்சிகளுக்கும் ஒழுங்கு செய்தனர்.

அவர்களுக்கு ஆதரவு தர முற்போக்கு இயக்கங்களைச் சார்ந்த பல சிங்களப் பிரமுகர்களும் வர ஒப்புக் கொண்டனர்.

வடிவேலுவும் விடுமுறையில் வந்திருந்தான். தங்கம்மாவிற்கு அவன் வரவு திருவிழாவாக இருந்தது.

''ஆச்சி சாகக் கிடந்தாலும் வந்து எட்டிப் பார்க்கமாட்டான். பள்ளர் பறையற்றை கூட்டமென்றால் ஓடி வந்திடுவான்''

ஆனந்தன் தாயிடம் சொல்லி எரிந்தான்.

''நான் சுகமில்லை வா என்று எழுதியிருந்தால் பார்க்க வருவான் தானே. நானெல்லோ எழுத விடேல்லை. நீ மட்டும் நின்று என்ன பார்த்துவிட்டனி''

படிப்பகம்

www.padippakam.com



''எப்பவும் உத்தியோகாரப் பிள்ளை யென்றால் பாசங் கூடத்தானே''

ஆனந்தன் வழமையாகப் பாவிக்கும் ஆயுதத்தையே பிரயோகித்தான்.

''ஓம் பாசங்கூடத்தான். பின்னை தெருச் சுத்திற பிள்ளையிலா பாசம் வரும்''

தங்கம்மா தன் மனதில் பட்டதை அப்படியே சொன்னாள்.

''அவனை ஆரேன் ஒரு பள்ளிக்குக் கட்டி மருமேளாய் வைச்சிரன்''

''அண்டைக்கு வேலாயுதன்ரை மேளை ஊர்வலத்திலை பார்த்தன். வெள்ளாடிச்சியள் கூடத் தோத்துப் போவாளவை.''

''இலட்சுமணன் தானே மாப்பிள்ளை. உன்ரை மேன்ரை தோழன். அடுத்தவெடி அவனுக்குத்தான் என்று உன்ரை செல்ல மேனிட்டை இப்பவே சொல்லிவை''

''எல்லாத்திலையும் தப்பி வாறாய். ஒண்டிலை அகப்பட்டு எங்கடை கடைசி காலத்திலை நிம்மதியாய் சாகவிட மாட்டாய் போலத்தான் தெரியுது. என்ன விதியோ?''

தங்கம்மா அழாக்குறையாகச் சொன்னாள்.

## 49

வடிவேலு இலட்சுமணன் வீட்டை நோக்கிப் புறப்பட்டான். விளாத்தியடிச் சம்பவங்கள் பற்றிக் கடிதமூலமும் பத்திரிகைச் செய்திகள் வாயிலாகவுமே அவன் அறிந்திருந்தான். அவற்றைப் பற்றியெல்லாம் நேரில் கேட்டு, இடங்களைப் பார்த்து அறிவதற்கும் இலட்சுமணனைக் கண்டு

www.padippakam.com



பேசுவதற்குமாகச் சென்றான். திருமணச் செய்தியை இலட்சுமணன் யாவும் முடிந்த பின்னரே வடிவேலுவுக்கு எழுதியிருந்தான்.

''இராசாத்தி எங்கள் வகுப்புக்குள்ளேயே ஒரு பூஷ்வா வர்க்கம். அவ்வளவுந்தான்''

சுருக்கமாகக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தான். தாயும், அன்னமும் மற்ற விவரங்களை வடிவேலு வந்தன்றே அவனிடம் சொல்லினர்.

வடிவேலு இலட்சுமணன் வீட்டுக்குச் சென்ற போது அவன் அங்கு இல்லை.

அவனது தந்தை முருகேசனும் தமையனுமே வரவேற்றனர். தந்தைக்கு வயது ஐம்பதுக்கு மேலிருந்த போதும் நல்ல உடற்கட்டு. அவனது வரவு பற்றி அயலில் செய்திகள் பரவி தில்லையனின் தந்தை சுப்பிரமணியனும் அங்கு வந்தான். துப்பாக்கிச் சன்னம் பட்டு அவனது கண் ஒன்று கெட்டிருந்தது. நல்ல சிவலை; சுருண்ட மயிர்; இளந்தோற்றம்; சாரத்தை மடித்துக் கட்டியிருந்தான்; தோளிலே ஒரு துண்டு. முருகேசன் சுப்பிரமணியனை அறிமுகப் படுத்தினான்.

''இவன் தில்லையனின் தகப்பன். என்ரை மச்சான்''

''செய்திகளெல்லாம் கொழும்பிலையே அறிந்து கவலைப்பட்டம்''

வடிவேலு தன் அனுதாபத்தைத் தெரிவித்தான்.

''எத்தினை காலம் இந்தக் கொடுமைகளை நசிஞ்சு நசிஞ்சு தாங்கினம். இப்பெல்லாம் மனமெல்லாம் மரத்துப் போச்சு''

வடிவேலுவின் அனுதாபத்தை ஏற்க விரும்பாதவன் போல சுப்பிரமணியன் சொன்னான்.

''யுகம் யுகமாய் கையேந்தி அடிமைகளாய் வாழ்ந்தம், கொஞ்சம் தலை தூக்க முயன்றால் உடனே தலையிலே அடி.

www.padippakam.com



உயர்சாதிக்காரரது கல் வீடுகளையெல்லாம் வடிவேலு பார்த்தான். அவற்றின் அண்மையில் ஏழைகளாக வாழும் பள்ளர் பறையர் சேரி. ஆயினும் இடங்கள் தூய்மையாக இருந்தன.

''இப்பொழுதெல்லாம் அந்த வீடுகளிலிருந்து சுடுவதில்லையா?''

''அதுதானே சொன்னமே. நாங்கள் துப்பாக்கி எடுத்துப் பதிலுக்குச் சுடத் தொடங்கியதும் அடங்கிவிட்டாங்கள், கோழைகள். நாங்கள் இத்தனை காலமும் பொலிஸ் இருக்கு, கோடு கச்சேரி இருக்கு எங்களுக்கு நீதி வழங்கும் என்று ஏமாந்து இருந்துவிட்டம். நல்ல வேளை அந்தக் கிழவன் தான் எங்க விமோசனத்திற்குத் தக்க வழிகாட்டித் தந்தார்.''

முருகேசனுக்கு தெய்வத்தில்கூட அவ்வளவு நம்பிக்கையிருக்காது போலத் தெரிந்தது.

''அதிலே எதிரே வாறானே குமாரன். அவன்தான் தில்லையனுக்குப் பழிக்குப் பழி வாங்கிறதுக்காக உங்க அண்ணனின் வலது கையான செல்வரத்தினத்துக்கு வெடி வச்சவன்; ஆனால் துவக்கே பிடிக்கத் தெரியாத மூன்று பேரை இப்ப விளக்க மறியலிலை வைச்சிருக்கிறாங்கள் இதுதானே எங்கடை பொலிசின்ரை வேலை''

குமாரன், நெருங்கி வந்ததும் வடிவேலுவை முருகேசன் அறிமுகப்படுத்தினான். அவன் சிரித்துத் தலை சாய்த்தான். அவனும் முருகேசன் சுப்பிரமணியனுடன் சேர்ந்து கொண்டான்.

''அது ஒரு சிவன் கோவில். சமூகக் குறைபாட்டுச் சட்டம் நிறைவேற்றின உடனே நாங்களெல்லாம் போய் நுழைந்தம். அன்று தொடக்கம் பூட்டி வைச்சிருக்கிறாங்கள், சட்டமும் அப்பிடியே இருக்கு''

அப்பகுதியில் அண்மையில் கட்டப்பட்ட பெரிய கட்டிடமாக இருந்த அக்கோயிலை வடிவேலு பார்த்தான்.

www.padippakam.com



''பூட்டி வைத்திருக்கும் சாமிகள் பாவம். அதுகளுக்கெல்லாம் விடுதலை கொடுக்க வேண்டும்''

வடிவேலு சொன்னான்.

''அதற்கும் சட்டம் கொண்டு வரப்போறாங்களாம்''

முருகேசன் சொல்லிக்கொண்டே சிரித்தான்

''இவையெல்லாம் முன்னர் தீ வைத்து எரிந்த வீடுகள். அப்பெல்லாம் நாங்கள் அகிம்சா வாதிகளாய் ஓடி ஒளிச்சிருந்தம். எரிந்த நெருப்பை அணைக்க தண்ணி கொண்டு வர துப்பாக்கியால் சுட்டாங்கள்''

சுப்பிரமணியன் சொன்னான்.

''முன்னே இடதுகையை ஆட்டிக்கொண்டு போகிறானே சின்னான். அவன் வெள்ளாளனுக் கெதிராக கையை உயர்த்தியதுக்காக அவங்கள் அகிம்சை காட்டேல்லை. கையையே வெட்டி விட்டாங்கள்''

குமாரன் சொன்னான்.

''பொலிஸ் வெட்டினவனைப் பிடிக்கேல்லையா?''

''வெட்டினவன் சில மாதம் விளக்க மறியலிலை இருந்தான். அவ்வளவுந்தான்''

சுப்பிரமணியன் சொன்னான்.

''எங்கடை அனுபவத்தைப் பொறுத்த வரையிலை பொறுமை பொறுமை என்றிருந்து, அகிம்சையைக் கடைப்பிடித்து வாழ்ந்து, அடிமைகளாய்தான் வாழ்ந்தம். நாங்கள் துவக்கெடுத்ததும் அவங்கள் இப்பதான் அகிம்சை வாதிகளாய் மாறுறாங்கள்''

முருகேசன் சிரித்துக்கொண்டே சொன்னான்.

''அவங்களிலை கனக்கப் பேர் சைவக்காரர். மரக்கறி தான் சாப்பிடுவினம்''

www.padippakam.com



சுப்பிரமணியன் நளினமாக சொன்னான்.

தமது எல்லையின் மறுகோடிப் புறத்தின் திட்டியிலிருந்து தமது வயல் வெளியைக் காட்டினர். ஆங்காங்கே மிளகாய், காய்கறித் தோட்டங்கள் பச்சைப் பசேலெனத் தெரிந்தன. தண்ணீர் இறைக்கும் யந்திரத்தின் ஓசை கேட்டுக் கொண் டிருந்தது. ஆண்களும் பெண்களும் சிறுவர் சிறுமிகளும் வேலை செய்து கொண்டிருந்தனர்.

''தரிசு நிலமாய் பயிர் செய்யாது தெரிபவையெல்லாம் வெள்ளாளருடைய நிலங்கள். துப்பாக்கி வெடிக்குப் பயந்து இப்போது இந்தப் பக்கம் நிலம் செய்யவே வாறேல்லை'

சுப்பிரமணியன் சொன்னான்.

''இனிமேல் நாங்களே இந்த நிலங்களை உழுது பயிர் செய்ய இருக்கிறம்''

முருகேசன் சொன்னான்.

''ஆய்ந்த காய் மிளகாய், எல்லாம் எங்கே கொண்டு போய் விற்பியள்?''

வடிவேலு கேட்டான்.

''அது ஒரு தனிக்கதை. சந்தையிலை தரகராகக்கூட அவங்கள் நின்று ஆதிக்கம் செலுத்தினாங்கள். இப்ப எங் கடை ஆட்களே நின்று வாங்கி மூட்டைகட்டி கொழும்புக்கு ஏத்திறம்''

சுப்பிரமணியன் சுருக்கமாகச் சொன்னான்.

''இனி வீட்டுக்குப் போவோம். தம்பி சாப்பிட்டிட்டுப் போகலாம் தானே''

முருகேசன் சொன்னான்.

''வீண்சிரமம் எதுக்கு. வீட்டிலை ஆச்சியும் பார்த்துக் கொண்டிருப்பா''

www.padippakam.com



''பிறகு தம்பி, லட்சுமணன் வந்தால் பேசுவான்''

''எங்கை மருமேளை வீட்டிலை காணேல்லை''

''அது எங்களுக்கு ஒரு வெள்ளாளப் பெர்ம்பிளை. தாய் வீட்டுக்குப் போட்டுது. எங்கடை சின்னக் கொட்டில்கள் பிடிக்கேல்லை யாயிருக்கும்''

முருகேசன் தன் மனதைத் திறந்து நளின மொழியிலேயே சொன்னான்.

''அந்தா லட்சுமணன் வாறான்''

சுப்பிரமணியன் சொன்னான்.

இலட்சுமணன் சிரித்துக்கொண்டே வந்தான்.

''என்ன வடிவேலு. சொல்லாமல் கொள்ளாமல் இந்தப் பக்கம்''

''இந்தப் பக்கத்திலை ஒரு வியத்நாம் வளருகிறது என்று ஒருத்தர் பாராளுமன்றத்திலேயே முறையிட்டார். அந்தப் புண்ணிய பூமியை மிதிக்கலாமென்று வந்தன். நீ இல்லை. என்றாலும் எல்லாம் பார்த்து விட்டேன்''

''உன்ரை அண்ணன் ஒரு அமெரிக்கன். தம்பி சி.ஐ.ஏ யாயிருந்தால்''

''ஏதோ நான் உன் தோழனென்றாயிருக்கவேண்டும். என்னைக் கண்டதும் தங்கடை ஆள் என்று நம்பிவிட்டினம்'' வடிவேலு பதில் சொன்னான்.

அவர்கள்து வயலிலே விளைந்த குத்தரிசிச் சோறும் கோழி இறைச்சியும் கத்திரிக்காய் வெள்ளைக்கறியும் வடிவேலுவின் நாவிற்குச் சுவையாக இருந்தன. மிளகாய் காரம் சிறிது கடுமையாக இருந்தது. ஆயினும் வயிறாரச் சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டே அருகே இருந்து சாப்பிட்ட இலட்சுமணனைக் கேட்டான்:



படிப்பகம்

www.padippakam.com



''பிரேத ஊர்வலத்தை அவங்கள் தாக்கலாம் என்று உனக்கு எப்பிடித் தெரிந்தது?''

''அன்னம் சொன்னாள். அதன் பிறகுதான் நான் அதிக சிரத்தை எடுத்து ஆயத்தம் செய்தோம்''

''ஓ அப்பிடியா. அவள்தான் உன் கலியாணத்திற்கும் காலாம்''

வடிவேலு புன் முறுவலோடு சொன்னான்.

''வீட்டுக்காறருந்தான், அவளுந்தான்''

''ஏது பொம்பிளை வீட்டை சாப்பாட்டுக்குப் போகாமல் இங்கை வந்திட்டாய்?''

''சாப்பிடுறது அங்கேயுந்தான், இங்கேயுந்தான்''

இலட்சுமணன் சமாளித்துச் சொன்னான். அவனது தாயே யாவையும் சமைத்துப் பரிமாறினாள்.

''அன்னத்தைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?''

வடிவேலு ஏன் அவ்வினாவைத் திடீரெனக் கேட்டான் என்பது இலட்சுமணனுக்குத் தெரியவில்லை. ஆறுமுகத்தார் வீட்டுத் தொடர்பு, ஆனந்தன், தன் திருமணம், தில்லையனின் செத்த வீட்டின்போது அவள் சொன்ன செய்தி, தன் நண்பன் மாணிக்கன், அவள் தன்னுடன் பழகிய நாட்கள் யாவும் அவனது நெஞ்சில் சிறுசிறு போட்டோக்கள் போன்று தோன்றி மறைந்தன. விக்கிய தொண்டையில் தண்ணீரை ஊற்றி விழுங்கி விட்டுச் சொன்னான்:

''அவள் சரியாக அறிந்துகொள்ள முடியாத ஒரு புதிராகவே எனக்குத் தெரியுது''

www.padippakam.com

# 51

இலட்சுமணனும் வடிவேலுவும் சாப்பாடு முடித்து வந்து கட்டிலில் உட்கார்ந்தனர். முருகேசன், சுப்பிரமணியன், குமாரன் சுற்றிவர குந்துகளில் உட்கார்ந்தனர். தாம் குளித்து, சாப்பிட இன்னும் நேரமிருப்பதாகச் சொல்லினர்.

''கொழும்புப் பக்கமெல்லாம் நிலமையெப்படி?''

சுப்பிரமணியன் கேட்டான்.

''இங்கே நீங்கள் சாதிக்கு அடிமை. நாங்கள் அங்கு முதலாளிக்கு அடிமை. இங்கே நீங்கள் வேளாளரோடு போராடு நீங்கள். நாங்கள் அங்கே முதலாளிகளோடு போராடிறம். அவ்வளவுந்தான் வித்தியாசம்''

வடிவேலு பதில் சொன்னான்.

''வேலை நிறுத்தமெல்லாம் நடக்குதுதானே''

''ஓம் நல்லாய் நடக்குது. எல்லாம் கூலிப் போராட்டமாய் தான் நடக்குது. நீங்க முந்தி வேளாளரிட்டை கூலி கூட்டித் தராட்டால் வேலைக்கு வரமாட்டன் என்று வெருட்டிறேல்லையா. அதைப் போலத்தான் வேலை நிறுத்தங்களாலை பிரச்சனைகளெல்லாம் தீரப்போவதில்லையே. உங்களைப் போலை முதலாளிகளை—ஆளும் வர்க்கத்தை—எதிர்த்துத் துப்பாக்கி எடுக்கும் துணிச்சல் இன்னும் வளரேல்லை. அது வளர்ந்து ஆட்சியைக் கைப்பற்றினால் தான் எமக்கு விமோசனம் கிடைக்கும்''

வடிவேலு சொன்னான். அவனது கருத்து எல்லோருக்கும் புரிந்துவிடவில்லை. ஆயினும் தம்மை வடிவேலு பாராட்டுவது அவர்களுக்கு மகிழ்வூட்டியது.

''வேலை நிறுத்தத்தையே ஆதரிக்காமல் பேசிறீங்களே. ஒன்றும் விளங்கேல்லை''

www.padippakam.com



சுப்பிரமணியன் கேட்டான், வடிவேலு பதில் சொன்னான்:

''இதே முதலாளித்துவ ஆட்சியினரே எம்மை மயக்கி ஏமாற்றுவதற்கும் தம் அரசை தந்திரமாக நிலை நாட்டுவதற்கும் அவர்களாகவே தந்த ஒரு சலுகைதானே வேலை நிறுத்தம். இந்த சலுகைக்காக தற்போதுள்ள தங்கள் அரசியல் சாசனத்தையும் நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என வற்புறுத்தப் பார்க்கிறார்கள். இச்சலுகைகளின் கீழ் கட்டுண்டு நிற்பதன் மூலம் நாம் விரும்பும் புரட்சியை ஏற்படுத்திவிட முடியாது. உலகத்து முதலாளித்துவ, ஏகாதிபத்திய நாடுகளிலெல்லாம் வேலை நிறுத்தங்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. அங்கெல்லாம் புரட்சி ஏற்பட்டுதா?''

அவர்களிடம் விடை பெற்றுத் திரும்பும் வழியிலும் அவர்களது கண்களில் வீசிய ஒளி வடிவேலுவின் சிந்தனையில் புதிய உணர்வுகளையும் எண்ணங்களையும் எழுப்பிக் கொண்டிருந்தது. இதே கிராமத்தில் பிறந்து வளர்ந்ததும் இம் மக்களோடு நெருங்கிப் பழகி அவர்களது பிரச்சனைகள், போராட்டங்கள் பற்றி இதுவரை காலமும் அறியாதிருந்தேனே என வெட்கமடைந்திருந்தான்; தன் தவறைக் கடித்தும் கொண்டான்.

## 52

மறுநாட் காலையில் வடிவேலு கிணற்றடிக்குச் செல்லும் வேளையாகப் பார்த்து அன்னம் சாணிகரைக்கும் வாளியையும் எடுத்துக்கொண்டு சென்றாள். அவனைக் கண்டதும் வடிவேலுவுக்கு முன்னர் அவள் அதே இடத்தில் நின்று சொன்ன பொருளின் நினைவு வந்தது. அதை அவள் மறந்திருப்பாள் என்ற துணிவுடன் வடிவேலு பேச்சை வேறு திசையாக ஆரம்பித்தான்:

''நல்ல சட்டை போட்டிருக்கிறியே. துணி எங்கை வாங்கினாய்?''

www.padippakam.com



''சங்கக் கடையிலை தான். ஏன் நாங்கள் நல்ல சட்டை போட்டப்படாதோ?''

' ஆரப்படிச் சொன்னது? சட்டை புது மாதிரியான வெட்டாயிருக்கு. ஆர் உனக்குத் தைச்சுத் தாறது''

''பக்கத்து வீட்டு செல்லம்மாவின்ரை இரண்டாவது மகள் தான், நிதி. உங்களுக்குக் காயிதம் எழுதுகிற வளெல்லே. என்ரை சாமான் பற்றியும் நினைவூட்டி எழுதச் சொன்னன். எழுதினாவா; நீங்க மறந்திட்டியளாக்கும்''

''நீ நினைக்கிற மாதிரி அதை அங்கை சுகமாய் வாங்கி விட முடியாது''

''பரவாயில்லை. சும்மா கேட்டுப் பார்த்தன்''

வடிவேலு வாளியில் தண்ணீரை ஊற்றினான். அன்னம் தன் ஏமாற்றத்தைப் பெரிதாகக் காட்டிக் கொள்ளவில்லை.

''நீங்க ஆரேன் சிங்களத்தியைக் கட்டப் போறியளா?''

''ஆரெடி சொன்னது?''

''உங்க அண்ணா சொல்லிறார், ஆரோ பள்ளியைக் கட்டப் போறியளென்று அப்பு அயல்வீட்டிலை நிதியைக் கட்டினாலும் பரவாயில்லை என்று நினைக்கிறார். ஆச்சி சொல்லிறா பள்ளியிலும் பக்கத்து வீட்டிலும் பார்க்க சிங்களத்தியைக் கட்டிக் கொண்டு வந்தாலும் பரவாயில்லை என்று. அதுதான் கேட்டுப் பார்த்தான்''

''நான் ஒரு பள்ளியைத் தான் பார்த்து வைத்திருக்கிறன்''

வடிவேலு சிரித்தபடியே சொன்னான்.

''எங்கை விளாத்தியடிப் பக்கமா?''

''இல்லை உங்கடை பக்கத்திலை''

''ஆரது, எங்கடை பக்கத்திலை எனக்குத் தெரியாமல்''

படிப்பகம்

www.padippakam.com



''நீ தாண்டி''

''அதுவுமொரு கதை தான். நானுமல்லோ சம்மதிக்க வேணும்''

''ஏனெடி''

''உந்தவெள்ளாஞ்சாதியிலை சொத்துக்கும் பணத்திற்கும் நடக்கிற சண்டைகளையும் சச்சரவுகளையும் பார்த்தாலே பயமாயிருக்கு. குடும்பமெல்லாம் வெறும் வெளிவேஷம். உள்ளே எல்லாம் போறை''

அன்னம் அதிக அனுபவப் பட்டவள் போலச் சொன்னாள். எவரோ சொல்லிக்கொடுத்ததை ஒப்புவிப்பது போலவும் தெரிந்தது.

''நீ பேசிச் செய்த லட்சுமணன் கலியாணம் மட்டும் ஏதோ பெரிசோ''

''ஏன் அதுக்கு இப்ப என்ன?''

''எங்கை இப்ப இருக்கிறான்?''

''தாய் வீட்டிலை இருந்தால் என்ன? அவள் குழந்தைப் பெட்டை. அதெல்லாம் நாள் போகச் சரியாகி விடும்''

அன்னம் வாளித் தண்ணீரை எடுத்துக் கொண்டு புறப் பட்டாள். இலட்சுமணன் தன் கலியாணத்தைப்பற்றி ஏமாற்றமாக ஏதாவது சொல்லியிருப்பானோ என்று அவளது மனம் குடைந்து கொண்டிருந்தது. இலட்சுமணனும் அவளிடம் வந்து சில வாரங்களாகி விட்டன. மாநாட்டு வேலைகளால் வர முடியவில்லை என்றே அன்னம் நம்பியிருந்தாள்.

## 53

முன்போல இராசாத்தி அடிக்கடி அன்னத்திடம் வராத போதும் அன்று மாலை வந்திருந்தாள். அவளது முகம் சிறிது சோர்வடைந்திருந்தது. அன்னத்தாலும் தன் மனதில் குடைந்து கொண்டிருந்ததை மேலும் மறைக்க முடியவில்லை.

www.padippakam.com



''வீட்டிலை ஏதேன் சண்டை நடந்ததா?''

''இல்லையே''

''அப்ப, அவர் ஏன் இந்தப் பக்கமே நெடு நாளாய் வரேல்லை? நீ மறிச்சியா''

அன்னம் உரமாகக்கேட்டாள். இராசாத்தியால் அதைப் பொறுக்க முடியவில்லை.

''இல்லையக்கா'' என்று சொன்னபடியே விம்மத் தொடங்கினாள்.

''இதுக்கெல்லாம் ஏன் அழுகிறாய்? என்னட்டை வராமல் அவரை நீ தடுத்தாலும் நான் குறை சொல்லப் போறதில்லை. நடந்ததை மட்டும் சொல்லு''

''இல்லையக்கா, அவர் எடுத்ததுக்கெல்லாம் அன்னத்தைப் பார், அன்னத்தைப் பார் என்றுசமையலைப் பற்றியும் வேலை செய்யிறது பற்றியும் எந்தநேரமும் உங்களைப் பற்றியே சொல்லிக் கொண்டிருந்தார். எனக்கு ஏனோ தெரியேல்லை. ஒருக்கா 'சுள்' என்று கோபம் வந்திட்டுது. 'அப்ப அவளையே கட்டியிருக்கலாமே' என்று சொல்லிப் போட்டன். அந்தக் கோவத்திலைதான் வராமல் விட்டாரோ தெரியவில்லை''

அன்னம் நிலைமையை ஓரளவு உணர்ந்து கொண்டாள்.

''உன்னிலை தவறில்லை. அவரிலைதான் தவறு. என்னிலையும் பார்க்க நீ எவ்வளவு துப்பரவாய் இருக்கிறாய். வீடெல்லாம் அழகாய் வெள்ளாள வீடுகளிலும் பார்க்க நல்லாய் வைச்சிருக்கிறாய் என்று நான் பெருமைப்படுறன்... அவர் இப்படிச் சொன்னால் ஆருக்குத்தான் கோபம் வராது. நீ பேசாமல் இரு. நான் சந்தர்ப்பம் கிடைக்கேக்கை நீ சொன்னதென்று தெரியாத விதமாய் அவருக்குக் கொடுக்கிறன்''

ஆறுதல் கூறி மயிரையும் முதுகையும் வருடி விட்டாள்.

www.padippakam.com

# 54

சாதி ஒழிப்பு வெகு ஜன இயக்க மகாநாடு நீண்ட ஊர் வலத்துடன் ஆரம்பமாகியது. மகாநாட்டுப் பேச்சுக்களெல்லாம் காரசாரமாயிருந்தன. நிலமானியம், முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றை எதிர்த்துப் பலர் குரல் எழுப்பினர். சட்ட மூலமே சாதிபேதங் காட்டுவதை ஒழிக்காததற்காக அரசாங்கத்தைச் சிலர் கண்டித்தனர்.

'' உயர்சாதி வெறியர்களால் சிறையாகி யிருக்கும் தெய்வங்களுக்கு விடுதலை அளிக்கவேண்டும். கோவில் பூட்டுகளெல்லாம் உடைக்கப்பட வேண்டும்''

கொழும்பிலிருந்து வந்த ஒரு பிரமுகரின் பேச்சிற்கு நீண்ட கரகோசம் எழுப்பப்பட்டது.

பல்வேறு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மகாநாட்டின் கலை நிகழ்ச்சிகள் முன் என்றுமே எவரும் காணாதவிதமான புதுமையாக இருந்தன. சாதி என்ற பெயரால் பல நூற்றாண்டுகளாக நிலை நிறுத்தப்பட்டு வந்த கொடுமைகளும் அவை தற்போது தகர்க்கப்படும் முறையும் கலை நிகழ்ச்சிகளால் சித்திரிக்கப்பட்டன.

தாழ்த்தப்பட்ட மக்களே தம் கைகளால் வரைந்த பல நூறு ஓவியங்கள் மக்கள் கலையின் புது உருவைக் காட்டின.

அப்படங்களை வடிவேலு ஒவ்வொன்றாகப் பார்த்து உணர்ச்சி வசப்பட்டான். அவனுள்ளே மறைந்திருந்த மனிதாபிமானஉணர்வும் வர்க்க உணர்வும் பீறிட்டெழுந்தன. சாதியால் பாதிக்கப்பட்ட மக்களின் உண்மையான உணர்வுகளை அவர்களே கொடுத்த உருவங்களில் அன்றுதான் முதன் முதலாகக் கண்டான்.

தமது ஆத்மதிருப்திக்காக வரையப்படும் பூஷ்வா வர்க்கத்தினரின் ஓவியங்களையும் அடிமைப்படுத்தப்பட்ட மக்கள்

www.padippakam.com



தமது உணர்வுகளைக் கொட்டும் அந்தச் சித்திரங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தான். இதுவரை காலமும் ஓவியம் எதற்காக பயன்படுத்தப்பட்டு வந்தது, அது உண்மையில் எவ்வாறு அமையவேண்டும் என்ற வேறுபாடுகளை அவனால் இலகுவில் இனம் பிரித்துக் கண்டு கொள்ள முடிந்தது.

ஓலைகள் யாவும் எரிந்து வெறும் சிலாகைகள், மரங்களோடு மட்டும் காட்சி தரும் குடிசை ஒன்றை மெய்மறந்து உணர்ச்சிவசமாகப் பார்த்துக் கொண்டு நின்றான். வர்ணங்களெல்லாம் அழகாகத் தீட்டப்பட்டிருந்தன. அக்குடிசை அவன் இதயத்துடன் பேசியது. இதய உணர்ச்சிகளைக் கிளறி உந்தியது.

எரியும் வீடுகள், வெட்டி வீழ்த்தப்பட்ட பயிர்கள், தண்ணீருக்காக எசமான் வரும் வரை குடத்துடன் காத்து நிற்கும் பெண்கள், பள்ளிகளின் சட்டைகளை கொக்கச் சத்தகத்தால் வெட்டும் வேளாளர், வாய் பொத்தி உடல் கூனி நிற்கும் பறையர், கள்ளுக்காக காத்து நிற்கும் வேளாளர், தாழ்த்தப்பட்டவர்களுக்காக கயிறு கட்டப்பட்டிருக்கும் கோவில்கள், பாளைகள் வெட்டப்பட்ட தென்னைகள். வகுப்புகளில் ஒதுக்கமாக உட்கார்ந்திருக்கும் பிள்ளைகள், தாழ்த்தப்பட்டவர் பிணங்களை எரிக்கவிடாது தடுக்கும் காட்சி, கோவிலை நந்தி போல மறைக்கும் ஒரு பூசாரி- இவ்வாறு பலநூறு படங்கள்.

அழகான பெண்களையும்; பால் கவர்ச்சியான உறுப்புகளையும், பல்வேறு வர்ணக் குழம்புகளின் சேர்க்கைகளையுமே அவன் இதுவரைகாலம் ஓவியங்களாகக் கண்டிருந்தான்

பாடல்களிலும், நாடகத்திலும் இதுபோன்ற சாதிக் கொடுமைகள் கலை உருவோடு மெருகடைந்தன.

மனிதன் கைவிலங்கு பூட்டிய அடிமைத்தனம், நிலமானிய முறை அடிமைத்தனம் ஆகியவற்றிலிருந்து போராடி விடுதலை பெறும் காட்சி ஒன்று நாட்டிய நாடகமாக நடிக்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



வடிவேலுவும் அவற்றையெல்லாம் பார்த்துப் புத்துணர்ச்சியடைந்தான்.

அன்றிரவு வடிவேலு இலட்சுமணனோடு மாநாடு முடிந்த பின் சயிக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது இலட்சுமணன் கேட்டான்:

''இந்த மகாநாட்டைப்பற்றி என்ன நினைக்கிறாய்?''

''கலை நிகழ்ச்சிகள்தான் என் கண்களையும் இன்று திறந்து விட்டன. நிலமானிய சமுதாயத்து உயர் சாதியினரது ஒழுக்கங்களையும் வாழ்க்கைகளையுமே தமிழ்ப்படங்களில் பார்த்துப் பார்த்துப் பழகிவிட்டோம். முதலாளித்துவ சமுதாயத்தின் ஒழுக்கங்களையும் நிர்வாண அழகுகளையுமே பல காலமாக அமெரிக்கப்படங்களில் பார்த்து மயங்கிக் கொண்டிருந்தோம். அடக்கப்பட்டவர்கள், தொழிலாள, விவசாயிகளது தேவையை ஒட்டி வாழ்க்கையைச் சார்ந்த கலை, இலக்கியங்களை இதுவரை நாள் மறந்திருந்து விட்டோம். அவை எப்படி அமையும், அமையவேண்டும் என்பதை இன்று காண முடிந்ததில் பெரிய மகிழ்ச்சியே''

வடிவேலு நீண்ட பதில் கூறினான்.

''கலை என்றுகூறி உருவ அழகுகளில் மயங்குபவர்களுக்கும் குடிபோதைக்கும் வித்தியாசமுண்டா?''

''இந்த மயக்கத்திலேயே இன்றைய சமூகத்தில் எல்லோரும் அமிழ்ந்திக் கிடக்கிறார்கள்''

வடிவேலு சொன்னான். பின்னர் உரையாடலை வேறு திசையில் திருப்பினான்:

''வேலாயுதம் வீட்டோடு எப்படிச் சமாளிக்கிறாய்''

''இன்னும் மோதலொன்றும் வரவில்லை. ஒரு நாளைக்கு வந்துதானே தீரவேண்டும்''

''இராசாத்தி''

www.padippakam.com



''அவள் இப்போது குழந்தைதான். ஆனாலும் வீட்டிலும் சுற்றவர உள்ளவர்களும் புருஷனை அப்படி விடாதை. இப்படிச் செய்யச் சொல்லு என்று ஓத பலர் இருக்கிறார்கள். ஆயினும் அவள் இன்னும் தீவிரமாக அவற்றை வற்புறுத்தத் தொடங்கவில்லை''

''போராட்டந்தான்''

''அது தவிர்க்க முடியாது. கூர்மையடைந்ததும் வீட்டுக்கு வா, அல்லது அங்கே இரு என்ற நிலையில்தான் முடிவடையும்''

''இது வெள்ளாளர் வீட்டுக் கலியாணங்கள் போல இருக்கே. ஏதேன் பாடங்கீடம் சொல்லிக் கொடு''

''அதெல்லாம் கல்விலை நார் உரிக்கிற மாதிரித்தான்''

இலட்சுமணன் சொன்னான்.

வடிவேலுவுக்கு அந்த இரவின் அமைதி பழைய நாட்களை நினைவூட்டியது. இருவரும் பட்டணத்தில் சினிமா பார்த்துவிட்டு நடந்து வந்த நாட்கள் மனத்திரையில் ஓடின. இலட்சுமணனுக்கு நல்ல குரல். வழியெல்லாம் பாடிக் கொண்டே வருவான்; நடைக் களைப்பே தெரிவதில்லை.

''உன் குரலைக் கேட்டு எத்தினை வருசம். ஒரு பாட்டுப் பாடன்''

வடிவேலு கேட்டான்.

''கலை நிகழ்ச்சியின்போது அந்தச் சின்னப் பொடியன் பாடினானே. எப்பிடிப் பாட்டு...''

''அந்தப் பொடியனைக் கட்டி அணைக்க வேண்டும் என்றும் நினைச்சன். நல்ல பாட்டு. அதையே பாடன்''

வடிவேலு சொன்னதும் இலட்சுமணன் இரவின் அமைதியை ஊரெங்கும் குலைக்கும் உரத்தில் பாடத் தொடங்கினான் :

www.padippakam.com



''மாவிட்ட புரத்திலோர் மந்தி...வந்து
மடைச்சேட்டை புரியுது வாசலில் குந்தி...;'

## 55

தாழ்த்தப் பட்டவர்களும் நுழைவதற்காகத் திறந்து விடப்பட்ாத எல்லாக் கோவில்களிலும் திருவிழாக் காலங்களில் பலாத்காரமாக நுழைவது என்று மகாநாட்டில் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டது. அதன்படி அவர்கள் நுழைவதற்குச் சென்ற இருகோவில்கள் மட்டும் உடனே எதிர்ப்பின்றித் திறந்து விடப்பட்டன. அவை பட்டணத்திலுள்ள கோவில்கள். பல கோவில்களை உயர்சாதிக்காரரும் நுழையாதபடி பூசாரிகள் பூட்டிக்கொண்டனர். திருவிழாக்களும் தடைப்பட்டன.

கோவில்களைப் பூட்டி வைப்பது சமூகக் குறைபாட்டுச் சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் என சில வழக்குகளும் நீதி மன்றங்களில் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

மாவிட்டபுரம் பெரிய கோவில் பல்லாயிரக்கணக்கானவர் யாழ்ப்பாணம் முழுவதிலிருந்தும் சென்று திருவிழாக் காலத்தில் வழிபட்டு வரம்பெறும் அற்புதம் நிறைந்த தலம். அதனால் அங்கு நுழைவோருக்கும் தடுப்போருக்குமிடையில் பலத்த முரண்பாடு.

முதலாண்டிலும் வேகமாக ஏற்பாடுகள் நடைபெற்றன.

கோவில் வாசலில் தாழ்த்தப்பட்டவர்களை நுழைய விடும்படி ஒரு சாரார் வழமைபோல் உண்ணாவிரதம் இருந்தனர். இன்னொரு பகுதியினர் சத்தியாக்கிரகம் செய்தனர். வழமை போல அவர்களைப் பற்றியெல்லாம் பொலிசாரோ உயர்சாதிக்காரரோ கவலைப்படவில்லை; பலாத்காரமாக நுழைவோம் என்ற இயக்கத்தைச் சார்ந்தவர்களுக்காகவே

www.padippakam.com



அவர்களும் அஞ்சினர். தடை செய்வதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்தனர்.

ஆனந்தன் கோவில் கதவுகளைத் தன் தோழருடன் நின்று பாதுகாப்பதாகக் கோவில் ஐயருக்கும் மற்றும் பிரமுகர்களுக்கும் சொன்னான். சென்ற ஆண்டில் நடை பெற்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாதபடி பாதுகாப்பாக இருக்கவேண்டும் என கோவில் அதிகாரிகள் முடிவு செய்தனர்; கோவில் கதவுகளைப் பூட்டிவைத்து, திருவிழா உபயகாரரை மட்டும் புறக்கதவால் நுழையவிட்டு உள்ளே பூசைகளை நடத்தினர். சுவாமி வெளி வீதி வரும்வேளை மட்டும் கதவுகளைத் திறந்து உடன் சாத்திக் கொண்டனர்.

தேர்த்திருவிழாவிற்கு முதல்நாளான சப்பரத் திருவிழா அன்றிரவு சுவாமி வெளிவீதி வருவதற்குக் கதவு திறக்கும் வேளை பலாத்காரமாக நுழைவதற்கு வெகுஜன இயக்கத்தவர் ஏற்பாடு செய்தனர். அதற்கு அஞ்சிய கோவில் முகாமைக்காரர் வெளிவீதி வழியாக முருகன் பவனிவரும் விழாவைத் தவிர்த்தனர்.

''பள்ளர் பறையருக்குப் பயந்து திருவிழாப் பவனியை நிறுத்துவதை கடவுளே பொறுக்க மாட்டார்''

ஆனந்தன் குமுறினான்.

திருவிழாவைச் சாட்டாக வைத்துக்கொண்டு உள்ளே நுழையவரும் தன் ஊர்த்தலைகள் இரண்டு மூன்றை உருட்ட வேண்டும் என்பதும் அவன் நோக்கமாக இருந்தது.

தேர்த்திருவிழாவன்று கலகம் நிகழலாம், கரம்பனி லிருந்து வெடிகுண்டு துப்பாக்கிகள் கொண்டு வருகிறார்கள் எனப் பொலிசாருக்கு ஆனந்தன் அறிவித்திருந்தான். அதையொட்டி கரம்பனிலிருந்து தெருவால் வரும் கார்கள், வண்டில்கள், சயிக்கிள்கள், தனிநபர்கள் எல்லோரும் பொலிசாரால் பரிசோதிக்கப்பட்டனர். பொலிசாருக்கு ஏமாற்றமே கிடைத்தது.

www.padippakam.com



தேர்த் திருவிழாவின்போது ஆங்காங்கே சில எறிகுண்டு கள் வெடித்தன. சிலர் காயமடைந்தனர். அதன்மேல் அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை.

நேரடி மோதல்கள் கோவில் கதவுகளைப் பூட்டி வைத் திருந்ததன் மூலம் தவிர்க்கப்பட்டன.

''தெய்வத்தை எங்கே நின்றும் கும்பிடலாம். இவர்கள் ஏன் உள்ளே நின்றுதான் கும்பிட வேண்டும் என அடம் பிடிக் கிறார்கள்''

ஒருவர் சமரசம் பேசினார்.

''வீட்டிலிருந்தும் கும்பிடலாம்''

அதற்கு மற்றோர் குரல் பதிலளித்தது.

அந்த ஆண்டும் தாம் வெற்றிகரமாகத் திருவிழா நடத்தி விட்டதாக கோவில் பிரமுகர்கள் பெருமைப் பட்டுக்கொண் டனர்.

இவ்வாறு இன்னும் எத்தனை ஆண்டுகள் நடாத்தப் போகிறோம் என்பது பலரது கேள்விக் குறியாக இருந்தது.

## 56

வடிவேலு கொழும்புக்குத் திரும்பும் முதல்நாள் விஞத்தியடிப் பகுதியில் இலட்சுமணன் வீட்டுக்குச் சென் றான். இலட்சுமணன் குளித்துக் கொண்டிருந்தான். முருகேசன் வரவேற்று, சுப்பிரமணியனுக்கும் செய்தி அனுப்பினான்.

இலட்சுமணனின் தாய் கோப்பி தயாரித்துக்கொண்டு வந்தாள். அதை அருந்திக்கொண்டே பல்வேறு விஷயங்கள் பற்றியும் உரையாடினர்.

''அடுத்த வருஷம் இலெக்சன் வருதாம். ஆர் தம்பி வெல்லுவினம்''

www.padippakam.com



சுப்பிரமணியன் கேட்டான்.

''ஆர்வெண்டாலும் உங்களுக்கோ எங்களுக்கோ அதிக மாய் எதுவும் கிடைத்துவிடப் போவதில்லை''

வடிவேலு பதட்டமின்றிப் பதில் சொன்னான்.

''கூட்டாட்சி பிறகும் வந்தால் ஏதேன் நன்மை கிடைக் காதா?''

முருகேசன் கேட்டான். அவ்வேளை குளித்து வந்த இலட்சுமணன் எப்பேச்சிலும் ஈடுபடாது அவர்களது உரை யாடலைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''தேர்தலால் வரும் இதே அரசியலமைப்புக்குள் நின்று கொண்டு என்னதான் செய்ய முடியும். சிரட்டையுக்கைக் குத்துக் கரணம் போடுவதைப் போன்றதுதான் அது. கேர ளத்திலும் மேற்கு வங்காளத்திலும் நடப்பதைப் பார்க் கேல்லையா''

''அங்கேயெல்லாம் இடதுசாரி ஆட்சிதானே ஏற்பட் டிருக்கு. சோஷலிஸத்தை ஏன் ஏற்படுத்த முடியாது?''

''ஆகக் கூடியது அவர்களால் நாட்டில் கிடைக்கக் கூடி யதை வரியாகக் கறந்து ஓரளவு பகிர்ந்து கொடுக்கலாம். அவ்வளவுந்தான். சோஷலிஸம் என்றால் நாட்டிலுள்ள வறுமையைப் பகிர்வதல்ல. உற்பத்திச் சாதனங்களையெல் லாம் அரசுடமை ஆக்கி உற்பத்தியைப் பெருக்க வேண்டும். தற்போதைய அரசியலமைப்பையும் அதன் கீழ் ஆட்சி செலுத்தும் வர்க்கத்தையும் வைத்துக்கொண்டு எவற்றையும் சாதிக்க முடியாது. ஆயுதப் புரட்சி இல்லாமல் தற்போது ஆளும் வர்க்கத்தை ஒழித்து விடலாம் என்று நினைப்பது பகற்கனவு''

''நாங்களெல்லாம் தேர்தலுக்கு என்ன செய்வதென்று தான் தெரியேல்லை. எங்கடை வாக்குச் சீட்டைப் பெறப் பல்லைக் காட்டிக் கொண்டு இனி வெள்ளாளரெல்லாம் வீடு தேடி வருவினம்''

www.padippakam.com



சுப்பிரமணியன் சொன்னான்.

''எங்கடை வாக்குச் சீட்டெல்லாத்தையும் பெட்டிக்கை போடாமல் கொண்டுவந்து நெருப்புக் கொளுத்தி எரிச்சுக் காட்ட வேணும்''

முருகேசன் சொன்னான். யாவரும் சிரித்தனர். வடிவேலு விடைபெற்று இலட்சுமணனுடன் புறப்படும்போது சுப்பிரமணியன் திரும்ப அழைத்தான்.

''தம்பி ஒரு விஷயம்''

''உங்க அண்ணனிட்டைப் போகமுந்தி கடைசியாய் ஒருக்கா சொல்லிப் போட்டுப் போங்கோ. இனிமேலாதல் நடந்தது போக அடக்கமாய் இருக்கச் சொல்லி ஏனென்றால் அடுத்த வெடி அவருக்குத்தான். பிறகு நீங்கள் குறை சொல்லப்படாது''

வடிவேலு தலையை ஆட்டிவிட்டுப் புறப்பட்டான்.

அன்று மாலை வடிவேலு பயணம் புறப்படுமுன் ஆனந்தனுக்கும் வடிவேலுவுக்கு மிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. வடிவேலு தயவாகச் சொன்னான் :

''ஓடிற ஆத்தை உன்னால் தடுத்துவிட முடியாது. உலகத்திலை நடக்கிற விஷயங்களை நீ படித்துப் பார்க்கிறேல்லையா?''

''ஆத்தை மறிச்சு அணைக்கட்டு கட்டிறாங்கள். நீ பார்க்கேல்லையா?''

''அந்தத் தண்ணீரைச் சும்மா விடுறேல்லை. கதவுகளால் திறந்து விட்டுத்தான் மின்சாரம் எடுக்கிறார்கள்; வயலுக்குப் பாய்ச்சிறார்கள்''

''நீ எனக்குப் புத்தி சொல்ல வரவேண்டாம்''

''அடுத்த பலி நீதான் என்று எண்ணிக் கொள்''

படிப்பகம்

www.padippakam.com



''என்னையாவது கடவுள் பலி எடுக்கிறதாவது, அப்படியென்றால் எப்பொழுதோ நான் போயிருக்க வேண்டும். இவங்கடை செருக்கையெல்லாம் ஒழிக்கத்தான் கடவுள் இன்னும் என்னை வைத்திருக்கிறார். என்னைச் சும்மா பலி எடுக்க முடியாது. எவனாவது என்மேல் கைவைத்தால் நூறு பேராவது பலியாவாங்கள் என்று அவங்களிட்டைச் சொல்லிப் போட்டுப்போ''

''நான் ஏன் சொல்ல வேணும்? உன் வீரமெல்லாம் அவங்களுக்கும் நல்லாய் தெரியும்''

வடிவேலு சொன்னான்.

''நீ தான்ரா விபீஷணன் போலை எனக்குப் புத்தி சொல்ல வந்திட்டாய். நீ அந்தப் பள்ளர் பறையர் பக்கம்; உன்னை என் தம்பி என்று சொல்லவே நா கூசுது''

ஆனந்தன் வடிவேலுவைத் தாக்குவதற்கு முன்னேறினான். தங்கம்மா ஓடிச் சென்று தடுத்தாள். வடிவேலு தந்தை அருகே சென்று உட்கார்த்தான்.

''புராணங்களெல்லாம் அக்கிரமம் முற்றியதும் யுத்தத்தால் முடிவு ஏற்படுவதாகத் தான் சொல்லுகின்றன''

வடிவேலு விடைபெறும்போது ஆறுமுகத்தார் அவனிடம் சொன்னார்.

## 57

---

அன்று மாலை அன்னம் வந்த பின்னரே தங்கம்மா படுக்கை விட்டு எழுந்திருந்தாள். வடிவேலு நிற்கும் போது வீடு கலகலப்பாக இருந்தது: அவன் போனதும் பழையபடி இருண்டு விட்டதாக அவளது நினைவு. மனச்சோர்வினால் படிக்கையை விட்டு அவளால் எழவே முடியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



''அன்னம், அந்த ஆட்டிலை பாலைக் கறந்துதா. எனக்கு கையெல்லாம் உழையுது. இந்தா செம்பு''

தண்ணீர்ச் செம்பை அவள் கையில் தங்கம்மா நீட்டினாள். அன்னம் பெற்றுக் கொண்டு புறப்படும் போது தங்கம்மா தொடர்ந்து சொன்னாள்:

''ஆட்டின்ரை பின் காலைக் கட்டு, இல்லாவிட்டால் காலாலை அடிக்கும்''

''பெரிய தம்பி சொல்லிறதும் உண்மைதானே. உங்கடை பாசமெல்லாம் இளையவரிலைதான்''

அன்னம் சொல்லிக் கொண்டே முற்றத்தைக் கடந்த போது ஆனந்தன் எதிர்ப்பட்டான்.

''நீ தான்ரி உண்மையைச் சரியாய் சொல்லுறாய். உந்தக் கிழவிக்கு நான் ஒவ்வொரு நாளும் நீ ஓரவஞ்சகம் நினைக்கிறாய் என்று சொல்லிக் கொண்டுதான் இருக்கிறன். அவன் உழைக்கிற பிள்ளை என்று வாரப்பாடு. அவன் நின்ற இரண்டு வாரமும் மீனென்ன இறைச்சியென்ன பொரியலென்ன...''

''நானிப்ப உமக்குக் கிழவியாய் போய் விட்டன். உனக்கே நரைமயிர் போட்டிட்டுது. கலியாணத்தைக் கட்டு என்று கேட்டுக் கொண்டிருக்கிறன். கேட்கிறானா. கட்டுக் காவாலியாய் திரிகிறான்''

தங்கம்மா இருவருக்கும் சேர்த்துப் பதில் சொன்னாள்.

கொட்டில் பக்கமாகப் பால்கறக்கச் சென்ற அன்னம் துப்பித்துப்பி வேப்பங்குச்சியால் பல்தீட்டிக் கொண்டு வந்த ஆனந்தனிடம் சொன்னாள்:

''கோச்சி சொல்லுகிறபடி ஒரு கலியாணத்தைக் கட்டுங் கோவன். உங்கடை சாதிக்கைதானே வீட்டுக்கு நாலுகுமர் கிழடாகிக் கொண்டிருந்தது. அப்பிடி ஒண்டைக் கட்டினால் புண்ணியமாவது கிடைக்கும்''

www.padippakam.com



''ஊர்த்தொண்டு செய்ய என்று புறப்பட்ட எனக்கென்னெடி கலியாணம்''

''ஊர்மேயப் புறப்பட்ட உங்களுக்கென்று சொல்லுங் கோவன்''

அன்னம் சொல்லியபடியே சிரித்தாள்: விஷமச் சிரிப்பு.

''எனனெடி சொன்னாய்? உனக்கு இப்ப வாய் முளைச்சுப் போச்சு''

''இல்லை, எனக்கே பல்லுக் காட்டிற நீங்கள், ஊர்க் குமரிகள் அகப்பட்டால் விடுவியளோ''

அன்னம் நளினமாகக் கடிந்து சொன்னபடியே ஆடு உதறிக் கொண்டிருந்த பின்கால்களைப் பிடித்து ஒன்றாகச் சேர்த்தாள், அவள் தன் வாயில் வைத்திருந்த கயிற்றை எடுத்து ஆட்டின் கால்களைக் கட்டினாள்.

''நீ மட்டும் வெள்ளாளருக்கை பிறந்திருந்தால் கட்டாயம் உன்னைக் கட்டியிருப்பன். உன்னைப்போல வடிவான வெள்ளாளப் பெட்டையைத்தான் தேடிக் கொண்டிருக்கிறன்''

வாயில் தேங்கியிருந்த உமிழ் நீரைத் துப்பிவிட்டு விஷமச் சிரிப்போடு சொன்னான்.

''என்னைச் சும்மா எழுப்பவேண்டாம். உப்பிடிப்பேசி ஏமாத்தவாற பல பேரை நான் பார்த்திருக்கிறன்''

''எடியே என்னைவிட உன்னோடை இப்ப போட்டி போடவாறவன் ஆர்? அவனையும் ஒரு கை பார்க்கிறன்''

ஆத்திரமடைபவனைப் போலச் சொன்னான். அவனது வார்த்தை அன்னத்தின் இதயத்தில் ஒரு கணம் சுட்டது. ஆட்டின் முலைகளைக் கழுவிவிட்டு துடைகளுக் கிடையே செம்பை வைத்துக் கொண்டு இரு கைகளாலும் பாலைக் கறந்தாள்.

படிப்பகம்

www.padippakam.com



''உங்கடை ஒழுக்கத்தை எனக்குத் தெரியாதா? அண்டைக்கு ஆரோ ஒரு குமரியோடை தியேட்டரிலை படம் பார்த்துக் கொண்டிருந்தியளாம்''

''ஆரெடி உனக்குச் சொன்னது?''

''அதையேன் உங்களுக்கு''

''தியேட்டரிலை கிடைக்கிற சீட்டிலைதானே இருக்க வேணும். பக்கத்திலை ஆரேன் பெண்களிருந்தால் நாங்க கூட்டிக் கொண்டு போனதென்று கதை கட்டிறதாடி''

''உங்கடை வாய்ச்சாகச மெல்லாம் எனக்குத் தெரியாதா? அதுதான் கோச்சி சொன்னது போலை ஒரு கலியாணத்தைக் கட்டிப் போட்டால் நல்லது''

''எனக்கு இப்ப என்னத்துக்கடி அவசரம்...''

''கோச்சி சொன்னமாதிரி அந்த நரைக்கிற மயிரையாவது பிடுங்கீக்கலாம்''

அன்னம் சிரித்துக் கொண்டே எழுந்து ஆட்டுக்குட்டியை அவிழ்த்து பால் ஊட்டவிட்டாள்.

''அவளவை பிடுங்குவாளவை என்று நினைக்கிறியா? தலை நரைச்ச கிழவன் என்று சொல்லிப்போட்டு வேசை ஆடத் தொடங்கினால்...''

''ஓ உங்கடை சாதீக்கை அப்பிடியு மிருக்கோ''

அன்னம் கேலியாகச் சொன்னாள்.

''ஆளைப் பார்த்தாடி கலியாணம். உத்தியோகம் பார்த்து சீதனம் அதுக்குத்தானே கலியாணம். வடிவேலு உத்யோகாரன். லட்சம் வரை சீதனம் பேசி வருவாங்கள். நான் கட்டாமல் இருக்கிறதாலை அந்தச் சீதனத்தை வாங்க முடியேல்லை என்பதுதான் ஆச்சியின்ரை கோபம்''

''உங்களுக்கு என்ன சீதனம் பேசிறாங்கள்?''

படிப்பகம்

www.padippakam.com



''நாப்பது ஐம்பது வாங்கலாம். ஆனால் வயதான குமருகளைத்தான் பேசப் பார்க்கிறாங்கள். நான் சீதனமே வேண்டாமென்றிட்டன்''

''ஓ அப்பிடி யென்றால் சீதனமில்லாமல் எங்கையேன் ஏழைக் குமரியளை பதினெட்டு இருபது வயதிலை பாரக்கிறியளோ. அதுகள் உங்களைக் கிழவன் என்று சொல்லி வேலி பாய்ஞ்சால்...'',

''என்ரை கையிலை வந்த பிறகு உத்தச் சேட்டைக்கெல்லாம் விடுவனா? தலை மாட்டுக் கையே ரிவோல்வர் வைத்துக் கொண்டுதான் நான் படுப்பனென்று உனக்குத் தெரியுமாடி. என்னை ஆரெண்டு நினைச்சாய்?''

அன்னம் பதில் கூறாது சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். பால் கறந்து கைகள் சோர்ந்தன. உடனே எழுந்து பாலைத் தூர வைத்து விட்டு வந்து ஆட்டின் கால்கட்டை அவிழ்த்து விட்டு குட்டியை ஊட்ட விட்டாள். குட்டி ஓடிச் சென்று முலைகளை உந்தி உந்திச் சுவைத்தது. தாயாடு அதை நக்கி விட்டது.

''என்னெடி பேசாமல் போறாய். என்னை ஆரெண்டு நினைச்சிருக்கிறாய்''

''மீசையில்லாத வெள்ளாளச் சிங்கம்''

அன்னம் பாலை தங்கம்மாளிடம் எடுத்துச் சென்று கொடுத்து விட்டு தன் வேலைகளில் ஈடுபட்டாள்.

யந்திரம் போல வழமையான வேலைகளை உடல் செய்து கொண்டிருந்த போதும் சிந்தனை வலுத்துக் கொண்டிருந்தது. நெற்றியில் வியர்வை முத்துகள் அரும்பின. அவற்றைத் துடைக்கவே மறந்து விட்டாள். அவை வழிந்து சட்டையை நனைத்தன.

# 58

அன்று மாலை அரிசியும் மீனும் வாங்கிக் கொண்டு கிழக்கு ஒழுங்கையில் இறங்கிய போது சயிக்கிளில் இலட்சு மணன் வந்தான். அவளைக் கடந்து ஓட முடியாத நிலையில் அவளது நடைவேகத்தில் சயிக்கிளை ஓட்டிக் கொண்டே 'எப்பிடி அன்னம் சுகம்' என்று கேட்டான். அன்னம் திரும்பி அவனைப் பார்த்து விட்டுச் சொன்னாள்.

''உங்களைத் தானே தேடிக் கொண்டிருக்கிறேன் எங்கை அந்தப் பக்கமே காணேல்லை. மறந்திட்டியளோ''

''மறக்கிறதென்றில்லை. இரண்டு வீட்டிலை கால். பள்ளிக்கூடம் வேறை. மற்றது மகாநாடு கூட்டங்களெல் லாம் கேள்விப் பட்டிருப்பியே''

''கூட்டத்துக்கும் வந்தனே. காணாதமாதிரி போனியள். ஏன் இப்ப நேரமில்லை என்று பொய் சொல்லுறியள். எனக்கு விஷயமெல்லாம் தெரியும்''

''அவள் சொல்லிப் போட்டாளோ''

''அவள் குழந்தைப்பெட்டை. இன்னொருத்தியைப் பற்றிப் புகழ்ந்தால் எந்தப் பொம்பிளை தான் கேட்டுக் கொண்டிருப்பாள். நீங்க உப்பிடி நடந்தது சரியில்லை.''

''அன்னம், உனக்கு சரியாய் விஷயம் தெரியாது. அவள்சந்தோசப்படுறமாதிரிச் சொன்னாள்.அதனாலைதான் அவளாய் வளத்திலை வருமட்டும் நான் உன்னட்டை வாறேல்லை என்று இருக்கிறன். இப்பதான் என்னை ஒவ் வொரு நாளும் கேட்கிறாள். நான்தான் வேணுமெண்டு அடம் பிடிக்கிறன்''

''அப்பிடியா விஷயம். சரி நாளைக்குக் கூழ் காய்ச்சி வைக்கிறேன். இரண்டு பேருமாய் வாருங்கோவன்''

''சரி நீ இராசாத்திட்டை சொல்லி அனுப்பு. அவள் என்னை வற்புறுத்துவாள். நான் கொஞ்சம் நடப்புக் காட்டி

www.padippakam.com



இனிமேல் சந்தேகப்பட மாட்டன் என்று உறுதியும் வாங்கிக் கொண்டு வாறன் சரி. வரட்டா''

சயிக்கிளை பலமாக உழக்கும் போது அன்னத்திடம் சொன்னான்:

''தலையிலை பெட்டியோடு கையை ஆட்டியபடி நீ நடக்கிறதை பின்னுக்கு நின்று பார்க்க நல்லாயிருக்கு''

அன்னம் கொடுப்புக்குள் சிரித்தபடி அவன் வளைந்து வளைந்து சயிக்கிள் ஓட்டுவதைப் பார்த்தபடியே நடந்தாள்.

## 59

மறுநாள் மாலை இலட்சுமணனையும் இராசாத்தியையும் வரவேற்று தான்வைத்திருந்த புதுப்பாயை நிலத்தில் விரித்து உட்காரச் செய்தாள்.

குப்பிவிளக்கு மறைந்து அரிக்கன் லாந்தரொன்று குடிசைக்குள் தொங்கிக்கொண்டிருந்தது. உள்ளே சீமெந்து போல் நிலம் மெழுகி முருக்கமிலைச் சாறு பூசப்பட்டிருந்தது. அடுப்பின் அருகே சில அலுமினியப் பாத்திரங்கள் தெரிந்தன.

கூழை, பிடியுள்ள ஒரு அலுமினியப் பாத்திரத்தோடு கொண்டு வந்து வைத்தாள்.

''கோளையும் கறண்டியும் தாறனே...''

அன்னம் அடுப்புப் பக்கமாக முன்னேறினாள்.

''இல்லை பிலாவிலைதான் எனக்கு வேணும்''

இலட்சுமணன் சொன்னான்.

இராசாத்தியிடம் ஒரு கோப்பையையும் கரண்டியையும் கொடுத்துவிட்டு இலட்சுமணனிடம் மடித்த பலாவிலையைக் கொடுத்தாள்.

www.padippakam.com



முத்தி ஒரு மூலையில் படுத்திருந்தாள். ஏரம்பன் மட்டும் ஒரு தடவை இராசாத்தியைப் பார்த்துக் குரல் கொடுத்தான்:

''அண்ணனுக்கு சன்னம்பட்ட காய மெல்லாம் சுகந்தானே''

''ஓம் நல்ல சுகம்''

''இளம் வயதிலை நல்ல வேளை தப்பினது. எனக்கு முழங்கால் சிரட்டையை உடைச்சுக்கொண்டு போட்டுது. அதாலை நொண்டியாய் போய் கிடக்கிறன். அந்த நாளிலை எங்களுக்குத் துணிச்சலெங்காலை. பொலிசுக்குச் சொல்லிப் போட்டு விட்டம். அவ்வளவுந்தான். இப்ப தம்பியவை துவக் கெடுத்ததுதான் சரி. எங்களைப் போலை அவங்களையும் நொண்ட வைக்கவேணும். அப்பதான் தாங்கள் செய்த அநியாயங்களையும் உணருவாங்கள்''

தன் மனவேதனை ஏரம்பன் கொட்டினான். அவன் வார்த்தைகள்போல கூழும் சூடாகவும் உறைப்பாகவும் இருந்தது

அன்னம் தலை வாரிப் பொட்டு வைத்திருந்தாள். அச் சிட்ட அழகான சீத்தைத் துணியில் சட்டை. அரையிலும் அதே துணியைச் சுற்றிக் கட்டியிருந்தாள். இடையின் சதை பிதுங்கிக் கொண்டிருந்தது. குடிசையில் அங்கும் இங்குமாக சுறுசுறுப்பாக அலைந்து கொண்டிருந்தாள்.

சிறிது நேரம் கூரையின் நடுப்பகுதியைத் தாங்கும் மரத் தோடு சாய்ந்து கைகளை உயர்த்தி மரத்தைப் பிடித்தபடி அவர்களிருவரும் கூழைச் சுவைத்து அருந்துவதைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள்.

அவ்வேளை ஒரு பையன் ஓடிவந்து மூச்சிழுக்க சொன் னான்.

''அக்காவைத் தேடி பட்டணத்திலை இருந்து ஒரு மனுஷி வந்திருக்கு, வரட்டாம்''

இராசாத்தி எழுந்தாள்.

www.padippakam.com



''நானும் வாறனே''

இலட்சுமணன் சொன்னான்.

''இல்லை நீங்க குடிச்சிட்டு வாருங்கோ. நான் முதலிலை போறன்''

இராசாத்தி பெட்டைபோலவே அவ்வேளையும் ஓடிக் கொண்டிருந்தாள்.

இலட்சுமணன் கூழைக்குடித்துவிட்டு எழுந்து முற்றத்தில் வந்து குடத்தைச் சரித்து வாயைக் கழுவினான். அன்னமும் தொடர்ந்து வெளியே வந்தாள்.

''அன்னம் நெடுநாளாய் உனக்குச் சொல்ல என்றிருந்தன். இன்றைக்கு சந்தர்ப்பம் கிடைக்கிறபடியால் சொல்லிறன். இனியும் நீ கலியாணம் கட்டாமல் இருக்கிறது சரியில்லை. எங்காவது கட்டிவிட்டால் நல்லது''

இலட்சுமணன் விநயமாகச் சொன்னான்.

''இப்ப என்ன அவசரம்? வீட்டிலையும் இருக்கிற நிலமை உங்களுக்குத் தெரியாதா. வேறையும்...''

''அதெல்லாம் தெரியாமலா. அப்பு, ஆச்சியையும் பொறுப்பேற்கத் தக்கவனாகத்தானே நாங்களும் பார்ப்பம்''

வேறு ஏதோ சொல்ல இருந்த அன்னத்தை இடைமறித்து இலட்சுமணன் சொன்னான். அன்னம் அந்த வார்த்தையைத் தொடர்ந்து சொல்ல விரும்பாதவளாகக் கூறினாள்:

''இப்ப ஒரு அவசரமுமில்லை. நான் கூடத் தயாராகும் வேளை சொல்லிறனே''

அன்னத்தின் பதில் கலியாணத்தைக் கடத்துவதுபோலத் தெரிந்தது.

''அது எப்ப?''

''உங்களுக்குத் தெரிய வராமலா போகப்போகுது''

படிப்பகம்

www.padippakam.com



அவளது நளினப் பேச்சு இலட்சுமணனுக்கே புரிய வில்லை.

''நீ என்னதான் மனதுக்கை வைச்சிருக்கிறாய் என்றதையாவது சொல்லன்''

''மாணிக்கனை நீங்களும் மறந்திட்டியளாக்கும்''

அவள் மறைந்த தன் நண்பனின் பெயரைத் திடீரெனச் சொல்லித் தன்னைச் சாடுவாள் என இலட்சுமணன் எதிர் பார்க்கவேயில்லை. தோல்வியடைந்தவன்போல் அன்னத் தின் கண்களைப் பார்த்தான். மங்கிய ஒளியில் அவனால் அவ ளது உணர்ச்சிகளை நன்கு கவனிக்க முடியவில்லை.

## 60

''பார்த்தியாடீ வழக்கெல்லாம் தள்ளுப்பட்டுப்போச்சு. எல்லாருக்கும் விடுதலை''

ஆனந்தன் அன்னத்திடம் வீரம் பேசினான். தில்லை யனின் மரண ஊர்வலத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிர யோகத்தில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் யாவரும் போதிய சாட்சிகளில்லாததினால் விடுதலை செய்யப் பட்டனர்.

''இதெல்லாம் வழக்கமாய் நடக்கிற விஷயம் தானே. அதாலைதான் இப்ப துவக்கெடுத்து அவங்களே பழிக்குப் பழி வாங்கத் தொடங்கியிருக்கிறாங்கள்''

''தூக்குமேடைக்குத்தான் போவினம். நாங்களெல்லா ரும் சும்மா இருந்து விடுவமா?''

''ஏதோ உங்களுக்குக் கிடைக்கிற நீதி எங்களுக்கும் கிடைக்கத்தானே வேணும். இல்லாவிட்டால் கோடு, கச்சேசி என்று இருந்து என்னதான் பயன்?''

''எடியே உனக்கு உப்பிடியெல்லாம் பேச ஆர் பழக் கினது. லட்சுமணனா?''

www.padippakam.com



''இல்லை நீங்கள் தானே''

அன்னம் நாக்கை மடித்து நீட்டிவிட்டுச் சிரித்தாள்.

''நான் உனக்கு கனக்க இடந்தந்திட்டன். நீ வாய் காட்டிறதில்லை, நெளிக்கவும் தொடங்கிவிட்டாய். ஆச்சி இப்ப பார்க்கவேணும். இனிமேல் உப்பிடிச் சேட்டைவிட்டால் வெளுத்துப் போடுவன்''

''ஏன் வண்ணாரத் தொழிலும் தெரியுமோ?''

''அண்டைக்கு ஆட்டுக் கொட்டிலடியிலை நெடுக நீண்டு கதைச்சதைப் பார்த்திட்டு 'அந்தப் பள்ளியோடை உனக் கென்னடா நெடுகக் கதை' எண்டு கேட்டா''

''நீங்கள் என்ன சொன்னியள்?''

''அது இந்தச் சாதிச் சண்டைக் கதைகள் என்று சொல்லிச் சமாளித்தன்''

''ஒரு நாளைக்கு என்னைக் கேட்பா. வெள்ளானப் பெடியனோடை உனக்கென்னடி கதை எண்டு, நான் நீங்கள் கதைக்கிறதெல்லாத்தையும் சொல்லிவிடுவன்''

''ஆச்சிதான் நம்பப்போறா. உனக்கும் எண்ணமோடி என்று மயிரைத்தான் பிடிப்பா. நீ ஆருக்குச் சொன்னாலும் ஒருத்தரும் நம்பமாட்டினம்''

''பசுத் தோலோடை புலி வந்துது எண்டு ஆச்சி சொல்லுவா. உங்களைப் பார்த்தால் அந்தப் பழமொழிதான் நினைவுச்கு வருகுது.''

''இப்ப போய் வேலையைப் பாரடி, பிறகு நான் குளிக் கேக்கை வாளியைக் கொண்டு வா. ஆச்சி வாறா''

தங்கம்மா வந்து அன்றைய வேலைகள் பற்றிச் சொன்னாள்.

''வெள்ளிக்கிழமை வீடும் கழுவவேணும். கிடாரத்திலை தண்ணி நிறைச்சு வை''

www.padippakam.com



முற்றமெல்லாம் கூட்டி முடிந்த பின் வாளிகளைக் கொண்டு கிணற்றடிக்குச் சென்றாள். ஆனந்தன் தண்ணீர் இழுத்து அவற்றுள் ஊற்றினான். அவ்வேளை பல நாட்களாக அவள் மனதில் அரித்துக் கொண்டிருந்த கேள்வியை அச்சத்தோடு கேட்டாள்:

''நான் சொல்லுறனென்று நீங்க கோபித்தாலும் சரி கோவிக்காட்டாலும் சரி. பக்கத்து வீட்டுச் செல்லம்மாவின்ரை மூத்த பெட்டையை உங்களுக்குக் கலியாணம் பேசப் போறன்''

செல்லம்மா அடிக்கடி அவளிடமும் சொன்னதையே கேட்டு, செல்லம்மாவிற்கு அவனது அந்தரங்க விருப்பத்தை ஒரேயடியாகச் சொல்லிவிட அன்னம் விரும்பினாள். ஊரிலை அவனுக்கு எவரும் பெண்ணே கொடுக்கமாட்டார்கள். தான் பக்கத்திலே இருந்து பழகினபடியாலும், தாய் தகப்பனுக்குத் துணையாயிருப்பாள் என்பதற்காகவும் 'மூத்தவளைக் கேட்டால் மறுக்க மாட்டேன்' என்ற விதமாக செல்லம்மா தன்னை உயர்த்தி அன்னத்திடம் சொல்லியிருந்தாள்.

''என்னெடி என்னை அவ்வள்வு குறைவாய் நினைக்கிறியாடி. அவள் பவளத்துக்கு நெஞ்செலும்பெல்லாம் தெரியுது. வாயிலை வெறும் பல்லு. கன்னமெல்லாம் தாண்டு போச்சு. அதைக் கட்டச் சொல்லி நீ என்னைக் கேட்க உனக்கு என்ன துணிச்சலெடி? என்ன பகிடி விடுறியா? இரண்டாம்பெட்டை தயாநிதியைச் சொல்லியிருந்தாலும் நான் பொறுத்திருப்பன்...''

ஆனந்தன் ஆத்திரத்தோடு சொன்னான்.

''அதிலைதானே வேலையில்லையே. நீங்க கேட்டாலும் மாட்டனென்றிடுவாள்''

''என்னெடி சொன்னாய்? அவளுக்கு அவ்வளவு பெரிய எண்ணமோ''

www.padippakam.com



''எண்ணமில்லாமலா? உங்க தம்பியைத்தான் கட்டினால் கட்டுவன். இல்லாட்டால் குமராயே இருப்பன் என்று எனக்குச் சொன்னாள். தாய்க்கும் இந்த விஷயம் தெரியாது. உங்களுக்கு மிப்ப பெரிய எண்ணம். கோச்சி சொன்ன மாதிரி தலையிலை நரைபோட்டிட்டுது. அவள்தான் உங்களைக் கட்ட இப்ப வாறாள்''

அன்னம் கேலியாகச் சொல்லி முடித்தாள்.

ஆனந்தன் கொதித்துக் கொண்டிருந்தான். அவன் பதில் கூறுமுன் இரு வாளிகளையும் கைகளில் தூக்கிக் கொண்டே அவள் உடல் வளைந்தாட ஓடினாள். மற்றத் தடவை வரட்டும் என ஆனந்தன் காத்து நின்றான். அவள் மறுதடவை வந்ததும் ஆத்திரம் பொங்க ஏசினான்:

''ஏனெடி இத்தினை நாளாய் இந்த விஷயத்தை எனக்குச் சொல்லேல்லை. வடிவேலுவுக்கும் அவளுக்கும் தொடுப்பாடீ''

''நிதி ஒழுங்காய் காயிதம் எழுதிறவள். என்னட்டையும் தபால் பெட்டியிலை போடத்தாறவள். பதிலும் வாறதெண்டு சொல்லிறாள். ஆருக்குத் தெரியும்?''

''அவளுக்கு என்னைப் பிடிக்காது. அவனைத்தான் பிடிக்குமோ''

''எப்பிடி யென்றாலும் உங்க தம்பி உத்தியோகாரனெல்லே. நீங்க வீணாய் கேட்டு மரியாதையைக் கெடுத்துப் போடாதையுங்கோ''

''நான் உதுக்கு வழி எடுக்கிறன். என்னை ஆரெண்டு நினைச்சாளவை''

''சும்மா கொதிக்காதையுங்கோ. உங்கடை வீரமெல்லாம் பள்ளர் பறையரோடைதானே. உங்கடை சாதிக்கையே வேறை எல்லாச் சாதியும் இருக்கு. உங்களை நாயே எண்டும் தேடமாட்டினம்''

www.padippakam.com



''என்னெடி சொல்லுறாய்? உனக்கு வரவர வாய்க் கொழுப்பு வேறை. நான் எடுத்த விஷயம் எதிலையும் தோத்ததில்லை. இருந்து பார், நான் இதுக்கு வேலை செய்யிறன்''

''என்ன வேலை செய்யப்போறியள். துவக்கெடுத்துச் சுடப் போறியளோ. அதுவும் வெள்ளாளச் சாதிக் காரரையா''

## 61

அன்னத்தின் சொற்கள் யாவும் ஆனந்தனது இதயத்தைக் குடைந்து மேலும் ஆத்திரத்தைக் கூட்டிக் கொண்டிருந்தது. கைகள் துலாவை வலித்து தண்ணீர் இழுத்ததே தவிர தான் என்ன செய்கிறேன் என்பதையே மறந்து நின்றான். தாங்கமுடியாத சினத்தால் பற்களைக் கடித்துக் கொண்டான்.

அன்னம் மூன்றாவது தடவை வந்தபோது சிரித்துக் கொண்டே வந்தாள்.

''சரி சொல்லுங்கோவன், நீங்கள் என்ன செய்யப் போறியளென்று''

''இந்தக் கிணத்தடியிலை நின்று சொல்லுறன் கேள். நான் தயாநிதியைக் கட்டிறன். இல்லை என்றால் உவள் வடிவேலுவைக் கட்டிறதை மறந்திடட்டும். நான் உயிரோடை இருக்கிற மட்டும் அது நடக்காது''

''நிதியைக் கட்டிறதென்பது உலகத்திலை நடக்காத பேச்சு. சரி நீங்க பெரிய வீரன்தானே. நானும் உயிரோடை இருந்தால் பார்ப்பமே''

அத்தோடு பேச்சை மாற்ற அன்னம் விரும்பினாள். அதற்கிடையில் அவனது மணிக்கட்டில் பிளாஸ்டர் ஒட்டியிருப்பதைப் பார்த்தாள். அவனை மீண்டும் ஏறிட்டுப்

www.padippakam.com



பார்த்தாள். அவன் வாளியை நெருங்கி அவளின் எதிராக நின்று தண்ணீர் ஊற்றும்போது அவனது நெஞ்சையும் பார்த்தாள். மயிர்களுக்கிடையே உராய்ந்து காய்ந்து போயிருந்த கரிய நிற மெல்லிய கோடுகள். முன்னர் ஒரு தடவை நெஞ்சில் பார்த்த வடு தென்னைமரம் ஏறியதால் ஏற்பட்டதுதானா?

''உங்கடை நெஞ்சிலை ஏதோ உரைஞ்சிக்கிடக்கே. கையிலையும் என்ன காயம்?''

அன்னம் கேட்டாள்.

''அது ஒண்டுமில்லையடி?''

''இல்லை சொல்லுங்கோ. மரம் ஏறினீங்களா?''

''எடியே நீ எப்பிடியெடி கண்டுபிடிச்சாய்? எப்பிடியெண்டாலும் சாதித் தொழிலை மறப்பியளா?''

''எங்கடை சாதித் தொழிலை நீங்களே செய்யத்தொடங்கி விட்டால்...''

''அண்டைக்கு நீர்வேலியிலை இராத் திருவிழா பார்த்திட்டு வரேக்கை கள்ள இளநி பிடுங்கப்போனம். அதுக்கு மரமேறிறதிலை போட்டி வந்திட்டுது. நான் ஏறுவதெண்டு சொன்னன். ஒருத்தனும் நம்பேல்லை. பந்தயம் பிடிச்சு அவங்கள் தோத்துப் போனாங்கள். பள்ளருக்கெண்டால் நெஞ்சும் மணிக்கட்டும் காய்ச்சுப் போயிருக்கும். நாங்க பழக்கமில்லாமல் ஏறினால் கொஞ்சம் கீறத்தானே செய்யும். நீ வாய்காட்டினியே இதையே பாரடி. நான் நினைச்சுப் பந்தயம் கட்டின எதிலையும் தோத்தது கிடையாது''

அன்னத்தின் சிந்தனை அவனது நெஞ்சிலும், பேச்சிலும் ஈடுபட்டு சுழன்று கொண்டிருந்தது. முகத்தில் முன்னர் இருந்த கேளிக்கை மறைந்துவிட்டது. தண்ணீர் இழுத்துக் கொண்டிருந்த அவனது முதுகைப் பார்த்தாள். வெறும் உருவ நிழலாகவே தோன்றியது.

www.padippakam.com



''என்னெடி பேசாமலிருக்கிறாய்?''

அன்னம் திடுக்கிட்டுப் பார்த்தாள்.

''இதுக்கு என்ன பந்தயம் என்று சொல்லுங்கோவன்''

''நீ கேட்கிற எதையும் தருவன்''

''பிறகு ஏமாற்றப்படாது''

''நான் சொன்னால் சொன்னதுதான்''

''தண்ணிபோதும் வீடு கழுவ. நீங்க குளியுங்கோ''

அன்னத்தை முன்னர் வீடு கழுவவே உள்ளே நுழைய விடாத தங்கம்மா அன்று சோர்வினால் சொன்னாள்:

''கழுவிற வீடுதானே. தலைவாசல் மட்டும் நீயே வந்து கழுவடி. அறைகளை நான் தண்ணீர் ஊத்திக் கூட்டித் தள்ளி விடுகிறேன்''

அன்று எப்படியும் தங்கம்மா காணாதபோது உள்ளே நுழைந்து பார்க்க நினைத்தவளுக்கு பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலிருந்தது. தங்கம்மா சுகயீனமாயிருந்த போதும் உள்ளே நுழைந்திருக்கிறாள். ஆபத்து என்றால் குற்றமில்லை என்று சாத்திரம் சொல்லுவதாக அவள் பிறர் பேசும்போது கேட்டிருக்கிறாள்.

'கிணற்றை வெட்டிப் பொங்கு மட்டுக்கும் பள்ளர் என்னவும் செய்யலாம். வீடு கட்டிக் குடிபுகும் வரையும் நுழையலாம். அதன் பின்னர்தான் தங்கள் கிணறு, தங்கள் வீடு, பள்ளர் பறையர் நுழையப்படாது என்று சட்டங்கள் பேசுவாங்கள். எத்தனை வேடிக்கை'—இவ்வாறு வடிவேலு ஒரு தடவை சொல்லி தண்ணீர் அள்ளும்படி அன்னத்திடம் சொன்னது அவள் நினைவுக்கு வந்தது.

''அண்ணனும் ஆச்சியுமில்லை. நீ வீட்டுக்கை நல்லாய் வரலாமடி''

www.padippakam.com



வடிவேலு மற்றொரு தடவை சொன்னதை நினைத்த போது அவளுக்குச் சிரிப்பே வந்துவிட்டது.

தாழ்த்தப்பட்டவர்கள் கிராமத்துக் கோவிலில் நுழைந்து விட்டதற்காக சண்டாளப் பிரார்த்தனை நடைபெற்றதாம். அவர்கள் நுழைந்ததனால் ஏற்பட்ட பரிசுத்தத்தைக் கழுவுவதற்காக விசேட அபிசேகங்களெல்லாம் நடைபெற்ற பின்னர் ஐயர் கோவிலைப் பூட்டி வைத்திருக்கிறார்.

கோவில் கோபுர வேலைகள் செய்தவர்களில் பெரும்பாலோர் பள்ளர்கள்.

''சுவாமியைக் கல்லில் செதுக்கியவர் யார்? ஐயரும் வேளாளருமே தெய்வத்தைக் கல்லாக்கிவிட்டார்கள்''

வடிவேலு அன்னத்திடம் மற்றொரு தடவை சொல்லியிருந்தான்.

'சரி நீ இனிக் கூட்டித் தள்ளு'

தங்கம்மா சொல்லிவிட்டு நிலம் காய்வதற்காக வீட்டுக் கதவுகளை அப்படியே விட்டுவிட்டு அடுக்களைக்குள் நுழைந்து விட்டாள்.

அம்மியில் மிளகாய்ச் சம்பல் அரைக்கும் சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது.

## 62

அன்று மாலை அன்னத்திடம் இலட்சுமணன் வந்திருந்தான். வேலாயுதம் வீட்டில் இரவு தங்குவதாக அவனது உடைகாட்டியது. அரையிலே சாரம். மேலே சேட். கையிலே 'ரோச் லையிட்'. சிகரெட்டை உதடுகளில் வைத்து ஊதிக் கொண்டிருந்தான்.

''ஏன் ராசாத்தியை விட்டுட்டு தனிய வாறியள்''

போ—13

படிப்பகம்

www.padippakam.com



அன்னம், தனிய அவன் வருவதை விரும்பாதவள் போல் கேட்டாள்.

''தனிய வரப்படாதோ''

''ராசாத்தி ஏதேன் நினைச்சாலும்...''

''அப்பிடியெல்லாம் பார்த்தால் நாங்கள் வாழ முடியாது''

''உதிலை என்ன அவளையும் கூட்டிக்கொண்டு வந்திருக்கலாமே''

''உனக்குத் தெரியாதா? அவளுக்குச் சத்தி. சோர்ந்து போய் படுத்திருக்கிறாள். எனக்கும் பொழுது போகேல்லை. அதுதான் வந்தனான்''

''நல்ல செய்தி. அதுதான் இராசாத்தியையும் இந்தப் பக்கமே காணேல்லை. அவளுக்கும் வெக்கமாயு மிருக்கும்''

''நான் சொன்னனென்று சொல்லாமல் நீயே கேட்டு கதையைப் பிடுங்கன்''

''எனக்குத் தெரியாதா''

அன்னம் அடுப்பை மூங்டிவிட்டு வந்தாள். அடுப்பில் முட்டி இருக்கவில்லை. அலுமினியக்கேத்தில் இருந்தது.

''வடிவேலுவின் காயிதம் ஒன்று வந்தது. உன்னையும் விசாரித்து எழுதியிருத்தான்''

''வேறை என்ன எழுதியிருந்தார்?''

''பக்கத்து வீட்டுப் பெட்டை ஆரோ தயாநிதியாம். ஆனந்தன் அதைக் கட்டிறதுக்குப்பார்க்கிறானாம். வடிவேலு வராட்டால் தான் தற்கொலைசெய்து விடுவதாக அந்தப் பெட்டை பயமுறுத்தி எழுதியிருக்கிறாளாம். அதுதான் உன்னை விசாரித்து நிலமையை அறிந்து எழுதச்சொல்லி எழுதியிருக்கிறான்''

www.padippakam.com



''அப்பிடியா சங்கதி''

அன்னம் சிரித்தாள். அவளால் சிரிப்பை அடக்க முடிய வில்லை. நடந்த விஷயங்களை இலட்சுமணனிடம் சுருக்க மாகச் சொன்னாள்.

செல்லம்மாவிடம் தயாநிதியைக் கலியாணம் பேச ஆனந்தன் தன் வீட்டாருக்கும் தெரியத் தக்கதாகவே ஆட் களை அனுப்பிய செய்தியையும், தன் குமரொன்று கரை சேரப் போகுது என்ற சந்தோசத்துடன் செல்லம்மா சம்மதித் ததையும், தயாநிதி ஒரேயடியாக ஆனந்தனை தூஷித்து மறுத்த செய்தியையும் சொன்னாள். ஆனந்தன் கொதிப் படைந்திருப்பதையும் செல்லம்மா பிள்ளைகள் அந்த வீட் டிற்கு வரப்படாது என்றும் சொல்லியிருக்கிறான் என்பதை யும் தெரிவித்தாள். என்றாலும் செல்லம்மா வந்து 'அவசரப் படாதை தம்பி, கொஞ்சம் பொறு, இந்த நாளையப் பெட் டையளைத் தெரியாதே' என்று சொல்லிச் சமாதானப்படுத் திக்கொண்டிருப்பதையும் கூறினாள்.

''ஆனந்தன் கண்டிப்பாக ஒன்றுமட்டும் சொல்லியிருக் கிறான். 'அண்ணனுக்குப் பேசி முடியாதென்ற ,பெண்ணை தம்பி செய்யிறதென்றரல் நான் தற்கொலை செய்வன். இல் லாட்டி இரண்டு பேரையும் சுட்டுப் போட்டு நான் சாவன்''

அன்னம் சொல்லிய செய்திகள் இலட்சுமணனுக்குச் சுவையான கதையாக இருந்தது. அது தவிர வேளாளர் சாதிக்குள்ளேயே நிலவும் உள் குத்துவெட்டுச் சண்டைகளை யும் அறிய முடிந்தது; முரண்பாடுகள் கூர்மையடைவதையும் அவனால் காண முடிந்தது.

''ஆறுமுகத்தாரும் கிழவியும் என்ன சொல்லினம்''

''செல்லம்மாவோடு செருக்குக்காட்டி தான் தோற்றுப் போனதென்று மனக்கொதிப்பு வேறை. ஆனாலும் மூத்த

www.padippakam.com



வனுக்குக் கேட்க மாட்டனென்ற பெண்ணை இளையவன் கட்டிறது சரியில்லை என்பதை ஒப்புக்கொள்ளுவினம்''

''எங்கடை கையாலை சாகாமல் உவன் தற்கொலை செய்தாவது செத்துத் துலையட்டும். உப்பிடிப்பட்டவர் களுக்கு இப்பிடித்தான் முடிவும் ஏற்படுறது வழக்கம்''

இலட்சுமணன் சொன்னான்.

''அப்படிச் சொல்ல முடியாது, தன் தோல்விகளை ஏற்றுக்கொள்ள விரும்பாதவன், இரண்டு பேரையும் அவன் சுட்டாலும் ஆச்சரியப்படுறதுக்கில்லை''

''அப்பிடியாவது தூக்குக்கு அல்லது மறியலுக்குப் போகட்டன். தயாநிதி என்ன சொல்லிறாள்?''

''அவள் என்ரை கையுக்கை. எனக்குத்தான் எல்லாம் சொல்லுவாள். நான் கட்டினால் வடிவேலுவை அல்லது ஆரேன் உத்தியோகாரனைத்தான் கட்டுவன். ஊர் சுத்திற காவாலியைக் கட்டமாட்டன் என்று. ஆனந்தன் என்னைக் கேட்கேக்கை அப்படியே சொல்லிவிட்டன். அவளின்ரை நாக்கை அறுக்க வேண்டும் என்று சீறினான்''

''சாதியெல்லாம் மறந்து இப்ப அவங்கடை சாதிக் கையே சண்டை திரும்பியிருக்கு. பார்த்தியா, வேடிக் கையை''

இலட்சுமணன் சொன்னான்.

''நீங்கள் இப்ப என்ன எழுதப் போறியள்?''

''உண்மையை அப்படியே எழுதிவிடுறன்''

''இப்ப இந்தப்பக்கம் வந்திட வேண்டாம் என்றும் எழுதி விடுங்கோ''

அன்னம் தண்ணீர் அடுப்பில் கொதிப்பதையே மறந்து விட்டாள். ஓடிச்சென்று தேநீர் தயாரித்துக் கொண்டு வந் தாள். மாணிக்கனின் வெள்ளைக்குவளையில் கொண்டுவர அவள் மறக்கவில்லை.

www.padippakam.com



தேநீரைக் குடித்துவிட்டு இலட்சுமணன் வெளியேறும் போது முற்றத்தில் நின்று தயங்கித் தயங்கிச் சொன்னான் :

''அன்னம், நீ ஆனந்தன் வீட்டுக்குப் போவதை நிறுத்தி விட்டாலென்ன''

இப்படியான ஒரு பிரச்சனை என்றோ ஒருநாள் வரும் என அவளும் எதிர்பார்த்தேயிருந்தாள். ஆயினும் திடீரென இலட்சுமணன் வாயிலிருந்து அவ்வாறான பேச்சை அவள் எதிர்பார்க்கவில்லை. என்ன நோக்கத்துடன் சொல்லு கிறான் என்பதையும் அவள் அறிய விரும்பினாள்.

''எங்கடை நிலை உங்களுக்குத் தெரியாதா? திடீரென நிறுத்துவதென்றால் வேறை பிழைப்புக்கும் வழிதேட வேண் டும். நீங்கள் வற்புறுத்திச் சொல்லும் வேளை கட்டாயம் நின்று விடுவேன். இப்போது எதற்காகக் கேட்கிறீங்கள்''

உண்மையாக அங்கு சென்று பிழைப்பதை அவ்வேளை விட்டு விட விரும்பாதவள் போலவே அவள் குரல் ஒலித்தது.

'' நீ போவதால் பலபேரும் பல்விதமாய் பேசிறதற்கு ஒரு இடம் ஏற்படுது''

''எனக்கு நீங்கள் சொல்லுவது விளங்கேல்லை''

''வெள்ளாள வீட்டுக்கு கூலிவேலைக்குப் போறது மட்டு மல்ல ஆனந்தனோடு பழகிறதைப் பற்றியும் கதைகள் பரவப் பார்க்குது''

''கதைகளைப் பற்றியெல்லாம் நான் கவலைப்படப் போவதில்லை. நான் என்ன செய்யிறன் என்பதைத் தெரிந்து கொண்டே செய்யிறன்''

''உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா? ஆனாலும் நெருப்புக் கோழியைப் போலை தலையைப் புதைத்துக் கொண்டு வாழ்ந்துவிடப் படாது என்பதற்காகவே சொன் னேன்''

www.padippakam.com



இலட்சுமணன் சொல்லிவிட்டு 'ரோச் லைமிட்'டை அடித்துக்கொண்டே ஒற்றையடிப் பாதையில் இறங்கிய போது மீண்டும் சொன்னான்:

''இதைப் பற்றி யோசித்துப் பார். நான் வாறன்''

## 63

ஆறுமுகத்தார் வீட்டில் முன் எவ்வாறும் இல்லாதபடி அமைதி குலைந்திருப்பதை அன்னமும் கவனித்தாள். தங்கம்மா பக்கத்து வீட்டாரையே இரவு பகலாக வைது கொண்டிருந்தாள். செல்லம்மா தன் மக்களுக்கு மருந்து போட்டு மயக்கிப் போட்டாள் எனத் திட்டினாள். ஆயினும் எதிரில் காணும் வேளை தன் சினத்தை மூத்தவன் முடிவுக்காக அஞ்சி அடக்கிக் கொண்டாள்.

''போனது போகட்டும். மூத்தவன் ஆசைப்பட்டுக் கேட்டதற்காக வாயினும் இரண்டாம் பெட்டையைக் கட்டி வைத்தால் என்ன? செல்லம்மாவும் சேர்ந்துதான் உத்தியோகாரனென்று இளையவனை அப்பப் பார்க்கிறாள் போல் தெரியுது. அல்லது இவள் நினைச்சால் தன் பெட்டையின் ஆட்டத்தை அடக்க முடியாதா?''

தங்கம்மா அன்னத்திடம் மனம் வெந்து சொன்னாள். அன்னத்திற்கு செல்லம்மா வீட்டு நிலைமை தெரிந்த போதும் தங்கம்மாவின் நியாயத்தைத் அவளால் மறுத்துப்பேச முடியவில்லை.

''என்னெடி பேசாமல் நிற்கிறாய்?''

தங்கம்மா தன் வாதத்திற்கு அன்னத்திடம் பதிலை எதிர்பார்த்தாள்.

''நீங்க சொல்விறதும் உண்மைதான்''

www.padippakam.com



''நாலு சதத்துக்கு வழியில்லாத நாய்களை சம்பந்தியாய் கேட்கிறம். நடப்புவிடுறாளவை. நானும் உயிரோடை இருந்தால் வடிவேலு உந்த வீட்டுக்கை போறதையும் பார்க்கிறனே.''

தங்கம்மா சபதமெடுத்தாள். அவள் குரலை ஆறுமுகத்தாராலும் எதிர்க்க முடியவில்லை, மூத்தவனுக்கு கலியாணம் பேசி முடியாது என்று மறுத்த பெண்ணை இளையவன் செய்வது முறையல்ல என்று அவரும் முடிவு கூறினார்.

தங்கம்மா இத்தடவை சொன்னதை அன்னம் வழமையாக 'ஓம்' கூட்டி விடவில்லை.

''தங்களுக்குப் பிடிச்ச மாப்பிள்ளை பார்க்கினமாக்கும்.''

''நாங்களெல்லாம் பார்த்தமா?''

''அதாலைதானே வீட்டிலை எந்த நேரமும் அவரைப் பற்றியே குறையே சொல்லிக்கொண்டிருக்கிறியள். பிடித்த மாப்பிள்ளையாய் கட்டியிருந்தால்...''

''நாங்களெல்லாம் பிள்ளைப் பெத்து வளர்க்கேல்லையாடீ.''

தங்கம்மா இடை மறித்துச் சொன்னாள்.

''பிள்ளைப் பெறுறதுக்குத்தான் கலியாணமோ...''

அன்னம் நளினமாகக் கேட்டாள்.

''வேறை என்னத்துக்கடி. சேர்த்த சொத்துக்களை சீரழிந்து போகாமல் பரம்பரையாய் காப்பாற்றிறதுக்குத் தானேடி பிள்ளைகளை வேணுமெண்ணிறது.''

தம் பரம்பரை வாழ்வின் அனுபவ தத்துவத்தை தங்கம்மா சொன்னாள். அன்னம் அதன்மேல் எதுவும் பேசவில்லை.

www.padippakam.com



''சொத்துக்களைக் காப்பாற்றவே கலியாணங்கள் நடைபெறுகின்றன'' என இலட்சுமணன் முன்னொரு தடவை சொன்னது அவன் நினைவில் வந்தது.

# 64

அன்னம் வேலைகளை முடித்து செல்லம்மா வீட்டுக்குச் சென்றபோது தயாநிதி மெஷினில் அவுளது சட்டையையே தைத்துக் கொண்டிருந்தாள். அன்னத்திற்கு எது தைப்பதானாலும் தயாநிதியே தைத்துக் கொடுப்பாள். அவளிடம் பணம் வாங்கமாட்டாள். அன்று அளவு பார்ப்பதற்கு வரும்படி தயாநிதி சொல்லியிருந்தாள்.

தயாநிதியின் தமக்கை பவளம் ஒரு மூலையில் 'டிரெஸ்ஸிங் கவுனோ'டு உட்கார்ந்திருந்தாள். தயாநிதியும் பவளமும் ஒருவருடன் ஒருவர் பேசிக்கொள்வதேயில்லை. முன்னரே கோபமாக வீட்டுக்குள்ளேயே இருந்த இருவரும், ஆனந்தன் கலியாணப் பேச்சிற்கு ஆட்களை அனுப்பிய பின்னர், புலிகளாக மாறிவிட்டனர். பவளம் ஒட்டிய முகத்தோடு அடிவானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

சிந்தனை கலைந்த நிலையில் அன்னத்தை மரியாதையோடு அழைந்தாள்.

அன்னம் அருகே சென்றதும் சுற்றிவரப் பார்த்துவிட்டு விரைவாகக் கேட்டாள்.

''அங்காலை என்னடி புதினம்?''

''ஒன்றுமில்லை.''

''என்னெடி பேசினம்.'!

''எதைப்பற்றிக்கேட்கிறியள்.''

''கலியாணத்தைப் பற்றித்தான்.''

www.padippakam.com



''அண்ணனுக்குப் பேசி மாட்டனென்றதை தம்பி கட்டப் படாதென்று.''

''அது சரிதானேடி. ஆனந்தன் உவளைப் பற்றி என்ன சொல்கிறார்?''

''வயிற்றிலை சுட்டு சூடலெடுத்து மாலைபோட வேணு மென்று...''

''அவர் அப்பிடித்தானே சொல்லுவார். உவளின்ரை செருக்கை அடக்கிறதுக்கு அப்பிடித்தானே செய்யவேணும். அப்பு மட்டும் இப்ப உயிரோடை இருகவேணும் உப்பிடி யெல்லாம் நடக்குமா'.'

''அவர் பிறகு மறியலுக்குப் போனால் உங்களைக் கட்ட முடியாதே.''

அன்னம் கேலியாகவே சொன்னாள். அதைப் புரிந்து கொள்ளும் நிலையே இல்லாத மனநிலையுள்ள பவளம் பதில் கூறினாள்.

''என்னைக் கட்டாவிட்டாலும் பரவாயில்லை.''

அளவு பார்க்க வரும்படி தயாநிதி அழைத்தாள். சட் டையை அவளது கைகளுக்குள்ளாக இழுத்துவிட்டு சுற்றிவர சரிபார்த்தபடியே கேட்டாள்:

''உவள் என்னவாம்?''

''ஆறுமுகத்தர் வீட்டுப் புதினம் கேட்டா. ஆனந்தனை நீங்க கட்டிப் போடுவியளோ என்ற பயம் இப்பவும் இருக்கு''

''அந்தக் காவாலி உவளையாவது கட்டித் துலைஞ்சால் பெரிய நிம்மதியா யிருக்கும். எந்த நேரமும் என்னைப் பார்த்ததும் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறாள். அன்னம், நீ இன்னொருக்கால் கேட்டுப் பார்க்காதையன். புண்ணியம் கிடைக்கும்.''

கடூரமாக ஆரம்பித்து வாஞ்சையோடு முடித்தாள்.

www.padippakam.com



''பிறகு ஒருக்கால் அல்ல இரண்டு மூண்டுதரம் நினை ஆட்டிப் பார்த்தன். என்மேலையே பாய்ஞ்சார். கடைசிச் சொன்ன வார்த்தைகளைக் கேட்டால் நீங்களே இனி மேல் இந்தச் பேச்சை எடுக்க மாட்டீங்கள்.''

''என்னெடி சொன்னரன்.''

''அதைச் சொல்லவே நாக்கு வராது.''

''எனக்குச் சொல்லமாட்டியா? அவளுக்கு ஒன்றும் கேட் காது. நீ சொல்லு.''

சட்டையைக் கழற்றியபடியே கேட்டாள்.

''தன்னைப் பற்றித்தான் நாங்கள் கதைக்கிறம் என்று பார்க்கிறா.''

''நாங்கள் என்ன கதைச்சாலும் அப்பிடித்தான் நினைப் பாள். அவளுக்கு இப்ப அரைப் பைத்தியம், நீ சொல்லெடி,''

''வாய் திறந்து சொல்லவே எனக்கு வெட்கமாயிருக்கு.''

''எத்தினை கதையெல்லாம் நான் உனக்கு மட்டுந் தானேடி சொல்லியிருக்கிறேன். எங்கடை சாதிச் சிநேகிதிப் பெட்டைகளுக்கே சொல்லியிருக்க மாட்டன். அப்படிப் பட்ட எனக்கு நீ ஏனேடி சொல்ல வெட்கப்படுகிறாய்.''

''அந்த ஊத்தைப் பேச்சை...''

''நாங்க கேட்காத ஊத்தைப் பேச்சுத்தான்! அவன் என்ன சொன்னான் என்று சொல்லன்ரி''

தயாநிதி மீண்டும் வற்புறுத்திக் கேட்டாள். அன்னம் தயக்கம் நீங்கி பச்சையாகவே சொன்னாள்:

''தீட்டு நிற்கிற வயதிலை அந்தக் கிழட்டுக்குமரை என்னைக் கட்டச் சொல்லிக் கேட்கிறியாடி. அவங்கள் உனக்கு தரகு தந்தாங்களோ என்று சீறினார். அதுக்குப் பிறகு நான் இந்தப் பேச்சை எடுக்கிறேல்லை''

www.padippakam.com



தயாநிதி வாயடைத்து நின்றாள். ஆனால் சில நாட்களின் முன்னர் அன்னத்திற்கு ஆனந்தன் இவ்வாறு சொன்ன போது அவள் அதிர்ந்து விடவில்லை. எதிர்த்து ஆனந்தனுக்கே கொடுத்தாள்.

''உங்கடை சாதித்திமிரிலை உப்பிடி ஊரெல்லாம் குமருகள் இருக்கு. எங்கடை சாதீக்கை உப்பிடி ஒன்றைப் பார்க்க மாட்டியள்''

''உங்கடை சாதியைப் போலை சொத்தில்லாமல் சும்மா சோறு கொடுத்துக் கூட்டி விடுற சாதியாடி நாங்கள்''

''அதிலையும் ஒரு வீரந்தான். உந்தச் சொத்தாலை தானே வீட்டுக்கு நாலு குமருகள் கிழடாகுது. அதுவும் உங்கடை சாதிக்குப் பெருமைதானே''

அன்னம் எதிர்த்து நவினமாகச் சொன்னாள்,

''நீ எடுத்ததுக்கெல்லாம் வாய்காட்ட நான்தான் இடம் தந்திட்டன்''

''ஓம் இப்ப என்ன செய்வியள்?''

''எனக்கு வாற கோபத்துக்கு...''

''உங்கடை வீரம் என்னோடைதானே. முடிந்தால் நிதியிட்டைக் காட்டுங்கோவன்''

ஆனந்தன் எதுவும் பேச முடியாது கொதிப்படைந்த உடல்மேல் தண்ணீரைக் கொட்டினான்.

## 65

இலட்சுமணன் திடீரென இயக்க அலுவலாக ஒரு தடவை கொழும்புக்குச் சென்று திரும்பியிருந்தான். வார முடிவில் சென்று இரண்டு நாட்களே தங்கியிருந்தான். திரும்பி வந்தபோது கொழும்புக் கோட்டைப் புகையிரத

www.padippakam.com



நிலையத்தில் அவனை வழியனுப்ப வந்த வடிவேலு தாய்க்காக ஒரு பார்சலைக் கொடுத்திருந்தான். அன்னத்தின் மூலம் அப்பார்சலை அனுப்ப எண்ணியிருந்த இலட்சுமணன் விளாத்தியடியிலிருந்து கிழக்குப் பக்கமாக பார்சலோடு வந்தவன் திடீரென ஆறுமுகத்தார் வீட்டுக்கே பார்சலைக் கொண்டு வந்தான். அவனை அங்கு சில நாட்களின் பின்னர் கண்ட அன்னம் ''எப்ப கொழும்பாலை வந்தீங்கள்?'' என்று வரவேற்றாள்.

''பிறகு வீட்டை வாறனே''

இலட்சுமணன் பதிலளிக்க, அன்னம், தங்கம்மாவை அழைக்க, அவன் பார்சலைக் கொடுத்தான். தங்கம்மா ஆவலோடு தன் மகனின் சுகத்தை விசாரித்தாள்.

''சுகத்துக்கென்ன, நல்லாயிருக்கிறார்''

இலட்சுமணன் அங்கு தாமதிக்க விரும்பாதவனாக திரும்பினான். ஆனந்தன் அரவம் கேட்டு வெளியே வந்து எட்டிப் பார்த்தான். இலட்சுமணனை எங்காவது எதிர்பாராது சந்திக்க விரும்பியிருந்தவன் போல நிற்கும்படி குரல் கொடுத்தான்.

மாமரத்தின் கீழ் இலட்சுமணன் காலை ஊன்றியபடி சயிக்கிளை நிறுத்தினான். ஆனந்தன் அருகே வந்ததும் இலட்சுமணன் கீழே இறங்கினான்.

''உன்னோடையோ உங்கடை ஆட்களோடோ எனக்கு ஒருவித கோபமுமில்லை.. இந்தக் கோயில் விஷயமாய் எங்கடை ஊரிலையாதல் எல்லாருமாய் சேர்ந்துபேசி ஒரு முடிவு எடுக்க உங்களையெல்லாம் கூப்பிட்டுப்பேச என்றிருக்கிறம்''

''நல்லதுதானே. அழைத்தால் நாங்களும் வருவம் தானே''

இலட்சுமணன் சாவதானமாகக் கூறினான்.

www.padippakam.com



''வெளி ஊர் ஆட்கள், கட்சிக்காரர் அரசியலுக்காக இதுக்கை நுழையிறதைத்தான் நாங்களும் விரும்பேல்லை''

''வெளியூர் பள்ளரை அப்ப கோவிலுக்கை, தேத்தண்ணிக் கடையளுக்கை நுழைய விடுவியளோ?''

''உங்களோடை சமாதானம் வந்தால் அவங்களையும் விடுவம். கோவிலிலை நம்பிக்கையில்லாதவங்களும் உங்களோடை சேர்ந்து அடாத்தாய் நுழைய வந்தால் நாங்கள் விடுவமா? தயவோடு வந்து எங்களோடு பேசிப் பார்க்கலாமே''

''மிஸ்டர், எங்களை நீங்கள் இதுவரை நாளும் தவறாய் விளங்கி விட்டியள். உங்களுடைய தயவு தாட்சணியத்தை, இரக்கத்தையெல்லாம் பரிசோதித்துப் பார்த்த காலமெல்லாம் போட்டுது. நாங்கள் உங்களிடம் பிச்சைகேட்கிறம் என்று நினைக்கவேண்டாம். எமது உரிமைகளையெல்லாம் நாங்கள் உங்களிடமிருந்து தயவோடு எதிர் பார்க்கவில்லை. கோவில், தேத்தண்ணிக் கடைகள் போன்றவையெல்லாம் பொது இடங்கள். மனித இனமான எங்களுக்கும் அங்கே நுழைய உரிமையிருக்கு நாமாகவே நுழைவோம். இப்போது எமக்குப் பயந்து பூட்டி வைக்கிறீங்கள். உந்தப் பூட்டெல்லாம் உடைத்து நாங்கள் நுழையிற காலம் தூரத்திலில்லை''

''அப்பிடியா உங்கடை நியாயம். உது அநியாயமாகத் தெரியேல்லை''

''நாங்களும் மனிதரென்று நுழைய தடுக்கிறதுதான் நியாயமாக்கும். இந்தப் பூமியெல்லாம் உங்கடை சொத்துத் தான் என்ற நினைப்பாக்கும். நாய், பூனை, நுழையும்இடங்களிலும் நாம் நுழையப்படாது என்று சொல்லுவதுதான் உங்கடை நியாயமாக்கும்''

ஆனந்தனுக்கு ஆத்திரமே ஏற்பட்டது. தேவையில்லாமல் அழைத்து மாட்டிக் கொண்டதாகத் தெரிந்தது.

படிப்பகம்

www.padippakam.com



''உங்களுக்கெல்லாம் என்ன திமிர் வந்திட்டுது? அப்ப முடிஞ்சால் நுழைந்து பாருங்கோவன்''

''நாங்கள் ஒவ்வொரு தடவையும் நுழையத்தானே வாறம். நீங்கள்தான் கோழைகள் போலை பூட்டிப் போட்டு எங்களோடை கோவிலுக்கு வெளியே நிற்கிறியளே''

இலட்சுமணன் கூறிய வார்த்தைகள் ஆனந்தனின் இரத்தத்தைக் கொதிக்கச்செய்தன. அவர்களது வாதத்தை அயலவர்களும் எட்டிப் பார்த்துக் கொண்டு நின்றனர். அவ்விடத்திலேயே மோதி விடுவார்களோ என்று அன்னமே அஞ்சினாள். இலட்சுமணன் கண்களிடையே அவள் என்றும் காணாத போர்க்குணத்தைக் கண்டாள்.

''ஓ நீதான் இந்தக் குண்டெடறியிற அடாத்துக் காறங் கடை லீடர் தம்பிக்குத் தெரிஞ்சவன் என்று விட்டன். மற்ற முறை நுழைந்து பாருங்கோ பார்ப்பம். இனிமேல் கொஞ்சம் கவனமாய் நடவும்''

ஆனந்தன் சொல்லிக்கொண்டே தேவையில்லாது பேச்சுக் கொடுத்துத் தோற்றுவிட்ட நிலையில் திரும்பினான். தங்கம்மாவும் வந்து அவனை இழுத்துச் சென்றாள்.

''நீங்களும் கொஞ்சம் கவனமாய் நடவுங்கோ. துவக்கும் வெடிகுண்டும், கத்தியும் உங்களுக்குத்தான் சொந்தம் என்ற காலமெல்லாம் போட்டுது''

இலட்சுமணன் சொல்லிவிட்டு சயிக்கிளில் ஏறினான். அன்னமும் இலட்சுமணனைப் போகும்படி வேண்டினாள்.

''இவை இரங்கி எமக்குப் பிச்சை தரப்போயினமாம். நாங்கள் கைநீட்டி வாங்கப் போறமாம்''

அன்னத்தைப் பார்த்து அவனது உதடுகள் முணுமுணுத்தன.

www.padippakam.com

# 66

மறுநாள் அன்னத்தை ஆனந்தன் கண்டபோதுகூட அவனது ஆத்திரம் ஆறவில்லை.

''உன்ரை இலட்சுமணன் நேற்றுப் பேசிய அடாத்து நியாயத்தைப் பார்த்தியாடி. இப்பிடிப் பேசினால் எப்பிடியெடி ஒற்றுமை வரும்''

''ஏன் அவன் என்ன, என்ரை புருஷனா?''

''உன்ரை சாதிக்காறன். நீ தானேடி உன்ரை பக்கத்திலையே கலியாணம் கட்டியும் வைத்திருக்கிறாய். உனக்கும் அவனுக்கும்...''

''என்ன ஒரு மாதிரிப் பேசப் பார்க்கிறியள்...''

''என்னெடி உனக்கும் கோபம் வரப் பார்க்குது. நீ பெரிய...''

''நீர் என்ன நினைக்கிறீர் எண்டு எனக்குத் தெரியும். என்ரை நடத்தையைப் பாதுகாக்க எனக்குத் தெரியும். நான் என்ன உம்மடை பெண்டாட்டி என்று நினைச்சீரா, நீர் அதிகாரம் செலுத்த''

அன்னம் ஆத்திரத்தோடு சொன்னாள்.

''எடியே எடியே கோபம் வேண்டாம்டி. நான் அப்பிடி ஒன்றுமே நினைக்கேல்லை. பேசாதையெடி''

ஆனந்தன் கோழையாக அவளது பேச்சின் முன் படிந்தான்.

''ஏதோ நினைச்சுப் போட்டு இப்ப மழுப்பப் பார்க்கிறியள்''

''சும்மா வாய் வீரம் பேசாதை. என்னைப்பற்றி நீ இன்னும் நல்லாய் அறியேல்லை. நான் ஒரு விஷயத்தை உண்மையென்று அறிந்தாலும் சும்மா இருந்து விடுபவனல்ல''

www.padippakam.com



''அப்ப நான் நினைச்சதும் சரியாயிருக்கலாம்''

''என்னெடி நினைச்சாய்?''

''அது எதற்கு இப்ப...''

அவ்வேளை தங்கம்மாவின் குரல் கேட்டது.

''ஆச்சி கூப்பிடுறா போட்டுவாடி. இன்னொரு விஷயம்''

அன்னம் சென்றபோது தங்கம்மா கோப்பி கொடுத் தாள். தன் மனதில் குடைந்து கொண்டிருக்கும் எந்தச் செய்தியையும் அன்னத்திடம் சொல்லாமல் தங்கம்மாவாலும் இப்போது ஆறமுடியாது.

''இவள் செல்லம்மா இன்னும் வெட்கம் ரோசமில்லாமல் இங்கை வந்து கொண்டிருக்கிறாள், என்ன செய்யிறதென்றே தெரியேல்லை''

''வரவேண்டாமென்று சொல்லிவிடுங்கோவன்''

''சொன்னால் போலை அவள் நிக்கப்போறதில்லை. ஒரு வேளை மனம் மாறி ஏதேன் நடந்தாலும் என்று பேசாம லிருக்கிறன். உவன் என்னவாமெடி''

''நீங்க கேட்டுப் பார்க்கிறதுதானே''

''உன்னோடைதானேடி கனக்கக் கதைக்கிறான். அது தான் என்ன சொல்லிறான் என்று கேக்கிறன்?''?

''அவளைச் சுடுறன், இல்லாட்டால் தற்கொலை செய்யி றன் என்று சொல்லிறார்''

''அப்பிடி இப்பவும் சொல்லிறானா?''

''தெருவிலை தலைகாட்ட முடியாமலிக்காம்''

''முந்தி என்ன மாதிரிச் சாப்பிட்டவன். இப்ப சாப் பிடுறதே குறைவு. இரவிலை நித்திரையுமில்லாமல் குறுக்கும் நெடுவுமாக நடந்து திரிகிறான். பைத்தியம் பிடிச்சிடுமோ என்றும் பயமாயிருக்கு''

www.padippakam.com



தங்கம்மா கவலையோடு சொல்லி குற்றமெல்லாவற்றை யும் அயல் வீட்டில் கட்டினாள். செல்லம்மா புருஷன் உயிரோடு இருந்திருந்தால் இத்தனை மோசமாகியிருக்காது எனவும் சொன்னாள்.

ஆனந்தன் சொல்லியனுப்பியபடி அன்னம் கிணற்றடிப் பக்கமாகச் செல்லவில்லை. மழையும் தூறிக்கொண்டிருந்தது. கொட்டிலுக்குள் உரலை நிமிர்த்தி தங்கம்மா தீட்டும்படி கொடுத்த அரிசியைத் தீட்டிக் கொண்டிருந்தாள். ஆனந்தன் மழைக்கு ஒதுங்குபவன்போல வந்து அவள் பின்னே நின்றான்

''என்னெடி நீ நெடுநாளாய் ஏமாத்தப் பார்க்கிறாய்?''

ஆனந்தன் மெல்லிய குரலில் கேட்டான்.

''அதுதானே வெள்ளாடிச்சியைக் கட்டப்போறியள். பள்ளியிட்டை வந்து பல்லைக் காட்டிறியளே. உங்களுக்கு வெக்கமில்லையா?''

''எந்த வெள்ளாடிச்சி வந்தாலும் உன்னை நான் மறந்திடுவன் என்று நினைக்காதை''

''ஆரேன் அறிஞ்சால் உங்கடை மானந்தான் போகும்''

''என்னடி மானமும் மரியாதையும். நீ கிளப்பித்தானேடி அடுத்த வீட்டு வேசையாலை தெருவிலையும் என்ரை மானம் மரியாதையெல்லாம் போட்டுது. உனக்காகத்தானேடி அன்றைக்கு லட்சுமணனோடும் ஒற்றுமை போடப் பார்த்து என்ரை மரியாதைய்யைப் போக்கடித்தன்''

''உப்பிடியெல்லாம் பேசி நெடுக என்னை ஏமாத்தி விடலாமென்று பார்க்காதையுங்கோ''

அன்னம் உலக்கையைப் பிடித்தபடி அழுத்தமாகச் சொன்னாள். வெளியே எத்தனை வீரனென்று எண்ணப்படும் ஆனந்தன் தன் முன்னே எத்தனை சிறுமைப்பட்டு நிற்கிறான்



படிப்பகம்

www.padippakam.com



என்பதை எண்ணியபோது அவளுக்கே ஆச்சரியமாயிருந்தது. இவனையா ஒரு வீரன் என சாதிக்காரரே எண்ணுகிறார்கள்.

''உனக்காக நான் என்னவெல்லாம் செய்திருக்கிறன் தெரியுமா? நான் சொன்னாலே நீ நம்பமாட்டாய், ஒரு நாளைக்குத் தனிய இருக்கேக்கை சொல்லிறன்''

''இப்பவும் தனியத்தானே நிற்கிறம். சொல்லுங் கோவன்''

அன்னம் அவனது நெஞ்சத்து உண்மைகளை அறியத் துடித்தாள். நெஞ்சில் ஏதோ மின்னல் போல் பளிச்சிட்டது.

''இப்ப என்னெடி தனிய...ஆச்சி வந்தாலும் செல்லம் மாவும் வேறை அடிக்கடி வந்து கரவாய் பார்க்கிறாள்''

''மழை விட்டிட்டுது. ஏன் பின்னாலை நிற்கிறியள். போங்கோவன்''

''வசதியான நாளாய் பார்த்து நான் சொல்லிறன். என்னை ஏமாத்திப் போடாதையெடி''

ஆனந்தன் அன்னத்தின் இடையில் கிள்ளிவிட்டு சிரித்த படி வெளியே நடந்தான். அவள் வெருட்சியடைந்து உலக்கையை ஏந்தியபடி கோபத்தோடு பார்த்தாள்.

அரிசியை மீண்டும் கையுலக்கை தீட்டிக்கொண்டிருந்த போதும் மனம் அங்கே பதிந்திருக்கவில்லை. அரிசி இடிபட்டு ஒரு பகுதி குருணியான பின்னரே திடுக்கிட்டு நினைவு வந்து இடிப்பதை நிறுத்தினாள்.

## 67

அன்று மாலை இராசாத்தியைப் பார்க்க அன்னம் வேலாயுதம் வீட்டுக்கே சென்றாள். அங்கு அவ்வேளை இலட்சுமணனும் இருந்தான். இராசாத்தி மெலிந்து

www.padippakam.com



வெளுறிப் போயிருந்தாள். அன்னத்தைக் காண வெட்கப் பட்டாள். அன்னம் தண்ணீர் அள்ள வரும் வேளைகளிலேயே அவள் கிணற்றடிப் பக்கமாக வருவதில்லை.

''என்ன ராசாத்தி, ஏதேன் சுகமில்லையா?''

அன்னம் கேட்டபடியே உள்ளூறச் சிரித்தாள்.

''ஏன் என்னைப் பார்த்தால் அப்பிடித் தெரியுதா?''

''நல்லாய் தெரியுதே!''

அன்னம் தலைவாசல் குந்தில் இராசாத்தியின் அருகே உட்கார்ந்து உரையாடினாள்.

''அன்னத்துக்கு தெரியாதா, ராசாத்தீன்ரை செய்தி'' பார்வதி கேட்டாள்.

''தெரியாதே''

''இரண்டு மாதமாய் முழுகேல்லை''

''ராசாத்தி ஏன் நீ எனக்குச் சொல்லேல்லை?''

அன்னம் அப்பாவிபோல் கேட்டாள்.

''ஒன்றும் தெரியாதமாதிரி அக்கா எனக்கு நடிக்க வேண் டாம். அவர் உனக்கா சொல்லாமல் விட்டிருப்பார்''

''அவரை இப்பதானே பார்க்கிறன். கொழும்புக்குப் போனீங்களாம். என்ன புதினம்?''

இராசாத்திக்குப் பதில் கூறிவிட்டு இலட்சுமணனைப் பார்த்துக் கேட்டாள்.

''இங்கே நடந்த கலை நிகழ்ச்சிகளையும் படங்கள் நாடகம் நாட்டியம் எல்லாவற்றையும் கொழும்பிலே வைக்க வும் ஏற்பாடு செய்திருக்கிறம்''

இலட்சுமணன் சொன்னான்.

படிப்பகம்

www.padippakam.com



''அங்கை மகாநாடு நடத்தேல்லையா?''

''சிங்களப் பிரமுகர்களை யெல்லாம் அழைத்து கூட்டம் மட்டுந்தான் போடப்போறம்''

''வடிவேலு என்னவாம்?''

''அவர்தான் அங்கை உயாராய் நிற்கிறார்''

''எப்ப இந்தப் பக்கம் வருவாராம்''

''நீ சொன்னபடி நானே வரவேண்டாம் என்றுதான் சொல்லி விட்டு வந்தன்''

''அதுதான் நல்லது. இங்கேயும் நிலைமையெல்லாம் அப்படியே இருக்கு. எந்த வேளை என்ன நடக்கும் என்றே சொல்ல முடியாது''

அன்னம் சொல்லிக் கொண்டே தலைவாசலில் தொங்கிக் கொண்டிருந்த படங்களைப் பார்த்தாள். அவள் இலட்சுமணன் வீட்டில் கண்ட படத்தை அங்கு காணவில்லை. ஏன் என்று இலட்சுமணனிடம் கேட்க எழுந்த நாவை அடக்கிக் கொண்டாள்.

## 68

ஆறுமுகத்தார் வீட்டில் தேங்காய் விழுந்த சத்தம் கேட்டு செல்லம்மா வெளியே வந்தாள். அயல் வீட்டில் அவ் வேளை ஒருவரும் இருக்கமாட்டார்கள் என்பதை அவள் அறிவாள். ஆறுமுகத்தாரும் தங்கம்மாவும் கோவிலில் தமது அபிஷேகத்திற்காக இளநீர் குலைகள், பழங்கள், தேங்காய், பொருட்களுடன் வாடகைக் காரில் போய்விட்டதை அவள் அறிவாள். ஆனந்தன் வழமையாகவே அவ்வேளை அங்கு நிற்பதில்லை.

www.padippakam.com



ஒருமணிக்கு மேலாகி விட்டது.

அன்னமும் அங்கு நிற்கமாட்டாள். நின்றால்தான் என்ன? அவளைத் தேடி வந்ததாகச் சொல்லி விடலாம் என்ற முடிவுடன் இருவீட்டு வேலிகளுக்கும் இடையே இருந்த படலையை இழுத்தாள். அது உள்ளே கட்டப்பட்டிருந்தது. 'கிழவி படலையையும் கட்டிப்போட்டாள்' என்று முணு முணுத்தபடி ஒருவரும் இருக்க முடியாது என்ற நம்பிக்கை யுடன் கிணற்றடிப் பக்கமாகச் சுற்றி வந்து அவர்களது வளவுக்குள் நுழைந்தாள்.

சுற்றிவர நோட்டம் போட்டாள். எவ்வித அரவமுமே யில்லை. விழுந்திருந்த தேங்காயை எடுத்து வேலியின் கீழால் தன் காணிக்குள் தள்ளிவிட்டு மீண்டும் சுற்றி வரப் பார்த்தாள். எவரும் இல்லை.

அபிஷேகம் முடிந்துவர மூன்று மணியாவது செல்லும். அங்கு எவரும் வரமாட்டார்கள் என்பது செல்லம்மாவிற்கு நன்கு தெரியும். அடுக்களைப் பக்கமாகப் போனால் தங்கம்மாவின் தட்டத்தில் நல்ல மாறு வெற்றிலையும் பிஞ்சுப் பாக்கும் மட்டுமல்ல தின்னவேலிப் புகையிலையும் கட்டாயம் இருக்கும் என்பது அவளுக்குத் தெரியும். அதில் ஏதேன் எடுத்துக் கொண்டு போனாலும் அன்னம் எடுத்திருப்பாள் என்றே தங்கம்மா எண்ணுவாள். நம்பிக்கையோடு அடுக் களைப் பக்கமாகச் சென்று பார்த்தாள். தட்டத்தைக் காண வில்லை. அடுக்களைப் பக்கத்துத் திறந்த வாசலால் ஏறி வராந்தாவில் பார்த்தாள். தூண் அருகே தட்டத்தைக் கண்டாள். இரண்டு வெற்றிலையையும் ஒரு பாக்குத் துண்டையும் விட்டு விட்டு மற்றவற்றைச் சுருட்டி இடுப்புச் சேலையை வலித்தெடுத்துக் கட்டிக்கொண்டாள். புகை யிலைத் துண்டு ஒன்றை வாயில் போட்டாள், காரம் ஏறி இனித்தது. திருட்டுத் தெரியாதபடி எடுக்கத் தக்க பொருட் கள் உள்ளனவா என ஒரு தடவை நோட்டம் போட்டுப் பார்த்தாள். வேறு ஒன்றும் தெரியவில்லை.

www.padippakam.com



வராந்தாப் பக்கமாக இறங்கி முற்றத்தால் சென்று வந்த வழியாக கிணற்றடிப்பக்கமாகவே சென்று விடத் தீர்மானித்தவள் அறைக்கதவைப் பார்த்ததும் திடுக்கிட்டாள். கதவில் சாவியில்லை. ஆனால் பூட்டப்படாதவிதமாக கதவின் இரு பகுதியில் திறப்புப் போடும் துளையுள்ள பகுதி சமனாக நிற்காது சிறிது உட்பக்கமாக நின்றது.

செல்லம்மாவின் இதயம் படபடவென அடித்துக்கொண்டது. திருதிருவென விழித்தபடி செவிகளைக் கூர்மையாக்கினாள். எவ்வித அரவமுமில்லை. நெஞ்சிலே ஒரு துளி தண்ணீர் பட்டது போலிருந்தது.

பூட்டிவிட்டதாக சாவியையும் எடுத்துக் கொண்டு போயிருப்பார்கள். காற்றுக்கு கதவு சிறிது உள்ளே இறங்கியிருக்க வேண்டும். இனி நிற்பது சரியில்லை. போய்விட வேண்டும். ஏதாவது பொருட்களைக் காணாது போக தன்னை அங்கே கண்டதாக எவராது சொல்லி அறிந்தால் நிட்சயம் தங்கம்மா தன் தலையிலேயே போடுவாள் என்பதை செல்லம்மா நன்கு அறிவாள்.

வராந்தாப் பக்கமாக கீழே இறங்க கால் வைத்தாள். ஆயினும் மனது கேட்கவில்லை. உள்ளே என்ன பொருட்கள் இருக்கும்? அவர்கள் சந்தேகப்படாததாக ஏதேன் எடுத்து விடலாம் என்று எண்ணினாள். கதவருகே சென்று ஓட்டையால் பார்த்தாள். இருட்டாக இருந்தது எதுவுமே தெரியவில்லை. முன்புறத்துச் சன்னல்களும் பூட்டப்பட்டிருந்தன.

காற்று அசைத்ததுபோல அரவமின்றி விரலால் கதவை கொஞ்சங்கொஞ்சமாக உள்ளே தள்ளினாள். ஒளி விழுந்த பக்கமாக நோட்டம் போட்டாள். எவ்வித அரவமுமேயில்லை. கதவை முற்றாகத் திறந்து விட்டு நோட்டம் போட்டபடி அறைக்குள்ளே காலடி வைத்தாள்.

''ஐயோ, என்ரை ஐயோ''

www.padippakam.com



செல்லம்மா கத்த முயன்றாள், சத்தமே வெளி வரவில்லை. உடலெல்லாம் பதறியது. இரத்தமெல்லாம் குளிர்ந்து நிற்க முடியாது போய் விட்டது.

''ஐயோ. என்ரை ஐயோ''

மீண்டும் தொடர்ந்து குளறிக்கொண்டேயிருந்தாள்.

''என்ன? என்ன நடந்தது.''

பல குரல்கள் பின்னே கேட்டன. அதைத் தொடர்ந்து பல குரல்கள் ''ஐயோ'' என்று கூக்குரலிட்டன. அயலெல்லாம் அல்லோல கல்லோலப்பட்டது. நாய்கள் குரைக்கும் ஓசைகள் தொடர்ந்தன. ஏக்கமடைந்த கூட்டம் கூடிக் கொண்டிருந்தது.

சில ஆண்கள் பெண்களைத் தள்ளிவிட்டு கட்டிலருகே சென்றனர். பல காயங்கள் வழியாக கட்டிலெல்லாம் இரத்தம் வடிந்து உறைந்து கொண்டிருந்தது. ஆனந்தனின் சடலம் அலங்கோல நிலையில் கட்டிலின்மேல் கிடந்தது. வலது கையிடையே ஒரு ரிவோல்வர்.

''உயிரில்லை. போலிஸ் வருமட்டும் ஒருத்தரும் தொட வேண்டாம்.''

ஒருவர் சத்தமிட்டார்.

''உள்ளே ஒருத்தரும் நிற்கவேண்டாம், எல்லாரும் வெளியே போங்கோ.''

ஏக்கத்தோடும் கலங்கிய கண்களோடும் 'ஐயோ' என்ற அனுங்கலோடும் சடலத்தைப் பார்த்துக்கொண்டு நின்றவர்களை மற்றொருவர் தள்ளினார்.

## 69

வெளியே பல்வேறு விதமாகப் பேச்சுகள் வாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. கூட்டமும் கூடிக்கொண்டிருந்தது.

www.padippakam.com



ஆறுமுகம், தங்கம்மா இருவரையும் கோயிலிருந்து அழைத்து வர ஒருகார் சென்றது. போலீஸ் நிலையத்திற்கும் அறிவிக்கப்பட்டது.

தற்கொலை எனச் சொல்லி செல்லம்மாவையும் மகள் தயாநிதியையும் பலர் திட்டிக் கொண்டிருந்தனர்.

''இவள் நினைச்சால் இப்பிடி நடந்திருக்குமா? இப்ப மாயத்துக்கு ஒப்பாரி வைக்கிறாள்''

செல்லம்மாவை வைதனர் சிலர்.

ஆனந்தனின் நண்பர்கள், சாதிப் போரில் முன்நின்றவர்கள் தற்கொலை என்பதை முற்றாக மறுத்தவர். சாதிப் போராட்டத்தில் முன்னின்ற வீரனை விவேகமாகக் கொலை செய்துவிடடார்கள் பள்ளரில் எவரையெல்லாம் மாட்டி விடலாம் என்று திட்டமிட்டனர்.

போலிசார் வந்ததும் ஆனந்தன் கொலை செய்யப்பட்டான் என்ற ஒரே முகமாக சாட்சிகளை ஏற்பாடு செய்தனர்.

கோயிலிருந்து வந்த தங்கம்மா நிலத்தில் விழுந்து புரண்டு அழுதாள். அவன் தற்கொலை செய்தான், செல்லம்மாவும் மகளுமே யாவற்றிற்கும் காரணம் என்ற கட்சியில் அவள் இருந்தாள்.

ஆறுமுகத்தார் அவன் நீண்ட காலம் வாழ மாட்டான் என முன்னர் எண்ணியிருந்தபோதும் அவனது மரணத்தை நேரில் கண்ட போது அவரால் தாங்க முடியவில்லை. மன வேதனையுடன் அவர் தனது தத்துவத்தையே மனதிற்குள் சொல்லிக் கொண்டார்.

''கடவுளுக்கு மேலாக என்னால் காரியம் செய்து தப்பி விடமுடியும் என்று ஆணவம் கொள்பவர்களை தெய்வம் அவர்களது கையாலேயே அழித்து விடுகிறது''

போலிசார் வந்ததும் தமது விசாரணைகளைத் தொடங்கினர். சாதிக்கொலை என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

www.padippakam.com



ரிவோல்வர் சத்தம் கேட்டே தான் கிணற்றடிப் பக்கமாக வந்ததாக செல்லம்மா சொன்னாள்.

படலைக்கு மேலால் ஏறி விழுந்து ஒருவன் ஓடியதாக அயல் வீட்டார் சொன்னார்கள். ஒழுங்கை வழியாக இலட்சுமணன் ஓடியதாக மற்றொருவர் கூறினார். யாழ்ப்பாணப் பக்கமாக ஒரு காரில் இலட்சுமணன் முகம் தெரியாத வேறு ஆட்களுடன் சென்றதாக இன்னொருவர் சாட்சி சொல்ல முன் வந்தார்.

மாலையில் பள்ளிக் கூடத்திலிருந்து இரகுநாதனுடன் காரில் வந்து கொண்டிருந்த இலட்சுமணன் கைது செய்யப் பட்டான்,

## 70

---

மறுநாட்காலை மரண விசாரணை நடைபெற்றது.

பன்னிரண்டு மணிக்கு வேலைகள் யாவும் முடிந்து தான் வீடு சென்றதாக அன்னம் சொன்னாள். மற்றவர்களின் சாட்சியின்படி ஒருமணிக்கு மேலேயே யாவும் நடைபெற்றிருக்கிறது.

மரண விசாரணை அதிகாரியின் முன் போலிசார் முதல் நாள் நடத்திய விசாரணைச் சாட்சிகளை ஒப்புவித்தனர்.

காயங்களை மட்டும் அளந்து பார்த்து பரிசோதித்த அரசாங்க மருத்துவ அதிகாரி ஆறு ரவைகளும் மிக நெருக்கமாக நின்று சுடப்பட்டவை என்றும் வயிற்றிலும் மார்பிலும் மண்டையிலும் தன்னையாலேயே சுட்டிருக்க முடியாதெனவும் அபிப்பிராயம் தெரிவித்தார் உடலில் ஏற்பட்டிருந்த வேறு சில விஷயங்களை அவர் மறைத்து விட்டார்.

தற்கொலை என்பதற்குச் சாதகமாக இருந்த மூன்று விஷயங்கள் பற்றி மரண விசாரணை அதிகாரி சந்தேகப் பட்டார்.

www.padippakam.com



வீட்டுக்குப் போய் விட்டு கட்டாயம் கோயிலுக்கு அபிஷேகத்திற்கு வருவதாக சந்தியில் நின்று தாயிடம் சொல்லிவிட்டுப் படலையை ஏன் பூட்டினான்? செல்லம்மா வீட்டுப் படலை ஏன் கட்டுப்பட்டிருந்தது? அறையின் சாவி ஏன் உட்புறமாகப் பூட்டப்படாது போடப்பட்டிருந்தது?

ஆடுமாடுகள் வளவுள் நுழைவதைத் தடுப்பதற்கு படலையைப் பூட்டி விட்டு உள்ளே நுழைந்தான் எனவும் தங்கம்மா கட்ட மறந்த படலையை ஆனந்தன் கட்டியிருக்கவேண்டும் எனவும் காரணம் கூறினர். சிறிதுநேரம் ஓய்வெடுப்பதற்காக உள்ளே பூட்டிவிட்டுப் படுத்திருந்த ஆனந்தன் கதவில் தட்டும் சத்தம் கேட்டு திறந்தபொது இலட்சுமணன் கட்டில் மேல் தள்ளிவிட்டு ஒன்று மாறி ஒன்றாகச் சுட்டிருக்க வேண்டும் என்றும் அபிப்பிராயப் பட்டனர்.

பள்ளிக்கூட நேரமாக வந்து கொலை செய்து விட்டு மீண்டும் பட்டணத்திற்குச் சென்றிருக்கிறான். தப்புவதற்கும் தக்கவழியோடு செய்திருக்கிறான் என்று பொலிசார் கூறினர். சாட்சியங்கள் யாவும் இலட்சுமணனே கொலைக்காரன் என்று சந்தேகத்திற் கிடமில்லாதவாறு கூறின. முன்னர் இரண்டு, மூன்று தடவை இருவரும் நேரடியாக மோதிக் கொண்டதாகவும் பழி வாங்குவதாக இலட்சுமணன் சபதமெடுத்ததாகவும் அயலாரும் நண்பர்களும் சாட்சி கூறினர்.

விளாத்தியடிப் பக்கத்தில் ஆனந்தன் கொலைக்குப் பழி வாங்கவேண்டும் என அவனது நண்பர்கள் துடித்தனர். இலட்சுமணனின் தந்தையையும் மச்சான் சுப்பிரமணியனையும் விழுத்தவேண்டும் எனவும் திட்டமிட்டனர், சிலர்.

செத்த வீட்டின் போது சாதிப் போராட்டம் பற்றியே ஆனந்தனின் நண்பர்களிடையே பேச்சாக இருந்தது.

ஆனந்தனின் மரணத்தந்தி பெற்று அங்கு வந்த வடிவேலுவின் சிந்தனை குழம்பிப் போயிருந்தது. நிலைமை இத்தனை சிக்கலாக வரும் என அவன் எதிர்பார்த்ததேயில்லை.

www.padippakam.com



ஒரு பக்கம் உடன் பிறந்த தமையனும் உறவினர்களும், மறு பக்கம் சிறையிலே நண்பன்.

தான் அனுப்பிய பார்சலைக் கொண்டு வந்து கொடுத்த அன்று நடை பெற்ற வாக்குவாதத்தை யொட்டி ஆத்திர மடைந்து இலட்சுமணனே கொலை செய்திருக்கலாம் எனவும் அவன் மனம் எண்ணியது. அல்லது விளாத்தியடியிலிருந்து எவராவது வந்து கொலை செய்திருக்கலாம். இலட்சுமணன் தலைமேல் சூட்டிவிட்டார்கள் என்று மற்றொரு மனம் சொன்னது.

வடிவேலுவின் கால்களைச் செல்லம்மா கட்டிப் பிடித்து நீண்டநேரம் ஒப்பாரி வைத்தாள்,

''மாலை சூட்டி என்ரை மூத்த மருமகனாய் ஆலாத்தி நான் எடுத்திருப்பன். கொள்ளையிலை போவார் கொலை செய்து போட்டாங்கள்...''

இவள் தொல்லையில்லாது இப்போது என்னை மரு மகனாக்கிவிட ஒப்பாரி வைக்கிறாளா என வடிவேலு எண்ணிக் கொண்டான்,

## 71

---

**வே**லாயுதம் வீடும் சாவீடுபோல் காட்சியளித்தது: இராசாத்தி கண்ணீர் வடித்து அழுதுக்கொண்டிருந்தாள். வீட்டிலே அடுப்பே எரியவில்லை. அயல் வீட்டார் அவன் வயிற்றுப் பிள்ளையோடு வெறு வயிற்றோடு இருக்கப்படாது என வற்புறுத்தி கோப்பி குடிக்கச் செய்தனர். வேலாயுதமும் இரகுநாதனும் தமது வழமையான அட்வகேட், புரக்டர் ஆகியோரைக் கண்டு பிணையில் இலட்சுமணனை விடுவிக்க சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுத்தனர். பொலிஸ் பகுதியிலும் தமது செல்வாக்கைப் பயன்படுத்திப் பார்த் தனர்.

படிப்பகம்

www.padippakam.com



இலட்சுமணனின் தந்தை முருகேசனும் தாயும் வந்து மருமகளைப் பார்த்தனர். தமது மகன் கைது செய்யப் பட்டது என அவர்களது முகத்தில் எவ்வித பதட்டமோ, கவலையோ தென்படவில்லை. சுப்பிரமணியனும் வந்திருந் தான், இராசாத்திக்கு ஆறுதல் கூறினர்.

''பள்ளிக்கூடத்திலை நின்ற அவன் எப்பிடி வந்து கொலை செய்திருப்பான். இது வெள்ளாளரே தங்களை உள்பகையில் ஏற்பட்ட கைகலப்பிலை கொலை செய்து போட்டு இவன்ரை தலையிலை கட்டியிருக்கிறாங்கள். அவங் களாலை கோட்டிலை புறூவ் பண்ண முடியுமா? பொலிஸ் கோட்டிலையே தள்ளுப்பட்டுப் போகும். நீ ஏன் பிள்ளை அழுகிறாய்? அழுது ஒன்றும் நடக்கப்போறதில்லை. நாங்கள் எப்பொழுதோ போர்க்கோலம் கொண்டிட்டம். இதையெல் லாம் எதிர் பார்த்துக்கொண்டுதான் பொழுதைக் கழிக்கிறம். அவனுக்கு இதுவரை காலமும் வெடிகிடி வைக்காமல் விட் டாங்களே. அதுக்கே நாங்கள் சந்தோசப்பட வெல்லோ வேணும்''

## 72

வடிவேலு அன்னத்தைத் தேடி அவளின் குடிசைக்கு வந்திருந்தான். செத்த வீட்டின் பின்னர் அவள் ஆறுமுகத் தார் வீட்டுக்கே போகவில்லை சுடலை ஆற்றுதல், எட்டுக்கு வைத்தல் ஆகிய சடங்குகளாலும் வீட்டில் வேலைகள் நிறைய இருந்தன. தங்கம்மா ஆட்களை அனுப்பியபோதும் அவள் போகவில்லை. கடைசி ஆயுதமாக தங்கம்மா வடிவேலுவை அனுப்பினாள். வடிவேலுவால் அவ்வேளை அலட்சியம் பேச முடியவில்லை. தாயை எதிர்க்க முடியாத நிலையில் வந்து அன்னத்தை வேண்டினான்.

''லட்சுமணனுக்கே நான் அங்கே வந்து வேலை செய் வது விருப்பமில்லை. உங்களுக்காகத்தான் அவரும் வற்புறுத்

www.padippakam.com



தாமல் விட்டிருக்கவேணும். இப்ப இருக்கும் நிலையில் நான் வரலாமா? லட்சுமணனே என்ன சொல்லுவான்?''

அன்னம் சொன்னாள்.

''எனக்குத் தெரியாதா? என்றாலும் நீ விரும்பினால் அந்திரட்டி மட்டுக்குமாதல் வந்து உதவி செய்ய முடியாதா?''

''உங்களுக்காகவென்றால் வருகிறன். லட்சுமணனிடமும் அப்பிடித்தான் சொல்லுவன்''

அன்னம் சொன்னதற்கு பதில் கூறாதபடி வடிவேலு மௌனமாக வெளியே பார்த்தபடி நின்றான். அன்னமும் அவ்வார்த்தைகளை மீண்டும் சொல்லி அவன் பதிலை வற்புறுத்த விரும்பவில்லை.

''நிதி என்னவாம்''

வடிவேலு பேச்சை வேறு திசையில் திருப்பினான்.

''உங்களைத்தான் நம்பிக் கொண்டிருக்குது''

''ஏன் அவள் அண்ணனுக்கு மாட்டனென்றவள்?''

''கட்டினால் கொழும்பிலை கால்சட்டை போட்ட உத்தியோகாரனைக் கட்டுவன். இல்லாட்டால் கலியாணம் கட்டாமலே இருப்பன் என்ற சபதம்''

''நல்ல சபதம் தான்''

''நீங்கதானே காயிதம் எழுதிறதாக, சட்டைத் துணி சாமானெல்லாம் வாங்கிக் கொடுத்தாகச் சொல்லிறா''

''அதுவும் ஒரு வேடிக்கைதான். அயல் வீட்டிலை அறிந்தவங்கள், கஷ்டப்படுறதுகள் ஏதேன் கேட்டு எழுதினால் வாங்கிக் கொடுக்கிறேல்லையா. இப்படி நினைக்குங்கள் என்று ஆர் நினைச்சது?''

''ஏதோ நீங்கள் கட்டினால் புண்ணியமாவது கிடைக்கும்''

www.padippakam.com



''பாவத்துக்கும் புண்ணியத்துக்குமாடி கலியாணம் கடலிலை போய் சாயங்கரைக்கச் சொல்லிறியா? நான் நிதியைக் கட்டிற நேரம் உன்னைக் கட்டினாலும் ஒரு இலட்சியத்தை செய்வதாக மட்டுமில்லாமல் கொழும்பிலை போய் சந்தோசமாக வாழவும் முடியும்''

''முந்தியே சொன்னபடி நான் சம்மதிச்சாலெல்லோ; உங்கடை லட்சியத்துக்கு நாங்கள் பலியாகப் போவதில்லை. நான் கட்டினால் ஒரு பள்ளனைத்தான் கட்டுவன். அவனுக்குத்தான் பிள்ளைப் பெறுவன்''

''உனக்கும் நல்ல ஆசைதான். ஏனெடி கலியாணமென்றால் பிள்ளைப் பெறுவதிலை நிற்கிறாய்''

''உந்த வெள்ளாஞ்சாதியோடை சண்டை போடிறதுக்கு கனக்கப் பிள்ளைகள் பெறவேணும்''

''கலியாணம் கட்டாமலே ஆசையைப்பார். ஆரெடி உதெல்லாம் உனக்குச் சொல்லித் தந்தது''

''மாணிக்கன்தான் முதலிலை சொன்னார். பிறகு நான் அனுபவத்திலையே பார்த்திட்டன்''

''நீ இன்னும் அவனை மறக்காமலிருக்கிறியா?''

''மறக்கிறதா? என்ரை உடல் எரிஞ்சு சாம்பலாகும் வரை மாணிக்கனை மறக்கமாட்டன்''

வடிவேலு அதன்மேலும் மாணிக்கனை நினைவூட்டி அவளது மனதைத் துன்பப்படுத்த விரும்பாதவனாக பேச்சை வேறு திசையில் திருப்ப முயன்றான். இலட்சுமணன் முன்னர் மாணிக்கன் பற்றியும் அன்னம் பற்றியும் சொன்னவை யாவும் நிழற்படம் போல அவன் நினைவில் ஓடின.

''லட்சுமணன் வீட்டுப் பக்கம் நிலமை எப்பிடி? ராசாத்தி என்னவாம்''

''அவள் அழுதுகொண்டிருக்கிறாள் இந்தக் கலியாணம் கட்டினால் இப்பிடி ஒரு நாளைக்கு நடக்கும் என்று தனக்குத்

www.padippakam.com



தெரியும் என்று வேலாயுதத்தார் சொல்லிக் கொண்டிருக்கிறார். பெண்சாதிக்கும் மகனுக்குமாகத்தான் அவர் சம்மதிச்சவராம். அவங்களெல்லாம் சந்தர்ப்பவாதிகள்''

''நீதானேடி அவனைக் கொண்டுபோய் அதுக்கை மாட்டி விட்டனி''

''அவர் கண்ணை மூடிக்கொண்டு என் பின்னாலை வந்தவரா? வெள்ளாளருக்கை நடக்கிற கலியாணம் மாதிரித்தான் அது நடந்தது. இப்ப ஏன் என்மேலை குற்றம்?''

''சரியெடி உன்மேலை குற்றமில்லை. சரி நேரமாகுது நான் வரட்டா''

''சரி நான் வீட்டிலை வந்து பார்க்கிறேன்''

மறுநாட் காலை தயங்கித் தயங்கியே அன்னம் ஆறுமுகத்தார் வீட்டுக்கு வேலைக்குச் சென்றாள்.

குற்ற உணர்வாலும் மனம் குன்றிக் கொண்டிருந்தது. இலட்சுமணனுக்கும் தான் துரோகம் செய்கிறேனா என்ற நினைவும் வந்தது. அந்த வீட்டிற்கும் தனக்கும் இனிமேல் எவ்வித உறவும் இல்லை என்று மனம் சொல்லிக் கொண்டிருந்தது. கூலி வேலைக்குத் தோட்டங்களுக்குச் செல்ல அவள் தயாராக இருந்தாள்.

# 73

யந்திரம்போல, மனம் ஒன்றாது முடிந்தவரை அன்னம் வேலைகளைச் செய்தாள். தங்கம்மாவிடம் முன்னர் இருந்த செருக்கு குறைந்திருந்தது, அன்னத்தைப் பொறுத்த மட்டிலேயே.

செல்லம்மா வீட்டைப் பொறுத்த வரையில் தங்கம்மாவின் ஆணவம் சிறிதும் குறைந்து விடவில்லை. மேலும் வலுப் பெற்றே யிருந்தது.

www.padippakam.com



வடிவேலு பயணம் புறப்படுமுன் இலட்சுமணனைச் சிறைச்சாலையில் சென்று பார்த்தான். பாடசாலைத் தலைமை ஆசிரியர் மற்றும் சக ஆசிரியர்களெல்லோரும் தன் பக்கமாக சாட்சி சொல்வதாக அங்கும் வந்து தெரிவித்தார்களாம்.

சிறைச்சாலை அதிகாரிகள் இத்தனை மோசமாக இருப்பார்கள் என தான் எதிர்பார்க்கவில்லை எனவும் நிரபராதிகளும் எத்தனை கேவலமாக மதிக்கப்படுகிறார்கள் என்றும் இலட்சுமணன் குறை கூறினான்.

''பணக்காரர் தமக்காக சிறையிலும் வகுப்புப் பிரித்து வைத்திருக்கிறார்கள். எங்கேயும் ஆட்சிப்பீடத்தில் இருப்பவர்கள் தம் வர்க்கத்தாரைப் பாதுகாத்துக் கொள்கிறார்கள்''

''அதிலே சந்தேகமென்ன''

இலட்சுமணனுக்கு வடிவேலு பதில் கூறினான்.

வடிவேலு பயணம் புறப்பட இருந்த அன்று காலையில் மாட்டுக் கொட்டிலடியில் வேலை செய்து கொண்டிருந்த அன்னத்திடம் தமையனின் கொலை பற்றிய தன் குழப்பத்தைத் தெரிவித்தான். இத்தனை பேர் இருக்க என்னிடம் வருகிறாரே இந்தப் புதிருக்கு விடைதேடி என அன்னம் தன்னையே வினவிக் கொண்டாள்.

''நான் உண்மையைச் சொன்னாலே நீங்கள் நம்ப மாட்டீங்கள்''

''உன் பேச்சைத்தான் கட்டாயம் நம்புவன். முதலிலை இது கொலையா, தற்கொலையா என்றே எனக்குச் சந்தேகமாயிருக்கு''

''நிதி கலியாணத்துக்கு மாட்டனென்றதாலை ரோசம் இருந்ததுதான். ஆனாலும் தற்கொலை செய்திருக்க மாட்டார் என்றுதான் சொல்லிறன்''

''கொலையென்றால் ஆர் கொலை செய்தது?''

வடிவேலு கேட்டான்.

www.padippakam.com



''லட்சுமணன் கொலை செய்யேல்லை, அது எனக்கு நல்லாய் தெரியும்''

''எனக்கும் தெரியுமடி''

''ஆரோ வடிவாய் திட்டம் போட்டுக் கொலை செய் திருக்கிறாங்கள். என்றைக்கோ தெரிய வரத்தானே போகுது. அப்ப பார்ப்பம்''

''புதிசாய் ஏதேன் சொல்லுவாரயென்றெல்லோ கேட்டன்''

வடிவேலுவின் குரலில் ஏமாற்றம் தொனித்தது. ஆயினும் வடிவேலு மீண்டும் அவளைக் கேட்டான்.

''அது ஆற்றை ரிவோல்வரெடி?''

''அவற்றைதானே. தலைமாட்டுக்கை வைச்சுக்கொண்டு படுப்பதாக என்னிடமே சொல்லியிருக்கிறார்''

## 74

அன்னம் இலட்சுமணனை விளக்க மறியல்சாலையிலும் சென்று பார்த்தாள். முதல்தடவை இரகுநாதனிடம் தன்னையும் ஒருதடவை அழைத்துச் செல்லும்படி வேண்டியிருந்தாள். அவர்கள் காரில் சென்றபோது அவளையும் அழைத்துச் சென்றனர். ஆனால் அவர்களே இலட்சுமணனெதிரே கம்பிகளுக்கு இப்பக்கத்தில் நெருக்கமாக மற்றவர்களுடன் நின்று பேசினர். அன்னத்தால் கிட்டவே அணுகி எதுவுமே பேச முடியவில்லை.

''எப்பிடி அன்னம்?''

ஒரு தடவை பலமாகச் சத்தமிட்டு அழைத்து சிரிக்க முயன்றான். சந்தைக் கூட்டம்போல் சத்தம் காதை அடைத்தது. எல்லோருமே சத்தமிட்டே பேசிக்கொண்டிருந்தனர்.

போ—15

www.padippakam.com



இரகுநாதன், வேலாயுதத்தை ஒதுக்கிவிட்டு தான் முன்னே சென்று அவனுடன் பேசுவது என்பது முடியாமலிருந்தது. வேறும் அவனது பாடசாலை ஆசிரியர்களும் வந்திருந்தனர்.

மறுதடவை அயல் வீட்டு தெய்வானையையும் அழைத்துக்கொண்டு பஸ்ஸில் சென்றாள். கீரைபோட்டு அவித்த குரக்கன் பிட்டும் மீன் குழம்பும் கொண்டு சென்றாள். விளாத்தியடிப் பக்கத்திலிருந்தும் இலட்சுமணனின் நண்பர்களான இரு வாலிபர்களும் வந்திருந்தனர். அவர்களை ஒதுங்கி நிற்கச் செய்து அன்னத்தை தன்முன்னே அழைத்து கிராமத்துச் செய்திகள் பற்றி விசாரித்தான். அவன் கேட்டவற்றில் பாதியே அவளது காதில் விழுந்தது. அவளால் சத்தமிட முடியவில்லை. அவளது உதட்டின் அசைவுகளை இலட்சுமணன் உற்றுக் கவனித்து பதில்களை அறிய முயன்றான்.

இலட்சுமணனுக்குச் சிறை பழக்கமாகி விட்டது தெரிந்தது.

''உங்களுக்கு என்ன சாப்பாடு வேண்டுமென்றாலும் செய்து அனுப்பிவிடுவேன்''

''வீண்சிரமம் எதுவும் வேண்டாம். இங்கேயே சமாளித்து விடுவேன். இப்பவும் வேலைக்குப் போறியா?''

''வடிவேலு வந்து வற்புறுத்தினார். அவன்ரை அந்திரட்டியையும் முடித்துவிட்டு நின்றுவிடுவன்''

''நான் வெளியை வந்ததும் முதல் வேலை உனக்குக் கலியாணம் கட்டி வைக்கிறதுதான்''

அவன் சிரித்துக் கொணடே சொன்னான். சிறைச் சாலையில் கம்பிக்குப் பின்னால் நின்று கொண்டே இலட்சுமணனுக்கு ஏன் இந்த எண்ணம் என்பது அவளுக்கு சிறிது நேரம் புதிராயிருந்தது.

''என்ன சாப்பிட்டாலும் உன்ரை ஒடியல் கூழ்தான் எனக்கு அடிக்கடி நினைவு வருகிறது''

படிப்பகம்

www.padippakam.com



''மற்றத்தடவை காய்ச்சிக் கொண்டு வாறனே''

''வேண்டாம், நானே அங்கை வந்து பிலாவிலை மடித்து சுடச்சுட ஊதி ஊதிக் குடிக்க வேணும்''

அவனுக்கு எத்தனை சிறிய ஆசைகளெல்லாம் இந்த வேளையிலும் ஏற்படுகிறது என்பதை நினைத்தபோது அவள் கண்கள் கலங்கின. சாட்சிகளை யெல்லாம் சோடித்து தூக்கு மேடைக்கே அனுப்பிவிட்டால்! அவளது நெஞ்சு ஒரு கணம் அதிர்ந்தது. இத்தனை தொல்லைகளுக்கெல்லாம் காரணம் யார்? நானா? உயர் சாதிக்காரரை எதிர்த்து எழுந்த போர்க் கோலமா? ஆனந்தன் செய்த, செய்யஇருந்தகொடுமைகளா?

''அன்னம், அந்த இரண்டு பேரையும் உனக்குத் தெரியுமா?''

இலட்சுமணன் கேட்டான்.

அவனது நண்பர்கள் இருவரையும் பார்த்துவிட்டு தெரி யாது என்று தன் உதடுகளைப் பிதுக்கிக் காட்டினாள்.

''அந்தக் கோடுபோட்ட சேட்டோடு நிற்கிறானே அவன்தான் குமாரன். எங்க வீட்டுக்குக் கிட்டத்தான் இருக் கிறான். வடிவாய் பார்த்துக்கொள். மற்றவன் அவன் மாமன்''

அன்னத்தின் கன்னத்தை கம்பியோடு சரிக்கச் செய்து காதுக்குள் சொல்லிவிட்டுச் சிரித்தான். அன்னம் குமாரனை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்துவிட்டு வெட்கத்தால் தலையைக் குனித்துக் கொண்டாள். அவளால் பின்னர் எது வுமே பேச முடியவில்லை. அவனது உதட்டின் கீழே ஒரு கரும் புள்ளி. அதே அடையாளத்தோடு எங்கோ எவரையோ பார்த்த நினைவு.

இலட்சுமணன் தெய்வானையையும் கிட்ட அழைத்துச் சுகம் விசாரித்தான்.

''காவல் காரராலை தொல்லையில்லையா?''

அன்னம் கேட்டாள்.

www.padippakam.com



''அதெல்லாம் நல்லாய் கவனித்துக் கொள்ளுகிறோம். என்ன எடுத்து வந்தாலும் நான் பெற்றுக் கொள்ள விடுவார் கள்''

''சிகரெட் வைத்திருக்கிறீங்களா?''

''பக்கெட்டாக இருக்கு. நீ வீணாய் இனிமேல் அலைய வேண்டாம்''

''என்ன அலைச்சல். வெள்ளிக்கிழமை கட்டாயம் வருவன்''

நேரம் கழிந்ததும் எல்லோரும் புறப்பட இருந்தனர். குமாரனை அருகே அழைத்து அவன் செவிகளில் இலட்சு மணன் ஏதோ கூறினான். குமாரன் எதுவும் பேசவில்லை; புன்முறுவல் பூத்தான்.

வாயில்வரை நால்வரும் நடந்து வந்தனர். குமாரனின் மாமன் வாயிலில் பூட்டிவைக்கப்பட்டிருந்த சயிக்கிளை எடுத் துக்கொண்டு புறப்பட்டான். மூவரும் பஸ் நிலையத்தை நோக்கிப் புறப்பட்டனர். அன்னம் குமாரனின் நாடியில் கண்ட புள்ளியின் நினைவாகவே இருந்தாள். அதை முன்னர் எங்கே கண்டேன்?

முனியப்பர் கோவிலைத் தாண்டியதும் மாலைச் சூரியனின் கதிர்கள் நீண்ட நிழல்களை எழுப்பின. குமாரனும் பேசுவதற்குத் தயங்கினான். றீகல் தியேட்டரைத் தாண்டிய தும் குமாரன் கேட்டான்:

''நீங்க படம் பார்க்கிறேல்லையா''

''எப்பொழுதாவது வசதி வந்தால் பார்ப்பன்''

அன்னம் பதில் சொல்லிவிட்டு மௌனமாக நடந்தாள். பெரிய கடையைத் தாண்டியபோது அன்னம் தன் மனதில் சூடைந்த இரகசியத்தை அறிய முயன்றாள்.

''அவர் காதுக்கை என்ன இரசியம் சொன்னவர்?''

அன்னம் சிரமப்பட்டுக் கேட்டாள்.

www.padippakam.com



''உங்களைக் கவனமாய் பஸ்ஸிலை கூட்டிக் கொண்டு போகச் சொன்னர். அதோடை வெள்ளிக்கிழமை என்னை வரச் சொன்னார்''

குமாரன் சிரித்துக் கொண்டே சொன்னாள். அன்னம் தலை குனிந்தாள்.

மூவரும் பஸ்ஸின் மேல் தட்டில் ஏறி உட்கார்ந்தனர். குமாரன் மூவருக்கும் டிக்கெட் வாங்கினான்.

கிராமத்தில் ஒரே இடத்தில் இறங்கி குமாரன் மேற்குப் புற வயல் வெளிக்கூடாக செல்ல இருந்தான். அன்னமும் தெய்வானையும் கிழக்குப் புற ஒழுங்கையில் இறங் கினர் குமாரன் வயலில் இறங்கிவிட்டானா என அன்னம் ஒரு தடவை திரும்பிப் பார்த்தாள். அவ்வேளை அவனும் நடந்த படி அவர்களைத் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தான். அன்னத்திற்குச் சிரிப்பு வந்தது. தெய்வானையின் பின்னே நடந்தபடி சிரிப்பை அடக்கிக்கொண்டாள்.

குடிசைக்குள் நுழைந்தபோது அவளது நினைவில் ஒரு மின்னல், நெஞ்செல்லாம் பளிச்சிட்டது. இலட்சுமணன் வீட்டில் தொங்கிய அந்தப் படத்திலே சிரித்துக் கொண் டிருந்த கிழவரின் உதட்டின் கீழே, நாடியின் மேலே, அதே போன்ற புள்ளி இருந்ததா?

## 75

அன்னம் இராசாத்தியிடம் அடிக்கடி சென்று ஆறுதல் கூறி வந்தாள். முன்போல் இராசாத்தியும் அழுது கொண் டிருக்கவில்லை. தன் வேலைகளைக் கவனித்துக் கொண் டிருந்தாள்.

''வயிற்றுப் பிள்ளையாலை தகப்பனுக்கு கெட்டகாலம்; ஒண்டுமாறி ஒண்டாய் கரைச்சல் வருமாம்''

பார்வதி தான் கேட்ட சாத்திரி சொன்னவற்றை ஒப்பு வித்தாள்.

படிப்பகம்

www.padippakam.com



''எந்தச் சாத்திரி சொன்னது?''

''பூதாத்தைக் கிழவியும் வயிரகோவிலிலை உருவாடியும் அப்படித்தான் சொன்னாள். எல்லாம் நாங்கள்தான் கவலைப்பட்டு ஒடியாடித் திரியிறம், விளாத்தியடிப் பக்கத்தார் அசையாமல் அப்பிடியே இருக்கிறாங்கள். அவங்களும் ஒரு மனுஷ சாதிதான்''

பார்வதி சொன்னாள். அவள்து பேச்சிலும் ஓரளவு உண்மை இருந்தது. இலட்சுமணன், அவனது நண்பர்களது பேச்சுகளிலே எவ்வித பதட்டமோ, கவலையோ இருப்பதாக அவளும் காணவில்லை. அவற்றிற்குப் பதிலாக கோபமும் கொதிப்புமே அவர்களது பேச்சில் தொனிப்பதைக் கேட்டிருந்தாள். சாந்தமான முகத்தோடும் புன்னகையோடும் முதல் நாள் கண்ட குமாரனை இரண்டாவது தடவை கண்டபோது சிலவேளைகளில் புலிபோல அவன் சீறுவதையும் கண்டாள். அவற்றை நினைத்தபோது வடிவேலு ஒரு தடவை அவர்களைப் பற்றிச் சொன்னது அவள் நினைவில் வந்தது:

''போர்க்கோலமே அவங்கடை அன்றாட வாழ்க்கையாகி விட்டது. ஆஸ்பத்திரி, மறியல் சாலையெல்லாம் பழக்கமாகி விட்டது''

## 76

அன்னம் ஆனந்தனின் அந்திரட்டி முடிந்ததும் வேலைக்குச் செல்வதை நிறுத்திவிட்டாள். தங்கம்மா பலவாறு மன்றாடியும் பலன் கிடைக்கவில்லை. மற்றப் பள்ளிகளோடு தோட்டங்களில் வயல்களில் வேலைக்குச் சென்றாள். வேலை மிகவும் கடினமாகவே இருந்தது. ஒழுங்காக வேலையும் கிடைப்பதில்லை. ஆரம்பத்தில் நாரி வலிப்பில் இரவெல்லாம் பாயில் கிடந்து புரண்டாள். பின்னர் அதுவும் அன்றாட தொழிலாகிவிட்டது. அதிகாலையில் சென்று மாலையிலேயே குடிசைக்குத் திரும்பினாள்.

படிப்பகம்

www.padippakam.com



அதன் பின்னரே கடைப் பக்கம் சென்று வருவாள். இரவிலே தான் சமையல் சாப்பாடு. பகலில் ஏரம்பனும் முத்தியும் பழையதைச் சாப்பிடுவர்; அல்லது கோதுமை ரொட்டி செய்தோ, கஞ்சி காய்ச்சியோ, பாண் வாங்கிச் சாப்பிட்டோ பொழுதைக் கழிப்பர். அன்னத்திற்கு வேலை செய்யும் இடங்களில் சாப்பாடு கிடைத்து வந்தது-

விளாத்தியடிப் பக்கத்தில் வேளாளர் வயல் தோட்டங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் கூலி வேலை செய்வது முற்றாக நின்று விட்டது. கிழக்குப் பகுதியிலும் சிறிது சிறிதாகக் குறைந்து வந்து கொண்டிருந்தது. தாழ்த்தப்பட்டவர்கள் நிலங்களைத் திருத்தி தோட்டம் செய்தனர். வேளாளரிடம் வாரத்துக்கும் நிலங்கள் பெற்று பயிரிட்டனர் சிலர், சுடலைப் பகுதியில் அரசாங்க நிலம் பெற்று நாற்பது குடும்பங்கள் குடியேறினர். மேலும் நிலம் பெறுவதற்கு இயக்க ரீதியாகவும் போராடிக்கொண்டிருந்தனர். நீண்ட காலமாகக் குடியிருந்த வேளாளர் நிலங்களிலிருந்து எவரும் வெளியேறப்படாது என்றும் தீர்மானித்தனர்.

## 79

நாலு தவணைகள் கழிந்த பின்னர் பொலிஸ் நீதி மன்ற விசாரணையிலேயே இலட்சுமணன் விடுதலை செய்யப்பட்டான். பாடசாலைத் தலைமை ஆசிரியரது சாட்சியம் அவனுக்கு மிகவும் சாதகமாக இருந்தது. காலை ஒன்பது தொடக்கம் மாலை மூன்று வரை பாடசாலையிலேயே இலட்சுமணன் நின்றான் என்று அவர் உறுதியாக விசாரணையின்போது சொன்னார். சாப்பாட்டு இடைவேளையின்போது இலட்சுமணன் வெளியே போய் சாப்பிட்டபோதும் தலைமை ஆசிரியர் அன்று ஆசிரியரது அறையில் தன்னுடனேயே உணவருந்தியதாகக் கூறினார்.

துப்பாக்கி, கதவுத்திறப்பு ஆகியவற்றிலிருந்த கையடையாளங்கள் எதுவும் இலட்சுமணனுடையதாகவும் இல்லை.

www.padippakam.com



பல குழப்பங்களும் முரண்பாடுகளும் எழவே நீதிபதி பொலி சாரைக் கண்டித்து விட்டு இலட்சுமணனை விடுதலை செய்தார்.

வெளியே ஒரே ஆரவாரம். சாட்சி சொல்ல வந்திருந்த வேளாளர்கள்மேல் சொல்லம்பு தொடுத்தனர். சாதிக்காரர் ஆத்திரத்தோடு தலை கவிழ்த்துச் சென்றனர்.

கிராமத்தில் ஒரே ஆரவாரம். வேளாளர் வீடுகளுக்கு கேட்கத் தக்கதாக வெடி சுட்டனர்.

வேளாளர் ஆத்திரமடைந்த போதும் ஆனந்தனைப் போல ஆர்வமெடுத்து வேலை செய்ய அவர்களிடை வேறு ஆள் இன்னும் கிடைக்கவில்லை. ஆனந்தனுக்காக ஒரு சிலரையாவது பலிவாங்கினால்தான் அவனது ஆத்மா சாந்தி அடையும் என்றும் சில வாலிபர்கள் பேசிக்கொண்டனர்.

ஆயினும், அவன் தற்கொலை செய்திருப்பானா என்ற சந்தேகத்தால் சிலரின் பக்தி அவன்மேல் குறைந்திருந்தது.

இத்தோல்வியால் ஏற்பட்ட மனக்கொதிப்பு ஆறுமுன்னர் செல்வரத்தினத்தைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு சுப்ரீம் கோட்டில் எடுக்கப்பட்ட வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டு, குற்றம் சாட்டப்பட்டிருந்த மூவரும் விடுதலை பெற்று வந்தனர்.

யாழ்ப்பாணத்துச் சுப்ரீம் கோட்டில் உயர் சாதிக்கார யூரிமாரின் தலைமையில் எடுக்கப்பட இருந்த வழக்கை தாழ்தப்பட்டவர்கள் கொழும்புக்கு மாற்றியிருந்தனர். அங்கு சிங்கள யூரிமாரின் முன்னிலையில் விசாரணை நடை பெற்றது. வழக்கு நடைபெற்ற இரண்டாம் நாளே சாதிச் சண்டையால் ஆத்திரமடைந்த உயர்சாதிக்காரர் பின்னிய வழக்கு என்று கூறித் தள்ளப்பட்டது.

தாழ்த்தப்பட்டவர்கள் நீதிமன்றங்களில் போராடி வெற்றி பெறுவதற்கும் தாம் புதியவழி ஒன்றைக் கண்டு பிடித்து விட்டதாக மகிழ்ந்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



''கோட்டிலே தோற்றாலும் வீட்டிலே பழி தீர்ப்போம்'' என்று இலட்சுமணனுக்கு உயர்சாதிக்காரர் எச்சரிக்கை செய்து கொண்டிருந்தனர். இலட்சுமணனும் விழிப்பாகவே இருந்தான். எங்கு சென்ற போதும் இடுப்பில் தன் ரிவோல் வரைக் கொண்டு சென்றான்.

ஆனந்தனைச் சுட்டுக் கொலை செய்தது உயர்சாதிக் காரரா, தாழ்த்தப்பட்டவர்களா என்பது மீண்டும் குழப்ப மாகவே யிருந்தது.

## 78

இலட்சுமணனின் விடுதலை அறிந்து மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தவர்களில் அன்னமும் ஒருத்தி. தோட்டத்தில் வெங்காயப் பயிரிடையே புல்லுக் கிண்டிக்கொண்டிருந்தவள் செய்தி அறிந்ததும் வேலையை விட்டுவிட்டு அப்படியே வேலாயுதம் வீட்டிற்கு ஓடிவந்தாள். அதற்கிடையில் இலட்சு மணன் வந்து இராசாத்தியைப் பார்த்துவிட்டு விளாத்தியடிப் பக்கம் சென்று விட்டான். சமையல் சாப்பாடு யாவையும் மறந்து அவள் அங்கு காத்திருந்தாள். அவன் இரவு நெடு நேரம் கழித்தே அங்கு வந்தான். வேலை முடிந்து வந்த பள்ளர், பள்ளியரெல்லோரும் அவனைப் பார்க்கக் காத்து நின்றனர்.

இலட்சுமணன் வந்ததும் ஒவ்வொருவராகப் பேசி வழி யனுப்பிவிட்டு கடைசியாக அன்னத்திடம் வந்தான்.

அன்னத்தால் பூரிப்பை தாங்கவே முடியவில்லை. கண்கள் கலங்க நெஞ்சு அடைத்துக் கொண்டது.

''ஏனெடி சிரிக்கிறதுக்காக அழப் பார்க்கிறாய். குமாரன் உன்ரை வீட்டுப் பக்கம் வந்தானா?''

சிரித்துக்கொண்டே கேட்டான். அன்னத்தால் பேச முடியவில்லை. தலையை ஆட்டிவிட்டு சேலைத்தலைப்பால் கண்ணீரைத் துடைத்தாள்.

www.padippakam.com



''நாங்களும் துணிஞ்சிருக்கிறம்''

அன்னம் சொன்னாள்.

''எப்பிடியெண்டாலும் விளாத்தியடிப் பக்கத்திலை இருக்கிற போர்க்கோலத்தை இந்தப் பக்கத்தில் காண முடியேல்லை''

''என்னென்றாலும் எங்கடை பக்கத்தைக் குறைத்துப் பேசினால் எனக்கும் கோபம் வரும்''

''நல்லாய் ரோசம் வரட்டன். ராசாத்தி வீட்டையே பார்க்கிறனே. இதுகளையெல்லாம் எப்படி மாற்றலாம் என்று பாக்கிறன்.''

''அது வெள்ளாளர் வீடு என்று முந்தியே தெரியுமே. அதை வைச்சுக் கொண்டு எங்கடை ஆட்களை அளக்க வேண்டாம்''

''சரி சரி பொறுத்துத்தான் பார்ப்பமே''

''ஏது இந்தத்திடீர் விசயம் என்று சொல்லேல்லையே''

அன்னம் அவன் வருகையின் காரணத்தை அறிய ஆவலடைந்தாள்.

## 80

''சில விஷயங்கள் உன்னைக் கேட்கவென்றுதான் வந்தன்.''

இலட்சுமணன் வெளியே புகாருடன் விளையாடிக் கொண்டிருக்கும் நிலவொளியைப் பார்த்துக்கொண்டே சொன்னான். அன்னம் திடீரென எழுந்து குடிசைக்குள் சென்றாள். ஏதாவது கலியாணப் பேச்சாயிருக்குமோ' என்றும் அவளது மனம் சலனமடைந்தது. சுறுசுறுப்பாக தேநீரைத் தயாரித்து முன் போலவே அதே வெள்ளைக் குவளையில் ஊற்றிக் கொண்டு வெளியே வந்தாள்.

''சரி கேளுங்கோவன்''

www.padippakam.com



''நீ ஒன்றையும் ஒளிக்கமாட்டாய் தானே''

''எவருக்கு ஒளித்தாலும் உங்களுக்கு ஒரு போதும் எதையும் நான் மறைக்கமாட்டனே''

குமாரனைப் பற்றி அல்லது இராசாத்தி பற்றி ஏதாவது கேட்கப்போகிறானா? அல்லது அந்தச் சம்பவம்பற்றி! அன்னத்தின் நெஞ்சு ஆவலால் துடித்தது.

''ஆனந்தன் எப்படிச் செத்தான் என்று நீ நினைக்கிறாய்?''

''கொலைதான்''

''ஆர் கொலை செய்தது''

''நான் சொன்னால் நீங்க நம்ப மாட்டியள்''

''நான் நம்புவன். நீ சொல்லு''

''நான் தான்''

பதட்டத்தில் உதட்டில் உறிஞ்சிக் கொண்டிருந்த தேநீர் குவளை சரிந்து வயிற்றில் தேநீரைக்கொட்டி விட்டது. குவளையைக்கீழேவைத்துவிட்டுஎழுந்து நின்றான். அன்னம் முன்னே சென்று தன் சேலைத் தலைப்பால் அவனது வயிற்றில் பட்டிருந்த நீரைத் துடைத்தாள்.

''என்ன வயிற்றில் சுட்டுப் போட்டுதா?''

''இல்லை''

மீண்டும் பலகைக் கட்டையைச் சிறிது தள்ளிப் போட்டு உட்கார்ந்தான்.

''என்ன பயந்திட்டியளா? நானே சந்தர்ப்பம் வரேக்கை உங்களுக்கு மட்டும் சொல்ல இருந்தன்''

அன்னத்தின் குரலில் முன்னர் இருந்த கனிமை இல்லை.

''நான் விளக்க மறியலில் இருக்கேக்கை எத்தனையோ பேரை நினைத்து நினைத்துப் பார்த்தன். உன்னையும் நினைத்தன்தான். என்றாலும் நீ இத்தனை துணிச்சலாய் செய்திருக்க முடியுமென்று என்னாலை முடிவு கட்ட முடியேல்லை. எப்பிடியெடி நீ துணிஞ்சாய்''

www.padippakam.com



''நீங்களும் வடிவேலுவும் அடிக்கடி சொல்லுவியளே போர்க் குணமென்று. அநியாயம் நடந்ததாகச் சமுசயப் பட்ட உடனேயே எனக்கு ஏற்பட்டது. ஆரம்பத்தில் அப் பாவியாக அழுதேன். பிறகுதான் உயிர்போனாலும் பழிக் குப்பழி தீர்கிறதாக தீர்மானிச்சன்.''

''ஆருக்காகப் பழிக்குப் பழி என்று சொல்லிறாய்''

''முந்தி நீங்களும் சபதமெடுத்ததெல்லாம் மறந்திட்டீங் களோ. மாணிக்கனுக்காகத்தான். அவனுக்கு நஞ்சு போட்டுக் கொலை செய்தது இவன்தான்.''

அன்னம் ஆத்திரத்தால் பற்களைக் கடித்துக்கொண் டாள். இலட்சுமணனின் கண்கள் உண்மையை அறியத் துடித்துக் கொண்டிருந்தன.

''எப்பிடி உனக்குத் தெரிஞ்சுது''

''ஆரம்பத்திலை அவன் கதைகளைக் கேட்கவுமே சந் தேகமாயிருந்தது. மாணிக்கன் செத்த சில நாளிலை இவன் குளிச்சுக் கொண்டிருக்கேக்கை தண்ணி எடுக்கப்போனன். தண்ணியை ஊற்றேக்கை அவன்ரை நெஞ்சிலை மரமேறி உரஞ்சிய காயத்தைப் பார்த்தன். சமுசயம் கூடிச்சுது''

''நீ அவன்ரை வைப்பு என்றுகூட ஊரிலை கதைச்சதை இதே காதால்தான் கேட்டன். நீ சொல்லிறதைப் பார்த் தால்...''

''அவன் வீரமெல்லாம் வெளியேதான். உள்ளே வெறும் கோழை. ஆசாடபூதி. அவன் என்ரை காலிலை விழ வந் தான். நான் கடுகடுத்தன். சாதிச் சண்டை மட்டுமல்ல; எனக்கும் மாணிக்கன் தன்னோடு போட்டோ போட்டி போடு கிறான் என்றுதான் மாணிக்கனை நயவஞ்சகமாய் கொலை செய்து தப்பினான். அதன்பிறகு நான் தன் காலிலை விழு வேன் என்ற நம்பிக்கை அவனுக்கு. பிறகு நான் பல்லைக் காட்ட நாய்போலை கீழே விழுந்தான். நான் அவனை என் றைக்குமே ஒரு காசுக்கு மதிச்சது கிடையாது. ஆனால் அவன் தந்த காசையெல்லாம் நான் மறுக்காமல் வாங்கினேன்.

www.padippakam.com



நான் அவனை மதிக்காமல் பேசிறதுபோல சீதனத்தோடு வாற வெள்ளாளப் பெண்டாட்டி கூடப் பேசமாட்டாள். ஒரு பள்ளன்கூட ஒரு பள்ளிக்காக இத்தனை கேவலமாய் இறங்கியிருக்கமாட்டான். வெள்ளாளச் சாதியே இப்பிடியோ என்றும் நினைச்சன். ஆண் தன்மையே இல்லாத நாய்போல என்னைச் சுத்தித் திரிஞ்சான்''

''தன் வாயாலேயே தானே மாணிக்கனைக் கொன்றது என்று சொன்னானா''

''நீதான் வீரன், மன்மதன் என்று நான் சொல்லிக் கேட்டதும் தன் நயவஞ்சகத்தை வீரமென்று கக்கினான். என் நெஞ்சிலை எரிந்து கொண்டிருந்த நெருப்பை அவனுக்கு என்ன தெரியும்? பள்ளியைக் கெஞ்சிப் போட்டு ஊரிலை சாதி வெள்ளாளரின் வீரன். இப்பிடியான சமூகத் துரோகியை விட்டு வைப்பதா என்றும் தீர்மானித்துத்தான் தீர்த்துக் கட்டினன். உங்கள் மேல் குற்றம் வரலாமென்றும் அப்பவே சந்தேகப்பட்டன். அதாலைதான் பள்ளிக்கூட நாளாக, நீங்கள் போயிருக்கிறீங்களோ என்றும் பார்த்திட்டுத்தான் செய்தன். எனக்காக நீங்கள் மறியலிலை கஷ்டப்பட்டதுக்குத்தான் என்ரை சீவியத்திலை எப்பிடி நன்றி செலுத்தப் போறேன் என்று தெரியேல்லை''

## 81

ஆத்திரம் மறைந்து அன்னத்தின் கண்களிலும் குரலிலும் கனிவு தோன்றியது. உண்மையை அறிந்த தெளிவு இலட்சுமணன் முகத்தில் தெரிந்தது. கதை போன்ற உண்மை நிகழ்ச்சிகளை ஆவலோடு கேட்டான் தன் மனத் துன்பமும் சிறைப் பயமும் முற்றாக மறைந்திருந்ததால் அவள் கூறியவை சுவையாகவும் இருந்தது. நடைமுறையில் காண்பதற்கரிய வீரச்செயல் என்று மனதில் எண்ணிக்கொண்டான்.

www.padippakam.com



''நீ செய்த ஒன்றே பெரிய காரியம். இனிமேல் நீ செய்ய வேண்டியதையெல்லாம் நான் சொல்லித்தாறனே''

இலட்சுமணன் புன்சிரிப்போடு சொன்னான். அதனுள் மறைந்திருந்த விஷயத்தை அறியாத அன்னம் கூறினாள்:

''நீங்க என்ன சொன்னாலும் நான் செய்யத் தயார்''

''முதல் வேலையாய் குமாரனை உனக்குக் கலியாணம் செய்து வைக்கப்போறன்''

## 82

வீரம் பேசிக் கொண்டிருந்த அன்னத்தின் முகம் ஒரு கணத்தில் தாழ்ந்தது. நிலத்தைப் பார்த்தபடி கைவிரலால் மண்ணின் மேல் கோடுகளைக் கீறிக் கொண்டிருந்தாள்.

''எப்ப கூழ்குடிக்க வருவியள் என்று சொல்லுங் கோவன்''

திசை திருப்பிய அவளது வார்த்தைக்கு இலட்சுமணன் பதில் கூறினான்.

''குமாரன் இந்தக் குடிசைக்கு வந்த பிறகு''

அன்னம் எதுவுமே பேசவில்லை. மீண்டும் நிலத்தைக் கீறியபடியே இருந்தாள். நிலவு குடிசையின் மேலாக எட்டிப் பார்க்கத் தொடங்கியது.

''குமாரனை சாதாரணமான ஆளாக நினைத்திடாதை. எங்கடை புடத்திலை தோய்த்து எடுக்கப்பட்டவன். இலக்கு வைத்தால் ஒரு வெடிதான். அவ்வளவு கெட்டிக்காரன்''

அன்னத்தின் இதயம் குளிர்ந்துகொண்டு வந்தது. ஆயினும் மீண்டும் பேச்சைத் திருப்ப முனைந்தாள்.

''இந்தச் சாதிச் சண்டையெல்லாம் எப்ப முடியப் போகுது''

படிப்பகம்

www.padippakam.com



''இதெல்லாம் வெறும் சாதிச் சண்டையாக மட்டும் நினைக்காதை. இது அடக்குபவர்களுக்கும் ஒடுக்கப்படுபவர்களுக்கும் இடையே ஏற்பட்ட யுத்தம். இது அத்தனை விரைவாக முடிவடையப் போவதில்லை. நிலத்தோடு எமது உழைப்பையும் சுரண்டிக்கொண்டு சாதி என்ற பெயரில் எம்மை அடக்கிக் கொண்டவர்களுக் கெதிராகத்தான் இப்போது துப்பாக்கி எடுத்து வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறோம். இந்தச் சாதி வேளாளரையும் நிலவுடமைக்காரரையும் காப்பாற்றிக் கொண்டிருக்கும் பொலிஸ்-அவர்களை ஆட்டிப்படைக்கும் ஆளும் வர்க்கம் - அவர்களைக் காப்பாற்றும் பட்டாளம்-இப்படியாக இதோர் சங்கிலித் தொடர். இவற்றையெல்லாம் உடைத்தெறியும் பெரிய போராட்டத்துக்குத்தான் உன்னைப் போன்றவர்களும் தேவைப்படுவர்''

இலட்சுமணன் எழுந்தான்.

''நான்தானே நீங்கள் சொல்லும் எதற்கும் தயாரென்று சொன்னன். நீங்கதான் கலியாணமென்று...''

அன்னம் நிலத்தைப் பார்த்தபடி சொல்லிக்கொண்டே எழுந்தாள். பேச்சை அவள் முடிக்கவில்லை. இலட்சுமணன் அவளைப் பார்த்துச் சொல்லிக்கொண்டே நடந்தான்:

''அதிலென்ன. ஒற்றைக்குழல் துப்பாக்கி இருந்த இடத்தில் இரட்டைக் குழல். போர்க்குணம் மட்டும் மழுங்காமல் இருக்கட்டும்''

□□□

படிப்பகம்

www.padippakam.com

# ஆசிரியரின் பிற நூல்கள்

## நாவல்கள்

'நீ ஒரு பெண்'
வன்முறைவடுக்கள்
ஒரு மண்ணின் கதை
மரணத்தின் நிழலில்
ஒரு குடும்பத்தின்கதை
இரண்டாவது சாதி
உலகச் சந்தையில் ஒரு பெண்
ஒரு பெண்ணின் கதை
விலங்கில்லா அடிமைகள்
சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை!
பொய்மையின் நிழலில்...
அயலவர்கள்
புதிய சந்தையில்
இளமையின் கீதம்
அந்நிய மனிதர்கள்
வதையின் கதை
மண்ணும் மக்களும்
போர்க்கோலம்
செவ்வானம்
நீண்ட பயணம்
சடங்கு

## சிறுகதைத் தொகுப்புகள்

சிறுவர்க்கான சிந்தனைக் கதைகள்
கொடுமைகள் தாமே அழிவதில்லை
சங்கமம்
ஒரே இனம்
நல்லவன்; சிறுகதைகள்

## கட்டுரைகள்

அறிவுக் கடிதங்கள்
பெண்ணடிமை தீர
கலையும் சமுதாயமும்
குமரனுக்குக் கடிதங்கள்
குந்தவிக்குக் கடிதங்கள், மான்விழிக்குக் கடிதங்கள்

**பாரி நிலையம்**
184, பிராட்வே, சென்னை-108.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# போர்க்கோலம்

மக்களுக்குச் செயலூக்கமும் வீர உணர்வும் தரவேண்டியது நாவலாசிரியரின் கடமையாகும். நாவல் என்பது இன்றைய யுகத்தின் காவியம் மட்டுமல்ல முதன்மையான இலக்கிய வடிவமுமாகும்.

தமிழகத்தில் எதார்த்த நெறியில் எழுதும் நாவலாசிரியர்களைப் பார்ப்பது மிகவும் அரிதாயிருக்கின்றது.

கணேசலிங்கன், எதார்த்த நெறி நாவல்கள் படைப்பதில் முன்னோடியாய் இருக்கின்றார். அவரின் பிறநாவல்களான நீண்ட பயணம், சடங்கு, செவ்வானம், தரையும் தாரகையும் ஆகியவை இன்றைய தேவைகளை ஓரள்வு பூர்த்தி செய்வதில் முன் நிற்கின்றன. 'போர்க்கோலம்' என்ற இந்நாவல், இத்தொடரில் மக்களுக்கு முன்நிற்கும் நிலப்பிரபுத்துவம் என்ற பிரதானமான முரண்பாட்டைத் தகர்த்தெறிவதற்குப் புதிய, புரட்சிகரமான வழியைக் காட்டி நிற்கின்றது.

அசுரனின் முன்னுரையிலிருந்து

படிப்பகம்